# ஆகாயம் காணாத நட்சத்திரம்

இந்திரா சௌந்தர்ராஜன்





அந்தரத்தில் காற்று கொட்டம் அடித்துக் கொண்டிருந்தது. இத்தனைக்கும் ஆடியும் இல்லை, ஆவணியும் இல்லை. இருந்தும் கலவரத்தில் பயந்து ஓடுகிறவர் களைப் போல கன்னாபின்னா வென்று ஒரு ஓட்டம்! சரியாக உரம் கிடைக்காமல் வேர் பிடிக்காமல் சத்தையாய் வளர்ந்து நிற்கும் தோட்டத்து குரோட்டன்ஸ் செடிக ளின் இலைகளில் அதன் திமிரெ டுத்த கொட்டத்தால் உதிர்வுகள்... 'விஸ்ஸ்... ஸ்ஸ்ஸ்.... ஸ்!'

சாளரம் வழியாக பார்த்துக் கொண்டிருந்தாள் மீனாட்சி. கண் ணுக்கு தெரியாத காற்றுக்கு வாய் இருப்பதை உணர்ந்தவளாக அந்த ஸ்ஸ்ஸ்'ஐ ஏதோ மந்திரம் கேட்பது போல லயித்து கேட்டுக் கொண்டி ருந்தாள்.

'நிச்சயம் அதற்கு ஒரு பொருள் இருக்கிறது. நமக்கு அதன் பாஷை தெரியவில்லை! அந்த ஸ்ஸ்ஸ்க்கு அர்த்தம் எதுவாக இருக்கும்?' - மோவாயில் கை பதித்துக் கொண்டு ஊடுருவ ஆரம்பித்துவிட்டாள்.

வானில் அடப்பமாக மேகங்கள் வேறு புரண்டு வரத் தொடங்கி விட்டன. அதையும் தலையைச் சரித்து ஒரு பார்வை பார்த்தாள்.

நான்கு திசையில் தென்மேற்கு திசை மேகங்களுக்கு கட்டாயம் ஓங்கிப் பெய்யும் ராசி உண்டு. இன்றோ ஈசான்யத்தில் அதாவது வடகிழக்கில் மேகப் பொதிகள்! அதுவும்

ஆலையின் கழிவுப்பஞ்சு போல, சிக்னலுக்காக தேங்கி நிற்க ஆரம்பிக்கும் ரயிலின் வேகத்தில் வந்து கொண்டிருந்தது.

இந்த மேகங்கள் ஃபைனான்ஸ் கம்பெனிக்காரர்களைப் போல ஏமாற்றிவிடும் ஜாதி. கவலையே வேண்டாம். மழைவராது. காற் றுக்கு கிராக்கு பிடித்து சுற்றிச் சுற்றி வந்து ‘விஸ்ஸி... புஸ்ஸி’ என்று பேசிக் கொண்டிருக்கிறது.

‘எனக்குப் புரியும் பாஷையில் பேசினால் உன்னோடு பேசுவேன். இப்படி என் பேத்தி பேசும் கான்வென்ட் ஆங்கிலம் போல தஸ்புஸ் என்றால் எனக்கு புரியுமா?’

மீனாட்சி மனசோடு பேசிக்கொள்ளும் அந்த தருணம் வாசலில் சைக்கிள் ரிக்ஷாவில் இருந்து உதிர்ந்து கொண்டிருந்தாள் ராகவி.

முதுகு கொள்ளாத புத்தகச் சுமை. ஒரு கையில் ஒயர்கூடை, இன்னொரு கையில் ஸ்கேட்டிங் ஷூ பை! ‘‘பாட்டீ.ஈ.ஈ.ஈ..’’ என்ற குரல் முன்னால் பாய்ந்துவர குழந்தை பின் னால்தான் வந்தாள். இந்தக் குழந்தைகளிடம் காலையில் போகும்போது இருக்கும் உற்சாகமும் தெளிவும் திரும்பி வரும்போது இருப்பதே இல்லை. பின்தங்கி விடுவாய், பின்தங்கி விடுவாய் என்று அவர்களை முன் னால் துரத்தும் களைப்போ? மூளை கொள்ளா தபடி தமிழும் ஆங்கிலமும் அல்ஜீப்ராவும் கெமிஸ்ட்ரியும் சாம்பாரில் கொதிக்கும் பல வகை காய்களைப்போல சுடச்சுட கொதித்துப் பொங்கும் இனம்புரியாத உஷ்ணமோ?

பரிதாபமாக இருந்தது. நாற்காலியில் வந்து உட்கார்ந்தவளின் ஷூவை கழட்டி சாக்ஸை உருவிவிட்டு அந்த கொலுசுக் கால் களை இதமாக அமுத்தி விட்டவளாக...

‘‘என்னடா...ரொம்ப களப்பா தெரியறே. ஹோம்ஓர்க் நிறைய தந்துருக்காங்களா உங்க மிஸ்?’’



‘‘இல்ல பாட்டி. ரிக்ஷாவுல உக் காந்துட்டு வரதுக்குள்ள போதும்போதும்னு ஆயிடுது. குண்டு சுமதி, ஐயர் வீட்டு ராக வன், அனிதான்னு அடைச்சுக்க றாங்க. மூச்சுகூட உடமுடியலை பாட்டி’’- குரலில் உயிரே இல்லை.

‘‘என்ன பண்ணச் சொல்ற. சைக்கிள்ள அனுப்பலாம்னா உங்கம்மா பயப்படறா.’’

‘‘அவங்க கிடக்கறாங்க பாட்டி. அப்பா கிட்ட நீங்க சொன்னா கேப்பாரு. என்னை விட ரெண்டு கிளாஸ் பின்னால படிக்கற அட்சயா சைக்கிள்ளதான் வர்றா தெரியுமா?’’

‘‘ அவ நல்லா சாப்பிட்றா. உன்னை மாதிரி எலும்பும் தோலுமாவா இருக்கா? உனக்கு அக்கா மாதிரி பப்ளிமாஸ் மாதிரி இல்ல?’’

- பப்ளிமாஸ் மாதிரி என்றபோது மீனாட் சியின் கன்னம் உப்பி கையிரண்டும் சிறகு போல் விரிந்து ஒரு உருவகத்தைக் காட்டின.

ராகவிக்கு கலீர் என்று சிரிப்பு வந்து விட் டது. கண்ணாடி சாடிக்குள் சன்னமான சதங்கை மணிகளை போட்டு மெல்ல ஆட்டினமாதிரி இருந்தது. அந்த சிரிப்பை ரசித்தவளாக பேத்தி யின் கன்னத்தில் இருகைகளையும் பதித்து திருஷ்டி கழித்தாள் மீனாட்சி.

''சரி இரு. ஹார்லிக்ஸ் கரைச்சு எடுத்துட்டு வரேன்'' எழுந்து போனாள். காற்று அடுப்ப டிக்குள்ளும் அட்டகாசம் பண்ணியிருந்தது. காய்க்கூடை கவிழ்ந்து தக்காளி உருண்டு மீனாட்சியின் காலில் பட்டு பச்ச்சக்க்க்..!

''உன் அட்டகாசத்துக்கு அளவே இல்லாமல் போயிடிச்சு'' - ஒருவித நட்புத் தொனியோடு சொல்லி, திறந்து கிடந்த ஜன்னலை மூடினாள்.

காய்கறிகளை எடுத்து கூடையில் வைத்து ஆணிக்காதில் மாட்டினாள். அடுப்பில் பாலை வைத்தாள். தக்காளி கரையிட்ட இடத்தை தண்ணீர் தெளித்து சுத்தமாக்கி இரண்டு சொட்டு டெட்டால் விட்டு கையால் பரத்திவிட்டாள்.

அதற்குள் அடுப்பில் தளதளத்தது பால். டபரா தம்ளரில் வாங்கி இரண்டு ஸ்பூன் ஹார்லிக்ஸ் போட்டு கலக்கி ஆற்றியபடி கூடத்துக்கு வந்தபோது உட்கார்ந்த நிலையில் தூங்கி விட்டிருந்தாள் ராகவி.

''கடவுளே... படிக்கப்போனாளா - இல்லை விறகு வெட்டவா? - முணுமுணுப்போடு எழுப்பி அந்தப் பிஞ்சுக்கு ஹார்லிக்ஸை செலுத்திவிட்டு எழுந்தபோது முந்தானை இழுபட்டது. இழுத்தது ராகவிதான்!

''சைக்கிள்...''

''உங்கப்பன் வரட்டும் சொல்றேன்...''

''சொன்னா போதாது - வாங்கித் தரணும்''

''அவன் வாங்கித்தராட்டியும் நான் வாங்கித் தர்றேன் போதுமா?''

''நல்ல பாட்டி!'' - அந்த பிஞ்சு துள்ளியது.

☆☆☆

வெளியில் காற்று அடங்கி அடப்பமாய் புழுக்கம் வியாபித்திருந்தது. மின்னல் வேக கால மாற்றம்!



வானிலும் பட்டறை போட்டுக்கொண்டு பந்தா வாய் வந்த மேகங்கள் போன இடம் தெரியவில்லை.

இரவு சமையலுக்காக வெங்காயம் நறுக்கும்போது ஃபேன் போட்டுக் கொண்டால் தேவலை என்று தோன்றியது. கூடவே 'இப்படி எலக்ட்ரிக் பில் வந்தா தலைக்கு துண்டு

போட்டுக்க வேண்டியதுதான்' என்று ரஞ்சிதம் முணுமுணுத்ததும் ஞாபகத்துக்கு வந்தது.

காதோரம் வியர்வைப் பாம்பின் குசலத்தோடு வெங்காயம் நறுக்க ஆரம்பித்துவிட்டாள் மீனாட்சி.

ராகவி நடுஹாலில் எல்லா புத்தகங்களையும் பரத் திக்கொண்டு ஹோம் ஒர்க் செய்து கொண்டிருந்தது. வெங்காயக் காந்தல் அவள் கண்வரை போய் கரித்தது.

''ஏ பாட்டி... என்ன பண்றே?''

''பூரி மசாலுக்கு வெங்காயம் நறுக்கறேண்டா...''

''எனக்கு இங்க கண்ணு எரியுது.''

''எரியட்டும். ரொம்ப நல்லது. கண்ணுல இருக்கற அழுக்கெல்லாம் வெளிய வந்துடும்.''

''மண்ணாங்கட்டி'' - ராகவி வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். கையில் ஸ்கெச் பென். அதை உதறிக்கொண்டு காட்டன் நைட்டியில் ஒரு மினி தேவதை போல நடந்து சமையல் கட்டுக்குள் நுழைந் தாள். மீனாட்சி அருகே மண்டியிட்டாள். மீனாட்சி தலை நிமிராமல் நறுக்கிக் கொண்டிருந்தாள்.

ராகவியின் கை அவள் மோவாயைத் தொட்டுத் தூக்கி அவளது கண்ணிரண்டையும் பார்த்தது. அதில் ராமநாதபுரத்தின் வறட்சி. மீனாட்சியின் முகம் பேத்தியின் பிஞ்சு கைக்குள்...

''என்னடா?''

''உன் கண்ல தண்ணி வரலியே?'' - மீனாட்சி அதை ரசித்து சிரித்தாள். பதில் சொல்லாமல் திரும்பவும் வெங்காயம் நறுக்கத் தொடங்கினாள்.

''சொல்லு. உன் கண்ல மட்டும் ஏன் வரலை?''

''அது அப்படித்தான்.''

''அப்படித்தான்னா?''

''அப்படித்தான்னா... நான் உன்னை மாதிரி இருந் தப்போ எடுத்ததுக்கெல்லாம் அழுவேனாம். ஒருநாள் என் எதிர்ல கற்பகாம்பாள் இல்ல கற்பகாம்பாள்..''

''யாரு?''

''அதான்.. கபாலீஸ்வரர் கோயில் கற்பகாம்பாள்.''

''சாமியா?''

''கரெக்ட்! அந்த சாமி என் எதிர்க்க வந்து 'மீனாட்சி மீனாட்சி.. நீ இனிமே அழுவக்கூடாது. எதுக்கும் அழுவக் கூடாது' அப்படின்னு சொன்னிச்சு...''

‘‘நிஜமாவா?’’

‘‘ஆமாண்டா... அதுல இருந்து நான் அழறதில்லை. என் கண்ணுலயும் ஒரு சொட்டு தண்ணீர் வர்றதில்ல.’’

‘‘அப்படியா.. அதனாலதான் அம்மா உன்னை திட்டும்போதுகூட நீ அழ மாட்டேங்கிறியா?’’

குழந்தை எங்கோ ஆரம்பித்து எதிலோ வந்து நின் றது. மீனாட்சிக்கு சுருக்கென்றது. அது அவளின் சுமா ராக சுருக்கம் விழுந்த முகத்தில் சன்ன ரேகைகளாய் விழுந்து, சுதாரித்ததில் உடனே அழிந்தும் போனது.

‘‘ஆமாண்டா. அதனாலதான் நான் அழறதே இல்லை...’‘

‘‘அந்த சாமியை நான் பாக்கமுடியுமா பாட்டி?’’-மீனாட்சிக்கு தான் வசமாக மாட்டிக் கொண்டது புரிந் தது. இந்தக்கால குழந்தைகளிடம் ஜாக்ரதையாகப் பேசவேண்டும். இல்லாவிட்டால் இப்படித்தானோ?

‘‘ஓ... நீயும் பாக்கலாமே.’’

‘‘எப்ப பாட்டி பாக்க முடியும்?‘‘

‘‘நீ பெரியவளாகி பூஜை எல்லாம் செய்வே பார். அப்ப பாக்கலாம்.’’

‘‘இப்ப முடியாதா?’’

‘‘இப்ப பார்த்து என்ன பண்ணப் போறே?’’

‘‘சைக்கிள் கேட்கத்தான்...’’

- மீனாட்சியால் அதற்கு மேல் அழுகையை அடக்க முடியவில்லை.

‘‘நான் வாங்கித்தரேண்டா... கட்டாயம் வாங்கித் தரேன். அந்த பாட்டிகிட்ட சைக்கிளா கேட்பாங்க, பைத்தியம். என் ராசாத்திக்கு நல்ல படிப்பு. அப்புறமா நல்ல புருஷன். இதான் கேட்கணும்’’ - என்றபடி ரப்பையை நனைத்த நீர்ச்சொட்டை விரலால் சுண்டிவிட்டாள்.

‘‘இல்ல பாட்டி... சைக்கிளோட இன்னும் என்னென்ன கேப்பேன் தெரியுமா?’’

‘‘என்னடா?’’

‘‘அப்பா உன்கூட நல்லா பேசணும். அம்மா திட்டக்கூடாது. தாத்தா வந்து உன்னை கூட்டிட்டு போகணும். இந்த மாதிரி எத்தனை இருக்கு தெரியுமா?’’

- மீனாட்சி அந்தப் பிஞ்சை வாரி அணைத் துக் கொண்டாள். ‘‘என் தங்கம்... இந்த பாட்டி மேல உனக்கு இத்தனை பாசமாடா?’’-சிலிர்ப் புடன் கன்னம் காது என்று முத்தமிட்டாள்.

‘‘உடு பாட்டி, ஒரே வெங்காய நாத்தம்!’’

மீனாட்சிக்கு சிரிப்பும் வந்து விட்டது!

☆☆☆

**வா**சலில் ஸ்கூட்டர் சத்தம். அரவிந்தன் வந்துவிட்டான். ஹெல்மெட்டை கழட்டிக் கொண்டு அனல் மூச்சோடு நுழைந்தான்.

‘‘வாப்பா...’’

அழைத்த மீனாட்சியை ஒரு பார்வை பார்த்துவிட்டு ஷூவை கழட்டி எரிந்தான்.

‘‘ரஞ்சா வரலை?’’

‘‘வரலைப்பா...’’

‘‘இன்னும் அப்படி என்ன ஆபீஸ்ல?’’ - எரிச்சலும் கோபமும் வெளிப்பட்டது.

முகம் கழுவி டவலால் ஒத்தியபடி வந் தான். பார்வை பெட்ரூம் பக்கம் போனது. படுக்கையில் சுருண்டு விட்டிருந்தாள் ராகவி.

‘‘ஹோம் ஒர்க் பண்ணாளா, இல்ல தூங்கட் டும்னு நீதான் விட்டுட்டியா?’’

‘‘ஹோம் ஒர்க் பண்ணிட்டு சாப்டுதான் படுத்தா. உனக்கு கொண்டு வரவா?’’

‘‘ரஞ்சனி வந்துரட்டும். அப்புறம் ‘எம் மேல உங்களுக்கு அக்கரையே இல்லை, என் சம்பளத்துலதான் கண்ணு’னு ராகம்பாடுவா.’’

வெறுப்பில் சொல்லிக் கொண்டு வழக்க மாய் காலையில் வாசலில் கிடக்கும் ஹிண்டு வை பிரித்தான். மீனாட்சி கமறினாள்.

‘‘அரவிந்தா...’’

நிமிர்ந்து பார்த்தான்.

‘‘உங்கிட்ட ஒண்ணு சொல்ல ணும்.’’ ‘‘என்னம்மா?’’

‘‘ராகவிக்கு சைக்கிள் ரிக்‌ஷால ஸ்கூலுக்கு போய் வர்றது ரொம்ப சிரமமா இருக்கு.’’

‘‘அதனால?‘‘

‘‘சைக்கிள் கேக்கறா?’’

‘‘பொழப்பென்ன..?’’

‘‘இல்லப்பா. அவ ஆசைப்பட்றதும் சரி தான். ரிக்‌ஷால வர்ற பசங்களும் சரியில்லை.’’

‘‘எங்க எல்லாம் சரியா இருக்கு? எனக்கு அப்பாவே சரியால்ல. நான் அதுக்காக இன்னொருத்தரையா கேட்டேன்?’’

- கேள்வியில் அம்பின் கூர்மை. அதன் தாக்கம் சரேலென்று மீனாட்சி யை நிமிர்த்தியது. எந்தப் பேச்செடுத் தாலும் அது இப்படித்தான் முடிகிறது.

‘‘எதுக்கு இப்படி பாக்கறே. என்ன தப்பா கேட்டுட்டேன்? நீ மனசு வச்சா உன் பேத்திக்கு காரே வாங்கித் தரலாம். முடியும்தானே?’’

-அவன் கேட்ட விதத்தில் ரகசியமும், சிக்கலும் கூடிக்கிடப்பது போல் தோற்றம். மீனாட்சியோ ‘‘அது மட்டும் முடியாது!’’ என்றாள் தீர்கமாக.

‘‘அப்ப ஒண்ணு பண்ணு. உன் பேர்ல பணம் போட்டு வச்சுருக்கியே, அதை எடுத்து சைக்கிள் வாங்கு. அப்ப கூட அவ ஓட்டிட்டு போக கூடாது. நீ தான் அவளை கொண் டுபோய் விட்டு கூட்டிட்டு வர ணும். எட்டாம் வகுப்புலதான் அவ ஓட்டலாம்.’’

-கோர்ட்டில் நீதி பதி தீர்ப்பு சொல் லும்போது குர லில் எப்படி ஒரு திடம் லயம் இருக் குமோ அப்படி இருந்தது பேச்சு!

மீனாட்சி பதில் சொல்ல வில்லை.

அரைமணி கழித்து வந்த ரஞ்சி தம் சாப்பிட்டு முடித்து கணவ னோடு படுக்கை அறைக்குள் போய் தாழிட்டுக் கொண் டாள். உள்ளே பேசுவது ஹாலில் ஒரு ஜமாக்காளம் விரித்து பழைய தலையணையோடு படுத்துவிட்ட மீனாட்சியின் காதிலும் கேட்டது. கேட்கட்டும் என்றே சத்தமாக பேசினால் கேட்காதா பின்னே..?

‘‘ராகவி சைக்கிள் கேட்டாளாம். நீ மனசு வச்சா காரே வாங்கிக் கொடுக்கலாம்னு ஒரு போடு போட்டேன்...’’

‘‘மூஞ்சி செத்துருக்குமே...?’’

‘‘சாகாம.. பிடிவாதம் மட்டும் குறையல. முடியாதுன்னு சொன்னா.‘‘

‘‘அதுக்கு என்ன சொன்னீங்க?’’

‘‘உன்கிட்ட பணம் இருக்கே, வாங்கிக் கொடு. ஆனா அவ சைக்கிள் ஓட்டக்கூடாது. நீ வேணா கொண்டு விட்டு கூட்டிட்டு வான் னேன்...’’

‘‘ஐம்பது வயசு கிழவியைப் பார்த்து பேசற பேச்சா இது?’’

‘‘ஏய்...அவ என் அம்மா’’

‘‘ஆமா... பாசம் பொங்குதோ?’’

‘‘சரி விடு...உனக்கு ஏன் இன் னிக்கு இவ்வளவு நேரமாச்சு?’’

‘‘பேச்சை மாத்தாதீங்க. உங்கப் பாவ பாக்கற பிளான் என்னாச்சு?’’

''அவரை நினைச்சா கோபமா வருது. கால் வரமாட்டேங்குது.''

''அப்பாவா நினைச்சாதான் அப்படி. ஒரு கோடீஸ்வரனா மட் டும் நினைச்சுப் பாருங்க.''
''யோசிக்கறேன்...''

''யோசிக்க என்ன இருக்கு. உங் கம்மா கிடக்கறாங்க. நீங்க போய் பாருங்க. சைக்கிள் இல்ல காரே வாங்கித் தரலாம்.''

- மீனாட்சி புரண்டு புரண்டு படுத்தாள். எழுந்து வாசற்புறமாய் திண்ணையில் போய் அமர்ந்தாள். வானத்தைப் பார்த்தாள்.

லட்ச லட்சமாய் நட்சத்திரங்கள். மேக நீச்சல்கள், ராத்திரிப் பறவைகளின் அணிவகுப்புகள்...

மனதுக்குள் வைராக்ய முடிவு-

'அரவிந்தன் மட்டும் அவரைப் போய்ப்பார்த்து உறவு கொண்டாட தொடங்கிவிட்டால் அவனும் இனி எனக்குப் பிள்ளை இல்லை!'

மறுநாள்...

புது சைக்கிளின் மீது மீனாட்சி! எதிர்வீட்டு ஹேமலதா மீனாட் சிக்கு சைக்கிள் ஓட்ட கற்றுத் தந்து கொண்டிருந்தாள்!

வீதியே வியப்பில் விழுந்து விட்டிருந்தது...



மீனாட்சி சைக்கிள் ஓட்டிப் பழகுவதை பார்த்த சிலருக்கு சிரிப்பாக வந்தது. இன்னும் சிலருக்கு 'இந்த பாட்டியம்மாவுக்கு ஏன் இப்படி ஒரு விபரீத ஆசை?' என்றும் கேள்வி.

மீனாட்சி அவற்றை லட்சியம் செய்யாமல் சைக்கிளில் விழுந்து விழுந்து எழுந்து கொண்டிருந்தாள். சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த பெண், ''மீனாம்மா எல்லா ரும் வேடிக்கை பார்க்கறாங்க பாருங்க!'' என்று ஒரு மாதிரி குரலில் சிணுங்கினாள்.

''வேடிக்கை பார்த்தாதானேம்மா அது சமூகம்?'' – என மீனாட்சியும் பல பொருளில் பதிலளித்தாள்.

''நான் ஒண்ணு சொல்லட்டுமா?''

''என்ன?''

''சைக்கிள் ஓட்றதைவிட, மொபெட், ஸ்கூட்டி இதெல்லாம் ஓட்றது சுலபம். இரண்டு நாள்ல கத்துக் கலாம். பேசாம உங்க பையன் கிட்ட சொல்லி ஒரு மொபெட் வாங்கிடுங்களேன்...'' – என்றாள் அவள்.

– மீனாட்சிக்கு அவள் பேசுவதன் பொருள் புரிந்தது. அந்தப் பெண் தனக்கு சைக்கிள் சொல்லிக் கொடுப்பதை தவிர்க்க நினைக்கிறாள். அன்பாக பழகிவிட்டதாலும், அவளுக்கு பல சமயங்களில் மருதாணி வைத்து உதவிய தாலும் மீனாட்சி ஒரு உதவி கேட்கும்போது மறுக்க முடியவில்லை. ஆனால், ரஞ்சனியின் பார்வை, அவர்க ளின் புருவ வளைசல், அந்த முகபாவங்களில் தெரியும் பரிகாசம் இதெல்லாம் அவளை மெல்ல பின்னுக்கு இழுக்கிறது. எப்பொழுதுமே சமூகம் இப்படித்தான் பெண்களிடம் நடந்து கொள்கிறது. இந்தப் பெண் ணால் தாளமுடியவில்லை. இவளை குறுக்குகிறது. இதனாலேயே பல முடிவுகள் மாறிப் போகின்றன!



நல்லவேளை…

வீதியில் ஒரு பெண் கவிஞர் இருக்கிறாள். பெயர் பத்மாவதி, எதிலும் வித்தியாசப் பார்வை கொண்ட பெண்! மீனாட்சியை தேடி வந்து கைகுலுக்கினாள்.

‘‘பாட்டிம்மா… கலக்குங்க! நீங்களே சைக்கிள் ஓட்டும்போது இந்தப் பொண்ணெல்லாம் காரையும், பஸ்ஸையும்ல ஓட்டணும்?’’ என்று சொல்லிவிட்டு சைக்கிளின் மறுபக்கம் பிடித்துக் கொண்டாள்.

குழந்தை ராகவி ஹோம்வொர்க்கில் மூழ்கியிருந்தது. கண்ட கண்ட காகிதங்களை வெட்டி ஒட்டிக் கொண்டிருந்தது. கேட்டால் சோஷியல் ஸ்டடி அசைன்மென்ட், ஸ்டாடிஸ்டிகல் ரிப்போர்ட் என்று ஐ.ஏ.எஸ்.தனமாக ஏதாவது சொல்லும். அருகிலேயே இருந்துகொண்டு அவ்வப் போது அது ஹோம்வொர்க் செய்வதை ஒரு பார்வையும் வெளியே வீதியில் மீனாட்சி சைக்கிளில் சரிந்தபடி செல் வதை ஒரு பார்வையும் பார்த்த நிலையில் கடுகு வெடித்துக் கொண்டிருந்தது ரஞ்சனியின் முகம்.

ராகவி, சில சமயம் ஆர்வம் தாளாமல் எழுந்து வெளியே போய் நின்று வேடிக்கை பார்த்தபோது ஆவேச மாக தரதரவென்று இழுத்து வந்தாள் ரஞ்சனி.

‘‘உக்காருடி. உக்காந்து பாடத்தை கவனி. அந்த கெழவிக்குதான் புத்தி கெட்டுப் போச்சு. எல்லாத்துலயும் ஏட்டிக்குப் போட்டி. வரட்டும்!’’ – என்று கருவினாள்.

– வரட்டும் என்பதில் ‘வ’–வுக்கு அடுத்த ‘ர’–வன்னா வில் அநியாயத்துக்கு ஒரு அழுத்தம். கரகரப்பு!

டை கட்டிக்கொண்டு ஆபீஸ் புறப்படத் தயாராகிவிட்ட தோரணையோடு வந்தான் அரவிந்தன்.

‘‘வெளியே நடக்கிற கூத்தைப் பார்த்தீங்களா?’’

‘‘உம்… உம்…’’

‘‘என்ன உம்.. வீதியே சிரிக்குது!’’

‘‘என்னை என்ன பண்ணச் சொல்றே?’’

‘‘ஆமா… சொன்னா முதல்ல செஞ்சு முடிச்சுட்டுத்தான் மறுவேலை பார்ப்பீங்க பாருங்க.’’

‘‘இதோ பார் ரஞ்சனி. நான்தான் அம்மா கிட்ட சொன்னேன். ராகவிக்கு சைக்கிள் வாங்கி கொடுத்து அவளை ஸ்கூலுக்கு அனுப்பிட்டு பக்குபக்குன்னு உக்காந்திருக்க உன்னாலயும் முடியாது, என்னாலயும் முடியாது. அதனால, முடியாதுன்னு நேரா சொல்லாம நீ வேணா சைக்கிள்ல கொண்டுபோய் விட்டுட்டுவான்னு சொன்னேன். அது இவ்வளவு சீக்கிரம் விஸ்வ ரூபம் எடுக்கும்னு நான் நினைக்கல’’– என்ற படி ஜாஸ்மின் ஸ்ப்ரேயரை எடுத்து ‘புஸ் புஸ்’ என்று அடித்துக் கொண்டான்.

அவன் அவள் அளவு அலட்டிக் கொள்ள வில்லை என்பது நிதானத்தில் தெரிந்தது.

‘‘அப்ப உங்கம்மாக்கு சைக்கிள் வாங்கித் தரப் போறீங்களா?’’

‘‘சாரி. நான் அந்த மாதிரி கமிட்மென்ட் டெல்லாம் பண்ணிக்கல. அம்மா என்ன ஐடியால சைக்கிள் ஓட்ட கத்துக்கறான்னும் தெரியலை. ஒருவேளை அவகிட்ட இருக்கிற பணத்தை வெச்சு சைக்கிள் வாங்கிக்கப் போறாளோ என்னவோ?’’

‘‘அதானே பார்த்தேன். இப்பவே சொல்லிட்டேன். அவங்க சைக்கிள் வாங்கினாலும், நான் ராகவியை ஆட் டோலதான் அனுப்புவேன். மாமியாரை வேலை வாங்கற மருமகள்னு நாலுபேர் என்னத்தான் குறை சொல்வாங்க.’’

– ரஞ்சனி சொல்லிவிட்டு சென்றாள். பரிதாபமாக பார்த்தாள் ராகவி. அரவிந்தனிடம் ஒரு அசட்டுச் சிரிப்பு.

சாக்ஸை தேடி அணிந்துகொண்டு ஷூவை தேடினாள். பளபளவென்று பாலீஷ் போட்டு தயாராக இருந்தது.

‘‘குட்... யார் வேலை இது?’’ – என்றபடி அதன் இருண்ட அறைக்குள் காலை குடியேற்றி லேஸால் கட்ட ஆரம்பித்தான்.

‘‘பாட்டிதான் பாலீஷ் போட் டுச்சு’’ – ராகவி சொல்லிக் கொண்டே அருகில் வந்து நின்றது. ‘அப்படியா?’ என்கிற மாதிரி அவள் கன்னத்தை வருடியவன், ‘‘சரி நீ போய் படி’’ என்றான் விலகிச் செல்லாமல்.

‘‘அப்பா, நான் பாட்டிகூட சைக்கிள்ளயே ஸ்கூலுக்கு போறேம் பா’’ – என்றது குழந்தை.

‘‘எனக்கு ஒண்ணுமில்லை. ஆனா, உன் அம்மா அப்புறம் தாம்தூம்னு குதிப்பா ராகா...’’ – என்றான் செல்லக்குரலில். குழந்தை பதில் சொல் லத் தெரியாமல் அவனை வெறித்துப் பார்த்தது.

மீனாட்சியும் சைக்கிள் ஓட்டப் பழகியதுபோதும் என்கிறாற்போல புடவை முந்தியால் கன்னத்தை ஒத்திய படி உள்ளே நுழைந்துகொண்டிருந்தாள்.

அரவிந்தன் புறப்பட்டுவிட்ட தோரணையைப் பார்த்தவள்,

‘‘அரவிந்தா ஆபீஸ் கிளம்பிட்டியா?’’

‘‘ஆமா. என்னம்மா இது வேண்டாத வேலை.’’

‘‘உசிலி பண்ணிவச்சிருந்தேனே. சாப்ட்டியா?’’

‘‘எல்லாம் சாப்டுட்டேன். என் கேள்விக்கு பதில் சொல்லு. நான் ஒரு பேச்சுக்கு சொன்னா உடனே நீ காரியத்துல இறங்கிடறதா?.’’ மீனாட்சி பதில் பேசாமல் ராகவியை தூக்கிக்கொண்டு வீட்டின் அறையினுள் சென்றாள்.

‘‘கேக்கறேன்ல...’’- அவனிடம் சற்று அதட்டலான ஒலி. அப்படியே ரஞ்சனி கவனிக்கிறாளா என்பதுபோல் ஒரு பார்வை.

ரஞ்சனி முகத்துக்கு பசும் தயிர் பூசிக்கொண்டிருந்தாள். (உபயம்: டி.வி. அழகு குறிப்பு) ஒரு வெள்ளைப்பூதம் போல கரிய வண்டுவிழிகளோடு அவ னையும் மீனாட்சியையும் பார்த்தபடி இருந்தாள்.

மீனாட்சியும் அறையைவிட்டு வெளியில் வந்தாள். ரஞ்சனியை பார்த்துவிட்டு சிரித்துவிட்டாள்.

''என்னம்மா இது கோலம்?''

''ஏன், என் மூஞ்சியில கரிய பூசிப் பாக்கணும்னு ஆசையா இருக்கோ?''

– எடுப்பிலேயே பாய்ந்தாள். நல்ல பதினாறடி பாய்ச்சல்.

''இப்ப நான் என்ன பண்ணிட்டேன்னு இப்படி இரண்டு பேரும் பேசறீங்க?''

''இது சைக்கிள் ஓட்ற வயசா?''

''சைக்கிள் ஓட்ட வயசெல்லாம் இருக்காம்மா..?''

''இல்லையா பின்னே... நாளைக்கே கீழ விழுந்து எலும்பு முறிஞ்சு படுத்தா யார் பீ, மூத்தரம் அள்றதாம்?''

– வார்த்தைக்கு வார்த்தை அனல் அடித்தது ரஞ்சனி யிடம். மீனாட்சி பதிலை நிதானமாகவே சொன்னாள்.

''சத்யமா எனக்கு அப்படி ஒருநிலை வராதும்மா.''

''ஆமாமா. பெரிய தேவதை பாருங்க நீங்க.''

– மீனாட்சி பதிலுக்கு ஒரு பார்வைதான் பார்த்தாள்.

''ஆஊன்னா இப்படி ஒரு லுக் விடவேண்டியது. மனசுக்குள்ள பெரிய இந்திராகாந்தின்னு நினைப்பு'' – என்றவள் ஒரு வெடுக்கோடு விலகிப் போனாள்.

''பரவால்ல. நல்ல உதாரணம்தான் சொல்லியிருக்கே.''

''அம்மா கொஞ்சம் சும்மா இருக்கியா. வயசுக்கு தகுந்த காரியம் பாரும்மா. அவ உன் நல்லதுக்குதான் சொல்றா'' - என்ற அரவிந்தன் டேபிள் மேல் படுத்துக் கிடந்த பிரீஃப் கேஸை எடுத்துக்கொண்டான்.

வாசல்படி தாண்டியிருக்க மாட்டான். எதிரில் வீட்டு புரோக்கர் சாமிநாதன்!

''என்ன சார், ஆபீஸ் கிளம்பிட்டீங்களா?''

''ஆமா. அது என்ன சாமிநாதன் நான் ஆபீஸ் கிளம்பும் போதுதான் எப்பவும் வருவீங்களா - கொஞ்சம் முன்னால் வரக்கூடாதா?''

''சாரி சார். வேளச்சேரில இருந்து டவுன்பஸ் பிடிச்சு வரதுக்குள்ற போதும் போதும்னு ஆயிடுது. அப்புறமா என்ன முடிவெடுத்திருக்கீங்க?''

– அவன் கேட்க முகத்தை துடைத்தபடி ரஞ்சனியும் வந்துசேர சரியாக இருந்தது. அவளைப் பார்க்கவும் ''குத்துவிளக்கு மாதிரி இருக்கு மன்னியோட முகம்!''-என்று ஒரு வார்த்தைப் பூவை சாமிநாதன் போட ரஞ்சனி முகத்தில் கணிசமாக பிரகாசம் கூடியது.

''இப்போதைக்கு எதுவும் பண்ண முடியாது சாமி நாதன். இன்னும் கொஞ்சநாளைக்கு எங்களுக்கு வாடகை வீடுதான்''-என்ற அரவிந்தன் டயமாகிவிட்ட பரபரப் போடு கைகடிகாரத்தை பார்த்தான்.

''அப்படி சொல்லக்கூடாது. அருமையான வீடு. தலை யை அடகுவெச்சுக்கூட வாங்கலாம் தப்பே இல்லை.''

''நான் அடகு வைக்கத்தயார். ஆனா, இந்த முகரைக்கு அஞ்சு லட்ச ரூவா தர யார் தயாரா இருக்கா..?''

''ஏன் மன்னி ஆபீஸ்ல லோன் கிடைக்காதாக்கும்?'' – சாமிநாதன் ரஞ்சனியை மிக இணக்கமாகப் பார்த்தான்.

''சரி சாமிநாதன். உன் மன்னிக்கு இன்னிக்கு ஆபீசில்லை. அவகிட்ட விவரத்தை விலாவரியா தெரிஞ்சுகிட்டு புறப் படும். நான் கிளம்பறேன். நேத்தே அரைமணி நேரம் லேட்டு. மேனேஜர் கதகளி ஆடிட்டான்.''

அரவிந்தன் ஸ்கூட்டரை உதைத்தான். சாமிநாதன் ரஞ்சனியைப் பார்த்து வழிய ஆரம்பித்திருந்தான்.

ஸ்கூட்டரின் படபடா சத்தத்துக்கு இடையில் ரஞ்சனி ''உக்காருங்க'' – என்று மோடாவை இழுத்துப் போட்டாள்.

உட்கார்ந்தான். அவளும் எதிரில் அமர்ந்து கையை கட்டிக்கொண்டாள். பேசத் தொடங்கினாள்.

''சாரி சாமிநாதன். எங்க ரெண்டு பேரோட சேவிங்ஸை யும் கூட்டிக் கழிச்சு என்னவெல்லாமோ பண்ணிப் பாத்துட்டேன். அஞ்சு லட்சம் தாண்டலை. நீங்களோ பத்து லட்சம் சொல்றீங்க. இட்ஸ் இம்பாசிபிள்.''

''இருக்கலாம்மா. ஆனா இப்படி ஒரு வீடு கிடைக்காது. வீட்டுக்காரர் அமெரிக்கா போய் பையனோட செட்டில் ஆயிடுற குஷியில இருக்காரு. அவர் வச்ச செடி கொடி களை குழந்தை மாதிரி பாத்துக்கற நல்ல பார்ட்டி வேணும் னு சொல்றாரு. அதான் 15 லட்சத்தை பத்துக்கு குறைச் சுட்ருக்காரு. இப்படி ஒரு வாய்ப்பு வராது. அதான் கீறல் விழுந்த ரிக்கார்டு மாதிரி திரும்பத்திரும்ப சொல்றேன்.''

''அதுசரி. ரெண்டு பேர் வேலைக்கு போயே பல விஷ யங்கள் ததிங்கிணத்தோம். இதுல பல சுமைகள் வேற...'' -ரஞ்சனியின் பார்வை மீனாட்சி பக்கம் போய் திரும்பியது.

மீனாட்சியும் இருவர் பேசுவதையும் பார்த்தபடி இருந் தாள்.. சாமிநாதனும் மீனாட்சியைப் பார்த்துவிட்டு ஏதோ கேட்க நினைத்த மாதிரி ஒரு கமறு கமறினான்.

''என்ன சாமிநாதன்..?''

''இல்ல... ஒண்ணு கேள்விப்பட்டேன் கேட்கலாமா?''

''என்ன?''

''கொஞ்சம் அவங்கள உள்ள போகச் சொல்ல முடி யுமா?''- மகாசன்னமான ரகசியக் குரலில் சொல்ல மீனாட்சி ரஞ்சனி பதிலுக்குப் பார்க்கும்முன் அங்கிருந்து அகன்றாள்.

''சினிமா ப்ரொட்யூசர் ரங்கராஜன் உங்க மாமனாராமே அப்படியா?''

– ரஞ்சனிக்கு பகீர் என்றது.

இந்த குடும்ப ரகசியம் இந்த புரோக்கர் பயலுக்கு எப்படித் தெரியும் என்கிற மாதிரி அவனைப் பார்த்தாள்.

''தெரிஞ்சு என்ன பண்ணப் போறீங்க?''

''ஒண்ணும் பண்ணப்போறதில்ல. பெரிய மனுஷங்க ளையெல்லாம் கைல வச்சுகிட்டு அஞ்சு, பத்து லட்சத் துக்கெல்லாம் கஷ்டப்பட்றீங்களே, அதான் கேட்டேன்.''

-சரியான இடத்தில் அழுத்திப் பிடித்தான். உள்ளே மீனாட்சியின் காதிலும் எல்லாம் விழுந்தபடி இருந்தது.

இதற்கு ரஞ்சனி என்ன சொல்லப்போகிறாள்?



அறையின் மெல்லிய இருட்டில் மீனாட்சி நின்றுகொண்டிருக்க, சாமிநாதனுக்கு பதில் சொல்ல ஆரம்பித்திருந்தாள் ரஞ்சனி.

''அவரை என் மாமனார்னு நீங்க சொல்றீங்க. என் மாமியார் சொல்லமாட்டேங்கறாங்களே?''

''என்ன மன்னி இது அதிசயம். அவங்களுக்குள்ள அப்படி என்ன தகராறு?''

''எனக்குத் தெரிஞ்சு பெரிசா ஒண்ணும் இல்லை! இவங்களுக்கு தெரியாம அவர் சின்னவீடு வச்சிருந்துருக்காரு. பல வருஷமா இவங்களுக்கு தெரியாமலே இருந்து ஒருநாள் தெரிஞ்சுருக்கு. அவ்வளவுதான். அதை இவங்களால ஜீரணிக்க முடியலை. திருநீலகண்டர் பொண்டாட்டி கணக்கா வெட்டி விட்டுட்டாங்க!''

''வெட்டின்னா?''

''வெட்டின்னா வெட்டித்தான். என் வீட்டுக்காரருக்கு அப்ப ஏழோ எட்டோ வயசாம். நாத்தனாருக்கு பத்து வயசு. இரண்டு பேரோடயும் வீட்டை விட்டே வெளிய வந்துட்டாங்க..'' ரஞ்சனி விலாவாரியாக பேச ஆரம்பித்தாள். உள்ளே மீனாட்சிக்கு குமைச் சல். பிடரியில் கற்பூரம் ஏற்றிய மாதிரி உஷ்ணம் சுட்டது. சடாரென்று வெளியே வந்தாள்.

சாமிநாதனும் ரஞ்சனியும் அதைத் துளியும் எதிர்பார்க்கவில்லை.

''ஏம்ப்பா நீ எதுக்கு வந்தே? உன் தொழிலைப் பார்க்கவா இல்லை, என் புராணத்தை தெரிஞ்சுக்கவா?''

நிதானமாக அதேசமயம் அழுத்தத்தோடு கேட்டாள். சாமிநாதன் திருதிருவானான். ரஞ்சனியையும் மீனாட்சி விடவில்லை.

''நம்ம குடும்ப விஷயத்தை ஒரு மூணாம் மனுஷன்கிட்ட விஸ்தாரமா பேசறியேம்மா. உனக்கே நல்லா இருக்கா?''

ரஞ்சனி பதிலுக்கு முறைத்தாள்.

''உங்க விஷயம் பத்திரிகையில கிசுகிசுவா வந்து டிச்சாம். அதுக்கு என்ன சொல்றீங்க?'' என்று கை களை ஆக்ரோஷமாக ஆட்டி அசைத்துக் கேட்டாள்.

''எதுல வந்தா என்ன? என் சொந்த விஷயம் பற்றிப் பேச உங்களுக்கு என்ன உரிமை இருக்கு?'' மீனாட்சியிடம் கோபம் மெல்ல தலைகாட்டியது.

''என்ன பெரிய சொந்த விஷயம்? இப்ப நாங்கதான் உங்களை பாத்துக்கறோம். உங்க விஷயம் வேற எங்க விஷயம் வேறன்னு எதுவும் கிடையாது.'' ரஞ்சனியின் கோபமும் பற்றி எரிய ஆரம்பித்தது. சாமிநாதன் இடையில் மாட்டிக்கொள்ள விரும்பாத வனாக ''சாரி மன்னி. இனி நான் இங்க இருக்கறது சரி இல்லை. அப்புறமா எனக்கு நல்ல பதிலை சொல்லுங்க. வீட்டு ஓனர்கிட்ட ஒரு வாரம் டயம் கேட்டுருக்கேன்'' என்றபடி நழுவப் பார்த்தான்.

‘‘நீங்க இருங்க சாமிநாதன். இதுவிஷயமா நானே எப்படி பேச்சை ஆரம்பிக்கறதுன்னு தெரியாம இருந் தேன். இன்னிக்கு உங்களால அதுக்கு ஒரு வழி பொறந்துருக்கு. நான் இதை விட்றதா இல்லை.’’

ரஞ்சனி அவிழ்ந்துகிடக்கும் தலைமுடியை பின் னிக்கொண்டே ஒரு யுத்தத்துக்கு தயாராகிவிட்ட மாதிரி மீனாட்சியை அனல் பார்வை பார்த்தாள்.

‘‘நீ போப்பா. எங்க சண்டை ஒண்ணும் புதுசு இல்லை. நீ போ.’’ மீனாட்சி அவனைத் துரத்தினாள்.

‘‘போகாதீங்க சாமிநாதன். எனக்கு இன்னிக்கு இரண்டுல ஒண்ணு தெரிஞ்சாகணும். கட்டின புருஷன் கல்லுமாதிரி இருக்கும்போது, அதுவும் ‘நான் ஜீவ னாம்சம் தரேன். இல்லை, என்கூட வந்து இருக் கலாம்’னு பெரிய மனசோட சொல்லும்போது அதை பொருட்படுத்தாம எங்களையும் அவரோட சேர விடாம செய்துகிட்டு இருக்கறது எந்த வகைல சரி? இன்னிக்கு இதுக்கு ஒரு பதில் தெரிஞ்சாகணும்!’’

ரஞ்சனி ஆக்ரோஷமாக படபடத்தாள். சாமிநாத னுக்கு வியர்த்தது. ‘‘மன்னி, டென்ஷனாகாதீங்க. அம்மா நீங்களும் என்னை தப்பா புரிஞ்சுக்காதீங்க. நான் ஒரு நல்ல எண்ணத்துலதான் உங்க கணவர் பற்றி ஆரம்பிச்சேன். அது இப்படி விவகாரமாகும்னு எனக்குத் தெரியாது’’ என்று கையைப் பிசைந்தான்.

‘‘எந்த விவகாரமும் இல்லப்பா. என் மருமகளுக்கு எதுலயும் தூரப் பார்வைங்கறதே கிடையாது. அவ அப்படித்தான். நான் பாத்துக்கறேன். நீ போப்பா.’’

‘‘என்ன பெரிய தூரப்பார்வை, கிட்டப்பார்வைன் னுகிட்டு. அவருக்கு இன்னிக்கு அவங்கப்பான்னு ஒருத்தர் துணை இருந்தா இப்படியா கஷ்டப்படுவார்? இல்லை நான்தான் வேலைக்குப் போய் சம்பாதிக்கிற நிலை இருக்குமா? உங்களுக்கென்ன.. வீட்டுக்குள்ள இருந்துகிட்டு வேளை தவறாம சாப்பாடு–பதினோரு மணியானா அர்ச்சனைப் பூக்கள், பதினொண்ண ரைக்கு பல்லாங்குழி, அப்புறமா கோபுரம்னு வரிசை யா சீரியல் பார்த்து ஜாலியா பொழுதை கழிச்சு கிட்டிருக்கீங்க. இழுத்து வெளியே விட்டா தெரியும், புருஷனோட அருமை!’’

ரஞ்சனியின் கத்தல் ஜன்னல்களை கடந்து அக்கம் பக்கமெல்லாம் போய் அவர்களை எட்டிப் பார்க்க வைத்தது. மீனாட்சிக்கு தலையில் இடிஇடிக்கிற மாதிரி இருந்தது. காதை பொத்திக்கொண்டு மூலையில் கிடந்த மூங்கில் நாற்காலியில் போய் உட்கார்ந்தாள்.

‘‘இப்படி காதைப் பொத்திகிட்டு உட்கார்ந்தா விட் ருவேனா? இதுல பிள்ளை இல்லாத வீட்டுல கிழவி துள்ளி விளையாடற கணக்கா இந்த வயசுல உங்க ளுக்கு சைக்கிள் சவாரி வேற. தெருவுல இருக்கறவங்க என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க? வயசான காலத் துல மாமியாரை எப்படியெல்லாம் கொடுமைப்படுத் தறான்னு பேசமாட்டாங்க? நீங்களே சொல்லுங்க சாமிநாதன். பேசுவாங்களா மாட்டாங்களா?’’

ரஞ்சனி இரண்டில் ஒன்று பார்க்க துணிந்துவிட்ட மாதிரிதான் தோன்றியது சாமிநாதனுக்கு. வேகமாக நழுவினான். ரஞ்சனிக்குள் அடைந்துகிடந்ததெல்லாம் வெளியில்வர ஆரம்பித்தது.

மீனாட்சி தலையை நிமிர்த்தவில்லை. குழந்தை ராகவி ஓடிவந்து பாட்டி யை ஒட்டி நின்றுகொண் டது. அதைப் பார்த்து அவளை இழுத்தவளிடம் ''பாவம்மா.. பாட்டியை ஒண்ணும் சொல்லாதம்மா.'' என்று விசும்பியது.

''பாட்டி இல்ல இவங்க. சரியான கிழட்டுப் பிசாசு. நான் மட்டும் உன் அப்பாவை காதலிக்காம இருந்தி ருந்தா உங்க அப்பாக்கு இந்த ஜென்மத்துல கல்யா ணம் ஆகியிருந்திருக்காது. அப்பா இருந்தும் இல் லேங்கற அந்த ஒரு காரணம் போதும். ஒரு தோட்டி கூட பொண்ணு கொடுத்துருக்க மாட்டான். பாட்டி யாம் பாட்டி'' – ரஞ்சனி ஹிஸ்டீரியா பேஷண்ட் போல பேச்சில் எங்கெங்கோ போகத் தொடங்கினாள்.

இதற்கு முன்பும் சண்டை வந்திருக்கிறது. ஆனால், இப்படி உள்மன விகாரமெல்லாம் வெளியில் வந்து விழுந்ததில்லை. திருவிழாக்கூட்டத்தில் சிலம்பக்கா ரர்கள் போட்டுக் கொள்ளும் பொய்ச் சண்டையாகத் தான் இருந்திருக்கிறது. ஆனால், இன்று கலவர பூமி யில் நிகழும் குண்டுவெடிப்பு போல மாறிவிட்டது.

மீனாட்சியால் ரஞ்சனியிடம் பதிலுக்குப் பதில் பேசமுடியவில்லை. பேசுவது அசிங்கம் என்று விவே கம் சொன்னதன் விளைவு கண்களில் நீர் தளும்ப வெளியே புறப்பட்டுவிட்டாள்!



அஸ்தமன வேளை!

வானத்தில் சன்னமாக கருப்பு. அது வலுத்து மழை பெய்தால் தேவலை என்கிற மாதிரி கசகச வியர்வை யோடு வந்து சேர்ந்தான் ஆட்டோக்காரன். ராகவியை தெருமுனையில் உதிர்த்துவிட்டு கொடூரமான சத்தத் தோடு புகையையும் உருவாக்கிக் கொடுத்துவிட்டு மறைந்து போனான்.

ஆட்டோவை விட்டு இறங்கிய ராகவி தோளில் மூட்டையுடனும், கையில் லன்ச் கூடையுடனும் சுற்றி சுற்றி பார்த்தது. வழக்கமாக மீனாட்சி காத்திருந்து அழைத்துப் போவாள். இன்று வராததில் வருத்தம்.

'எங்கே போய்விட்டாள் பாட்டி?'

ராகவியின் வண்டு விழிகளில் சுழற்சியான தேடல். ஒரு நைட்டியில் ரஞ்சனி வந்துகொண்டிருந்தாள்.

''என்ன மேடம் இன்னிக்கு ஆபீஸ் லீவா?''

''ஆமா லீவ்.''

''அதான் பாட்டி வரலியாக்கும்?''

''ஆமா. அவங்களுக்கு உடம்பும் முடியறதில்ல.''

''அப்புறம் எதுக்கு இந்த வயசுல சைக்கிள்லாம் ஓட்டக் கத்துக்கறாங்க?''

‘‘இதுக்கு பதிலை நீங்க அவங்ககிட்டதான் கேட்கணும்’’ - ரஞ்சனி வழியில் வீதியின் விசாரிப்பு களுக்கு பதில் சொல்லிக்கொண்டு ராகவியை நெருங் கினாள். லன்ச் கூடையை வாங்கிக் கொண்டாள். மீனாட்சியாக இருந்தால் புத்தக மூட்டையைத்தான் முதலில் கேட்டு வாங்கிக் கொள்வாள்.

ராகவி, ரஞ்சனியிடம் அதை எதிர்பார்க்கவில்லை.

‘‘பாட்டி எங்கம்மா?’’ - என்றுதான் கேட்டாள். ‘‘வந்ததும் வராததுமா ஆரம்பிச்சுடு. பாட்டியாம் பாட்டி. உன் பாட்டி ஓடிப்போய்ட்டா. பேசாம வா.’’

- வீதி என்றுகூட பார்க்கவில்லை. சவுக்கை சொடுக்கின மாதிரி வார்த்தைகள் சிதறின.

**வீ**ட்டினுள் நுழைந்து குழந்தை ஒவ்வொரு அறை யாக போய் பார்த்தது. சில சமயங்களில் தலைவலி என்று இருட்டு மூலையில் மீனாட்சி படுத்துக்கிடந்த ஞாபகங்கள் அவளை தேடவிட்டது.

‘‘உன் பாட்டி இல்லடிங்கறேன்ல?’’

- லன்ச் கூடையை உதறியபடி கத்தினாள் ரஞ்சனி. குழந்தை நடுங்கி விட்டது. மலங்க மலங்க பார்த்தது. ‘‘போய் யூனிஃபார்மை கழட்டி வச்சுட்டு ஃப்ராக் போட்டுகிட்டு வா. டிபன் தரேன்.’’

- என்று ரஞ்சனி தொடரவும் பயத்துடன் தலையை ஆட்டியது. மீனாட்சி அதிர்ந்து ஒரு வார்த்தை பேச மாட்டாள். அவளாக உடுப்பைக் கழற்றி தலையை கோதிவிட்டு தோளில் தூக்கிக்கொண்டு அடுப்படிக்கு போய் முதல் காரியமாக காம்ப்ளான் தருவாள். உதட்டில் நுரைக்கசடு ஒட்டுமளவு திக்காக இருக்கும்.

இன்று ஆறி அவலாகி கழுவிக் கொட்டிய தண் ணீர்போல சப்பென்று இருந்தது.

‘‘அய்யே, இது காம்ப்ளான் இல்ல. வேற எதுவோ.’’

‘‘சொல்லமாட்டே? முழு ஸ்பூன் போட்டு கலக்கி யிருக்கேன். காம்ப்ளான் இல்லையாம்ல? கழனித் தண்ணின்னுதான் சொல்லேன்.’’

‘‘ஆமா. அப்படித்தான்! பாட்டி தந்தா எப்படி இருக்கும் தெரியுமா?’’

‘‘இருக்கும் இருக்கும். டப்பா டப்பாவா கொட்டிக் கலக்கினா நல்லாதான் இருக்கும். வாயடிக்காம சாப்ட் டுப்போய் படு. பாட்டியாம் பாட்டி, கெழ போல்ட்!’’

- ராகவி பிறகு எதுவும் பேசவில்லை. இரவு மணி எட்டை தாண்டி சன் செய்திகளுக்காக நிர்மலா பெரிய சாமி வணக்கம் சொல்லும்போது வந்தான் அரவிந்தன்.

ரஞ்சனி ஏதோ நாவல் படித்துக் கொண்டிருந்தாள். இமைக்கூரையை மட்டும் உயர்த்தி ஒரு பார்வை பார்த்துவிட்டு நாவல் வரிகளில் தொடர்ந்தாள்.

‘‘என்ன ரஞ்சா, டி.வி. போட்டுட்டு நாவல் படிச்சு கிட்டிருச்சே.. அம்மா எங்க?’’

- நிமிர்ந்து ஒரு குத்துப்பார்வை பார்த்தாள்.

''என்ன... பார்வையெல்லாம் பயங்கரமா இருக்கு? சாமிநாதனை எப்படி சமாளிச்சு அனுப்பினே?'' டையை இளக்கியபடி பார்வையை சுழல விட்டான்.

''உங்கம்மாவை தேடுறீங்களா?''

''ஆமா.. எங்க போய்ட்டாங்க?''

''யாருக்கு தெரியும்?''- ரஞ்சனி குரலில் அலட்சியம்.

''என்ன ரஞ்சா சொல்றே?''

''வந்ததும் வராததுமா அம்மாவை பத்திதான் கேட்கணுமா, என்னை விசாரிக்க தோணலியாக்கும்?''

''நீதான் எதிர்ல இருக்கியே.. அம்மா கண்ல படல. அதான் கேட்டேன். நீ இல்லாம அம்மா இருந்தி ருந்தா நீ எங்கன்னுதான் கேட்பேன்.''

''சரி சரி. போய் கால், கை கழுவிட்டு வாங்க. பால் பாயசம் பண்ணியிருக்கேன்.''

''யாரு நீயா?''

''யெஸ். நானேதான். நானேதான் மிஸ்டர் அரவிந் தன். ஏன், நான் சமைக்கக் கூடாதா?''

''அம்மா விடமாட்டாளே.''

''அம்மா.. அம்மா. அவங்க எங்கேயோ ஓடிப் போய்ட்டாங்க. போதுமா?''

- மீண்டும் ஹிஸ்டீரியா வந்தவள்போல ரஞ்சனி கத்த குழந்தையும் எரிச்சலுடன் நிமிர்ந்து பார்த்தது.

''ரஞ்சா என்ன நடந்துச்சு?''

''எதுவும் நடக்கல. அந்த சாமிநாதன் சும்மா இல்லாம சினிமா புரொட்யூசர் ரங்கராஜன்தான் உங்க அப்பாவான்னு தெரியாத்தனமா கேட்டுட்டான். உங்கம்மாவுக்கு வந்துச்சு பாருங்க, ஒரு கோபம். அவனை உண்டு இல்லைன்னு ஆக்கிட்டாங்க.''

- ரஞ்சனி பொய்யாக மிகையாக பேசுவதை ராகவி திரும்பவும் நிமிர்ந்து பார்த்தது.

''அந்த ஆள் எதுக்கு நம்ம குடும்ப விஷயம் பத்தி எல்லாம் கேக்கறான்.''

''அவன் எங்க கேட்டான்? அதான் பத்திரிகை பூரா கிசுகிசுவா உங்க குடும்பவிஷயம் நாறுதே.''

''என்ன ரஞ்சா சொல்றே நீ?''

‘‘அதென்னவோ எனக்கு தெரியாது. சாமிநாதன் தான் ஒரு பத்திரிகைல படிச்சதா சொல்லி ஆரம்பிச் சான். நான் பேசாதே பேசாதேன்னு எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவனும் வாயை மூடலை, உங்கம்மாவும் வாயை மூடலை. கடைசில பார்த்தா ஆளைக் காணோம். காலைல போனவங்க. இந்த நிமிஷம் வந்து சேரலை.’’

‘‘காலைல எத்தனை மணிக்கு?’’

‘‘நீங்க ஆபீஸ் போன ஒரு அரைமணி நேரத்துல.’’

‘‘நீ தேடலையா?’’

‘‘தேடலையாவா... ஐந்நூறு ரூபா ஆட்டோவுக்கே ஆயிடுச்சு.’’

- ரஞ்சனி அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திருப்பிப் போட்டாள். நேர் எதிராக புளுகினாள். அரவிந்தன் தாடையை சொறிய ஆரம்பித்தான்.



‘எங்கே போயிருப்பாள் அம்மா?’

அரவிந்தன் கேள்வியில் விழுந்து அல்லாடினான். நடுநடுவே ரஞ்சனியை ஊசிப்பார்வை பார்த்தான். ரஞ்சனிக்கு கொஞ்சமாய் கூசியது. சொன்ன பொய்கள் உள்ளுக்குள் சற்று கிச்சுகிச்சு மூட்டின.

‘வீட்டை விட்டு போனவள் ஒரேயடி யாய் போய்விட்டால் நல்லது. ஆனால் அப்படி ஒரு அதிர்ஷ்டம் எனக்கு அடிக்கப் போவதில்லை. எப்படியும் திரும்பி வருவாள். வந்தால் சொன்ன பொய் எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிடுமே?’ பயம் நெஞ்சுக் குழியில் ஒரு பந்தாட்டம் வந்து அடைத்தது.

அவனுக்கும் புரிந்ததோ என்னவோ.. ‘‘உண்மைய சொல்லு ரஞ்சா. என்ன நடந்தது?’’ - நறுக்கலாய் கேட்டான்.

‘‘அப்ப நான் சொன்னதெல்லாம் பொய்யா. நீங்க நம்பலையா?’’

‘‘ஆமா.. நீ மென்னு முழுங்கறதப் பார்த்தாலே தெரியுதே?’’



‘‘என்ன தெரியுது. இல்ல, என்ன தெரியு துன்னேன்? காலைச் சாப்பாட்டை முடிச் சிட்டு திரும்ப சைக்கிள் கத்துக்கப் போனாங்க. வெய்யில்ல இது வேண்டாத வேலைன்னேன். முறைச்சாங்க. அவ்வளவு தான். நான் கத்த அவங்க கத்த கடைசில அது இப்ப நீங்க என்னை கேள்வி கேக்கற அளவுக்கு வந்து நின்னுருக்கு...’’

‘‘இல்ல ரஞ்சா. மறுபடி நீ பொய் சொல்ற. மாறிமாறி பேசறே. உன் பேச்சுல ஏகப்பட்ட தடுமாற்றங்கள். உண்மை பேசறவங்களுக்கு ஒரே வார்த்தைதான் எப்ப கேட்டாலும் வரும். பொய்க்கு கால் கிடையாது. ஏகப்பட்ட பல்டி அடிக்கும்.’’

‘‘அப்ப நான் சொல்றதெல்லாம் பொய். அப்படித்தானே?’’ - ரஞ்சனி அபிநயத் தோடு ஒரு கத்து கத்தினாள். ராகவிக்கே அவள் கத்துவது எரிச்சலை மூட்டியது.

‘‘அம்மா பொய்தான் சொல்றாங்கப்பா. சாமிநாதன் மாமா இல்ல, சாமிநாதன் மாமா..’’ - குழந்தை அந்த வீட்டு புரோக் கரை ஞாபகமூட்டியது. அடுத்த நொடி அரவிந்தன் கைதட்டியபடி, ‘‘இப்பதான் புரியுது.. அவன் வீடு சம்பந்தமா உன்னை கன்வின்ஸ் பண்ண பார்த்திருப்பான். நீ பணம் இல்லேன்னு சொல்லியிருப்பே. அப்படியே பணத்தோடு கொழுகொழுன்னு இருக்கற என் அப்பா ஞாபகம் வந்துருக்கும். அம்மாதான் அப்பாகிட்ட தானும் போகாம நம்மையும் போகவிடாம தடையா இருந்தாளே.. அந்த ஆத்திரத்தை காட்டியிருப்பே. அது எல்லை மீறியிருக்கும். அதனால அம்மா வீட்டை விட்டு போயிருக்கா... இதுதான் நடந்திருக்கணும்’’ - என்று கிட்டத் தட்ட உண்மையின் பக்கம் வந்தான் அரவிந்தன்.

‘‘ஆமா. அப்படித்தான்... அதேதான்! ஒரு சின்ன திருத்தம்’’ - அவள் இடைவெளி விட்டாள்.

‘‘என்ன திருத்தம்..?’‘ அரவிந்தன் பார்வையில் கேள்வி.

‘‘உங்கப்பா ஞாபகம் எனக்கு மட்டும் வரலை. அது அந்த சுவாமிநாதனுக்கும் வந்துது. கைல வெண்ணைய வச்சுகிட்டு நெய்க்கு அலையறீங்களேனு அவன் கேட்டான்.’’

‘‘எங்கப்பா பத்தி அவனுக்கு எப்படி தெரியும்?’’

‘‘இந்த நிமிஷம் இந்த ஊர்ல பாதிப் பேருக்கு மேல தெரியும்.’’

‘‘ரஞ்சா.. என்ன பேசறேன்னு தெரிஞ்சுதான் பேசறியா. என் அப்பாவை பத்தின விஷயம் எங்க குடும்ப ரகசியம். இருபது வருஷமாச்சு... அவரை விட்டு நாங்க விலகி..’’

‘‘சத்தம் போட்டு பேசாதீங்க. நாளைக்கே இந்த விஷயமும் எதாவது பத்திரிகைல வந்துடப் போகுது.’’

''என்னடி உளர்றே.. நம்ம குடும்ப விஷயத்துக்கும், பத்திரிகைக்கும் என்ன சம்பந்தம்?''



''வேண்டாம்... நீங்க 'டி' போட்டா நான் 'டா' போட வேண்டியிருக்கும்.''

''என் கேள்விக்கு முதல்ல பதில் சொல்லு. அப்புறம் 'டா' போடு 'டேய்' போடு என்னவேணா சொல்லு. பேய்க்கு வாக்கப்பட்டா புளியமரம் ஏறித்தானே தீரணும்?'' - வார்த்தைகள் யானைக்கால் போல தடிக்கத் தொடங்கியது. ரஞ்சனியின் கண்களில் சிவப்பின் வியாபிப்பு. விறுவிறுவென்று உள்ளே சென்றாள். வாரப்பத்திரிகை ஒன்றை எடுத்து வந்தாள். அதில் சில வரிகளை பேனாவால் அடிக்கோடு போட்டு வைத்திருந்தாள்.

''பாருய்யா... இதைப் பார்த்துட்டு பேசு..'' - என்று தன் தரப்பிலும் மரி யாதையை உருவிக் கொண்டாள். பத்திரிகையை ஆவேசமாய் நீட்டினாள். அவனும் பார்த்தான். முகம் மாறி நெற்றியை தேய்த்தபடி சோபாவில் விழுந்தான்.

''இதை பார்த்துட் டுதான் அவன் கைல வெண்ணைய வச்சு கிட்டு நெய்க்கு அலைறீங்கன்னு சொன்னான். புரியுதா?''

''அவனுக்கு காரியமாகணும். ஆயிரம் பேசுவான். பதிலுக்கு நீ என்ன சொன்னே?''

''அதை அவன்கிட்டயே கேட்டுக்கோ. இப்ப சொல்றேன். வெளிய போன உங்கம்மா ரோஷக்கார பொம்பளையா இருந்தா திரும்பி வரக்கூடாது. மீறி வந்தா என் பேச்சைக் கேட்டு நடந்துக்கணும். அவங்க மட்டுமில்ல. நீங்களும்தான். நீங்க என்ன நீங்க- நாசமாப்போன நாக்குக்கு அநியாய பழக்கதோஷம். நீயும்தான். ''-ரஞ்சனி அமிலத்தில் தோய்ந்த வார்த்தைகளை வடிகட்டாமலே கொட்டி விட்டு பெட்ரூம் போய் கதவை சாத்திக் கொண்டாள். அரவிந்தனுக்கு தலை சுற்றியது.

நவஜீவன் முதியோர் ஆசிரமம்.

ஓங்கி உயர்ந்த தாரிசுக் கட்டடம். சுற்றிலும் அந்த நாளைய கூரைப்பள்ளிக்கூடம் போல கூரைக் கட்டடங்கள். நடுநடுவே ஊட்டத்தோடு வளர்ந்த ஒதியமரங்கள்- வேம்புகள். அதன் முகப்பில் ஆட்டோ தேங்கி நின்றது. அதில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தாள் மீனாட்சி.

''இதான் பாட்டிம்மா நீங்க கேட்ட முதியோர் இல்லம். மாசம் நாலுபேரை இட்டாந்து இங்க உட்றேன். காலம் அப்டிருக்குது. உள்ளார ஒரு அய்யிரு இருக்றாரு. ஒத்தநாமம் போட்டுகினு பாக்கறதுக்கு விலுவிலுன்னு இருப்பாரு. நல்லமனுசன். பார்க்கும்போதெல்லாம் நாங்கூட சொல்வேன்... சாமீ எனக்கும் ஒரு இடம் போட்டு வைங்க. நம்ம கடேசிக் காலம் இங்க தான்னுவேன்...''

-ஆட்டோக்காரன் கொஞ்சம் அதிகப் பிரசங்கித்தனமாய் பேசினான். மீனாட்சி சிரித்தாள். அவன் அப்படியே ஒரு சிகரெட்டை எடுத்து இதழில் செருகி புகையை அம்பாரமாய் விடத் தொடங்கினான்.

அவனுக்கான பணத்துக்காக பர்ஸைத் திறந்து விட்டிருந்த மீனாட்சியை புகை இருமச் செய்தது. அவனும் அதை பார்த்து, ‘‘வெரி சாரி பாட் டிம்மா.. வெரி சாரி’ - என்று புகைமேகங்களை கையால் கலைத்துவிட முயன்றான்.

அவள் பணத்தை நீட்டினாள். கூர்மையாக பார்த்தாள்.

‘‘சாரி சொல்ட்டேன்ல.. எதுக்கு அப்படி பாக்றீங்க..?’’

‘‘உனக்கு ஒரு விஷயம் தெரியுமா?’’

‘‘இன்னா?’’

‘‘சாரி’ங்கற வார்த்தையை அடிக்கடி பயன்படுத்தற வங்க ஒரு அங்குலம் கூட முன்னேறமாட்டாங்க.’’

‘‘அப்புடியா..?’’

‘‘அப்படியேதான். சாரியும், மாத்திரையும் ஒண்ணு. தற்காலிகமாக குணம் தரும். வியாதி போகாது.’’

‘‘இன்னாவோ. ஆட்டோக்காரன் நான். நாலு கஸ்டமருங்க ரெகுலரா இந்த ஆட்டோல ஏறுனா போதும் எனக்கு. முன்னேத்தமெல்லாம் கொழாசூட் போட்டவங்களுக்குதான். என்னிய மாதிரி அன்னாடங்காச்சிக்கு கிடையாது. சரி சரி துட்டக் கொடுங்க’’ - என்றபடி அவள் நீட்டிய பணத்தை வாங்கிக்கொண்டான். அப்படியே ஆட்டோவில் ஏறப்போனான்.

‘‘மீதி சில்லரை..?’’- அவள் கேட்கவும் புழு பூச்சியை பார்க்கிற மாதிரித் திரும்பி ஒரு பார்வை பார்த்தான்.

‘‘முப்பத்தி எட்டு ரூவா எம்பது காசு வந்துருக்குது. மீதி ஒர்ரூவா இருபது நயாபைசா. சில்லரை இருந்தா தரமாட்டேனா?’’

‘‘இதை நான் கேட்டாதான் சொல்லணுமா. சில்லரை இல்லம்மான்னா நான் வழி சொல்லு வேன்ல?’’

‘‘சரி என்னா வழி... நீயே சொல்லு..’’

‘‘நிஜமா உங்கிட்ட சில்லரை இல்லையா?’’

‘‘அட, இருந்தா விட்டெறிஞ்சுட்டு போக மாட்டேன்?’’

‘‘ஒரு ரூபா இருபது பைசாங்கறது நீ தூக்கியெறியற அளவுக்கு மதிப்பில்லாத காசா..?’’

‘‘தோடா... என்னா பாட்டியம்மா நீ. சிகரட்டுக்கு ஒரு குட்டு, சில்லரைக்கு ஒரு குட்டுன்னு மாறி மாறி வக்கிறே - நீ வழிய சொல்லு.’’

‘‘ஆயிரம் வழி இருக்கு. அப்புறமா இந்தப் பக்கம் போகும்போது தரேன்னு சொல்லலாம். எங்கையாவது பார்த்தா தரேன்னு சொல்லலாம். என்கிட்ட இருக்கான்னு கேட்கலாம். எதுவுமே சொல்லாம வண்டியை கிளப்பறியே...’’

இருவரும் பேசுவதை அனாதை இல்லத்தின் மாடி ஜன்னல் வழியாக ஒரு மனிதர் பார்த்துக் கொண்டேயிருந்தார். நெற்றித் திருமண்ணை பார்த்தபோது அவர்தான் ஆட்டோ டிரைவர் சொன்ன அய்யராக இருக்கவேண்டும்.

''சரிதாயி... சில்லரை உன்னாண்ட இருந்தா கொடு. என்னாண்ட இல்ல. எதுக்கு உன்னோட ரவுசு பண்ணிகிட்டு.''

- மீனாட்சி சிரித்துவிட்டாள். பிறகு நிதான மாக சொன்னாள். ''இன்னிக்கு என்னை மாதிரி வயசானவங்க யாராவது உன் வண்டியில ஏறினா அவங்களுக்கு இந்த ஒண்ணு இருபதை கழிச்சுக்கோ. பரவால்லியே இப்படி கூட ஒரு ஆட்டோ டிரைவரான்னு அவங்க மனசு சந்தோஷப்படும். அது உன் கணக்குல வரவாகி சமயத்துல உனக்கு உதவி செய்யும். என்ன?''

- அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அங்கே இன்னொரு ஆட்டோ வந்து நின்றது. ஆட்டோவில் இருந்து இரண்டு பேர் திபுதிபு வென்று இறங்கினர். ஒரு கிழவரையும் துணி மூட்டையையும் ஆசிரம வாசலில் போட்டனர்.

அடுத்த நொடியே ஆட்டோ அந்த இரண்டு பேரோடு வந்த சுவடு தெரியாதபடி திரும்பிப் பறந்துவிட்டது. மீனாட்சிக்கு சுரீர் என்றது. கிழவர் யார் என்று பார்க்கும்போது இந்த ஆட்டோக்காரனும் 'சரியான லொள்ளு புடிச்ச கெழவி' என்கிற முணுமுணுப்போடு ஆட்டோவை கிளப்பிக்கொண்டு பறந்தான்.

அந்த மனிதருக்கு சுத்தமாக கண் பார்வை இல்லை. ''நான் இப்ப எங்க இருக்கேன்.. ப்ளீஸ் யாராவது ஹெல்ப் பண்ணுங்க. நான் எங்க இருக்கேன்?'' - என்று புலம்ப ஆரம்பித்தார்.

''சார், நீங்க யாரு? உங்க பேர் என்ன?'' - தடுமாறும் அவரது கைகளை வாஞ்சையாக பிடித்துக் கொண்டே மீனாட்சி கேட்டாள்.

''யாரது.. நீங்க யாருன்னு தெரியலியே..?''

''நீங்க யார் சார். அதை சொல்லுங்க. ஆட்டோவுல வந்து உங்களை குப்பை மாதிரி எறிஞ்சுட்டு போறாங்களே.. அவங்க யார்?''

''அவங்க என் தம்பி பசங்க. நான் ஒரு நிர்க்கதியான மனுஷம்மா. இந்த பெரியப்பனை அவங்களுக்கு பிடிக்கல..'' கலீர் என்று இருமல். மார்பில் கிலோக்கணக்கில் சளி கட்டிக் கொண்டிருப்பதை உணர முடிந்தது. இரு நிமிடங்களுக்கு இருமல் நீடித்தது. மீனாட்சி அவர் மார்பை தேய்த்து விட்டாள். எலும்புகளின் நிரடலில் அவரது பட்டினி கிடந்த காலத்தை அவளால் உணர முடிந்தது.

அவரும் எச்சில் வடிய இறுமி முடித்து பெருமூச் சுக்கு மாறி, ''நான் இப்ப எங்க இருக்கேன். அவங்க என்னை எங்க விட்டுட்டு போயிருக்காங்க. நீங்க யாரு?'' - என்ற கேள்விகளுக்கு வந்தார்.

''நாம இரண்டு பேருமே இப்ப ஒரு முதியோர் இல்லத்துக்கு வெளியேதான் நிக்கறோம். உங்க தம்பி பசங்களுக்கு உள்ள வந்து உங்களை அட்மிட் பண்ணக்கூட பிரியமில்ல போலருக்கு... ஆமா உங்களுக்கு பார்வை கிடையாதா?''

''ஆமாம்மா.. கல்யாணமே பண்ணிக்காம தம்பி தங்கைகளுக்காக வாழ்ந்தேன். ஆனா எனக்காக தன் வீட்டு வராண்டாவை ஒதுக்கக்கூட தம்பி பசங்களுக்கு மனசு இல்லாம போயிடிச்சு. இந்த இருமல் வேற... ஹங்.. என்னால அவங்களுக்கு தூக்கம் கெடுதாம். விஷம் கொடுத்து கொன்னுடுங்கடான்னேன். ஆனா, இங்க கொண்டு வந்து விட்டுட்டு போயிட்டாங்களே... நான் இப்ப என்ன பண்ணுவேன்?''

அவரது குரலில் இயலாமை உச்சபட்சமாக தொனித்தது. மீனாட்சிக்கு கண்கள் பனித்து விட்டது.

''ஆமா நீங்க யார்... நீங்கதான் இந்த ஆசிரமத்தை நடத்தறேளா?'' - பெரியவர் கேட்டார்.

''இல்லை சார்! அவ்வளவு புண்ணியமெல்லாம் நான் பண்ணலை. நீங்க உங்க சொந்தங்களால தூக்கி எறியப்பட்டு இங்க வந்து விழுந்திருக்கீங்க. நான் அவங்களுக்கு அந்த சிரமத்தை கொடுக்காம தானா வந்து நிக்கற ஒருத்தி. இரண்டு பேருமே ஒண்ணுதான்.''

-மீனாட்சி சொல்லி முடிக்கவும் ஆசிரமக் கதவு திறக்கவும் சரியாக இருந்தது. அதுவரை நடப்பதை மாடியில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த அய்யர்தான் வெளியே வந்தார். கதர் வேட்டி, ஜிப்பா, நரைத்த கிராப்புத் தலை என்று பரம பவ்யமாக இருந்தார். மீனாட்சியை தீர்க்கமாக பார்த்தார். பெரியவரையும் நெருங்கி அவர் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

''யாரு..?''

''என் பேர் அனந்தாச்சாரி. இந்த முதியோர் இல்லத்தோட நிர்வாகி. வாங்க உள்ள. மத்ததை உள்ள போய் பேசிக்கலாம். மேடம் நீங்களும் வாங்கோ...''

-அவர் அழைத்த விதத்தில் அபரிமிதமான ஒரு வாஞ்சை. முதுமையை ஒரு குப்பையாய், அதீதபாரமாய் கருதி இடது காலால் எட்டி உதைக்கும் ஊரிலா இப்படி. மீனாட்சிக்கு சிலிர்த்துப் போனது.

ஆசிரம கதவு திறந்த நிலையில் வலது பக்கம் ஒரு வேப்பமரம். அதன்கீழ் சிறிதாக ஒரு குத்துப் பிள்ளையார் சிலை. அதன் முன்னால் அணையாதபடி ஒரு அகல்.

மீனாட்சி பிள்ளையாரைப் பார்த்த நொடி கைகளைக் கூப்பினாள். உதட்டில் முணுமுணுப்பு.

''சாமி... நான் அனாதை இல்ல. அதனால இங்க இடமில்லைனு மத்த ஆசிரமங்கள்ல சொன்ன மாதிரி இங்கேயும் சொல்லிடக் கூடாது. இந்த அய்யர் கட்டாயம் சேர்த்துக்கணும். சேர்த்துகிட்டா தினம் உனக்கு பூக்கட்டி போடறேன். நான் பாரமா இருக்க வரலை. முடிஞ்ச உபகாரத்தை பண்ணத்தான் வந்திருக்கேன்!''

- அவள் பிரார்த்தனை அய்யர் காதிலும் விழுந்ததோ என்னவோ, ''வாங்கம்மா, ஏன் நின்னுட்டீங்க'' - என்று திரும்பிப் பார்த்து அழைத்தார்.

''சாமிய பார்த்த உடனே கும்பிடணும்னு தோணிச்சு. அதான் நின்னுட்டேன்.''

''சரி, நிதானமா பிரார்த்தனை பண்ணிட்டே வாங்க.''

அதே சமயம், ஆசிரம ஆபீஸ்ரூமில் இருந்து இரண்டு பேர் வந்தனர். அவர்களைப் பார்த்த அய்யர், ''மிஸ்டர் ஸ்ரீனிவாசன். இவரை பத்ரமா ஆபீஸ் ரூமுக்கு கூட்டிண்டு போங்கோ. இவரைப் பத்தின விவரங்களை கேட்டுண்டு ரிஜிஸ்டர்ல பேர் எழுதிக்குங்கோ. மத்த ஃபார்மாலிடீஸ் எல்லாம் வழக்கம் போலதான். ராகவன் நீங்க அப்படியே அந்த லேடியையும் விசாரிச்சு...''

-அய்யர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, மீனாட்சி அவரை சமீபித்து சரேலென்று காலில் விழுந்தாள்.

''எழுந்திருங்கம்மா.. எழுந்திருங்க. என்ன இது? இப்படி கால்லல்லாம் விழக்கூடாது. ஆசிரமத்துல உங்களைத்தான் மத்தவா சேவிக்கணும். நீங்க யாரையும் சேவிக்கக்கூடாது'' - அவரிடம் அற்புதமான அழுத்தம் திருத்தம். கரிசனம், பாலிசி விளக்கம் என்று எல்லாம்.

''இல்லை மிஸ்டர் அய்யர். நான் கால்ல விழுந்ததுக்கு காரணமே வேற.''

''என்ன விஷயம்? சித்த பதட்டப்படாம சொல்லுங்கோ.''

''எனக்கு அனாதை ஆசிரமம் எப்படி நடக்கறதுங்கற விஷயமெல்லாம் தெரியும். பல ஆசிரமங்களுக்கு போய் அங்கல்லாம் இடமில்லாமதான் இங்க வந்திருக்கேன்.''

''நோ பிராப்ளம். இங்க அப்படி சொல்ல மாட்டேன்.''

''இல்ல. நான் அனாதை இல்லைன்னு தெரிஞ்சா நீங்களும் இடம் இல்லைன்னு சொல்லிடுவீங்க.''

-மீனாட்சியின் பதில் அய்யரை அவள் சொன்னது போலவே கட்டிப் போட்டது. ''ஐ ஆம் சாரி... நீங்க சொன்னது சரிதான். இந்த ஆசிரமம் எந்த ஆதரவும் இல்லாத அனாதைக்குதான். நீங்க அனாதை இல்லேன்னா...'' - மறுப்பை நாசூக்காக காட்ட முயல..

''பார்த்தீங்களா. இதுக்குதான் கால்ல விழுந் தேன். நான் ரொம்ப மனசு நொந்துபோய் என் உறவுகளை பிரிஞ்சு வந்திருக்கேன். கிட்டத்தட்ட நானும் அனாதைதான். ஆனா, சட்டப்படி அதுக்கு இடமில்லேங்கறது எனக்கு தெரியும். பொய் சொல்லி இங்க சேர முயற்சிக்கலாம். ஆனா எனக்குன்னு சில நம்பிக்கைகளையும் பாலிசிகளையும் வச்சிருக்கேன். அதுக்கு குந்தகம் இல்லாம இங்க சேர்ந்து சில சேவைகளை செய்ய எனக்கு நீங்க அனுமதி தரணும்.'' - மீனாட்சி கண்ணீருடன் கைகளை கூப்பினாள். அய்யர் முகத்தில் சன்னமாய் ஒரு புன்னகை.

''உங்க பாலிசி எப்படிப்பட்டதுன்னு எனக்கு தெரியும்மா. ஆட்டோகாரன்கிட்ட பேசிண்டிருந்ததை பார்த்தேன். உங்களுக்கு நன்னா சமைக்க வருமாம்மா?''

''தாராளமா... நான் ஒரு பொம்பள நளன்!''

''அப்ப இனி நீங்க இந்த நவஜீவனோட நளன். ராகவன்... இந்தம்மாவை கூட்டிண்டு போங்கோ. ஒரு எம்ப்ளாயியா இவங்கள ட்ரீட் பண்ணி ஃபார்மாலிடீஸை கவர்பண்ணுங்கோ. மத்ததை அப்புறம் பேசிக்கலாம்...''

-அவர் சொன்ன நொடி மீனாட்சி திரும்பி அந்த பிள்ளையாரை நோக்கித்தான் ஓடினாள்.

**ஆ**பீஸ்!

சீட்டில் வேலையே ஓடாமல் அரவிந்தன். நடுவில் தொலைபேசி சிணுங்கல். எடுத்தான்.

''அரவிந்தா! அக்கா மாலதி பேசறேன். என்னடா இது, அம்மாவை காணோமாமே..?''

''ஆமாக்கா. எங்க போனாங்கன்னே தெரி யல. உன் வீட்டுக்கு வந்திருக்கலாம்னு அத்தானுக்கு போன்பண்ணி கேட்டேன். நீ உன் நாத்தனார் பொண்ணு வயசுக்கு வந்துட்டான்னு பட்டுக்கோட்டை போயிருக்கறதா சொன்னார். இப்ப எங்க இருந்து பேசறே?''

''பட்டுக்கோட்டைல இருந்துதான். அவருக்குதான் ஆபீஸ் லீவு இல்லை. நானும் வராட்டி எப்படி? தாய்மாமா சீர் செஞ்சாகணுமுல்ல?''

''இப்ப என்ன செய்யலாம், சொல்லு?''

''என்னடா கேள்வி. என்ன சண்டை... உன் வீட்டுக்காரி ரொம்ப தாளிச்சுட்டாளா?''

''எல்லாம் வழக்கமான சண்டைதான். இந்த தடவை கொஞ்சம் காரம் கூடிப்போச்சு.''

''காரம் கூடிப்போச்சு, இனிப்பு கூடிப் போச்சுனு பேசறதை விட்டுட்டு கொஞ்சம் அவ வாயை அடக்கிவை. அம்மா நமக்காக உசுரையே விட்டவடா. எல்லாம் மறந்து போச்சா?''

''அக்கா... நீ பாட்டுக்கு விஷயம் புரியாம பேசாதே. இதுல அப்பா சம்பந்தமான விஷயமும் அடங்கியிருக்கு.''

''நினைச்சேன்... இப்படித்தான் எதாவது இருக்கும்னு. விவரமா சொல்லு. 20 வருஷமா இல்லாம இப்ப என்னடா அப்பா பேச்சு?''

''நூறு வருஷம் ஆகட்டுமே. அப்பா அப்பாதானே? உறவு இல்லைன்னு ஆயிடுமா? அதுலயும் அவர் இப்ப நல்லவிதமா பேர் புகழோட இருக்கும்போது, வீம்பா ஒதுங்கி இருந்து என்னத்த சாதிக்கப் போறாங்க? சேர்ந்து இருந்தா எல்லாருக்கும்தானே நல்லதுன்னு அவ கேட்டா!''

''அப்படின்னா... அப்பா, அவரோட அந்த சின்னவீட்டு சிங்காரி அவளோட பசங்க எல்லாரையும் ஒத்துக்கலாம்னு சொல்றாளா உன் பொண்டாட்டி?''

''என்ன தப்புன்னு கேக்கறா. இல்லீகலா வந்த அவங்க சொத்துபத்தை அனுபவிச்சுகிட்டு கார்ல போறாங்க, நாம இங்க ஒரு ஸ்கூட்டர் வாங்க சாகறோமேன்னு கேக்கறா.''

''நீ என்ன சொன்னே?''

''என்னத்த சொல்ல. தலையை பிச்சுட்டு இருக்கேன்...''

''சரி எல்லாத்தையும் நேர்ல பேசிக்கலாம். நீ அம்மா எங்கேன்னு தேடி கண்டுபிடி. நம்ம சொந்தக்காரங்க வீட்ல எல்லாம் விசாரிச்சியா?''

''விசாரிச்சாச்சு. மானம் போனதுதான் மிச்சம். ஒண்ணு சொல்றேங்க்கா. வயசான காலத்துல இவங்களுக்கு இந்த வீம்பு கூடாது.''

''எல்லாத்தையும் பேசிக்கலாம். எனக்கும் இங்க எவ்வளவு கஷ்டம் தெரியுமா. மாமா சீர்னு பத்தாயிரம் ரூபாய்க்கு சங்கிலி வெள்ளிப் பாத்திரம்னு மொய் செய்ய வேண்டியதாப் போச்சு. அவர் ஆபீஸ்ல இருக்கற எல்லா லோனையும் போட்டாச்சு... நான் நேர்ல வந்து விவரமா சொல்றேன். நீ அம்மாவை கண்டுபிடி. நான் அம்மாவை சமாதானப்படுத்தறேன்.''

''என்னக்கா சொல்றே... நீ ஆரம்பிச்சதுக்கும் முடிக்கறதுக்கும் ராகமே மாறுதே?''

''எஸ்.டி.டி. பேசறேண்டா. விவரமெல்லாம் பேசிகிட்டு இருக்க முடியாது. உன் பெண்டாட்டி சொல்றதுலயும் நியாயம் இருக்கு. அவ்வளவுதான் இப்போதைக்கு சொல்வேன். மிச்சத்த நேர்ல பேசறேன். நான் வரும்போது அம்மா உன் வீட்ல இருக்கணும். ஞாபகம் வச்சுக்க.''

-அக்கா மாலதி அந்த பக்கம் ரிசீவரை வைத்து விட்டாள்.

அரவிந்தன் மட்டும் வைக்காமல் அதையே வெறித்துப் பார்த்தான்.

இந்தப் பெண்களுக்குத்தான் எத்தனை முகங்கள்?



'இந்த பெண்களுக்குத்தான் எத்தனை முகங்கள்?' என்கிற அலுப்பும் சலிப்புமான கேள்வி அரவிந்தனுக்குள் தலைக்கேறி விட்டது.

ரிசீவரை 'டொம்'மென்று எரிச்சலுடன் வைத்துவிட்டு நிமிர்ந்தான். எதிரில் சந்திரசேகர். சகா.

மார்க்கெட்டிங் சைடில் பெட்டியை தூக்கிக் கொண்டு திரிபவன். காஸ்ட் லியான உடுப்பு, கழுத்தில் டை, தேய்ந்துபோன மார்கோ சோப் போன்ற துண்டுத்தாடி, எண்ணெய் பசை முகத்தோடுதான் திரிவான். நெற்றியில் விபூதி குங்குமம்.

சாதாரணமாய் இந்த மாதிரி பார்ட்டிகள் நெற்றியில் பொட்டு வைத்து தங்கள் பக்திக்கு பிரகடனம் பண்ணமாட்டார்கள். யாராவது பிரசாதம் என்று நீட்டினால் ஒட்டியும் ஒட்டாமலும் வைத்துக் கொள்வார்கள். அதையும் கர்சீப்பால் முகத்தை துடைத்துக் கொள்ளும்போது தயக்கத்தோடும் ‘சாமிக்கு தெரியாதா என்ன நம்ம பொழப்பப் பத்தி’ என்கிற எண்ணத்தோடும் அழித்து விட்டுக்கொள்வார்கள். அப்பு றம்தான் கம்பீரமாக யாரையும் பார்த்து ‘வாட் ஐ ஸே...’ என்று கான்வென்ட் ஸ்டைலில் பேசவே வரும். ஆனால், சந்திரசேகர் இதில் விதி விலக்கு.

‘‘என்ன அரா... ஏதோ பிராப்ளம்னு கேள்விப்பட்டேன்?’’ இன்றும் சந்திரசேகர் அதே தோரணையில் அதேசமயம் நட்புடன் கேட்கவும் அரவிந்தனின் மூக்குத்துவாரம் ஸ்டீம் என்ஜினின் ஆசுவாசம் போல வெப்பக் காற்றை பீய்ச்சியடித்தது.

‘‘ஆமாண்டா. இந்த அம்மா ஒருத்தி. சொல்லாம கொள்ளாம எங்கையோ போய்ட்டா.’’

‘‘போய்ட்டாளா, இல்ல போகும்படி வீட்ல சம்பவமா’’ சந்திரசேகருக்கு ரஞ்சனியை தெரியும். அரவிந்தன் வீட்டில் பல கெட்டுகெதர்களை அட்டெண்ட் பண்ணியவன். அப் போதெல்லாம் ரஞ்சனியை நிறையவே அளந்திருக்கிறான். மீனாட்சியின் சமையலில் மயங்கியும், அவள் அப்பழுக் கற்ற அன்பில் கரைந்த அனுபவங்களும் நிறைய.

‘‘என்னத்தடா சொல்வேன். எம் பொண்டாட்டி பத்தி உனக்கு தெரியும். அப்பா விஷயமும் தெரியும். சிக்கலே இப்ப அதுல.’’

‘‘சரி, என்ன பண்ணப் போறே?’’

‘‘கடைக்குப் போய் ஐம்பது மீட்டருக்கு நல்ல நைலான் வலையா வாங்கப் போறேன். அதோட தெருத் தெருவா சுத்தி வரவேண்டியதுதான்.’’ - அரவிந்தன் வெடித்தான்.

‘‘அப்பனே... இப்படி நீ பேசிட்டதால நான் நீயாச்சு, உன் குடும்ப விஷயமாச்சுன்னுல்லாம் விட்டுடமாட்டேன். நீ என்ன பண்றேன்னா ஆபீசுக்கு லீவு போடறே. பணம் இல்லேன்னா தரேன். டாக்சி பிடி. இல்ல என் மாருதியை எடுத்துக்க. ரிலேடிவ், ஃப்ரெண்ட்ஸ் ஒருத்தர் பாக்கி இல்லாம போய் தேடறே.’’

‘‘நான் தேடலைன்னு உனக்குத் தெரியுமா?’’

‘‘தேட்ற மூஞ்சியப் பாரு. வேலைக்கு வந்த இடத்துல ஆபீஸ் போன்ல நாலு இடத்துல விசாரிச்சுட்டா தேடிட் டேனு அர்த்தமா. இடியட்! உன் அம்மா ஒரு தேவதை டா. உனக்கு அவங்க அருமை தெரியலை.’’

‘‘வேண்டாம் சந்திரா. நானே டென்ஷன்ல இருக்கேன். நீ வேற சூட்டக் கிளப்பாதே. அம்மாவைக் காணோம்னு நான் லீவ் போட்டா ஜி.எம். கிழவன் பின்பக்கமா சிரிப் பான். வெளிய தெரியாம சமாளிச்சுகிட்டு இருக்கேன்.’’

‘‘புடலங்கா. உடம்பு சரியில்லேன்னு லீவு போட்றா. போட்டதில்லையா நீ. இந்த அரிச்சந்திர உதார்லாம் என் கிட்ட காட்டாதே. வேணா நானும் வரேன். தேடுவோம்.’’

''நோ. நீ போ. தேங்க்ஸ். இப்பவே அங்க பார் அந்த தயிர்வடை நீ ஹாட்டா பேசறத வச்சு என்னவோன்னு பாக்கறான். அப்புறம் வந்து நூல் விடு வான். ஆபீஸ் பத்தி தெரியும்தானே?''

''இந்தியாவுல எல்லா ஆபீசும் இப்படித்தான். இவனுங்க பார்வைக்கும் பேச்சுக்கும் பயந்தா நாம ஒழுங்கா சிரைக்கக்கூட முடியாது. கமான் மேன். லீவு போட்டுட்டு புறப்படு. ஐ வில் ஹெல்ப் யூ.''

''உன்கிட்ட நான் கேட்காதப்ப ஏண்டா இப்படி வால றுந்த பல்லி மாதிரி துள்ற? போடா. உன் வேலைய பாரு. எங்கடா போய்டுவா அம்மா? நாலு நாள்ல வந்துடுவா. எங்களுக்காக இல்லேன்னாலும் பேத்திய பாக்காம அவ ளால இருக்க முடியாது. எனக்குத் தெரியும். நீ போ.'' - அரவிந்தன் அசராமல் சந்திரசேகரை கத்தரித்தான். சந்திர சேகரும் கூர்மையாக வெறித்தான். காதோரம் ஒரு வேர்வைப் பாம்பின் நெளிசல். பவழமோதிரம் போட்ட விரல்களால் வழித்து சுண்டினான். அந்த வியர்வையை அவன் அரவிந் தனாக நினைத்த மாதிரிதான் இருந்தது!

**ஆ**ஸ்ரம அடுப்படி ஓரளவு நீட்டாக இருந்தது. ராட்சச விறகு அடுப்புகள். அதில் அள்ளப்படாத சாம்பல் குவியல். ஒழுங்கில்லாதபடி கிடந்த பித்தளை அண்டாக்கள் - போகி ணிகள் - ஓரத்தில் சிமென்ட் தொட்டி. பைப் தண்ணீர் நிரம்பி ஓடிக் கொண்டிருந்தது.

எட்டிப் பார்த்த மீனாட்சியை அந்தக் காட்சி என்னவோ செய்தது. பக்தவத்சலம், சமையல்காரர். அழுக்குப் பூணூல், மட்டக்கலர் வேட்டி, இடுப்பில் குற்றாலத்துண்டு என்று டிப்பிக்கல் சமையல்கார தோற்றம். 25 கிராம் மூக்குப் பொடியை உதற உதற மூக்கில் ஏற்றியபடி பார்த்தார்.

''வாங்கோ. அப்பா சொன்ன அசிஸ்டென்ட் மாமி நீங்க தானா?''

'அப்பாவா?' - மீனாட்சி புரியாமல் பார்த்தாள்.

''இது ரொம்ப டிசிப்ளினான ஆஸ்ரமம். அரிசி பருப்புல இருந்து எண்ண மொளகா வரை எல்லாமே உபயம் வாங்கிதான் காரியம் பண்றோம். அதுல லவட்டல் வேலை எல்லாம் காட்ட முடியாது. பசிக்கறதுன்னா எவ்வளவு வேணா கேட்டு வாங்கிச் சாப்பிடலாம். கைநீளமா இருந்தா கத்தரிச்சு அனுப்பிடுவார் அப்பா. ஜோலி பார்க்கும்போது சளபிளன்னு பேசவும் கூடாது. வேலை எல்லாம் நீட்டா இருக்கணும். சுத்தம் ரொம்ப முக்கியம். பாப்போம் தாக்கு பிடிக்கறேளான்னு...'' பக்தவத்சலம் மிரட்டலாகவும் அவ நம்பிக்கையோடும் ஒரு போட்டி வந்துட்டாற் போன்ற பயத்தோடும் பேசினார்.

மீனாட்சி படுசன்னமாய் சிரித்தாள்.

''தெரியும். பெரியவர் அனந்தாச்சாரி எல்லாத்தையும் சொன்னார். ஆமா, அது யார் அப்பா? தெரிஞ்சுக்கலாமா?''

பக்தவத்சலம் உடனே சூடான மாதிரி பார்த்தார்.

''என்னம்மா இது கேள்வி. பெரியவர் பேரை எல்லாம் சொல்றே? அவர்தான் இங்க அப்பா. நூத்தி ஒரு வயசுல ராமாமிர்தம்னு ஒரு வேத பிராமணர் இங்க இருக்கார். அவர்ல இருந்து பத்து வயசுல ராஜாத்தின்னு ஒரு குருட்டு பொண்ணு இருக்கா.

எல்லாரும் பெரியவரை அப்பான்னு தான் சொல்வோம். சரிசரி அந்த அருக்கஞ்சட்டிய எடுத்து நன்னா தேங்காநார் போட்டு கழுவி அடுப்பில வைக்கற வழியபாரு. அப்புறம் கேள்வி கேட்கலாம்.'' - பக்தவத் சலம் பேச்சில் அதிகாரக் கொடி விறுவிறுவென்று ஏறியது. மீனாட்சி பேசவில்லை. வரிந்துகட்டி இறங்கிவிட்டாள்.



**மா**லை நேரம். சென்னை நகரம் பிதுங்கும் காலம். ராகவியின் புளிமூட்டை ஆட்டோ அவளை தெருமுக்கில் இறக்கிவிட்டு புகை துப்பி விட்டு ஓடிப்போனது. முதுகு கொள்ளாத புத்தகச் சுமை, கையில் சாப்பாட்டு வயர்கூடை. குழந்தை தடுமாறியபடி நடந்தது. நாலு எட்டு வைத்திருக்க மாட்டாள். எதிரில் வந்த பெண். ''என்ன ராகவி... எங்க உங்க பாட்டி?'' என்று கேட்டாள்.

ராகவி பதில் சொல்லாமல் உம்மென்று பார்த்தாள்.

''ஓடிப் போயிட்டாங்களா?'' - இது அடுத்த கேள்வி. ராகவி பதில் சொல்லாமல் நடக்க ஆரம்பித்தாள்.

''உழக்கு மாதிரி இருந்துகிட்டு இதுக்கு திமிரப் பாரு'' என்று ஒரு உமிழல் ராகவி காதில் விழுந்தது. வீட்டை அடைந்தபோது பூட்டு தொங்கியது.

''ராகவி வந்துட்டியா?'' - பின்னால் குரல். திரும்பி னாள். எதிர்வீட்டு ராஜேஸ்வரி சாவியோடு வந்தாள்.

''உங்கம்மா திறந்துவிடச் சொன்னாங்க. சமத்தா கதவை தாப்பா போட்டுகிட்டு இருப்பியாம். அம்மா சீக்கிரமா வந்துடுவாங்களாம்.?'' - என்றபடி திறந்துவிட்டாள்.

''ஆமா பாட்டி எங்க, ஊருக்கா போயிருக்காங்க?'' - ராகமாய் கேள்வி. குழந்தை 'உம்' பார்வை பார்த்தாள்.

''என்ன பாக்கறே. பாட்டி இருந்தா இன்னேரம் உன் ஷூவை கழற்றி விட்டு காலெல்லாம் பிடிச்சு விடுவாங்க. உங்கம்மாதான் சண்டை போட்டு துரத்திட்டாங்களே...'' முதலில் கேட்ட கேள்விக்கும் பிறகு சொன்ன கருத்துக் கும் சம்மந்தமில்லை. ராகவி வெறித்துக் கொண்டிருந்தாள்.

''சரி... நான் வேணா உனக்கு பூஸ்ட் கலந்து தரட்டுமா?'' -கேட்டுக்கொண்டே சமையல்கட்டில் நுழையப் போனாள்.

''வேண்டாம். நீங்க போங்க.'' - ராகவி பட்டென்று சொன்னதும் அவளுக்கு மூஞ்சி ஒரு மாதிரியாகி விட்டது.

''நான் போட்டுத்தந்தா இறங்காதா? உங்கம்மாதான் சொன்னாங்க. கொஞ்சம் பூஸ்ட் கலந்து கொடுங்கன்னு. அதான் கேட்டேன். என்னவோ பெருசா வேண்டாம் போங் கறே, பாட்டி உனக்கு மரியாதை சொல்லித் தரலையா?''

''ஆமா. சொல்லித்தரலை. இப்ப என்ன அதுக்கு?''

‘‘பார்ரா.. எதிர்த்துப் பேசறியா?’’

‘‘ஆமா.. அப்படித்தான் பேசுவேன். நீங்க மாறி மாறி பேசறீங்க. எங்க பாட்டி ஒண்ணும் பி.டி.உஷா இல்லை ஓடிப்போறதுக்கு. அவங்க எங்க போயிருக்காங்கன்னு எனக்கு தெரியும். என்ன இப்போ?’’ -

‘‘சரி தாயி. நீயாச்சு உங்கம்மாவாச்சு. நான் யார் நடுவுல. நாளைக்கு சாவிய கொடுக்கும்போது வச்சுக்கறேன்.’’ ராஜேஸ்வரி அதன்பின் நிற்கவில்லை. ஓடியே போனாள்.

ராகவி அமர்ந்து ஷூவை கழற்றி னாள். உதறலாக தூக்கிப் போட்டவள் நிமர்ந்தபோது சுவரில் பாட்டி போட் டோவை பார்த்ததும், ‘சாரி பாட்டி’ என்றபடி ஷூவை எடுத்துச் சென்று ரேக்கில் வைத்தாள். வாசலுக்கு வந்து கிரில்கேட் மேல் ஏறி கொண்டி மாட்டி சாத்திவிட்டு திரும்பி உள்ளேவந்தாள். தொலைபேசி சிணுங்கியது. எடுத்தாள்.

‘‘ராசா...’’ - மறுமுனையில் மீனாட்சி.

‘‘பாட்டிஈஈஈ..’’ - மெர்க்குரி விளக்காக முகம்மாறியது.

‘‘பள்ளிக்கூடத்துல இருந்து வந்துட்டியா?‘‘

‘‘இப்பதான் பாட்டி வந்தேன். நீ எங்க இருக்கே?’’

‘‘இருக்கேண்டா. அதவிடு. வீட்ல யாரும் இல்லயே?’’

‘‘இல்ல பாட்டி. அம்மா அப்பா ஆபீஸ் போய்ட்டாங்க. எதிர்வீட்டு ராஜேஸ்வரிதான் கதவை திறந்து விட்டாங்க.’’

‘‘ராஜேஸ்வரி ஆன்ட்டின்னு சொல்லணும். பெரியவங்கள அப்படி சொல்லக்கூடாது..’’

‘‘அது ஆன்ட்டி இல்ல, ராட்சசி. நீ ஓடிப்போய்ட்டியாம். அது சொல்லுது. யாரப்பாரு இதே கேள்விதான் பாட்டி.’’

‘‘கேட்டா கேட்கட்டும். நீ கவலைப்படாதே. ஆமா இப்ப நீ பூஸ்ட் குடிக்கணுமே என்ன பண்ணப்போறே?’’

‘‘தெரியல பாட்டி. நீ வா பாட்டி..’’

‘‘நான் வரலைடா. நான் இனி அங்க வந்தா நல்லா இருக்காது. நான் சொல்ற மாதிரி கேக்கறியா..?’’

‘‘நீ சொன்னாதான் நான் சொல்வேன். சொல்லு?’’

‘‘நீ இப்ப பூஸ்ட் குடிக்கணும். அதுக்கு நான் வழி சொல்றேன். நீயே பூஸ்ட் போட்டு குடிச்சிடலாம்.’’

‘‘அப்ப நீ வரமாட்டியா?’’

‘‘சொன்னா கேளும்மா. நான் சொல்ற மாதிரி செய் பாப்போம். எழுந்திரி.. எழுந்திரி..’’

‘‘எழுந்திச்சிட்டேன்...’’

‘‘காட்லெஸ் போனை எடு. இந்த ரிசீவரை வை.’’

‘‘சரி.. இரு..’’ - ராகவி உற்சாகமாய் செயல்பட்டாள். காட்லெஸ் கைக்கு வரவும் டைரக்ஷன் ஆரம்பமாயிற்று. கேஸ் அடுப்பு எரிய, அதில் கைப்பிடி உள்ள பாத்திரம் தண்ணீரோடு அமர ஐந்து நிமிடத்தில் எவர்சில்வர் டம்ளரில் நுரை ததும்ப பூஸ்ட் தயார்!

‘‘பாட்டி ரொம்ப சூடா இருக்கு. கொஞ்ச நேரம் போகட்டும். அதுவரை நீ பேசு.’’

‘‘வீட்ல அப்பா அம்மா என்னை தேடலையா?’’

‘‘அப்பா யார் யாருக்கோ போன் பண்ணாரு. அவ்வ ளவுதான். அம்மா வேலைக்கு போய்ட்டாங்க.’’

‘‘சண்டை ஒண்ணும் போட்டுக்கலையே.’’

‘‘போட்டாங்க. அப்பா அம்மாவை திட்டுனாரு. அம்மாவும் அப்பாவை திட்டுனாங்க.’’

‘‘சரி கண்ணு. பூஸ்ட் சாப்டுட்டு ஹோம் ஓர்க் பண்ணு. கதவை தாப்பா போட்டுக்கோ. அப்புறமா பேசறேன்.’’

‘‘பேசுவியா பாட்டி..‘‘ - குழந்தையின் குரல் உடையத் தொடங்கியது.

‘‘கட்டாயம் பேசுவேன். எல்லாரோடயும் பேசுவேன். எனக்கென்ன வந்தது? இன்னியோட உங்க வீட்ல எல்லா பிரச்னையும் தீர்ந்துடும். யாரும் சண்டை போட்டுக்க மாட்டாங்க. நீ மட்டும் நல்லா படிக்கணும். என்ன?’’

‘‘என்ன பாட்டி நீ. உங்க வீடுன்னு சொல்ற? நம்ம வீடு இல்லையா?‘‘

‘‘பரவாயில்லையே. இவ்வளவு பேச வந்துடுச்சா? சரி - நம்ம வீடு, நம்ம வீட்ல இனி பிரச்னை இருக்காது.’’

‘‘நீ வருவியா மாட்டியா அதை சொல்லு.’’

‘‘வராம எங்கடா பேசப்போறேன். என் ராசாத்திக்கு நான் என்னவெல்லாம் பண்ண வேண்டியிருக்கு. அதை எல்லாம் வந்துதானே பண்ணணும்?’’

‘‘இப்படிதான் சைக்கிளுக்கு சொன்னே? ஆனா நீ இப்ப எங்கயோ போய்ட்டே?’’

‘‘எங்கயும் போகலைடா கண்ணு. உன் கூடவேதான் இருக்கேன். சரி சரி.. பூஸ்ட் ஆறியிருக்கும். எடுத்து குடிச் சுட்டு படிக்கற வேலையைப் பார். நீ கேட்ட சைக்கிள் கூடிய சீக்கிரம் உனக்கு கிடைக்கும். பாட்டி வெச்சுடட்டுமா..’’

‘‘செரி..’’

- மறுமுனை முடங்கியது. பூஸ்ட் டும் சூடு அடங்கி அவளை பார்த்தது. எடுத்து குடித்தபடி ஹாலை நோக்கி குழந்தை நடந்தது.



டப்படப்..! - வாசலில் ஆட்டோ தேங்க உள்ளிருந்து இறங்கிக் கொண் டிருந்தாள் ரஞ்சனி. ஆட்டோக்கார னுக்கு பணத்தை கொடுக்குமுன் வீட்டைப் பார்த்தாள். விளக்கெரிந்து கொண்டிருப்பது தெரிந்தது. கொஞ் சம் நிம்மதி. பணம் கொடுத்துவிட்டு திரும்ப, எதிரில் ராஜேஸ்வரி.

''ரஞ்சனி, நீ சொன்ன மாதிரி கதவை திறந்துவிட்டு குழந்தையை உள்ள உக்கார வச்சுட்டேன். பூஸ்ட் போட்டுத் தரட்டுமான்னு கேட்டேன். வெளியபோன்னு சொல்லிட்டா'' எடிட் செய்து பேசினாள்.

''அப்படியா சொன்னா? கழுத. வாய் அதிகமாயிடிச்சு.''

''ஆமா.. உன் மாமியார் இருக்கற இடம் உன் பொண் ணுக்கு தெரியுமாமே?'' - ராஜேஸ்வரி மெயின் லைனைத் தொட்டாள். விருட்டென்று நிமிர்ந்தது ரஞ்சனியின் சிரம்.

''எங்க பாட்டி ஒண்ணும் ஓடிப்போயிடலை; எனக்கு அவங்க எங்க இருக்காங்கன்னு தெரியும்னு சொன்னா.''

பாய்ச்சலோடு உள்ளே நுழைந்தாள் ரஞ்சனி. ராகவி எதையோ வெட்டி ஒட்டிக்கொண்டிருந்தது. பூஸ்ட் டம்ளர் மேல் பார்வை பட ரஞ்சனிக்கு ஆச்சரியம் அதிகமானது.

''என்னடி... யார் போட்டு கொடுத்தா பூஸ்ட்?''

நிமிர்ந்த ராகவி கேஷுவலாக சொல்லிற்று. ''பாட்டி!''

பகீரென்றது ரஞ்சனிக்கு. ''பாட்டியா?''

''ஆமா. போன்லயே சொன்னாங்க. கலந்து குடிச்சேன்.''

''அவங்க இருக்கற இடம் உனக்கு தெரியுமா?''-ஆவே சமாக கேட்டாள். ராகவியும் நிமிர்ந்துபார்த்து சொன்னது.

''தெரியும். ஆனா உங்கிட்ட சொல்லமாட்டேன்!'' -

சட்டென ஹேண்ட்பேக்கும் கையுமாக மண்டியிட்ட வள், ''சனியனே.. என்னடி சொல்றே?'' என்றாள்.

ராகவி முறைத்தது.

''கண்ண நோண்டிடுவேன். எங்கடி இருக்கா கிழவி?''

''இப்படில்லாம் பேசுனே.. நானும் ஓடிப்போய்டுவேன். ஆமா!''

– பென்சிலும் கையுமாக ஆட்டிக்கொண்டு சொன்னதும் கன்னத்தில் அறை விழுந்த மாதிரி அதிர்ந்தாள் ரஞ்சனி.



குழந்தை ராகவி தானும் ஓடிப்போய்விடுவேன் என்றது ரஞ்சனியின் பிடரியில் பற்றி எரிந்தது. பெற்ற பாசத்தை மீறிக்கொண்டு குழந்தையை ஒரு அந்நியத்தோடு பார்க்க ஆரம்பித்தாள்.

ராகவி சட்டை செய்யவில்லை. அம்மாவை ஒரு அழுக்குத்துணியை ஒதுக்குகிற மாதிரி ஒதுக்கிவிட்டு தன் பாடப் புத்தக நோட்டுக்களை எடுத்து விரித்து வைக்கத் தொடங்கினாள். அந்த 11 வயது குழந்தையின் செயல்கள் ரஞ்சனியை மிகவும்தான் பாதித்தது.

''அப்படியே உனக்கு உன் பாட்டி புத்தி... என்ன ஒரு அலட்சியம்... என்ன ஒரு ராங்கி?''

கருவல். ராகவியும் பாம்புபோல சட்டென்று நிமிர்ந்து ''நீ தப்பா சொல்றே'' என்றாள் உடனே.

''எதுடி தப்பு... கிழவி! எது தப்பு?''

''நான் ஒண்ணும் பாட்டிமாதிரி இப்ப பேசலை... பாட்டி எப்பவும் இப்படி பேசினதுமில்லை. நான் உன்கிட்ட உன்னமாதிரி நடந்துண்டேன். கத்தாதே..''

''உம் அப்புறம்?''

''அதுக்கும் உன் பாணியிலேயே பதில் சொல்றேன். விழுப்புரம்!''

''டீஈஈ... நான் உன் அம்மாடி. என்கிட்டயா நீ இப்படி வாயாடறே..''

''யாரா இருந்தாலும் சரி. பாட்டி பத்தி தப்பா பேசினா இப்படித்தான் பேசுவேன்...''

''எனக்கு அப்புறம்தான் பாட்டி தாத்தால்லாம்.''



''அப்படி நீ நினைச்சுக்கோ. எனக்கு பாட்டிக்கு அப்புறமாதான் நீ அப்பா எல்லாம்'' – ராகவி போடு போடு என்று போட்டாள். திக்குமுக்காடி னாள் ரஞ்சனி. வேலை முடித்துவந்த களைப்பு வேறு. வாணலியில் சிவக்க வேகும் உருளை கிழங்காக முகம் சிவந்து மூச்சுக்காற்றும் சீறியது.

''வரட்டும் உன் அப்பன். வச்சுக்கறேன் உன்னை. எல்லாம் நான் வேலைக்கு போனதால வந்த வினை. அந்தக் கிழவி உன்னை அப்படியே தன்னோட பிராடக்டா மாத்திருக்கா. வரட்டும் அந்த ஆள்...'' –ரஞ்சனி ராகவியை ஒரு எதிரியாகவே பாவித்து இயலாமையோடு கருவும்போது ஸ்கூட்டர் சத்தம். அரவிந்தன் இறங்கிக் கொண்டிருந்தான். கர்ணனுக்கு கவசகுண்டலம்போல ஒரு கையில் ஹெல் மெட், மறுகையில் பிரீஃப் கேஸ். நுழைந்தான்.

ராகவி நிமிர்ந்துகூட பார்க்காமல் ஸ்கேலால் கோடு போட்டபடி ஹோம் ஒர்க்கில் மூழ்கி இருந்தது. ரஞ்சனி சோபாவில் ஐயப்பசாமி போல காலை உயர்த்தி மடக்கி விரல்களில் சொடக்கு எடுத்துக் கொண்டிருந்தாள். பார்வை எதன் மேலோ இருந்தது.

ஏதோ ரசாபாசம் என்பது அவனுக்கும் புரிந்தது.

‘‘என்ன ரஞ்சனி.. எனி ப்ராப்ளம்?’’ – பிரீஃப் கேஸை மேஜைமேல் வைத்தான். ஹெல்மெட்டை ஹூக்கில் மாட்டினான். ரஞ்சனியிடம் பதிலில்லை.

‘‘கேக்கறேன்ல...’’ – ஷூவை கழற்ற ஆரம்பித்தான்.

‘‘எல்லாம் இந்த குட்டிபிசாசுகிட்ட கேளுங்க. சொல்லுவா’’

அவனுக்கு சுரீர் என்று முதுகில் சவுக்குநுனி பட்ட மாதிரி இருந்தது. ராகவியை பார்த்தான். அதுவும் பார்த்தது.

‘‘என்னடா ப்ராப்ளம்?’’

‘‘அம்மா டூமச்சா பேசினாங்க. நானும் பாட்டி மாதிரி ஓடிப்போயிடுவேன்னேன். அதான் கத்தறாங்க..’’

‘‘இதானா? என்னவோ ஏதோன்னு நினைச்சேன்.’’

‘‘இவ அப்படி சொன்னது உங்களுக்கு சாதாரணமா படுதா? இந்தாடி... முழுசா எல்லாத்தையும் சொல்லு. உன் பாட்டி எங்க இருக்கா, இப்ப என்ன பண்ணிகிட்டிருக்கான்னு சொல்லு. என்கிட்ட வாய டிச்சமாதிரி உங்கப்பன் கிட்டயும் டபாய்க்காதே..’’

‘‘என்ன ரஞ்சா சொல்றே... ராகவிக்கு அம்மா இருக்கற இடம் தெரியுமா?’’

‘‘அவகிட்டயே கேளுங்க...’‘

‘‘ராகவி... அம்மா என்ன சொல்றாடா... உனக்கு பாட்டி இருக்கிற இடம் தெரியுமா?’’

‘‘இல்லப்பா. சும்மா அப்படி சொன்னேன். அந்த எதிர்வீட்டு ராஜேஸ்வரிக்கா பாட்டி பத்தி ஒரு மாதிரி பேசினாங்க. அதை அடக்கறதுக்காக பாட்டி ஒண்ணும் ஓடிப்போகலை; எனக்கு தெரியும்னு சொன்னேன். அதை புரிஞ்சுக்காம காச்சு மூச்சுன்னு அம்மா கத்தறாங்க.’’

‘‘அப்படியா... என்னடா நாம ஊர் பூரா தேடியும் கிடைக்கல. இவ குண்டை தூக்கிப் போட்றாளேன்னு பார்த்தேன். ஏன் ரஞ்சனி... எதுக்கு இவ்வளவு டென்ஷனாகி கத்தறே?’’ அரவிந்தன் சட்டை யை கழட்டி டவலால் பனியன் மூடிய தோள் மேல் போட்டபடி எதிரில் நின்று கேட்ட கேள்விக்கு ரஞ்சனி முறைப்பைதான் பதிலாக வைத்தாள்.

‘‘அப்பா இன்னொரு விஷயம்..’’–ராகவி குரல் நடுவில் நுழைந் தது.

‘‘என்னடா..?’’

‘‘பாட்டி என்கூட போன்ல பேசினாங்க..’’

‘‘என்னது...உன் கூட போன்ல பேசினாளா?’’

‘‘ஆமா. பாத்துட்டே இருங்க, உங்ககிட்டயும் பேசுவாங்க..’’

''ராகவி... என்னடா சொல்றே. எப்ப பேசினா, இப்ப எங்க இருக்காங்க?''

''அதெல்லாம் தெரியாது. ஆனா எங்கயோ நல்லாதான் இருக்காங்க...''



''பொய். இவ புழுகறா. இவ ளுக்கு உங்கம்மா இருக்கற இடம் தெரியும்'' – மீண்டும் ரஞ்சனியின் இடையீடு. அரவிந்தனுக்கு நெற்றி பரபரத்தது. இருவரையும் மாறிமாறிப் பார்த்தான்.

''இவளுக்கு தெரியும். ஆனா உங்க அம்மா சொல்ல வேண்டாம்னு சொல்லிருக்கணும். அதான் சொல்லாம சமாளிக்கறா'' –மீண்டும் இறைந்து கத்தினாள் ரஞ்சனி.

தொலைபேசி சிணுங்கியது. தற்காலிகமாக இருவரையும் தவிர்த்துவிட்டு தொலைபேசியை எடுத்தான் அரவிந்தன்.

''அரவிந்தா... அம்மா பேசறேண்டா.'' – மறுமுனையில் மீனாட்சி.

''அம்மாாா....'' – அரவிந்தன் உற்சாகத்தோடு எகிற ரஞ்சனியும் ராகவியும்கூட அவனை கூர்ந்து பார்க்க...

''அம்மா எங்க இருந்து பேசறே..''

''எங்க இருந்தா என்னப்பா... வீட்ல என்ன சண்டை நடக்குதா?''

''அது... எப்படிம்மா இவ்வளவு கரெக்டா சொல்றே?''

''ஏண்டா நான் என்ன விரல் சூப்பற பாப்பாவா. எப்ப எது நடக்கும்னு கூடவா அனுமானிக்க முடியாது?''

''அது... சரி, இப்ப எங்க இருக்கே. ஏன் இப்படி வீட்டை விட்டு போய் என்னை டென்ஷன் ஆக்கறே?''

''கத்தாதே. உன் டென்ஷனை தணிக்கதான் இப்ப போன் பண்ணேன்.''

''புடலங்கா. நீ எங்க இருக்கே? முதல்ல இடத்தைச் சொல்லு...''

''எதுக்கு.. என்னை திரும்ப வந்து கூப்பிடவா?''

''என்னம்மா பேசறே நீ... இங்க தெருவுல இருக்கிறவங்களுக்கும் பாக்கறவங்க கேக்கறவங்களுக்கும் பதில் சொல்ல முடியல தெரியுமா?''

''அதுக்காகத்தான் என்ன தேட்றியா... இல்லன்னா விட்டுருவியா?''

''அம்மா, ஏம்மா இப்படி வார்த்தையால குத்தறே? நீ எங்க இருக்கேன்னு சொல். இல்லன்னா, கிளம்பி வர்ற வழியைப் பார்.''

‘‘இல்லப்பா... என்னைப் பத்தி இனி நீ கவலைப்படக் கூடாதுன்னுதான் இப்ப போன் பண்ணினேன். எனக்கென்னவோ இனி நான் உங்ககூட இருக்க முடியும்னு தோணலை. அதனால என்னைப் பத்தின கவலையை விட்டுடு. நீங்க நல்லா இருங்க.’’

‘‘சரி... உளறினது போதும். இடத்தைச் சொல்லு.’’

‘‘நான் உளறலை. உள்ளதை சொல்றேன். எனக்கு இதனால எந்த வருத்தமும் இல்லை.’’

‘‘நீ பொய் சொல்றே. வயசான காலத்துல உனக்கு ஏம்மா இப்படில்லாம் புத்தி போகுது. அப்பா பத்தி ரஞ்சனி பேசினது என்ன தப்பு?’’

‘‘வேண்டாம் அரவிந்தா. தயவு செய்து அந்த டாபிக் எடுக்காதே. முடிஞ்சுபோன விஷயம்.’’

‘‘அப்படின்னு நீ நினைச்சா ஆச்சா. பத்திரி கைல வந்துடுச்சு நம்ம குடும்ப விஷயம்.’’

‘‘எதுல வந்தாலும் வரலேன்னாலும் அது முடிஞ்சுபோன ஒண்ணுதான். கொஞ்சம் ரஞ்சனிகிட்டபோனை கொடு.’’

‘‘வேண்டாம். அவ இப்ப மூட்ல இல்லை. நீ அவகிட்ட பேசினே அப்படியே உன்னை கிழிச்சுப் போட்ருவா. எங்க இருக்கே சொல்.’’

‘‘பரவால்ல... இந்தக் கேள்வியை இதோட ஏழு தடவை கேட்டுட்டே. நான் இன்னும் உன் மனசுல இருக்கறத நினைக்க சந்தோஷமா இருக்கு. போனை அவகிட்ட கொடு, சொல்றேன்’’ – மீனாட்சியின் கட்டளையைத் தொடர்ந்து அரவிந்தன் ரஞ்சனியிடம் ரிசீவரை நீட்ட, அவள் அரைமனதாய் காதில் வைத்தாள்.

‘‘ரஞ்சனி..’’

‘‘சொல்லுங்க. எல்லாம் காதுல உழுது...’’

‘‘என் மேல கோபத்துல இருக்கேன்னு நினைக்கறேன்.’’

‘‘......’’

‘‘நீ பேசாம இருக்கறதுலயே அது நல்லா தெரியுது. கவலைப் படாதே–நான் திரும்ப வந்துட மாட்டேன்’’ – மீனாட்சியின் பதில் பொட்டில் தைக்க கண்களில் அதன் எதிரொலி. உதட்டி லும் மறுப்பு.

‘‘நீங்க என்ன பேசறீங்க. என்னமோ நீங்க வந்துட்டா நான் நொறுங்கிப் போயிடுவேன்னு நினைச் சுட்டீங்களாக்கும். இந்த ரஞ்சனி ஒண்ணும் கோழையில்ல, தெரிஞ்சுக்குங்க.’’

‘‘நான் அந்த அர்த்தத்துல சொல்லலம்மா. உனக்கு பாரமா இருக்கப் போறதில்லங்கற அர்த்தத்துல சொன்னேன். நீ எப்பவுமே அவசரப்பட்டு எல்லாத்தையும் தப்பா புரிஞ்சுக்கறவ. இப்பவும் அவசரப்பட்டுட்டே..’’

‘‘உம்... இன்னும் என்னல்லாம் சொல்லணுமோ சொல் லுங்க. இப்பதான் உங்க பேத்தி ஒரு அஷ்டோத்ர அர்ச்சனை பண்ணி முடிச்சா. இப்ப நீங்க ஆரம்பிங்க.’’

‘‘நான் எதையும் ஆரம்பிக் கறதுக்காக போன் பண்ணல. என்னைப் பத்தி கவலைப்பட வேண்டாம்னு சொல்லத்தான் பண்ணினேன். இப்ப எனக்கேற்ற ஒரு இடத்துல சந்தோஷமா இருக்கேன். இந்த வாழ்க்கை நீடிச்சா போதும். அப்பப்ப என் பேத்தி கூட மட்டும் போன்ல பேசிப்பேன். அவசியப்பட்டா நேர்லயும் சந்திப்பேன். அவ்வளவுதான். குழந்தைகூட என்னை வச்சு சண்டை போடாதே. அதுக்கு எதுவும் தெரியாது. இந்த வயசுல குழந்தைகளுக்கு நாமதான் ஒரு ரோல் மாடலா இருக்கணும். நீ கடின உழைப்பாளி. உனக்கு தெரியாததை ஒண் ணும் நான் சொல்லிடலை. எதாவது தப்பா சொல்லியிருந்தாலும் நீ என்னை மன்னிச்சுடுவேன்னு எனக்கு தெரியும். இனி உங்க யாருக்கும் என்னைப் பற்றின எந்தவித கவலையும் வேண்டாம். வச்சிட்றேன்.’’ டொடக்.

மீனாட்சி மளமளவென்று பிரமாண வாக்குமூலம் தருகிற மாதிரி பேசிவிட்டு போனையும் வைத்துவிட ரஞ்ச னியால் அந்த பேச்சுக்கு பதில் சொல்ல முடியவில்லை. ஏமாற்றத்துடன் ரிசீவரை வைத்துவிட்டு திரும்பினாள். அரவிந்தன் கத்தினான்.

‘‘ரஞ்சா... என்ன இது போனை வச்சுட்டே? நான் பேசணும் அம்மாகூட.’’

‘‘பேசுங்க. நல்லா பேசுங்க. உங்கம்மா படம் எங்கயாவது இருந்தா அதுகிட்ட போய் பேசுங்க..’’

‘‘உளறாதே. எங்க இருக்கேன்னு சொன்னாங்களா?’’

‘‘சவுக்யமா இருக்காங்களாம். திரும்பி வரவே போறதில்லையாம். கவலைப்பட வேண்டாமாம். இந்த சனியனோட சண்டை போடக்கூடாதாம். ரோல் மாடலா நடந்துக்கணுமாம். உபதேசமழை பொழிஞ்சுட்டு பொட்டுன்னு வச்சுட்டாங்க. போதுமா?’’ – வெடித்தாள் ரஞ்சனி.

‘‘ஏன் இப்படி கூத்தடிக்கறாங்க. அவங்க இப்படி சொன்னதா வெளிய சொன்னா யாராவது நம்புவாங்களா?’’

‘‘அதுக்காக...’’

‘‘என்ன அதுக்காக? எனக்கு தலையை பிச்சுக்கலாமான்னு இருக்கு. ராகவி நீ சொல்லுடா. உனக்கு நிஜமா பாட்டி இருக்கற இடம் தெரியாதா?’’ – அவன் கவனம் பேச்சோடு குழந்தையை நோக்கி திரும்பியது.

‘‘காட் பிராமிஸா தெரியாதுப்பா.’’

‘‘தெரிஞ்சாலும் சரி. எப்ப அவங்க இவ்வளவு திமிரா நல்லா இருக்கேன்; என்னை தேடக்கூடாதுன்னு சொல்லிட்டாங்களோ இனி நீங்க அவங்களை தேடக்கூடாது..’’

‘‘இவ ஒருத்தி.. எரியற நெருப்புல எண்ணெயை ஊத்தாதே ரஞ்சனி. மாலதி அக்கா வேற வரப்போறா.. வந்து கேட்டா என்ன சொல்வே?’’

‘‘உங்கம்மா சொன்னதை திருப்பிச் சொல்வேன். போய் வேலையைப் பாருங்க. எனக்கும் ஒருவிதத்துல இப்ப நிம்மதி. செத்து வச்சா தகவல் வராமலா போயிடும். அப்ப கவலைப்படுவோம் ஒட்டுமொத்தமா. அதுவரை இனி அவங்க பேச்சை இங்க எடுக்கக்கூடாது..’’

தீர்மானமாக பேசிவிட்டு எழுந்து பாத்ரூம் நோக்கி நடந்தாள். அரவிந்தன் பெருமூச்சுடன் சேரில் மல்லாந்தான்.

குழந்தை ராகவியின் கண்களில் மட்டும் கண்ணீர்.

''ஹலோ சார்.. ஹாய் பாப்பா.. எங்க மன்னி இன்னும் ஆபீஸ்ல இருந்து வரலையா?''

– திடும்மென்று ஒரு குரல். திரும்பினால் முதல்நாள் வந்து, பூகம்பம் வெடிக்கக் காரணமான அதே சாமிநாதன். அரவிந்தனுக்கு பற்றிக்கொண்டு வந்தது.

''வாய்யா.. உன்னத்தான் பார்க்கணும்னு நினைச்சு கிட்டிருந்தேன். நீயே வந்துட்டே..'' அரவிந்தன் சொல்லும் தொனியே சரியில்லை. அது சாமிநாதனுக்கும் புரிந்தது.

''உக்கார் இப்படி..'' அரவிந்தன் எதிரில் இருக்கையை காட்டினான். சாமிநாதன் நுனி இருக்கையில் அமர்ந்தான்.

''ஆமா நீ புரோக்கர் வேலைதான் பாக்கறியா, இல்ல போட்டு விட்றது.. பழைய குப்பைய கிளறறதுங்கிற டைப் நாரதர் வேலையும் பாக்கறியா?''

''என்ன சார், என்னென்னமோ சொல்றீங்களே.. நான் ஒரு பாவமும் அறியாதவன் சார்..''

''ஒரு பாவமும் நீ அறியாத நிலையிலயே நீ பேசினதால என் அம்மா வீட்டை விட்டே ஓடும்படி ஆயிடிச்சு. நீ இன்னும் பாவியா இருந்தா வீடே பத்தி எரிஞ்சிருக்குமோ''

அரவிந்தன் பாயத் தயாராகிவிட்டான். அவனது எரிச்சல் கோபம் எல்லாம் ஒருமுனைப்பட்டு சாமிநாதனை நோக்கித் திரும்பும் அந்த நொடியில் முகம் கழுவிய நிலையில் ரஞ்சனி வெளிப்பட்டாள். அவனைப் பார்த்ததும் அலட்சியமாக ''எப்ப வந்தீங்க?'' என்றாள்.

''இப்பதான் மன்னி... சார் என்னென்னவோ சொல்றார். கேட்கவே சங்கடமா இருக்கு. சாரோட அம்மா ஓடிட்டாங்களாமே..?'' அவன் கேட்க ரஞ்சனி பதிலுக்கு பாய்ந்தாள்.

''நீங்க வாயை வச்சுக்கிட்டு சும்மா இருக்க மாட்டீங்க. இன்னுமா அந்த பேச்சை விடலை. அதான் ஒரு முற்றுப் புள்ளி உங்கம்மாவே வச்சுட்டாங்களே இன்னும் என்ன?''

''சாரி மன்னி.. நான் தப்பான நேரத்துல வந்துட்டேன்னு நினைக்கறேன். அப்புறமா வரேன்'' சாமிநாதன் எழுந்தான்.

''உட்காருங்க சாமிநாதன். உங்களாலதான் நிறைய நல்லது நடந்துருக்கு. சொல்லுங்க. என்ன விஷயம்?''

ரஞ்சனி சகஜப்படுத்தினாலும் அரவிந்தனின் பார்வையும் ராகவியின் குத்தும்கண்களும் அவனை என்னவோ செய்தன.

''சொல்லுங்க.. அந்த வீடு விஷயமா?''

''ஆமாம் மன்னி...''

''அதான் பதிலை அப்பவே சொல்லியாச்சே. எங்களால அஞ்சு லட்சம்தான் தரமுடியும். மீதி அஞ்சுக்கு எங்கபோக?''

– ரஞ்சனி அழுத்தமாகவே கேட்டாள். அவனும் மிடறு கூட்டி விழுங்கிவிட்டு அரவிந்தனையும் ராகவியையும் பார்த்துவிட்டு எதையோ சொல்ல முடியாமல் திணறினான்.

''திணறாம சொல்லுங்க..''

''அது வந்து..''

''கமான்.. என் மாமனார் பத்தினதுதானே... கமான்.''

''ஆமா மேடம். நான் சொல்லப் போறதைக் கேட்டா உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்..''

மீண்டும் அவன் பார்வை அரவிந்தன் மேல் படர்ந்தது.

''எதுவா இருந்தாலும் பரவால்ல. சொல்லுங்க..''

''அந்த வீட்டை உங்க மாமனாரும் வாங்க ஆசைப் படறாரு. இடிச்சுட்டு டப்பிங் தியேட்டர் கட்ற திட்டமாம்.''

''சரி, அதுக்கென்ன..?''

''அதுக்கு ஒண்ணுமில்லை. நீங்க வாங்க ஆசைப்பட்டு பணம் புரட்ட கஷ்டப்பட்டுக்கிட்டிருக்கறதை அவர்கிட்ட சொன்னேன்..''

– சாமிநாதன் இடைவெளிவிட்டான். ரஞ்சனி நிமிர்ந்து அமர்ந்தாள். அரவிந்தனும்..



அரவிந்தனின் அப்பாவான ரங்கராஜன் சொன்னதாக சாமிநாதன் சஸ்பென்ஸ் வைத்து பேச, அரவிந்தனும் ரஞ்சனியும் அவனையே உற்றுப் பார்த்தனர்.

''அந்த வீட்டை நீங்க வாங்கிக்கறதா இருந்தா தனக்கு அது வேண்டாம்னு முதல்லயே ஒதுங்கினார் ரங்கராஜன் சார். அவங்க பணக்கஷ்டத்துல இருக்காங்கன்னு சொன்னேன். நான் இருக்கும்போது அவங்க கஷ்டப்படவே தேவையில்லை. வீம்புல சிரமப் பட்டுகிட்டிருக்காங்க. இப்பகூட என் மகன் ஒரு போன் பண்ணி 'அப்பா எப்படி இருக் கீங்க?'ன்னு கேட்டா போதும். இதுமாதிரி நாலுவீடு வாங்கித்தருவேன்னு சொன்னாரு''

ரஞ்சனி அரவிந்தனின் முகத்தில் எதி ரொலியை தேடினாள். அவன் முகம் கசங்கிப் போயிருந்தது. உதடுகள் மெலிதாக, ''இதை நான் எதிர்பார்த்தேன்'' என்றன.

''எதிர்பார்க்கறது இருக்கட்டும். உங்க முடிவு என்ன சொல்லுங்க'' ரஞ்சனியும் நெருக்கத் தொடங்கினாள். அதுவரை ஹோம்ஒர்க்கில் கவனமாயிருந்த குழந்தை ராகவிகூட நிமிர்ந்து, அப்பா என்ன சொல்ல போகிறார் என்று பார்த்தது. ''சரிய்யா. நீ போ! நாங்க பாத்துக்கறோம்'' என்று அரவிந்தன் சாமிநாதனை கத்தரித்தான்.

''இருங்க சாமிநாதன்... அவரை எதுக்கு போகச்சொல்றீங்க. நாங்க பாத்துக்கறோம்னா என்ன அர்த்தம். உண்டு இல்லைன்னு சொன்னா அட்லீஸ்ட் அந்த வீட்டை உங்கப் பாவாவது வாங்கிப்பாருல்ல..?'' - ரஞ்சனி அரவிந்தனை விலகவிடாமல் நசுக்கினாள்.

''எதுக்கு அவசரப்படறே. அம்மா இல்லாத நேரத்துல ஒரு மேஜர் டெசிஷனை நான் எப்படி எடுக்க முடியும்?''

''அம்மா இருந்தா நீங்க ஒரு டெசிஷனும் எடுக்க முடியாது. அதுதான் உண்மை. இப்ப அவங்க இல்லை. இனியும் வரமாட்டேனுட்டாங்க. இன்னும் என்ன அம்மா?''

- ரஞ்சனி கையை ஆட்டி கத்தியவிதம் சாமிநாதனையே உலுக்கியது. அரவிந்தனுக்கு பிடரியில் தீப்பிடித்த மாதிரி ஆனது.



''ஏய்யா... நல்லா இருந்த குடும்பத்தை ரெண்டாக்கறதுக்குன்னே வந்திருக்கியா? வீடும் வேண்டாம் ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம். போய்யா நீ வெளிய!'' - அரவிந்தன் பாய்ந்தான். சாமிநாதன் முகத்தில் குத்து விழுந்த மாதிரி குறுகிப் போனான்.

''இப்ப என்ன நடந்திடுச்சுன்னு அவர்மேல எரிஞ்சு விழறீங்க? அவர் நமக்காக படாதபாடு பட்டுகிட்டிருக்கிற ஒரு வெல்விஷர். அவர்கிட்ட நீங்க இப்படிப் பேசறது கொஞ்சங்கூட நல்லா இல்லை.''

''புடலங்கா. முதல்ல வீட்டை வாங்குன்னு சொன்னதுல இருந்து, கரெக்டா அந்த வீட்டுக்கு அப்பாவே போட்டியா வந்ததுவரை எல்லாத்தை யும் கூட்டிக் கழிச்சா எதுவும் இயல்பா நடக்கற ஒண்ணா தெரியலை. இருபது வருஷம் ரஞ்சா... இருபது வருஷம்! அவரை நான் பார்த்து இருபது வருஷமாச்சு. இப்ப என்ன திடீர்னு அவரைப் பத்தின பேச்சு.. அந்தப் பேச்சால எங்கம்மா வெளில போனது போதாதா? வீட்டையும் அவர் தந்தார்னு வாங்கிகிட்டா அம்மாவுக்கும் நமக்கும் ஸ்நானப் பிராப்தியே இல்லாம போயிடும். அதத் தெரிஞ்சுக்கோ...'' - அரவிந்தன் உறுதியாக பேசியதைத் தொடர்ந்து சாமிநாதன் நழுவினான்.

''வேண்டாம் மன்னி... விட்றுங்க. சாரி சார். என் பேச்சு, அந்த வீடு எல்லாத்தையும் மறந்துடுங்க சார். நான் வரேன்.'' - போய்விட்டான்.

ரஞ்சனி எரிக்கும் கண்களோடு அரவிந்தனை பார்த்தாள். அவன் பாத்ரூம் நோக்கிச் சென்றான். கதவை தாழிட்டான். குளிக்க ஆரம்பித்தது சலசல சத்தத்தில் புலப்பட, சட்டென்று தொலைபேசியை நெருங்கினாள். மளமளவென எண்களை தட்டி செல்ஃபோனில் சாமிநாதனை பிடித்தாள்.

''நான்தான் ரஞ்சனி பேசறேன். என் வீட்டுக்காரர் பேசினதுக்காக நான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்டுக்கறேன்.''

''பரவாயில்ல மன்னி. அவர் பிழைக்கத்தெரியாத அம்மாக்கோண்டு!''

''நல்லா சொன்னீங்க. ஆனா, நான் அவரை அம்மாக் கோண்டுவா இருக்கவிட மாட்டேன். அந்த வீட்டையும் விடப்போறதில்லை.''

''அப்ப உங்க மாமனார்கிட்ட உங்க சம்மதத்தை சொல்லிடவா?''

''அதுக்குதான் போன் பண்ணேன். அதிகபட்சம் நாலுநாள். என் வீட்டுக்காரர் அவங்க அப்பாவை தேடிவருவார். வரவைப்பேன். பாருங்க.''

''வெரிகுட் மன்னி... ஆனா பார்த்து பண்ணுங்க. திரும்பி அது என்னை சுட்டுடப் போகுது.''

''நோ... ஆகவிட மாட்டேன். தைரியமா இருங்க. என் மாமனார்கிட்ட நான் அவரை ரொம்ப விசாரிச்சதா சொல்லுங்க.''

''நீங்களே போன் பண்ணி அவர்கூட பேசிடலாமே?''

''பேசலாம். இருந்தாலும் இவரை மீறி முதல்ல அதை பண்ண நான் தயார் இல்லை. அது வேற மாதிரி ஆயிடும். இவரே அப்பான்னு போய் அவர் கால்ல விழுவார். அப்ப நானும் விழுந்துட்டுப் போறேன். ஆனா, ஒரு விஷயம்.''

''என்ன மன்னி?''

''இதுக்கெல்லாம் காரணம் நான்தான்கற உண்மைய நீங்க என் மாமனாருக்கு எடுத்துச் சொல்லணும்.''

''கவலையே படாதீங்க. நீங்க ஒண்ணான பிறகு உங்க மாமனார் உங்களை கேட்காம ஒரு காரியம் பண்ணமாட் டார். அதுக்கு வேண்டியதை பண்ணிடறேன் போதுமா?''

சாமிநாதன் மறுமுனையில் அடங்க, ரிசீவரை வைத்து விட்டு சோபாவில் விழுந்து நெற்றியை தேய்க்க ஆரம்பித்தாள் ரஞ்சனி. குழந்தை ராகவி முகத்தில் ஏராள அதிர்ச்சி.

**சூ**ட்கேஸில் துணிமணிகளை அடுக்கிக் கொண்டிருந்தாள் மாலதி. அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள் மகள் கார்த்திகா. 13 வயது ஆகிறது. பதினாறு, பதினேழு என்றுதான்

எல்லோரும் கணக்குப் போடுவார்கள். அப்படி யொரு வளர்ச்சி. தலைமுடி மட்டும் தோள்பட்டையோடு தேங்கிவிட்டது. இதில் அவளுக்கு வருத்தம்.

''மாமா வீட்டுக்குத் தானே போறே?''

''ஆமா. எத்தனை தடவைடி சொல்றது?''

''வரும்போது பாட்டி கிட்ட கேட்டு அந்த தலைமுடி தைலம் காச்சி எடுத்துட்டு வந்துடு.''

''உடையவர் ஏங்கும் போதுலிங்கம் பஞ்சாமிர்தத்துக்கு அழுதுச்சாம்! அங்கே உன் பாட்டியே காணலையாம். உனக்கு தைலம் ஒரு கேடாக்கும்?''

''என்னம்மா நீ... காணாம போக பாட்டி என்ன பச்சப் புள்ளையா?''

''அவ கிடைச்சான்னா உன் கேள்விய அவகிட்ட கேக்கறேன், சரியா...''– பேச்சோடு பெட்டியை அமுக்கி மூடினாள்.

கையில் ஹிண்டுவோடு வந்த கணவர் வேலாயுதம், ''இதோ பார் மாலதி... ஒரு விஷயம் நல்லா தெரிஞ்சுக்க. உங்கம்மா காணாமல்லாம் போகலை. அப்படி தேடி அலையற சிரமத்தைகூட உங்களுக்கு தரமாட்டாங்க. அவங்க கேரக்டர் எனக்கு தெரியும். காணோம்னு சொல்றது உண்மையில்லை. இதுக்கு பின்னாடி ஏதோ இருக்கு.''

''எதுவும் இல்லை... எல்லாம் என் அப்பாவை பத்தின சிக்கல்தான். தம்பி சொல்லிட்டான்.''

''அது முடிஞ்சுபோன விஷயமாச்சே?''

''தம்பி பொண்டாட்டி திரும்ப ஆரம்பிக்கிறாளோ என்னவோ?''

''முழுசாதான் சொல்லேன்.''

''அப்பா பேச்சு வந்துதான் அம்மா வெளியேறிட்டாங்க. அது மட்டும் தெரியும்.''

''சரி. நீ கால்ல சக்கரம் கட்டிட்டே. வேண்டாம்னா கேக்கவா போறே. அப்புறம் உங்கம்மா, எங்கம்மா, மங்கம்மான்னு லெக்சர் கொடுக்க ஆரம்பிச்சுடுவே. போய்ட்டு வா.''

''நான் ஒண்ணும் அம்மாவுக்காக மட்டும் போகலை..'' – மாலதி ஒரு இக்கு வைத்துவிட்டு வேலாயுதத்தை பார்த்தாள். கார்த்திகாவும் அப்பா தோளை கட்டிக்கொண்டு அம்மா என்ன சொல்லப் போகிறாள் என்று பார்த்தது.

''தம்பிகிட்ட ரெண்டு லட்சம் கொடுடான்னு கேக்கப்போறேன்..''– மாலதி அதிரவைத்தாள்.

''எதுக்கு இப்ப ரெண்டு லட்சம்?''

''துவாக்குடில ஒரு பிளாட் விலைக்கு வந்துருக்குல்ல. அதை வாங்கிப் போடத்தான்.''

''வேண்டாம் மாலதி. அப்புறம் உன் தம்பி என்னை பிச்சைக்காரன்னு நினைச்சிடுவான்.''

‘‘ஆமா, அவன் பெரிய கோடீஸ்வரன் பாருங்க. நாளைக்கு நமக்கு பணம் வந்தா திருப்பிக் கொடுத்துடப் போறோம்’’ என்று பேச்சை மெலிய விட்டவள், சட்டென்று சத்தத்தைக் கூட்டி, ‘‘என் தம்பிகிட்ட நான் கேக்கறதால நீங்க ஒண்ணும் பிச்சைக்காரன் ஆகமாட்டீங்க. ஞாபகம் வச்சுக்குங்க. அரவாவும் வச்சுகிட்டு இல்லேங்க மாட்டான்.’’

‘‘அவன் பேர் அரவிந்தன்... அரவான்னா அர்த்தமே வேற.’’

‘‘செல்லப் பேர்ல அர்த்தம் கேட்கற ஒரே ஆள் நீங்க தான். ஸ்கூட்டர்ல பஸ் ஸ்டாண்டுக்கு கொண்டு வந்து விடறீங்களா?’’

‘‘என்னைக் கொஞ்சம் உக்கார விட மாட்டியா?’’

‘‘சரி, விடுங்க. ஆட்டோக்காரன் எம்பது ரூபா கேப்பான். குடுத்துட்டுப் போறேன். சம்பாதிச்சுக் குடுக்கதான் நீங்க இருக்கீங்களே...’’ – மாலதி வார்த்தைகளை நன்றாகவே கொடுத்து வாங்கி னாள். வேலாயுதம் எண்பது ரூபாயை நினைத்து சற்று கிர்ரடித்து மனைவியை விட்டுவர கிளம்பினார். மாலதி மகளிடம் சொல்லிக்கொண்டாள்.

‘‘பாத்துடி... அம்மா இல்லைன்னு கம்ப்யூட்டர் க்ளாஸ், கத்திரிக்கா க்ளாஸ்னு ஊரை சுத்திட்டு வராதே. காலம் கெட்டுக்கிடக்கு. நான் இல்லைன்னு அந்த இறுக்கமான மிடி, சுடில்லாம் போட்டுக்கக் கூடாது. ஏற்கெனவே ஊர்க் கண்ணு, உலகக் கண்ணுன்னு குடும்பத்துல நிம்மதி இல்லை. நீ வேற திகிடுதம்ப்பா வளர்ந்து நிக்கறே. எப்படி ஒருத்தன் கையில பிடிச்சுக் கொடுக்கப்போறேனோ தெரியலை. ஹூம்!

சூட்கேஸை தூக்கிக்கொண்டு புலம்பியபடியே வாசலுக்கு போனாள். வேலாயுதம் லுங்கியோடு ஸ்கூட்டரை கிளப்பிவந்து நிற்க, அவள் ஏறிக்கொண்டாள். கார்த்திகா டாட்டா காட்ட, ஸ்கூட்டர் புறப்பட்டது. கார்த்திகா குஷியில் டி.வி.யில் ஃபேஷன் சேனலை போட்டுவிட்டு அதில் வரும் பெண்களைப் போலவே நடந்து பார்த்தாள். அவ்வளவு ஆசை...அவ்வளவு கனவு. முக்கால் மணி நேரத்துக்கு பிறகு வாசற்புறம் ஸ்கூட்டர் சத்தம் கேட்கவும், சட்டென்று டி.வி. யை அணைத்துவிட்டு சோபாவில் நல்ல பிள்ளையாக அமர்ந்தாள்.

வேலாயுதம் ‘‘பத்து நாளைக்கு வீடு அமைதியா இருக்கும்’’ என்ற காமென்டுடன் உள்ளே நுழைந்தார்.

அதை கார்த்திகாவும் ரசித்தபோது தொலை பேசி சிணுங்கியது. எழுந்துபோய் எடுத்தாள்.

‘‘யாரு கார்த்தியா..?’’

‘‘ஆங்.. நீங்க?’’

‘‘பாட்டிடா கண்ணு..’’ – மறுமுனையில் மீனாட்சி.

‘‘பாட்டீஈஈ..! அப்பா பாட்டி.’’

‘‘எப்படிடா கண்ணு இருக்கே?’’

‘‘நல்லாருக்கேன் பாட்டி. நீ எங்கே இருந்து பேசறே?’’

‘‘அது இருக்கட்டும். உன் அப்பா இருக்காரா?’’

‘‘இருக்கார். இதோ கொடுக்கறேன்.’’

ரிசீவர் கைமாறியது. வேலாயுதம் பணிவாக ஆரம்பித்தார்.

‘‘நமஸ்காரம் அத்தை. நல்லா இருக்கீங்களா?’’

‘‘நல்லா இருக்கேன் மாப்ளே. நீங்க எப்படி இருக்கீங்க?’’

‘‘ரொம்ப நல்லா இருக்கோம். எங்க இருந்து பேசறீங்க..?’’

‘‘சென்னைல இருந்துதான். மாலதி எப்படி இருக்கா?’’

‘‘உங்களை பார்க்க சென்னைக்கு புறப்பட்டு இப்பதான் போனா. பஸ் ஏத்தி விட்டுட்டு வீட்டுக்குள்ள நுழையறேன், உங்க போன்.’’

‘‘அடடா. கொஞ்சம் முந்தியே பண்ணியிருக்கணும். சமையல்கட்டு வேலை மும்முரத்துல மறந்துட்டேன்.’’

‘‘சமையல்கட்டு, வேலை மும்முரம்னு ஏதோ சொல்றீங்களே... உங்க மகன் வீட்லதானே இருக்கீங்க?’’

‘‘இல்ல மாப்ள. இப்ப ஒரு சொர்க்கத்துல இருக்கேன். இனி அரவிந்தனுக்கு தொந்தரவு தரவேண்டாம்கறது என் எண்ணம்.’’

‘‘என்ன நடந்துச்சுன்னு நீங்களாவது சொல்லுங்களேன்.’’

‘‘சுருக்கமா சொல்றேன் மாப்ள. பேராசை என் வீட்டு மானம் மரியாதையோடவும் எதிர்காலத்தோடவும் கண்ணா மூச்சி ஆடத் தொடங்கியிருக்கு. நான் எச்சரிக்கையா இருந்தும் பலனில்லை. இனி எப்படி போகும்னும் தெரியலை.’’

‘‘இப்படி தத்துவமா பேசினா எப்படி அத்தை? கொஞ்சம் விளக்கமா சொல்லுங்களேன்?’’

‘‘சொல்றேன். என் வீட்டுக்காரரோட சேர்ந்து அவர்கிட்ட இருக்கற சவுகரியங்களை பங்கு போட்டுக்க விரும்பறா என் மருமக. அப்பப்ப மகனும் அவ மகுடிக்கு மயங்கிடறான். என் வரையில அவர் விஷயம் முடிஞ்சுபோன விஷயம். பேராசையால அதுக்கு உயிர் வந்துடுமோன்னு பயப்படறேன். அப்படியே என்னை ஒரு பாரமாவும் என் மருமக நினைக்க ஆரம்பிச்சிட்டா. நான் யாருக்கும் பாரமா இருக்க விரும்பலை. அதான் வெளியேறிட்டேன்.’’

‘‘இப்ப எங்க இருக்கீங்க?’’

‘‘நவஜீவன் முதியோர் இல்லம்னு ஒண்ணு சென்னைக்கு தெற்கே கூடுவாஞ்சேரி கிட்ட இருக்கு. அங்க தங்கியிருக்கேன்.’’

‘‘அநாதைன்னு பொய் சொல்லி சேந்துட்டீங் களா... என்ன அத்தை நீங்க? இங்கே இவ்வளவு பேர் இருக்கோம்.’’

''தப்பு மாப்ள. எனக்காக இதுவரை ஒரு பொய் சொன்ன தில்லை. இனியும் சொல்ல மாட்டேன். என் நிலையை பட்டவர்த்தனமா சொல்லி ஒரு சமையல்காரியாதான் இங்கே இருக்கேன். வீட்டு மாப்ளைகிட்ட மறைக்கக் கூடாதுன்னுதான் இவ்வளவும் சொல்றேன். நான் இங்க இருக்கறது அரவிந்தனுக்குக்கூட தெரியாது.''

''அப்ப தேடி அலைஞ்சுக்கிட்டிருக்கானா?''

''அவன் அலையக்கூடாதுன்னுதான் போன் பண்ணி பேசிட்டேன். மாலதியும் தெரிஞ்சுக்கத்தான் இப்ப உங்களுக்கு போன் பண்ணினேன்.''

''என்னை மதிச்சு நீங்க இவ்வளவு தூரம் பேசினதுக்காக நான் ரொம்ப சந்தோஷப்படறேன். அரவிந்தன் வீடு சரிப்படலைன்னா நீங்க இங்க வந்துருக்கலாமே... எதுக்கு வயசான காலத்துல சமையல்கார உத்தியோகம்?''

''மாலதிக்குள்ளேயும் சில ரஞ்சனிகள் இருக்காங்கன்னு நான் நினைக்கறேன். அதுமட்டும் இல்லை... உடம்புல தெம்பு இருக்கறவரை யாருக்கும் பாரமா இருக்க விரும்பலை.''

''சத்தியமா நீங்க எனக்கு பாரமில்லை அத்தை.''

''இந்த வார்த்தையை கேட்ட சந்தோஷம் ஒண்ணு போதும் மாப்ள. மாலதிகிட்டயும் சொல்லிடுங்க. இப்பவே எஸ்.டீ.டி. பில் நிறைய வந்துடுச்சு. நான் வச்சுடறேன்.''

அந்தப் பக்கம் ரிசீவர் அடங்கியது. வேலாயுதம் முகத்தில் உஷ்ணப் பெருமூச்சு. கார்த்திகா கேட்டாள்.

''பாட்டி என்னப்பா சொன்னாங்க?''

''அபூர்வப் பிறவிடா உன் பாட்டி. உன் அம்மா அவங்களைக் கொள்ளாமப் போயிட்டாளேடா..?''

''காணம போகலையே. நல்லாதானே இருக்காங்க?''

''ரொம்ப நல்லா இருக்காங்கடா. சுயமரியாதை யோட சொந்தக் கால்ல நிக்கறவங்களா... ஓ, உன் பாட்டி பாட்டிதான்.'' வேலாயுதம் நெகிழ்ந்துவிட்டார்.

''அப்ப அம்மா நாளைக்கே வந்துடுமா?''

''அப்படியெல்லாம் வர்றவளா அவ..? என்னென்ன கூத்தெல்லாம் நடக்கப் போகுதோ, பார்ப்போம்.''

**ச**மையலை ருசித்துப் பார்த்த ஆசிரம உதவியாளர் ஸ்ரீனிவாசன் முகத்தில் பரமானந்தம். அருகில் நின்று கொண்டிருந்த பக்தவத்சலத்தை தட்டிக் கொடுத்தது அவர் கரங்கள்.

''பக்தா... சாதாரண ஜனதா சமையல்னாலும் பிரமாதம். புளிக்குழம்பா இல்ல அமிர்தமாங்கற மாதிரி இருக்கு.''

''சந்தோஷம்னா எல்லாம் பெரியவா ஆசீர்வாதம்.''

‘‘ஆமா... எங்க அந்த மீனாட்சியம்மா?’’

‘‘கொல்லப்புறம் பாத்திரம் கழுவிண்டிருக்கா.’’

‘‘வேலையெல்லாம் ஒழுங்காப் பாக்கறாங் களா?’’

‘‘என்னத்தையோ பண்றா. ஆமா, எனக்கெதுக்கு அசிஸ்டென்டும் ஆட்டுக்குட்டியும். அவங்களைப் பேசாம ஆயாவா போட்டுட வேண்டியதுதானே?’’

‘‘இப்ப இருக்கற வையாபுரியை என்ன பண்றதாம்?’’

‘‘ஓ... அப்படி ஒரு சிக்கல் இருக்கோ... இருக்கட்டுமே. ஒருத்தருக்கு ரெண்டு பேர் இருந்தா தப்பா என்ன?’’

‘‘தப்புதான். அநாதையா ஆயிரம் பேர் இருக்கலாம். ஆனா, அஃபிஷியலா அளவாத்தான் இருக்கணும். மாசா மாசம் சம்பளம்னு ஒண்ணு தரணுமோல்லியோ?’’

‘‘இவனுக்கெல்லாம் தரலைன்னு யார் அழுதா. அதான் சோறு போட்டு படுக்க இடமும் கொடுத்திருக்கோமே..?’’

‘‘இதை அப்பாகிட்ட அப்படியே சொல்ற தைரியம் இருக்கா உமக்கு.’’

‘‘என்னண்ணா வம்புல மாட்டி விட்றேளே..?’’

‘‘ஆமா, உங்களை அந்த மீனாட்சியம்மா ஏதாவது படுத்தறாளா? எதுக்கு வெட்டி விடறதுலையே குறியா இருக்கீர்?’’

ஸ்ரீனிவாசன் கேட்கும்போதே மீனாட்சி இடுப்பில் குடத்துடன் நுழைந்தாள். ஸ்ரீனிவாசனை பார்க்கவும் சிரித்தாள். குடம் பொன்போல மின்னியது. மீனாட்சி முகத்திலும் குங்குமம் மங்கல மின்னல்.

‘‘நில்லுங்கோம்மா... எப்படி இருக்கு இந்த சூழ்நிலை?’’ – ஸ்ரீனிவாசன் விசாரித்தார்.

‘‘ரொம்ப பிரமாதம். ஒரு குறையும் இல்லை.’’

‘‘பக்தவத்சலம் எப்படி பழகறார்?’’



‘‘அவருக்கென்ன... எனக்கு அண்ணா கிடை யாது. அந்தக் குறையை அவர் போக்கிட்டார்.’’

‘‘சபாஷ்... இப்பல் லாம் சமையலும் ரொம்ப நல்லா இருக்கறதா எல் லாரும் சொல்றாங்க. நானும் சாப்பிட்டேன். ரொம்ப பிரமாதம். நீங்க வரவும், பக்தாவுக்கு தனி தெம்பு வந்துடுத்தாட்டம் இருக்கு. இவ்வளவு நாளா அவருக்குள்ள ஒளிஞ்சிண்டிருந்த நளன் இப்பதான் வெளியே வந்துருக்கான்’’ என்றார் ஸ்ரீனிவாசன்.

‘‘உண்மைதான். எனக்குக் கொஞ்சம் உங்க வித்தையை கத்துக் குடுங்கோன் னுதான் கேக்கறேன். அண்ணா மனசு இரங்க மாட்டேங்கறார்.’’

‘‘ஏய் பக்தா... பார்த்தீரா மீனாட்சியம்மா பேசினதை. இவாளைப் போய் ஆயாவா போடச் சொல்றீரே. கிறுக்குப் பிடிச்ச மனுஷன்யா நீர். ஒண்ணா இருந்து உங்க டிபார்ட்மென்ட்டை நன்னா வெச்சுக்கோங்கோ. பெரியவாளுக்கு சோறு போடறது, அன்னபூரணிக்கே போடற மாதிரி. ஞாபகம் இருக்கட்டும்.’’

ஸ்ரீனிவாசன் விலகினார். பக்தவத்சலத்துக்கு தர்மசங்கடமாகிவிட்டது. மீனாட்சியைப் பார்க்கவே ஒருமாதிரி இருந்தது. எவ்வளவு எதிர்ப்பு காட்டி னாலும் இப்படித்தான் பூமராங் போல திரும்பி வந்து தாக்கி விடுகிறது.

‘‘அண்ணா... சங்கடப்படாதேள். நான் உங்களுக்கு ஏதோ ஒருவிதத்துல பாரமா இருக்கேன்னு தெரியுது. கூடிய சீக்கிரம் வேற ஜாகை பாத்துண்டு உங்க பாரத்தை எடுத்து விட்டுடறேன். எனக்கு இப்ப இங்கே சமைக்கத்தான் தெரியும். வேற வழியில்லை...’’ மீனாட்சி உணர்ச்சிவசப்பட்டு பேசியது அவரை நெகிழ்த்திவிட்டது. சில விநாடி வெறித்தவர் பின் வாயைத் திறந்தார்.

‘‘அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா. எனக்குப் போட்டியா நீ வந்துட் டேங்கற பயத்துல பேசிப்புட்டேன். அப்படியில்லைன்னு நீ சொல்லாம சொல்லிட்டே. உன் கையும் ராஜ கை. இருபது வருஷமா சமைக்க றேன். உன் ருசி வரலை. என் குருநாதர் அடிக்கடி சொல்வார். மனசு யாருக்கு மல்லிகைப் பூவா இருக்கோ அவாளுக்கு கை மணக்கும்னுவார். அது உப்பு புளியிலயும் கலந்து பெரிய ரசவாதமே பண்ணும்டாம்பார். அப்ப புரியலை. இப்ப புரியுது. நீ போய் வேலையப் பார். இனி உன் பெருமையில நான் பங்குக்கு வர மாட்டேன்.’’

முடிக்கும்போது அவர் கண்க ளில் நீர் துளிர்த்துவிட்டது. அதே சமயம், ஆசிரம வாசலில் ஒரு ஜீப் வந்து நின்றது. இரண்டு சஃபாரி சூட் மனிதர்கள் இறங் கினர். ஸ்ரீனிவாசன் வரவேற்றார்.

‘‘வெல்கம்... நீங்க யார்னு தெரிஞ்சுக்க லாமா?’’– ஸ்ரீனிவாசன் கேள்விக்கு ஒரு சஃபாரி பதிலளித்தார்.

‘‘உங்க ஆசிரமத்துல அநாதைன்னு சொல் லிகிட்டு ஒரு கோடீஸ் வரர் வந்து சேர்ந்திருக் கிறாராம். அவரைத் தேடி வந்துருக்கோம்.’’

ஸ்ரீனிவாசன் முகத்தில் அதிர்ச்சி. ஸ்ரீ சூரணம் பரவிய நெற்றியில், ஆச்சரிய மடிப்புகள்.

‘‘இங்க எனக்குத் தெரிஞ்சு அப்படி யாரும் இருக்கிறதா தெரியலை’’ என்றார் ஆச்சரியம் விலகாமல். அவர்களிடம் அதைக் கேட்டு மெலிதாக ஒரு அதிர்ச்சி. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

ஒருவர், ‘‘மன்னிக்கணும். உங்க ஆசிரமத்துல இருக்கிறவங்களை ஒரு பார்வை பார்க்கலாமா?’’ என்றார். ஸ்ரீனிவாசனை அவர்களின் கேள்வி சற்று நெருடியது.

‘‘முதல்ல நீங்க யார்... அதைச் சொல்லலையே?’’

‘‘என் பேர் பாண்டுரங்கன். நான் ஒரு ரிட்டயர்டு கவர்ன்மெண்ட் சர்வன்ட். இவர் பேர் ராஜ்மோகன். இவர், அந்தக் கோடீஸ்வரருக்கு உறவு...’’

‘‘கொஞ்சம் விளக்கமா சொல்லுங்கோ...’’

‘‘மல்லிகானு ஒரு 30 வயசுப் பொண்ணு. பெரிய ஜமீன் குடும்பம். கொடைக்கா னல்ல எஸ்டேட்லாம் இருக்கு. அவங்களை இந்த சென்னையில டாக்டர் நந்தகோபால்ங்கிறவருக்கு கல்யாணம் பண்ணி குடுத்தாங்க. நந்தகோபாலோட மதர், அவங்க ளைப் பாடாய்ப் படுத்திட்டாங்க. நந்தகோபாலும் அம்மா பிள்ளையா இருந்து, அதை கண்டுக்கலை. அதோட எதிரொலி, மிஸஸ் மல் லிகா நந்தகோபால் வீட்டை விட்டே வெளியேறிட் டாங்க. அது, மல்லிகா வோட ஃபாதர் தர்மராஜுக்கு கூட தெரியாது. நந்தகோ பால், மல்லிகா அப்பா வீட்டுக்கு போயிருப் பானு நினைச்சுகிட்டு ஒரு வாரம் கண்டுக்கா மலே இருந்துட்டார். தற்செயலா தர்மராஜ் போன் பண்ணி மக ளோட பேசணும்னு சொன்னப்பதான் நந்த கோபாலுக்கே தெரிய வந்திருக்கு. அவர் ஒரு பக்கம் தேட, தர்மராஜ் நண்பர்களான நாங்க இன்னொரு பக்கம் தேட... அப்பதான் மல் லிகா, நவஜீவன் ஆசிர மத்துல இருக்காங்கனு தகவல் கிடைச்சுது. வந்திருக்கோம்...’’

பாண்டுரங்கன் என்னும் அந்த மனிதர், இந்திய தேசத்தில் இன்னமும் வீட்டுக்கு வீடு அலையடித்தபடி இருக்கும் ஒரு சிக்க லின் துண்டுப்பகுதியை மட்டும் சொல்லி, ஸ்ரீனிவாசனை அதிகமாகவே சிந்திக்க வைத்தார்.

‘‘என்ன சார் சிந் தனை? நாங்க சொன் னதுல உங்களுக்கு நம்பிக்கை வரலையா? விசாரிச்சு, உண்மைனு தெரிஞ்சா உதவுங்க...’’

‘‘அதுக்கில்ல பாண் டுரங்கன். இங்க முப்பது வயசுல ஒரு பொண்ணு இல்லவே இல்லை. இன்னாரு விஷயம்... இங்கே அநாதைனு பொய் சொல்லி யாரும் சேரமுடியாது’’

‘‘அப்ப, எங்களுக்கு வந்த தகவல்...’’

‘‘யாரோ தப்பா சொல்லியிருக்காங்க...’’

‘‘எதுக்கும் ஒரு பார்வை பார்த்துடறோமே?’’

‘‘அவங்களுக்கு உதவற நோக்கத்துல யார் வேணும்னா பார்க்கலாம். ஆனா, ஒரு பரேட் மாதிரி நடத்தி, வரிசைப்படுத்த நாங்க தயாரில்லை. அந்த மாதிரி கலாசாரத்துக்கு இங்கே இடம் கிடையாது!’’

‘‘புரியுது. நாங்க இவ்வளவு தீவிரமா பேச காரணம் இருக்கு. தர்மராஜ், மகளோட நிலையால ரொம்ப சீரியஸ் கண்டிஷன்ல இருக்காரு. எந்த நேரமும் அவர் உயிர் பிரியலாம். மல்லிகா கிடைச்சுட்டா, அவரை ஒருவேளை நாங்க காப்பாத்த முடியும். அதனாலதான்...’’

‘‘எல்லாம் சரி... ஆனா, முப்பது வயசுல ஒரு பொண்ணு இங்கே இல்லவே இல்லைனு நான் சொல்றதை நீங்க நம்பாமப் பேசறது ஏன்னு எனக்குப் புரியலை...’’

ஸ்ரீனிவாசன் இப்படி சொன்ன பிறகு அவர்கள் எதுவும் கேட்க விரும்பவில்லை. ‘‘ ஸாரி’’ என்றபடியே கிளம்பிப் போனார்கள்.



**ஆ**ட்டோ நிற்கும் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தான் அரவிந்தன். மாலதி இறங்கிக் கொண்டிருந்தாள்.

‘‘ஹை அத்தை!’’ – ராகவியிடம் உற்சாகம். குளித்து தலை துவட்டியபடி வந்த ரஞ்சனி பெரிதாக உணர்ச்சிகளைக் காட்டவில்லை.

‘‘இருக்கிற இடைஞ்சல் போதாதுனு இவ வேற வந்துட் டாளாக்கும்?’’ என்கிற முணுமுணுப்போடு டிரஸ்ஸிங் டேபிளுக்குப் போய், அதன் ஃப்ரேமில் முந்தைய நாள் ஒட்டியிருந்த ஸ்டிக்கர் பொட்டை எடுத்து நெற்றியில் பதித்துக் கொள்ளும்போது, ‘‘வாக்கா, வா... மாப்ள வர லையா? நீ மட்டும்தான் வந்தியா?’’ என்று அரவிந்தன் வரவேற்பது காதில் விழுந்தது.

‘‘அவருக்கு எங்கே லீவு இருக்கு? நான்தான் போட்டது போட்டபடி, ஓடிவர்றேன். அம்மா எங்கடா? என்னாச்சு?’’ வந்தவுடனேயே மெயின் விஷயத்தில்தான் விழுந்தாள்.

‘‘சொல்றேன்க்கா... இப்பத்தானே வந்திருக்கே? உட் காரு முதல்ல... எதுல வந்தே, ராக்போர்ட்லயா?’’

‘‘ராக்போர்ட்டாவது, ஏர்போர்ட்டாவது? கிடைச்ச பஸ்ல ஏறி வந்தேன். அவுரங்கசீப் காலத்து பஸ்டா. ஒரே முதுகுவலி’’

‘‘அத்தே, அவுரங்கசீப் காலத்துல ஏது அத்தே பஸ்?’’ – ராகவி அருகில் வந்து மடக்கிவிட்ட மாதிரி சிரித்தது.

‘‘என் கண்ணு... சும்மா பேச்சுக்குச் சொன்னேன்டா. நீ எப்படி இருக்கே?’’

‘‘நல்லாயிருக்கேன். கார்த்தி அக்கா எப்படி இருக்கு?’’

‘‘நல்லாயிருக்கா! இந்தக் காலத்துப் பசங்களே பயங்கர இன்டலிஜென்ட்! பாரு, என்னம்மா மடக்கறா... இந்தாடா கண்ணு...’’ – ஒரு பிஸ்கட் பாக்கெட்டை எடுத்து நீட்டி னாள் மாலதி. பார்வை ‘எங்கே ரஞ்சனி?’ என்று தேடும் போது, அவளும் தலையில் ஒரு ஹேர்பின்னை செருகியபடி சற்றே கோணல் வாயோடு ‘‘வாங்கக்கா...’’ என்று அறையி லிருந்து வெளியில் வந்தாள்.

‘‘எப்படி இருக்கே ரஞ்சனி?’’

‘‘இருக்கேன்க்கா. அத்தான், கார்த்தில்லாம் சவுக்யமா?’’

‘‘ஆமா. இங்கதான் ஒரே கந்தரகோலம் போலிருக்கு’’

‘‘ஆமாக்கா... உங்கம்மா இப்படியெல்லாம் பண்ணு வாங்கனு யாருமே எதிர்பார்க்கலை...’’

‘‘சரி, சரி... ரஞ்சனி, அக்காவுக்கு முதல்ல காபி கொடு. அப்புறம் விலாவரியா பேசலாம்...’’

‘‘ஆமா... முதல்ல காபி கொடு, நீ போ. நீ சொல்லுடா..’’

‘‘அதான் சொல்றேங்கறேன்ல... பல்லு விளக்கிட்டு, முகம் கழுவிட்டு வா...’’

‘‘அது எனக்கு தெரியாதாக்கும்? விஷயத்த சொல்லுடா’’

மாலதி அவனை இழுத்துக் கட்டினாள். அவனும் தொடங்கினான்.

‘‘அப்பா விஷயம் நீறுபூத்த நெருப்பாவே இருக்குக்கா. அதுதான் எல்லாத்துக்குமே காரணம்...’’

‘‘இப்படி மொட்டையா சொன்னா எப்படிடா?’’

‘‘மொட்டையாவோ முடியோடையோ... விஷயம் இது தான். சும்மா நோண்டாதே... ஸேம் டைம், அம்மாவே வெளியே இருந்து பேசிட்டாங்க. நல்லா இருக்காங்களாம்! என்னைத் தேடாதேனும் சொல்லிட்டாங்க...’’

‘‘எங்க இருக்கா, இப்ப அவ?’’

‘‘தெரியலைக்கா... இருக்கிற இடத்தைச் சொல்லாம பேசினாங்க...’’

‘‘நீ கேக்கறதுக்கென்ன?’’

‘‘கேக்கறதா? கத்திக் குவிச்சுட்டேன். ‘ஏம்மா இப்படி உசுரை வாங்குறே?’னுகூட சத்தம் போட்டு பார்த்தேன்...’’

‘‘அப்படியும் சொல்லலையா?’’

‘‘இல்லை... ஆனா, எங்கேயோ நல்லாயிருக்கா. அது மட்டும் தெரியுது...’’

ரஞ்சனி காபியை நீட்டினாள். கறுப்பாக, நுரையில்லாமல் வேலைக்காரர்களுக்கு போடும் மூன்றாம்தர டிகாக்ஷன் காபி போலிருந்தது. படுவேகமாக வந்ததிலேயே புரிந்துபோயிற்று. வாயில் வைத்தபோது, அது ஊர்ஜிதமானது. சூடும் இல்லை.

‘‘ஏம்மா, கொஞ்சம் புதுசா முதல் டிகாக்ஷன் போட்டு தரமாட்டியா?’’ என்று இரண்டு சூப்பு சூப்பிய நிலையில் மாலதி நேரடியாகவே கேட்க, ரஞ்சனியின் பார்வை நேராக அரவிந்தன் மேல்தான் சென்றது. அவனுக்கும் புரிந்தது.

‘‘ஸாரிக்கா. தப்பு என்மேல! வெளியே போயிட்டு வரும்போது காபிப் பொடி வாங்கிட்டு வந்துடுங்கனு ரஞ்சனி சொன்னா. நான்தான் மறந்துட்டேன். இருக்கிறத வச்சு சமாளிச்சுருக்கா!’’

– அரவிந்தன் அசடு வழிந்தபடி ரஞ்சனியைப் பார்த்தான். அவள் எதுவும் பேசாமல் உள்ளே செல்லத் தொடங்கினாள்.

‘‘பரவாயில்லை... நல்லாவே சமாளிக்கறே! அம்மா ஏன் வீட்டை விட்டுப் போனான்னு இப்ப புரிஞ்சு போச்சு எனக்கு...’’ என்று மாலதியும் அதை நம்பாத ஒரு பதிலை சொன்னபடி, காபியையும் குடிக்காமல் வைத்தாள்.

பார்த்துக்கொண்டே இருந்த ராகவி, ‘‘அத்தே... பாட்டி காபி எப்படியி ருக்கும் தெரியுமா?’’ என்றது.

‘‘காபி மட்டுமா? அவ கை பட்ட எதுதான் மணக் கலை, சொல்லு...’’

– இதுதான் சாக்கு என்று மாலதி, வெளியேறிய மீனாட்சிக்கு ஒரு சர்டிபிகேட் தந்தாள். அதற்குமேல் ரஞ்சனியாலும் பொறுக்க முடியவில்லை. விடுவிடுவென்று திரும்பி வந்தாள்.

‘‘அக்கா, நீங்க இப்ப எதுக்கு வந்திருக்கீங்க? என் காபி எப்படியிருக்குனு ஆராய்ச்சி பண்ணவா? இல்லை, உங்கம்மா பத்தி தெரிஞ்சுக்கவா?’’ – ஆக்ரோஷமாகக் கேட்டாள். அரவிந்தன் வேகமாக சுதாரித்தான்.

‘‘ரஞ்சனி, வாயை மூடு. அக்கா, அம்மாவைச் சொன்னா... உனக்கு ஏன் எரியுது? ஏன்க்கா, நீதான் கொஞ்சம் பார்த்துப் பேசமாட்டியா? ரஞ்சனி, சென்சிடிவ் டைப்னு தெரியாதா?’’

‘‘ஏண்டா... நான் இப்ப என்ன சொல்லிட்டேன்னு நீ இந்த கத்து கத்துறே? உன் பொண்டாட்டிதான் சென்சிடிவ்வா... எனக் கெல்லாம் சூடு சொரணையே இல்லைனு நினைச்சுட்டியா?’’

‘‘சரி, சரி... இங்கே எல்லாரும் சென்சிடிவ்தான். நான்தான் தப்பா பேசிட்டேன். குளிச்சுட்டு வா. அப்புறம் பேசலாம்... ஆரம்பமே சரியில்லை...’’ என்றான்.

தொலைபேசி அழைத்தது. ரஞ்சனி போய் எடுத்தாள்.

‘‘யாரு... மன்னியா?’’ – மறுமுனையில் சாமிநாதன்.

‘‘ஆமா... சாமிநாதனா?’’

‘‘ஆமா மன்னி... அப்புறம், ஒரு குட் நியூஸ்...’’

‘‘என்ன?’’

‘‘அந்த வீட்டுக்கு சாலிடா பத்து லட்சத்தையும் புரொடியூசர் ரங்கராஜனே... ஐயாம் ஸாரி, உங்க மாமனார் ரங்கராஜனே கொடுத்துட்டார். நீங்க போய் பத்திரம் பதிவு பண்ணிக்க வேண்டியதுதான். உங்க அபிப்பிராயத்தையும் சொன்னேன். ரங்கராஜன் சார் நெகிழ்ந்துட்டார். அநேகமா இன்னிக்கு உங்க ஆபீசுக்கு போன் பண்ணி, உங்ககூட நேர்லயே பேசுவார்னு நினைக்கிறேன்...’’

‘‘அட, என்ன சாமிநாதன் நீங்க? அதெல்லாம் வேண்டாம். இங்கே நிலைமை சரியில்லை...’’

‘‘என்ன மேடம் சொல்றீங்க? உங்க மாமியார் திரும்பி வந்துட்டாங்களா?’’

‘‘சேச்சே... அதெல்லாமில்லை. நான் அப்புறமா போன் பண்றேன். நாத்தனார் வந்திருக்காங்க...’’

‘‘ஓ! பக்கத்துல இருக்காங்களா? ஸாரி மேடம்... அப்புறமா பண்றேன்...’’ – ரிசீவரை வைத்தான். ரஞ்சனியும் வைத்துவிட்டுத் திரும்பினாள்.

‘‘யாரு... சாமிநாதனா?’’ – அரவிந்தன் கேட்டான்.

‘‘ஆமா..’’

‘‘என்னவாம்?’’

‘‘ஒண்ணுமில்லே...’’

‘‘என்ன ஒண்ணுமில்லே? இங்கே நிலைமை சரியில்லைனு ஏதோ சொன்னியே?’’

''ஆமா... சரியில்லேன்னா சரியில்லைனுதானே சொல்லணும்?''

''அதை அவன்கிட்ட எதுக்குச் சொல்றே? அவனைத்தான் வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டுனு பேசி அனுப்பியாச்சே?''

''அவனை அனுப்பிட்டா ஆச்சா? உங்கப்பா விடமாட்டேங்கறாரே?'' – ரஞ்சனி சமாளித்தாள்.

''அப்பாவா... என்ன சொல்றே?''

''அந்த வீட்டுக்கு முழுப் பணமும் கொடுத்துட் டாராம் உங்கப்பா. நாம போய் கிரயம் செய்துக்க வேண்டியதுதான் பாக்கியாம்...''

''என்னடி சொல்றே?''



''சாமிநாதன் சொன்னதை சொல்றேன். 'என் பையனுக்கு நான் செய்யறேன். நான் செய்யாம, யார் செய்வாங்க?'னு கேட்டே பண்ணியிருக்கார். அதுமட்டுமில்ல. அக்காவுக்கும் ஒரு வீடு வாங்கித் தந்தாதான் அவர் மனசு சாந்தி அடையுமாம்...''

– ரஞ்சனி, அந்தச் சூழ்நிலையே மாறிப் போகும் படி மாலதியையும் வளைத்துப் போட்டு அசுர வேகத்தில் சொன்ன பொய், மாலதியை பாம்பைப் போல நிமிரவைத்தது.

''ரஞ்சனி, நீ யாரைச் சொல்றே? எங்க அப்பாவையா?'' எனக் கேட்டாள்.

''ஆமாங்க்கா... என்னங்க, நீங்க போய் குளிச்சுட்டு வாங்க. நான் அக்காகிட்ட எல்லா விஷயத்தையும் சொல்றேன். நீங்க சொன்னா கூட்டிக் குறைச்சு, கெக்க பெக்கேனு பேசுவீங்க... அது வந்துக்கா...''

– ரஞ்சனி க்ஷணத்தில் குணம் மாறி, மாலதியிடம் பேச ஆரம்பித்ததைப் பார்த்து அரவிந்தன் திக்குமுக்காடிப் போய்விட்டான். அசையாமல் அவளையே வெறித்தான்.

''அட!... நீங்க போய் குளிச்சுட்டு வாங்க. அப்புறம் ஆபீஸுக்கு லேட்டா போய், மானேஜர்கிட்ட மண்டகப் படி வாங்கறதுக்கா? நான்தான் அக்காகிட்ட சொல்றேன்னு சொல்லிட்டேன்ல...''

– ரஞ்சனியின் அதட்டல் அவனை துரத்தியது. ராகவியையும் அவனோடு அனுப்பிவிட்டு, குழப்பத்தோடு அமர்ந்திருக்கும் மாலதி பக்கம் திரும்பினாள்.

மாலதி தனக்கும் ஒரு வீடு என்பதிலேயே இருந்தாள்.

''எனக்கும் ஒரு வீடுன்னியே... என்னது ரஞ்சனி?''

‘‘சொல்றேன், சொல்றேன்... நாங்க எங்களுக்குனு ஒரு வீடு வாங்க ஆசைப்பட்டோம். 20 லட்சம் மதிப்புள்ள ஒரு பழைய வீடு 10 லட்சத்துக்கு வந்தது. எங்களால அஞ்சுதான் புரட்ட முடியும். மீதி அஞ்சுக்கு வழியில்லே... அதனால, அந்த வீடு வேண்டாம்னு புரோக்கர்கிட்ட சொல்லிட்டோம்.

நம்ம நல்ல நேரமோ... இல்ல, கெட்ட நேரமோ... அந்த வீட்டை உங்கப்பா ஒரு டப்பிங் தியேட்டர் கட்டறதுக்காக வாங்க வந்திருக்காரு. அப்ப, நாம வாங்க முடியாத நிலையில இருக்கறது அவருக்கு தெரிய வந்திருக்கு. முழுப் பணத்தையும் போட்டு அந்த வீட்டை எங்களுக்கே வாங்கிட்டாரு. இதைத்தான் புரோக்கர் சாமிநாதனும் இப்ப போன் பண்ணிச் சொன்னான்...’’

‘‘அதுசரி... எங்களுக்குத்தான் அவரோட ஒட்டு உறவே இல்லையே... எப்படி அவர் எங்களுக்குப் பண்றாரு?’’

‘‘என்னக்கா நீங்க? பாசம் யாரை விட்டது? சொல் லுங்க, பார்ப்போம். இது உங்கம்மாவுக்குப் பிடிக்கலை. வீட்டைவிட்டுப் போயிட்டாங்க...’’

‘‘அப்ப, அம்மா வீட்டைவிட்டுப் போக இதுதான் காரணமா?’’

‘‘ஆமா! பையன் கஷ்டப்படும்போது வேடிக்கை பார்க்க அப்பாவால முடியலை. இந்த வீட்டைப் பாக்கறீங் கள்ல... சரியான புறாக்கூண்டு. நாலாயிரம் வாடகை... வயித்தெரிச்சலா இல்லை?’’

‘‘ஆமாமா... எனக்கும் ஏதோ வீடுனு சொன்னியே?’’

‘‘ஆங்! மறந்துட்டேனே... உங்க கல்யாணத்துக்கே அவர் எதுவும் செய்யலை, இல்லையா? ஆகையால், எங்களுக்கு பண்ணிட்டு, உங்களுக்கு பண்ணாம விட்டா நல்லாவா இருக்கும்? அதனால, உங்களுக்கு ஒரு வீடு வாங்கி உங்க பேர்ல ரிஜிஸ்டர் பண்ணிரப் போறாராம். நீங்க விரும்பினாலும் விரும்பாட்டியும் இதை செய்யப்போறாராம்...’’

– ரஞ்சனி அழகாக ஹோமகுண்டத்து நெருப்புப் போல ஆசை நெய் விட்டு வளர்த்த நெருப்பு, மாலதிக்குள் திகுதிகுவென்று நிமிர்ந்து எழுந்து எரியத் தொடங்கியது.

சற்றுமுன்வரை கொஞ்சம் ஈகோ, கொஞ்சம் காழ்ப்பு, கொஞ்சம் நாத்தனார்த்தனம் என்கிற கலவைகளில் கொக்க ரிப்பாகப் பேசிய மாலதி இப்போது பெட்டிப் பாம்பு போல ஆகிவிட்டிருந்தாள்.

அதை உள்மனதுக்குள் ரசித்த ரஞ்சனியும் ‘‘இந்த அம்மா வயசான காலத்துல ஆனாலும் பிடிவாதம் பிடிக்கறாங்கக்கா. ‘அவர் வீடு வாங்கறதுனு முடிவு செய்தா ஆச்சா? என்கிட்ட ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா? நான் இல்லாமலா இந்தப் பசங்க வந்தாங்க? என்னை விட்டுட்டுப் பசங்களுக்கு எதுக்கு இவர் உறவுக்கரம் நீட்டுறார். முதல்ல, என்கிட்ட பேசறதுக்கென்ன?’னு ஒரே ரகளை...’’ என்று ஒரு புதிய காட்சியை மாலதி எதிரில் எழுத...

மாலதி விக்கித்துப் போய், ‘‘அப்ப அம்மாவுக்கு அப்பா தன்கூடப் பேசலைங்கறதுதான் வருத்தமா? வீடு வாங்கித் தர்றதெல்லாம் இல்லையா?’’ என்றாள் மிக வேகமாக.

''அதேதான். எனக்கே வெறுத்துப் போச்சு. எல்லாத் தாயும் தான் கஷ்டப்பட்டாலும் தன் பசங்க சவுகரியமா இருந்தா போதும்னுதான் நினைப்பாங்க. ஆனா, உங்கம்மா நேரெதிர். அதே சமயம், உங்கப்பா இருக்காரே... அவர் தங்கம். பசங்க, பசங்கனு உயிரை விடறார், தெரியுமா? நான்கூட, ரொம்ப மோசமான மனுஷன்னுதான் நினைச்சி ருந்தேன். சாமிநாதன் சொல்லும்போதுதான் தெரியுது, அவர் எவ்வளவு நல்ல மனுஷர்னு...''

– ரஞ்சனியின் பேச்சு... மாலதி எதற்காக வந்தாளோ, அதையே மறக்கடிக்கச் செய்துவிட்டது. அம்மா எங்கே இருக்கிறாள், எப்படியிருக்கிறாள் என்கிற எல்லாமும் பின்னோக்கிப் போய்விட... அப்பா வீடு வாங்கித் தரப் போகிறார் என்பதில்தான் மனது நிலைகுத்தி இருந்தது. அதன் எதிரொலியாக, அவள் கேட்ட கேள்வி – ஆனாலும் அவள் வெறும் சொத்தை என்று சொல்லாமல் சொல்லிவிட்டது.

''ஏன் ரஞ்சனி... உங்க வீட்டைப் போலவே எனக்கும் வீடா? இல்லே, அதைவிடப் பெரிசா?''

– ரஞ்சனி அதைக் கேட்டு மனதுக்குள் மீண்டும் சிரித்தாள்.



மனதுக்குள் ரஞ்சனி சிரித்துக் கொண்டாலும் மாலதி எதிரே அடக்கிக்கொண்டாள். மாலதியும் வால் மிதிபட்ட நாகம் போல கூடைக்குள் அடங்காமல் படமெடுத்து ஆடுவாள், ரவுத்ரம் காட்டுவாள் என்று ஒரு பக்கம் நினைத்திருந்தாலும் வீட்டு விஷயம் மகுடியாக மாறி, மாலதியை இந்தக் கட்டு கட்டும் என்று நினைக்கவில்லை.

மாலதி அந்தக் கேள்வியிலேயே நின்றாள்.

''ஆமா.. எனக்கு அப்பா வீடு வாங்கித் தரப்போறதா சொன்னியே, அது சிறுசா பெருசா... சொல்லலையே நீ...''

‘‘நிச்சயம் பெருசாத்தான் இருக்கும். உங்களுக்குத்தான் சடங்கு, கல்யாணம்னு எதுக்குமே அவர் செய்யலையே. அதுக்கெல்லாம் ஈடா பெருசா செஞ்சாத்தானே நல்லா இருக்கும்.’’

ரஞ்சனி சுருதி கூட்டக் கூட்ட மாலதி முகத்தில் ப்ளீச் செய்த பளபளப்பு.

‘‘என்னமோம்மா... இப்பவாவது அவருக்கு நல்ல புத்தி வந்து எங்களுக்கு செய்யணும்னு தோணுச்சே. அம்மா ஏன் புரிஞ் சுக்காம சண்டித்தனம் பண்றா?’’

‘‘ஒரு வார்த்தைல இதுக்கு பதில் சொல்லவா?’’

‘‘என்ன..?’’

‘‘ஈகோ.’’

‘‘ஈகோவா... புரியலையே?’’

‘‘தான்ங்கற கர்வம். வேற என்ன..?’’

‘‘இல்லையே... அம்மா அப்படிப்பட்டவ கிடையாதே, அவளை எல்லாரும் ஏமாந்த ஏகாம்பரி, இளிச்சவாய் இந்திராணின்னு தானே சொல்வோம்.’’

‘‘அப்படின்னா எதுக்கு வீட்டைவிட்டுப்போகணும்? தன்கிட்ட ஒரு வார்த்தை சொல்றதுக்கென்னன்னு ஏன் கேட்கணும்?’’ – ரஞ்சனி பிடி வலுவாகத்தான் இருந்தது.

‘‘இருக்கட்டும் இருக்கட்டும். அவகிட்ட கேக்கறேன்...’’

‘‘கேக்கறது இருக்கட்டும். உங்கப்பாவுக்கு உங்களோட பதில் என்ன... வேணுமா வேண்டாமா?’’

‘‘அது...’’

‘‘யோசிக்காதீங்கக்கா. அவர் என்ன அந்நியமா அசலா? இல்ல நீங்கதான் டாட்டாவா பிர்லாவா? வேணும்னு ஒரு வார்த்தை சொல்லுங்க.’’

‘‘அப்ப அரவிந்தன், தான் வீட்டை வாங்கிக்க சரின்னு சொல்லிட்டானா?’’

‘‘நீங்க சொன்னா அவரும் சொல்லிடுவார். நீங்க என்ன நினைப்பீங்களோன்னுதான் பயப்படறார்.’’

‘‘அப்படியா?’’

‘‘ஆமா... உங்களை நினைச்சுத்தான் கவலையே.’’

‘‘என்ன ரஞ்சனி நீ..? இதை முந்தியே சொல்றதுக் கென்ன? எனக்காக இல்லேன்னாலும் என் தம்பிக்காக சம்மதம் சொல்லமாட்டேனா? அவனுக்கு கிடைக்கும்னா நான் தடையா இருப்பேனா?’’ – மாலதி, ரஞ்சனிக்கே அல்வா கொடுக்கிற மாதிரி சாமர்த்தியம் காட்டினாள்.

அதையும் ரசித்த ரஞ்சனி, ‘‘இப்ப உங்க தம்பி கேட்டா என்ன சொல்வீங்க?’’

‘‘எனக்கு இதுல பரிபூரண சம்மதம்னுதான். மாத்திச் சொல்ல நான் என்ன இதயம் இல்லாதவளா..?’’

‘‘சரி.. அதே ஸ்டேண்ட்ல நில்லுங்க. மிச்சத்தை நான் பாத்துக்கறேன்.’’

‘‘சரி, நீ எங்க அப்பாவை பார்த்தியா... பேசினியா, எப்படி இருக்கார்?’’

‘‘என்னக்கா நீங்க... அவரும் நீங்களும் இருக்கும்போது நான் அவரை பார்த்துப் பேசினா நல்லா இருக்குமா? தலை இருக்கவால் ஆடலாமா?’’

‘‘அப்ப இவ்வளவு தூரம் நடந்ததெல்லாம் எப்படி?’’

‘‘அங்கதான்கா கடவுள் கருணை இருக்கு. சாமிநாதன்னு ஒரு புரோக்கர். அவர்தான் இப்ப உங்கப்பாவுக்கும் எங்களுக்கும் நடுவுல மீடியேட்டர்.’’

‘‘இனி அவனை தொந் தரவு பண்ண வேண்டாம். நானே பாத்துக்கறேன்.’’

‘‘அப்பாடா.. இப்பதான் நிம்மதியாச்சு. இந்த வார்த்தையை நீங்க சொல்லமாட் டீங்களான்னுதான் காத்திருந்தேன்.’’

‘‘உன்னையும் கொஞ்சம் தப்பா நினைச்சிட்டேன். பெரிசா எடுத்துக்காதே..’’

‘‘சேச்சே... எனக்கு உங்களை தெரியும்கா. எதையுமே மனசுல வச்சுக்கத் தெரியாத அசட்டு கோண்டு நீங்க. ஆனா உங்க தம்பி இருக்காரே சரியான அழுத்தம்...’’

– ரஞ்சனி பேச்சில் ஜகஜாலம் காட்டினாள். மாலதிக்கு உச்சி உறைந்து போனது. ‘‘அக்கா, இன்னொரு விஷயம். எங்களுக்கு வீடு கிடைக்கணும்கறதுக்காக நீங்க சம்மதிக்கறதா காட்டிக்காதீங்க. அது அவருக்கு பிடிக்காது. நான் என்ன இப்ப தெருவுலயா இருக்கேன்னு கேட்பார். உங்களுக்கு கஷ்டம்னு சொல்லுங்க. அதாவது நீங்க குடி இருக்கிற வீட்ல சிக்கல் – உங்க வீட்டுக்காரருக்கும் மெட்ராஸ் டிரான்ஸ்ஃபர்னு அடிச்சு விடுங்க.’’

‘‘அப்படி சொன்னாதான் அரவிந்தன் சரின்னு சொல்வானா?’’

‘‘ஆமாங்க்கா... கரெக்டா புரிஞ்சு கிட்டீங்களே..’’

‘‘பார், எப்படி அவனை கட்டிப் போட றேன்னு..’’

மாலதி தயாராகிவிட்டாள். கொக்கு தலை வெண்ணை கரைந்து உருகியதில் ரஞ்சனிக்கு சொல்ல முடியாத மகிழ்ச்சி.

அரவிந்தனும் ராகவியும் குளித்து தலை துவட்டியபடி வந்தனர். மாலதி, மல்லிகா பத்ரிநாத்தாக மாறி வெல்ல மோர்க் குழம்பு பற்றி சொல்லிக்கொண்டு இருந்தாள்.

‘‘நான் சொன்ன மாதிரி மோர்க்குழம் புல ஒரு கை வெல்லத்தைப் போட்டு கொதிக்க விட்டுப்பார். பிரமாதமா இருக்கும். என் வீட்டுக்காரருக்கு மோர்க் குழம்பே பிடிக்காது.

குளிர்ச்சிக்கு காரணமான மோரை கொதிக்க வைக்கறது, காந்தியை கோட்ஸே ஆக்கற மாதிரினு சண்டை போடுவாரு...''

''சரிக்கா, இப்பவே பண்ணிட்றேன். இரண்டு நாளைக்கு ஆபீசுக்கு லீவும் போட்டுடறேன்'' என்று எழுந்த ரஞ்சனியை, அரவிந்தன் ஆச்சரியத்துடன் பார்த்தான்.

''என்ன பார்க்கறீங்க... அக்காவும் நானும் இன்னிக்கு கிச்சன்ல ஒரு சமையல் மேளாவே நடத்தப் போறோம்.''

''சமையல் மேளாவா... ஆபீசுக்கு?''

''அக்காவைவிட எனக்கு ஆபீஸ் ஒண்ணும் பெருசு இல்ல. ஓ.டி. சேர்த்து வச்சுருக்கேன். கழிச்சுடலாம்..''

''என்னக்கா சொல்றா இவ... கொஞ்சம் முந்தி உங்க இரண்டு பேருக்கு நடுவுல நெருப்பு பறந்துதே?''

''நெருப்பாவது பருப்பாவது... குடும்பம்னா அப்படித் தாண்டா. சரி... நீ ஆபீசுக்குக் கிளம்பற வழியைப் பார். நேரமாயிடப் போகுது'' – மாலதி அவனைத் துரத்த, அந்த தற்காலிக உடன்படிக்கையும் அங்கு நிலவிய ஒரு குதூகலமும் அரவிந்தனுக்குள் ஆச்சரியத்தை அதிகப்ப டுத்திக் கொண்டே போய் சந்தேகத்தில் நிறுத்தியது. பொறுத்துப் பார்ப்பது தான் ஒரே வழி என்று தோன்றியது.

**தொ**லைபேசி சிணுங்கவும் எடுத்தான் சாமிநாதன். மறுமுனை யில் ரஞ்சனி.
''சொல்லுங்க மன்னி – என்ன வீட்டுக்கே போன் பண்ணிட்டீங்க?''

''முக்கியமான விஷயம். என் நாத்தனார் வந்துருக்காங்க. அவங்களையும் சமாளிச்சாகணும் இப்ப...''

''நான் என்ன பண்ணணும் சொல்லுங்க..''

''என் மாமனார் பத்தி நிறைய தெரிஞ்சுக்கணும்...''

''அவரைப் பத்திதான் ஊருக்கே நல்லா தெரியுமே...''

''அந்த தெரியுமை சொல்லல... நான் தெரிஞ்சுக்க விரும்பறது வேற.''

''என்னன்னு விளக்கமா சொல்லுங்கோ...'‘

''என் மாமனார் எங்க எல்லார் பேர்லையும் பாசமா இருக்காரா? அதுல சந்தேகமில்லையே..''

''என்ன இது திடீர்னு இப்படி ஒரு அசட்டுக் கேள்வி.''

''காரணமாத்தான். எங்களுக்கு வீடு வாங்கித் தரப்போறார்ங்கற விஷயம் இப்ப என் நாத்தனாருக்கும் தெரியும். இதுல அவங்களையும் சேத்துக்கலைன்னா ஆபத்தாயிடும். அவங்க பக்கம் என் வீட்டுக்காரர் சேர்ந்துடுவார்.''

‘‘புரியறது. இப்ப உங்க நாத்தனாருக்கும் உங்க மாமனார் ஏதாவது செய்யணும். அப்படித்தானே?’’

‘‘கரெக்ட்.. பயங்கர கற்பூரம் சாமி நீங்க...’’

‘‘நான் இதுசம்பந்தமா பேசறதைவிட நீங்களே பேசிடலாமே..’’

‘‘ஆமா. இல்லேன்னா இந்தப் பாம்பு கடிக்காம விடாது. இன்னொரு வீடுங்கற மகுடியால அடக்கிவச்சுருக்கேன்.’’

‘‘கொஞ்சம் காஸ்ட்லியான மகுடிதான் இது. பெட்டர் நீங்களே உங்க மாமனார்கிட்ட பேசறதுதான்.’’

‘‘உங்களால பேசி முடிக்க முடியாதா?’’

‘‘இல்ல மன்னி. இது உங்க குடும்ப விஷயம். நான் பேசறது நல்லா இருக்காது. கமிஷனுக்கு ஆசைப்பட்டு என் இஷ்டத்துக்கு நடந்துக்கறதா அர்த்தமாயிடும்.’’

சாமிநாதன் பதிலை தொடர்ந்து ரஞ்சனியிடம் மவுனம்.

‘‘என்ன மன்னி... பேசுங்க...’’

‘‘இல்ல... இந்த விஷயத்துல நான் இறங்கி பேசறதும் சரியா இருக்காது... அதான்...’’

‘‘அப்ப அண்ணாவ அனுப்புங்கோ. அது தானே உங்க ப்ளான்? அவர் வந்து அவங்க அப்பாகிட்ட பேசுவார் அப்படீன்னீங்களே...’’

‘‘ஆமா, சொன்னேன். ஆனா, அதுக்கு கொஞ்சம் டயமாகும் போல.’’

‘‘எப்படி சவுகர்யமோ அப்படி செய்ங்க’’

‘‘சரி. இதுக்கு மட்டும் பதில் சொல்லிடுங்க. இவர் மட்டும் தேடிவந்து அப்பானு கூப்பிட்டா ஒரு வீட்டுக்கு நாலு வீடு வாங்கித்தருவார்னு சொன்னீங்கல்ல..?’’

‘‘ஆமா... அப்படித் தான் அவர் சொன்னார்.’’

‘‘அதுபோதும். நாலு வீடெல்லாம் வேண்டாம். ரெண்டுதான். ஒண்ணு எங்களுக்கு, இன்னொன்னு என் நாத்தனாருக்கு.’’

‘‘ஓகே... நான் பாத்துக்கறேன்.’’

‘‘அவர் இன்னும் சில நாள்லயே அவங்கப்பாவை சந்திப்பார். சந்திக்க வைக்கறேன். வச்சுடட்டுமா.’’

‘‘சரி மன்னி’’ – போனை வைத்த சாமிநாதன் முகத்தில் அசாத்ய சிந்தனை. நிமிர்ந்தான். எதிரில் சாவித்ரியம்மாள்!

புரொட்யூசர் ரங்கராஜனின் நிகழ்கால மனைவி.

''அம்மா நீங்களா... வாங்க வாங்க...'' – சாமிநாதனிடம் சற்றே திக்குமுக்காடல். அவளும் வந்து அவன் எதிரில் உள்ள நாற்காலி ஒன்றில் அமர்ந்தாள்.

நரை ஓடிய வகிட்டு முகப்பு. தொடக்கத்தில் குங்கும சந்தனம். ஐம்பது வயது என்றால் நம்பியும் நம்பாமலும் தான் ஏற்க வேண்டும். உடுத்தியிருக்கும் புடவையிலும் அமரிக்கையான மஞ்சள் வண்ணம். முந்தி பார்டர்களில் ஆடம்பரமில்லை. கழுத்திலும் சன்னச் சங்கிலி. மொத்தத்தில் எளிமைக்கு பொன்விழா கொண்டாடுகிற தோற்றம்.

''நீங்களே இங்க வருவீங்கன்னு நான் எதிர்பார்க்கல. என்னம்மா விஷயம், எதாவது அவசரமா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. அரவிந்தன் என்ன சொன்னான்னு தெரிஞ்சுக்கத்தான் வந்தேன்.''

''நீங்க சொன்ன மாதிரியேதான் போய்க்கிட்டிருக்கேன். இரண்டொரு நாள்ள அவர் உங்க வீட்டுக்கு வரலாம்.''

''கட்டாயம் வந்து பார்ப்பானா?''

''வருவார்மா! இந்த அசைன்மென்டை எடுத்துக்கிட்டு இருக்கற அரவிந்தன் வைஃப் ரஞ்சனி தடாலடி பெண் மணி. கங்கை இமயத்துல உற்பத்தி ஆகற மாதிரி ஆசை அவங்ககிட்ட உற்பத்தி ஆகுதோனு நினைக்க வைக்கற கேரக்டர். கட்டாயமா வழிக்கு கொண்டு வந்துருவாங்க''

''இந்தச் சிக்கலால என் அக்கா வீட்டைவிட்டு போயிட்டாங்களாமே?'' – சாவித்ரியம்மாள் கேட்டது சாமி நாதனுக்கு அதிர்ச்சிதான்.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' – கேட் டான்.

''என்ன கேள்வி இது. என் கவனமெல்லாம் இப்ப அக்கா குடும்பம் மேலதானே இருக்கு. அவங்க நல்லதுக்குத்தானே கஷ்டப்படறேன்.''

''உங்களை என்னால புரிஞ்சுக்கவே முடியல. எந்த சக்களத்தியும் இப்படி நடந்து நான் பார்த்ததில்ல.''

''என் பேச்ச விடுங்க. அவங்க எங்கேனு தெரியுமா?''

''ரஞ்சனிக்கே தெரியல. எனக்கு எப்படி தெரியும்மா?''

''அப்ப, நான் தப்பு பண்ணிட்டேன்னு நினைக்கறேன்.''

''நீங்க தப்பு பண்ணிட்டீங்களா?''

''ஆமா சாமிநாதன். பிரிஞ்சிருந்த குடும்பத்தை உங்க மூலமா சேர்க்க விரும்பினேன். அவர்கூட சம்மதிக்கலை.''

சாவித்திரி ஒரு அதிர்வை அங்கு பரவவிட்டாள். சாமிநாதனும் ஊசி குத்தியது போல நிமிர்ந்தான்.

''என்னம்மா சொல்றீங்க? சார் சம்மதிக்கலையா?''

''ஆமா. அவர் அவங்க பேர்ல கோபமாத்தான் இருக்கார். பசங்க மேலயும் பாசமெல்லாம் இல்லை. நான் தான் தொணப்பி அப்படி உங்ககிட்ட பேசவச்சேன்.''

''என்னம்மா இப்படி குண்டத் தூக்கி போட்றீங்க. ஏன் இப்படி எல்லாம் பண்றீங்க?''

சாமிநாதன் பதறத் தொடங்கினான்.

''காரணமாத்தான் சாமிநாதன். அவர் இப்ப படம் எடுக்கப் பாறார். பிரமாண்ட படமாம். ஓடினாத்தான் ஆச்சு. இல்லேன்னா சொத்தெல்லாம் போயி, நானும் அவரும் என் பசங்களும் நடுத்தெருவுல நிக்க வேண்டி வரலாம். சொத்துபத்தோட இருக்கும்போதே பாதியை அவரோட முதல் குடும்பத்துக்கு செய்துடவிரும்பறேன். எனக்காக தன் வாழ்க்கையையே விட்டுக் கொடுத்துட்டு ஒதுங்கின அக்காவுக்கு இதுகூட செய்யலேன்னா எப்படி சாமிநாதன்?'' – சாவித்திரியின் கேள்வி சாமிநாதனை சவட்டியது.

சின்ன வீடு என்றால் எல்லாமே சின்னதாகத்தான் இருக்க வேண்டும் என்று யார் சொன்னது? அங்கே பொன்னான மனசும் உண்டு என்கிற மாதிரி சாவித்திரி பேசியதில் சாமிநாதனுக்குள் ஏகப்பட்ட திக்குமுக்காடல்.

''சரி, இப்ப என்ன பண்ணச் சொல்றீங்க?''

''அக்கா இருக்கற இடம் தெரியணும். போய் அவங்க கால்ல விழறேன். திரும்ப வீட்டுக்கு வரச் சொல்றேன். கொஞ்ச நாளாவது சேர்ந்து இருக்கட்டுமே..?''

– சாவித்திரியம்மாள் இதற்குமேல் ஒரு உயரம் போக முடியாது என்கிற மாதிரி போனாள். சாமிநாதனும், ''தெரிஞ்சா முதல்ல உங்களுக்கு சொல்றேன்'' என்றான்.

''தெரிஞ்சா இல்லை... தெரியணும். என்ன செலவு ஆனாலும் பாதகமில்லை..''

– ஹேண்ட் பேகில் கை விட்டு செக்புக் எடுத்தாள். சாமிநாதன் ஆடிப்போனான்!

**ஆ**சிரமம் முழுக்க சளபுள சளபுள என்று ஒரே பேச்சு. ஒரு கோடீஸ்வரி இங்கே இருக்கிறாள் என்று இரண்டு சஃபாரி சூட்காரர்கள் வந்து தேடிவிட்டு போனதுதான்.

''கோடிக்கணக்குல பணம் இருக்கும்போது யாராவது இங்க வந்து சேருவாங்களா ஓய்... நீங்களே சொல்லுங்க...''

''பணமா பெருசு. நிம்மதிதான் சாமி. நான் கூட லட்ச லட்சமா சம்பாதிச்சேன். என் பையன் மருமக பேச்ச கேட்டு எல்லாத்தையும் அழிச்சு, தானும் அழிஞ்சு போகலையா?''

''அதுசரி... அந்தப் பொண்ணுக்கு என்ன வயசாம்?''

''முப்பதாம். இங்க ஆரம்பமே நாப்பதுதானே?''

''அப்ப இங்க இல்லைன்னு ஆகிப்போச்சு?''

''என்னய்யா கேள்வி? எங்க வேணா இருந்துடலாம். ஆனா, இது அண்ணாவோட ஆஸ்ரமம். இங்க ஒருத்தர் ஏமாத்திட்டு இருந்துட முடியுமா?''

– பேச்சு பலவாக இருக்க, ஆசிரமத்தின் நாற்பதாம் எண் அறையில் ஒரு இளம்பெண், தன் கறுத்ததலை முடிக்கு நரைச் சாயம் பூசிக்கொண்டிருந்தாள்.



மிக எச்சரிக்கையாக அந்த ஆஸ்ரமத்தின் அறைக் கதவைத் தாழிட்டுக்கொண்டு யாரும் பார்த்துவிடாதபடி அவள் செய்து கொண்டிருக்கும் செயல் ஒரு புதிராகவே இருந்தது.

ஊதா நிறத்தில் விதம்விதமாக பூப்பூத்திருந்த காட்டன் நைட்டி அணிந்திருந்தாள். நரைபோட்டு முடித்த நிலையில் சிறிய கண்ணாடி முன்னால் ஒருமுறைக்கு பல முறை பார்த்துக் கொண்டவள் நரை சற்று கூடிவிட்டதாக நினைத்தாலோ என்னவோ ஒரு ஈரத்துவாலையால் நரைகூடிப்போன கேசப்பகுதியை அதக்கிச் சரிசெய்துகொண்டாள்.

சில மத்திய ரக குடும்பத்துப் பெண்களுக்கு நாற்பது நாற்பத்தைந்து வயதில் காதோரமாக உள்ள முடிகளில் ஒன்றிரண்டும், இடது கண்ணுக்கு மேல் ஒன்றிரண்டும் என்று நான்கைந்து முடிகள் மட்டுமே பேசி வைத்துக் கொண்டதுபோல நரைக்கும். அதை வெடுக்வெடுக் என்று பிடுங்கிப் போட்டுவிட்டு அந்த இடம் வெறுமையாகிவிட்டதே என்று கவலையோடு பார்ப்பார்கள். அப்படி ஒரு பார்வையை நரைக்காக மட்டுமே பார்த்துக் கொண்டாள்.

பிறகு நைட்டியை முழங்கால்வரை தூக்கியபோது கணுக்காலுக்குமேல் ஆடுசதையில் ஒரு நான்கங்குல நீளத்துக்கு சூட்டுக்காயம்! கருநீலத்தில் பாதி ஆறியும், மீதி ஆறாமலும் களிம்புப் பூச்சுக்கு நடுவே படு விகாரமாய் தெரிந்தது. யார் பார்த்தாலும் புருவத்தில் வளைசல் விழுந்து, நெற்றியில் மடிப்பு விழுந்தே தீரும்.

அதில் அத்தனை குரூரம்.

சற்று கெந்தி நடந்த அந்த பெண் அந்த அறையின் ஷெல்ஃபில் செருகப்பட்ட நிலையில் ஒரு அரக்குநிற லெதர் பெட்டியைத் திறந்தாள். அதில் ஆயின்மென்ட் ட்யூப் ஒன்று முக்காலே மூணு வீசம் பிதுக்கப்பட்டு கிடந்தது. பிதுக்கியபோது டூத்பேஸ்ட் பிரஷ்மேல் பரவுகிற மாதிரி, அவள் ஆள்காட்டி விரலின் சக்கர ரேகைகளை ஆயின்மென்ட் மறைத்தது.

சுணங்கிய முகத்தோடு காலைத்தூக்கி அருகில் உள்ள கட்டிலின் பாய்மேல் வைத்துக்கொண்டு, அந்தப் புண்ணின்மேல் தடவிமுடித்தாள்.

இதற்குள் கதவு தட்டப்படும் சத்தம். அவளையும் அவசரம் தொற்றிக்கொண்டது.

வேகமானாள். நரைச்சாயம் குழைத்த ஒரு பிளாஸ்டிக் டப்பி மூடியையும் அதைத் தொட்டுப் பயன்படுத்திய பழைய டூத்பிரஷ்ஷையும் வேகவேகமாக அந்த அறையின் லாஃப்ட்டில் மறைத்து வைத்தவள், சுவரில் ஒரு தினசரி காலண்டரோடு சேர்ந்து தொங்கும் சிலுவை சங்கிலி ஒன்றை எடுத்து வேகவேகமாக அணிந்து கொண்டாள்.

பின் சற்றே கெந்தி நடந்து சென்று கதவையும் திறந்தாள். மறுபுறத்தில் ஆஸ்ரமத்தின் சார்ஜென்ட் என்றும், அட்டெண்டர் என்றும், எப்பொழுது பார் எங்கு பார் தலையை நீட்டி எட்டிப் பார்த்துக் கொண்டேயிருப்பதால் கொக்கு என்றும் பலமாதிரி அழைக்கப்படும் வையாபுரி நின்றுகொண்டிருந்தான். முகத்தில் கசங்கலோடு...

''என்ன அமலா கதவைத் திறக்க இவ்வளவு நேரமாக்கும்? பிரேயர் ஆரம்பமாகப் போகுது...'' என்றான்.

''இதோ வந்துட்றேன்...'' – மிக மெலிசான நடுக்கம் பரவிய பெருமூச் சோடு அவள்.

☆☆☆

பிரேயர் ஹாலில் எல்லோரும் வந்து அமர்ந்தபடி இருந்தார்கள். கழியை ஊன்றிக்கொண்டு நிதானமாக நடந்துவரும் அருணாசலம் தாத்தா, ரவிக்கை தெரியாதபடி ஸ்வெட்டர் அணிந்திருக்கும் ரகுமாயிப் பாட்டி, கோலிசோடாவின் அடிபாகத்தை உடைத்து கண்ணாடியாக அணிந்திருக்கிறாளோ என்று நினைக்க வைக்கும் தேவகியம்மாள், இரண்டு காலும் சூம்பிப்போன நிலையில் கையையே காலாக்கிக் கொண்டு ஒரு சிலந்திப் பூச்சி தரையில் பரவி வருகிற மாதிரி தவழ்ந்து வரும் வெங்கடகிரி, என்று ஆஸ்ரம உறுப்பினர்களின் வருகையால் பிரேயர் ஹாலும் மொத்தமாக நிரம்பியது.

ஹால் சுவரில் ஒரு இடத்தில் ஓம் என்றும் பிரணவ மந்திரம் பெரிதாக வரையப்பட்டு மாட்டப்பட்டிருந்தது. அதற்கு இடது, வலது பக்கங்களில் அந்த பிரேயர் ஹாலை கட்டித்தந்த வள்ளல் உலகநாதன் செட்டியாரின் படமும் அவரது மனைவி வள்ளியம்மை படமும் மாட்டப்பட்டிருந்தது.

பிரணவ மந்திரப்படத்தின் முன்னால் ஒரு அடி தள்ளி செம்புப் பூண் போட்ட ஒரு மரப்பலகை. அந்தப் பலகை மேல் அந்த ஆஸ்ரமவாசிகளின் அன்புக்குரிய அப்பாவான அனந்தாச்சாரி கதர்வேட்டி, ஜிப்பா தரித்திருந்த நிலையில் வந்து அமர்ந்தார். சற்றுத்தள்ளி ஆசிரம செயலாளர்களான ஸ்ரீனிவாசன், ராகவன் மற்றும் கொக்கு வையாபுரியும் வந்து நின்றுகொண்டுவிட அப்பா பேச ஆரம்பித்தார்.

மிருதுவாய் பஞ்சுப்போல் ஒரு குரல்!

‘‘எல்லோருக்கும் நமஸ்காரம்! இன்னிக்கு தை வெள்ளிக் கிழமை. அம்பாளுக்கு ரொம்ப உகந்த ஒரு விசேஷமான நாள். ஆகையால் நம்ம பிரார்த்தனையில லலிதா சஹஸ்ர நாமத்தை சேர்த்துக்கலாம்னு பார்க்கறேன். த்யானஸ்லோகம் சொன்னாபோதும். இது இந்துக்களுக்கு... அதே சமயம் இன்னிக்கு கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும்கூட உகந்த நாள்.

இந்த நல்ல நாளை நம்ம ஆஸ்ரமத்துல இருக்கிற எல்லாரும் மதமாச்சரியம் இல்லாம கொண்டாடணும். நாட்களை நாம கொண்டாடினா, நம்மை அது கொண்டாடும்னு சொல்வா. இங்க கண்ணுக்குத் தெரிஞ்சு அறுபது, எழுபது பேர் இருக்கேள். கண்ணுக்குத் தெரியாத நிலையில ஆயிரக்கணக்கான தேவர்களும் தேவதைகளும் கூட இங்க இருக்கா...’’

– அப்பா பேசிக்கொண்டே போகும்போது இடையில் தான் நுழைய முடிந்தது மீனாட்சியால். புடவை முந்தியால் கைகளைத் துடைத்துக்கொண்டு அவள் தாமதமாக வந்ததை அப்பாவும் கவனிக்கத் தவறவில்லை. அவளை கூட்டத்தோடு சேர்ந்து அமரும்படி சைகை காட்டினார். ஸ்ரீனிவாசன், ராகவனையும்கூட போய் அமரச் சொல்லி விட்டு கூட்டத்தைப் பார்த்தார். மீனாட்சி, அமலா என்கிற அந்த நரைப்பெண் அருகில் போய் உட்கார்ந்திருந்தாள்.

பிரார்த்தனையும் ஆரம்பமாயிற்று.

முதலில் ஓம்காரம்!

எல்லோரும் ஒருமித்துக் குரல் கொடுத்தார்கள்.

அற்புதமாய் இருந்தது அதன் கிளர்ச்சி.

ஒரு நிமிடத்துக்குபிறகு கூட்டத்தில் இருந்து எழுந்து சென்ற ஒரு பெண் திட்டமிட்டது போல லலிதா சஹஸ்ர நாமத்தை ஆரம்பித்தாள்.

‘‘ஸிந்தூராருண விக்ரஹாம்... த்ரி நயனாம்

மாணிக்ய மௌளிஸ்புரத் தாரா நாயக ஸேவிதாம்...’’

அந்தப் பெண் வரிவரியாய்ச் சொல்ல கூட்டம் எதிரொலித்தது. கை கூப்பியிருந்த அமலாவும் ஸ்பஷ்டமாய் திரும்பிச் சொன்னாள். மீனாட்சி அதை ஆச்சரியத்துடன் கவனித்தாள். ஒரு இடத்தில் சொல்லி வந்த பெண்மணியின் உச்சரிப்பில் பிழை. ஆனால் அமலா அதை மிகச்சரியாக சொன்னாள். மீனாட்சிக்கு வெகு ஆச்சரியமாகிவிட்டது. நடுநடுவே மடக்கியதால் பகுதியை அசைத்து அசைத்து அந்த சூட்டுக்காயத்தின் பொருட்டு வலிவேதனையையும் அந்தப் பெண் தன் முகத்தில் பரவவிட்டாள்.

ஸ்லோகம் முடிந்தது. அதன்பின் ஒரு நற்செய்தி வாசிக்கப்பட்டது.

‘‘இந்த உலகில் எதுவும் காரணம் இல்லாமல் நடப்பதில்லை. நமக்கும் நம்மைச் சுற்றியும் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பின்னாலும் ஒரு சரியான காரணம் ஒளிந்திருக்கிறது. அதை சந்தோஷமாகவும் துக்கமாகவும் சாதாரணமாகவும் எடுத்துக் கொள்வதெல் லாம் நமது மனம்தான். இந்த மனது எத்தனை தெளிவாக, திடமாக இருக்கிறதோ, அதற்கேற்ப அந்த காரணத்தை உணரும். மனதை கட்டுப்படுத்தும் அறிவு உணர்ச்சிகளோடும்

கட்டுப்பாடற்ற உடல் உணர்ச்சி களோடும் சேர்த்தே இறைவன் நம்மைப் படைத்திருக்கிறான். இந்த இரண்டிலிருந்தும் விலக்கி அதை ஏகாந்தத் திலும் நம் பிடியிலும் வைத்துக்கொள்ள நம்மால் முடியும். இதற்கு உடம்பு என்றால் என்ன, மனது என்றால் என்ன என்பது நமக்கு தெரியவேண்டும். அது தெரிந்துவிட்டால் நாம் துன்பத்தைக் கண்டு அஞ்ச மாட்டோம். இன்பத்திலும் மயங்கிக் கிடக்கமாட்டோம். நாளை உடம்பு என்றால் என்ன என்று பார்ப்போம்...''

– செய்தி முடிந்தது. அப்பாவும் எழுந்துகொண்டார்.

''இனிமே நீங்க எல்லாரும் காலை ஆகாரம் எடுத்துக்கப் போகலாம். இந்த சந்தர்ப்பத்துல ஒரு சின்ன விஷயம் சொல்ல ஆசைப்படறேன்...'' – அப்பா கூட்டத்தைப் பார்த்தார். கூட்டத்திடமும் கூர்ந்த ஒரு கவனிப்பு.

''நம்ம ஆஸ்ரமத்துல இருக்கறவாள்ள சிலர் நிறைய ஊர் அரட்டை அடிக்கறா. கொக்கு, காக்கான்னு சிலருக்கு புனைபெயர்லாம் வெச்சு கூப்ட்டுக்கறா. இது ரொம்ப தப்பு. பொழுதுபோகாதப்ப தியானம் பண்ண லாம். இல்லேன்னா புத்தகம் வாசிக்கலாம். லைப்ரரில எல்லாவித புத்தகங்களும் இருக்கு. பைபிள், குர்–ஆன் லாம்கூட வாங்கி வெச்சிருக்கேன். அதை எல்லாமும் வாசிக்கலாம். இதை விட்டுட்டு அரட்டை அடிக்கறது தப்பு. அரட்டை அர்த்தபூர்வமா இருந்தா, அது கலந்துரையாடலாயிடும். அனர்த்தமா இருந்தாத்தான் அதை வெட்டி அரட்டைன்னு சொல்வோம். அர்த்தத்தோட கலந்துரையாடுங்கோ. யாரைப் பத்தியும் புரளி பேசாதீங்கோ... அது தப்பு மட்டுமல்ல, பாவமும்கூட...''

– பேசிவிட்டு அப்பா போய்விட்டார். எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அமலாவுக்கும் சற்று சுருக்கென்றிருந்தது. முகத்தில் அது தெரிந்தது.

சாப்பிட அமர்ந்தபோது மீனாட்சிதான் எல்லோருக்கும் இலை போட்டாள். அமலா வுக்கும் போட்டபோது அவள் உட்கார சிரமப்படுவதும், அந்த சிரமத்தின் இடையில் சன்னமாக 'மீனாக்ஷி' என்று முனங்குவதும் காதில் விழுந் தது.

ஆச்சரியமாகிப் போனது. 'ஒரு கிறித்தவப் பெண் ஸ்பஷ்டமாய் ஸ்லோகம் சொல்கிறாள். அவள் அந்தராத்மா ஜீசஸ் என்று அழைக்காமல் மீனாக்ஷி என்கிறது. வலியிலும் துடிக்கிறாள்' கேள்விகளோடு வெண்பொங்கலைப் பரிமாறி விட்டு தாண்டிப் போனாள். தூர நின்றபடி அமலா சாப்பிடுவதையே கவனிக்க ஆரம்பித்தாள்.

★★★

**ஆ**ஸ்ரமத்தின் அலுவலக அறையில் அப்பாவை ஒரு மிடுக்கான மனிதரும் இன்னும் சிலரும் சந்திக்க வந்திருந்தனர். ஸ்ரீனிவாசன் அப்பாவிடம் அந்த மிடுக்கான மனிதரை அறிமுகப் படுத்தி வைத்தார்:

''அப்பா இவர் பிரபல சினிமா டைரக்டர் பூர்ண சந்தர். கேள்விப்பட்டிருப்பேள். பத்மஸ்ரீ விருது வாங்கினவர். தன் படங்களுக்கு நிறைய விருதுகளும் வாங்கியிருக்கார்.''

''தெரியும் சீனு.. இவரோட பரத ராஜ்யத்தை நான் மூணுதடவை பார்த்துருக்கேனே..!''

''ரொம்ப சந்தோஷம்... என் படத்தை பலரும் பல தடவை பார்த்ததா சொன்னப்போ வராத ஒரு சந்தோஷம் இப்ப நீங்க சொல்லும்போது எனக்கு ஏற்படறது.''

‘‘மீடியாவை சரியா புரிஞ்சுண்டு அதை சரியா கையாள்ற சிலர்ல நீங்களும் ஒருத்தர். அந்த காலத்துல வாசன் அவ்வையார் எடுத்தார். அப்புறம் தில்லானா மோகனாம்பாள்னு எனக்குப் பிடிச்ச படங்கள் சொற்பம்தான். சொல்லுங்கோ என்ன விஷயம்?’’

‘‘இப்ப நான் ஒரு டீ.வி. சீரியல் பண்ணலாம்னு இருக்கேன்... என் சீரியல்ல அநாதை ஆஸ்ரமம் ஒண்ணும் கதைப்படி வருது. என் கதையோட ஹீரோயின் அந்த ஆஸ்ரமத்துலதான் இருக்கா. சொந்த பந்தமெல்லாம் இருந்தும் தனக்கு யாரும் இல்லேங்கற ஒரு நினைப்புல அவ ஆஸ்ரமத்துல இருக்கா..’’

‘‘திருட்டுத்தனமாவா?’’

‘‘அப்படித்தான் வெச்சுக்குங்களேன். வாழ்க்கைல அவளுக்கு அவ்வளவு வெறுப்பு..’’

‘‘திருட்டுத்தனமாங்கறது ரொம்ப தப்பாச்சே மிஸ்டர் பூர்ணசந்தர்.’’

‘‘கதை அப்படி... அப்புறமா அவ எப்படி ஆஸ்ரமத்துக்கு வெளில வந்து சொந்தபந்தங்கள் நடுவுல எழுந்து நிக்கறாங்கறதுதான் கதைப்போக்கு...’’

‘‘அப்போ அதுக்காக இந்த ஆஸ்ரமத்துலையே ஷூட் பண்ணிக்கறேன்னு சொல்லவரேளா?’’

‘‘எக்ஸாக்ட்லி... செட்போட்டு எடுக்கறதவிட இப்படி நேச்சுரலா இருக்கற இடத்துக்கே வந்து ஷூட் பண்ணா ஒரு ரியாலிடி இருக்கும்னு பாக்கறேன். இதுககாக நீங்கள் எவ்வளவு பணம் கேட்டாலும் தரத்தயாரா இருக்கோம்.’’

‘‘பணத்த விடுங்கோ... அந்த பெருமாள் கிருபையில போதிய அளவுக்கு டொனேஷன் எங்களுக்கு வந்துண்டு இருக்கு. நாங்களும் இதை ஒரு புனிதமான இடமாத்தான் காப்பாத்திண்டு வரோம். உங்க ஷூட்டிங்கால அதுக்கு களங்கம் வந்துடுமோன்னுதான் பயப்படறேன்’’

‘‘நிச்சயமா வராது. என் யூனிட் ரொம்ப டிசிப்ளினான யூனிட். சிகரெட் பிடிக்கறவன்கூட யூனிட்டை விட்டு வெளியே போய்தான் தம் அடிச்சிட்டு வருவான். உங்களுக்கு ஆஸ்ரமம் கோயில் மாதிரின்னா, எனக்கு என் யூனிட் கோயில் மாதிரி...’’

‘‘ரொம்ப சந்தோஷம்... உங்க கதைல எங்க ஆஸ்ரம வாசிகளும் நடிப்பாளா?‘‘

‘‘பயன்படுத்திக்கறதுல தப்பில்லேன்னு நினைக்கறேன்..’’

‘‘நல்லவிதமா காட்டணும். அவங்க அநாதரவா பரிதவிச்சுண்டு இருக்கற மாதிரி காட்டக்கூடாது. இங்க அவங்க நிம்மதியா இருக்காங்க. யாரோட பரிதாபமும் இப்ப அவங்களுக்கு தேவை இல்லை’’

‘‘நல்லது... வெளிய உள்ள கூட்டுக்குடும்பங்கள்ல வாழறவங்களைவிட, சொந்தபந்தங்களோட இருக்கற வங்களவிட இங்க இருக்கறவங்க ரொம்ப சந்தோஷமா அர்த்தபூர்வமா இருக்கற மாதிரியே காட்டிடுறேன்...’’

‘‘பேச்சு மாறக்கூடாது..’’

''சினிமாக்காரங்கன்னாலே இப்படி ஒரு சந்தேகம் எல்லாருக்கும் வந்துடுது. மிஸ்டர் அனந்தாச்சாரி உண்மையில இந்த உலகத்துலயே இந்த இண்டஸ்ட்ரி மாதிரி ஒரு ஹார்டு ஒர்க் பண்ற இண்டஸ்ட்ரி இருக்க முடியாது. மனுஷங்களை சந்தோஷப்படுத்திப் பாக்கணும்னு கட்டாயமாவும் விடாப்பிடியாவும் நினைக்கற ஒரே இண்டஸ்ட்ரி சினிமா இண்டஸ்ட்ரி தான். இவ்வளவு கஷ்டப்படுற எங்களுக்கு வெற்றிதான் எப்பவும் கேள்விக்குறியாவே இருக்கு...''

''ஒவ்வொருத்தர்கிட்டயும் நல்ல எண்ணம். ஒவ்வொருத்தர்கிட்டயும் ஈடுபாடு, ஒவ்வொருத்தர் கிட்டயும் நம்பிக்கைன்னு இந்த அம்சங்கள் கூடுதல் குறைச்சல் இல்லாம எங்க இருந்தாலும் அங்க வெற்றி உறுதி மிஸ்டர் பூர்ணசந்தர்...''

''பிரமாதமா சொன்னீங்க... லௌகீகத்துக்கு நான் வரேன். ஒரு நாள் ஷூட்டிங்குக்கு நான் எவ்வளவு தரணும்?''

''வேண்டாம்... பிஸினஸ் பேசவேண்டாம். ஒரு கட்டிடம் கட்டிக் கொடுங்கோ. மருந்து மாத்திரை வாங்கித்தாங்கோ. இங்க ஒருத்தர்க்கு பைபாஸ் சர்ஜரி பண்ணவேண்டியிருக்கு. அவருக்காக கேர் எடுத்துக்குங்கோ... இப்படி எது செஞ்சாலும் சரி...''

அனந்தாச்சாரி கைகளைக்கூப்பிக் கொண்டு சொன்ன போது பூர்ணசந்தருக்கு உடம்பெல்லாம் சிலிர்த்துவிட் டது.

''அதுசரி... எப்போ ஷூட்டிங்?''

''தேதி இன்னும் முடிவு பண்ணலை. உங்க சம்மதத்துக்கு பிறகு முடிவு பண்ணலாம்னு இருக்கேன்...''

''ரொம்ப சந்தோஷம்... நீங்க எப்ப வேணா வாங்கோ. முன்னாடியே சொல்லிடுங்கோ...''

''நிச்சயமா... உங்களை சந்திச்சதுல எனக்கு ரொம்ப சந்தோஷம். அந்த பைபாஸ் பேஷண்டை நீங்க இப்பவே உங்களுக்கு உசிதமான ஆஸ்பத்திரியில சேர்த்துடலாம். பில்லை எனக்கு அனுப்பிடுங்க. நான் பாத்துக்கறேன்...''

''ரொம்ப நன்றி மிஸ்டர் பூர்ணசந்தர்...''

''நன்றி!''

பூர்ணசந்தர் கூப்பிய கைகளுடன் அப்படியே வெளியே வந்தார். ஸ்ரீனிவாசன் அவரை ஆஸ்ரமத்தை சுட்டிக் காட்ட அழைத்துச் செல்ல ஆரம்பித்தார். ஒவ்வொரு இடமாகப் போய்விட்டு சமையல் கட்டுக்கு வந்தபோது அவருக்குப் பிரமிப்பாக இருந்தது.

எங்கும் துளி கரி இல்லை – கசடு இல்லை!

பக்தவத்சலம்கூட பளிச்சென்று வேட்டி, துண்டு, நெற்றியில் கோபி சந்தனம் என்று எதிரில் வந்து நின்றார்.

''ஓ... எவ்வளவு நீட்டா இருக்கு இந்த இடம்?''

''எல்லாத்துக்கும் இங்க இருக்கற என் சிஸ்டர்தான் காரணம்...''

பத்தவச்சலம் பணிவாகப் பதில் சொன்னார்.

''யார் அவங்க?''

''இருங்கோ கூப்பிட்றேன்... மீனாட்சி... மீனாட்சி...'' – அவர் அழைப்புக்கு பதிலாக மீனாட்சியும் ஒரு மிளகாய் வற்றல் முறத்தோடு எதிரில் வந்து நின்றாள்.

அவளைப் பார்த்த நொடி டைரக்டர் பூர்ணசந்தர் முகத்தில் சொல்ல முடியாத அளவு அதிர்ச்சி.

''அம்மா நீங்களா?'' என்றார் விகசிப்போடு.

மீனாட்சியிடம் பதில் இல்லை. மவுனமாக அவரை வெறித்தாள்.

''இவங்கள உங்களுக்குத் தெரியுமா?'' – ஸ்ரீனிவாசன் கேட்டார். அந்த நொடிப் பொழுதில் மீனாட்சியின் முக பாவங்கள் பூர்ணசந்தரிடம் 'தயவுசெய்து என்னைக் காட்டிக்காதீங்கோ..' என்பதுபோல் பார்த்து முடித்து விட்டிருந்தது.

மனிதர்களின் உணர்வுகளை இயக்கியே பழக்கப்பட்ட அந்த மனிதரும் ஷணத்தில் சமாளித்தார்.

''ஓ... தெரியுமே... ஆனா, எங்க பாத்தேன்னுதான் ஞாபகம் இல்லை...''

''ஒரு நாள் உங்க வீட்டு நவராத்திரி கொலுவுக்கு வந்திருந்தேன்...'' – மீனாட்சியும் அழகாக அந்த பள்ளம் விழுந்த இடத்தை நிரப்பினாள்.

அவரும் பார்த்துக்கொண்டே அங்கிருந்து மெல்ல நகர ஆரம்பித்தார்!

**அ**ந்த மதுபாட்டில் முழுவதும் காலியாகிவிட்டிருந் தது. அடுத்த பாட்டிலைத் தேடத் தொடங்கிவிட்டார் புரொட்யூஸர் ரங்கராஜன் என்கிற அந்த மனிதர். கைலி, ஜிப்பாவில் தடுமாறிக் கொண்டு பார்ஷெல்ஃப் நோக்கி அவர் நடந்தபோது எதிரில் வெறித்தபடி ஒரு பெண்மணி. நிமிர்ந்தவர் கூர்ந்து பார்த்தபோதுதான் தெரிந்தது அது அவர் மனைவி சாவித்ரி என்பது.

''போதும் குடிச்சது. இதுக்கு மேல குடிச்சா நீங்க விழுந்துடுவீங்க...'' என்றாள் சற்று இறுக்கமான குரலில்.

''நான் எப்பவும் விழமாட்டேண்டி. ஆனா, நான் விழணும்னுதான் ரொம்பப் பேர் ஆசைப்படறாங்க...'' என்றபடியே அவளை விலக்கித் தள்ளிவிட்டு பார் ஷெல்ஃப்பின் கதவைத் தொட்டவர், அப்படியே சரிந்து மயங்கிக் கீழே விழுந்தார்.

தலையிலடித்துக் கொண்ட சாவித்ரி, அவரைத் தொட்டுத் தூக்கி படுக்கையில் கிடத்த முனைந்தபோது காலிங் பெல் சத்தம்.

அவசர அவசரமாய் அவரை அந்த அறையின் படுக்கையில் இழுத்துக் கிடத்திவிட்டு, வாசல்புறம் சென்று கதவைத் திறந்தாள்.

எதிரில் ரங்கராஜனின் அத்யந்த நண்பனும் புரொடக்ஷன் மேனேஜருமான மூர்த்தி.

வாயில் சிகரெட்டுடன் ஒரு தினுசாகப் பார்த்தவன் சாவித்ரியின் நெஞ்சையடைத்தான்!



மூர்த்தியை பார்த்த சாவித்ரிக்கு நெஞ்சை அடைத்தது. அதன் எதிரொலி முகத்தில் தெரிந்தது. மூர்த்தியோ ''ராஜு என்ன பண்ணிகிட்டி ருக்கான்..?'' என்ற கேள்வியோடு நுழைந்தான்.

சாவித்ரியிடம் பதிலில்லை. வெறித்தாள். அதில் பத்து பக்க வசனம் பேசி கேள்விகளை அமுக்கியதுபோல ஒரு பொருளடக்கம்.

''என்னம்மா... என்ன கண்டாலே பிடிக்கல இல்ல? நான்தான் உன் புருஷனை குடிக்க வச்சு குட்டிச்சுவர் ஆக்கிட்டதா நீ புலம்பினதை அசிஸ்டென்ட்டுங்கள்லாம் வந்து சொன்னாங்க. என் ராஜுவுக்காக அதையெல்லாம் கேட்டுகிட் டேன். உனக்குதான் அடிக்கடி பழசெல்லாம் மறந்துடுது. ஆசை நாயகி சாவித்ரி, ராஜு வோட பொண்டாட்டி ஆக நான்தான் காரணம் அப்படீங்கறது ஞாபகம் இருக்கட்டும்.''

– மூர்த்தி சிகரட் புகையும் பேச்சுமாய் உரிமையோடு வீட்டினுள் பழகியவன் போல உள்ளே சென்றான்.

சாவித்ரியால் தடுத்து நிறுத்த முடியவில்லை. என்ன பேசினாலும் அவன் எதையும் லட்சியம் செய்யப் போவதில்லை என்று தெரியும். ஹாலில் கிடந்த சோபாவில் போய் அமர்ந்தாள். கண்களில் கண்ணீர் ஊற்று நிலத்தில் தளதளக்கிற மாதிரி தளதளக்கத் தொடங்கிவிட்டது.

சில நொடிகளில் மூர்த்தியும் திரும்பி வந்தான். அவள் எதிரிலேயே அமர்ந்து இன்னொரு சிகரட் தீ மூட்டி புகையோடு ஆரம்பித்தான்.

''என்னென்னவோ கேள்விப்படறேன்... ராஜு தன் முதல் தாரத்துப் பசங்களுக்கு வீடு வாங்கி கொடுக்கப் போறானாமே?''

‘‘...........’’

‘‘தப்பா கேட்டுட்டேன்னு நினைக்கறேன். வீடு வாங்கியே கொடுத் துட்டான். அதுதான் சரி. எனக்கு எதுவும் தெரியாதுன்னு நினைக்காதே. மகாபலிபுரம் ரோட்ல உள்ள பங்களாவை விலை பேசினது புது படத்துக்காக... பழைய உறவுகளுக்கு உயிர் கொடுக்கறதுக்காக இல்ல! நீ கெட்டிக்காரி... எப்ப அவன்கிட்ட எப்படிப் பேசினா காரியம் சாதிச்சுக்க முடியும்னு தெரிஞ்சு ரூட் போட்டுக் கொடுக்கறே. ஆனா, நான் உன்னைவிட கெட்டிக்காரன். போகப் போக புரிஞ்சுக்குவ.’’ – பேசி முடித்தவன் எழுந்து நின்றான். வாசல் வரை சென்று மீண்டும் திரும்பினான். சினிமாவில் ஷாட் வைக்கும் போது பாத்திரங்கள் ஒரு இடத்தில் நின்று பேசமாட்டார்கள். அதிலேயே கிடக்கும் அவனும் கிட்டத்தட்ட அந்த பாத்திரங்கள் போல வே பேசினான்.

‘‘சாவித்ரி... பழசையெல்லாம் கொஞ்சம் நினைச்சுப்பார். உன் புருஷன் மாதிரிதான் நானும்... படத்துக்கு கதை வசனம் எல்லாம் தயார். ஹீரோவுக்கு அட்வான்ஸ் குடுத்தாச்சு. ஃபைனான்ஸ் கிடைக்கலேன்னா இப்ப நீ குடியிருக்கியே இந்த வீடு... இதைக்கூட அடமா னம் வைக்கவேண்டி வரும். அறுத்துட்டு போனவங்களுக்கு உதவி செய்து நீ தெருவுக்கு போயிடாதே... வரட்டா...’’

– மூர்த்தி போய்விட்டான். அவன் சொன்னது அவளுக்குள் தட்டாமலை சுற்ற ஆரம்பித்தது. கண்ணீரும் பீறிட்டு கன்னக் கதுப் பில் வழிந்தது. நெடுநேரம் அழுத வள் நிமிர்ந்து கடிகாரத்தை பார்த் தாள். மணி மதியம் மூன்று!

ஒரு முடிவுக்கு வந்த மாதிரி எழுந்தாள். பின் பக்கம் சென்றாள்.

பார்த்துப் பார்த்து வளர்த்த தோட்டத்தின் மரக்கூட்டம் கண் ணில் பட்டது. தோட்டத்தின் நடு வில் சிறிய ஷெட். ஷெட்டை ஒட்டி டயர், டியூப், உடைந்த பிரம்பு நாற் காலிகள் என்று கழிவுக் குவியல்.

ஷெட்டுக்குள் தூளி ஒன்று தொங்கிக் கொண்டிருக்க கீழே ஒரு பெண் வெறுந்தரையில் படுத்திருந் தாள். சாவித்ரி சென்று நிற்கவும் விசுக்கென்று எழுந்து அமர்ந்தாள்.

‘‘கண்மணி... கொஞ்சம் வெளிய போயிட்டு வரேன். முன்னால வந்து மெயின்கேட்டை பூட்டிகிட்டு வீட்டு லையே இரு’’ என்றாள் சாவித்ரி.

அவளும் குழந்தையை தூக்கத் தோடு அள்ளி தோளில் போட்டுக் கொண்டு பின்தொடர்ந்தாள்.

போர்ட்டிகோவில் நிற்கும் காரை கிளப்பிக் கொண்டு மெயின் கேட் அருகே வந்தபோது மீண்டும் சொன்னாள்.

‘‘அய்யா போதைல இருக்காரு... அந்தப் பக்கம் போயிடாதே. அவர் ரூமை நான் பூட்டி யிருக்கேன். நடுவுல எழுந்திருச்சு கதவை தட் டினா என் செல் நம்பருக்கு கூப்ட்டு சொல்லு. நான் வந்துடறேன். தப்பித் தவறிக்கூட திறந்து விட்டுடாதே. வெளிய போனாகூட பரவாயில் லை. இன்னொரு தடவை உன்கிட்ட அவர் தப்பா நடக்கக்கூடாது. அதனால சொல்றேன்.’’

– சாவித்ரி சொல்லவும், அந்த வேலைக் காரப் பெண் சேலையை சற்று விலக்கி இடுப்பை காட்டினாள். பளபளப்பான கத்தி! சாவித்ரியின் கண்ணில் ஒரு தீக்குச்சியை கொளுத்தி போட்டாற்போல ஒரு ஜ்வாலையை உருவாக்கியது.

சில விநாடிகள் கார் உறுமலுடன் தேங்கி நின்று அவள் மனதைப் போலவே பம்மியது. அதன்பின் புறப்பட்டுவிட்டது!

**அ**ரவிந்தன் ஆபீசில் வழக்கம்போல திமி லோகம். டீ டைம் என்பதால் சிலர் சீட்டில் மிக்சர் பொட்டலங்கள். சிலர் காராசேவை வாயினுள் வீசி நொறுக்கிக் கொண்டிருந்தனர்.

சந்திரசேகர் பிரீஃப்கேசோடு வந்து கொண்டி ருந்தான். மார்க்கெட்டிங் வேலை என்றாலே வெளியே அலையும் உத்யோகம். அதனால் சென்னை வெயில் இவர்களை மட்டும் பொன் னிறத்துக்கு வறுத்து கறுப்பை குழைத்துப் பூசி கண்ணாடி முன் நிற்கும் போதெல்லாம் 'நாச மாப்போன இந்த வேலையால நான் ஆப்ரிக் காக்காரன் மாதிரி ஆகிகிட்டிருக்கேன்..' என்று புலம்ப விடுவது வாடிக்கை.

சந்திரசேகரும் விதிவிலக்கில்லை. சீட்டில் பிரீஃப்கேஸை வைத்துவிட்டு பாத்ரூம் போய் முகம் கழுவி கண்ணாடி முன் நின்று கொண்டு உற்று உற்று பார்த்து பெருமூச்சும் விட்டான்.

சட்டை பாக்கெட்டில் ரோஸ்பவுடர் கொஞ்ச மும் விபூதியும் வைத்திருப்பான். எடுத்து பூசிக் கொண்டு கொஞ்சம் ஒப்பேற்றியும் கருவளை யம் 'என்னை உன்னால் ஒண்ணும் செய்ய முடியாதே' என்கிற மாதிரி பரவிக்கிடந்தது.

காதோரமாக ஒன்றிரண்டு நரையும் தெரிந்து வயதாகிறது என்றது. அதைப் பிடுங்க முனையும்போது பின்னால் ஒரு அசுரச் சிரிப்பு.

திரும்பினால் ஜிப்பை போட்டபடி அரவிந்தன்.

''என்னடா சிரிப்பு..?''

''சிரிக்காம..? அந்த வெள்ளைய புடுங்கிப் போட்டுட்டா நீ அழகாயிடுவியா?''

''தொழிலுக்காகத்தாண்டா புடுங்கிப் போடறேன். ஆமா, கலகலன் னு இருக்கியே... அம்மா எங்கன்னு தெரிஞ்சு போச்சா?''

– சந்திரசேகர் பளாரென்று ஆரம்பிக்கவும் பாலிதீன்தாள் குப்பை மேட்டில் புழுதிக்காற்றில் படபடக்கிற மாதிரி தடுமாற்றம் அரவிந்த னிடம்.

''என்னடா... என்ன ஆச்சு உங்கம்மா விஷயம்?''

''அம்மா சவுக்யமா இருக்காடா...''

''இருக்கற இடம் தெரிஞ்சு போச்சா..? வெரிகுட்! அப்புறம் என்ன பண்ணே?''

''மெள்ளப் பேசு. சீட்டுக்கு வா, சொல்றேன்.''

– இருவரும் நடந்தனர். ஏ.சி. குளிருக்குள் பக்கோடா மிக்சர்களின் எண்ணெய் வாசம். அரவிந்தனின் டேபிளிலும் பக்கோடா பொட்டலம்.

''எடுத்துக்கோடா...''

''பக்கோடா சாப்பிடவா கூப்ட்டே... அம்மா எங்கடா இருக்காங்க. முதல்ல சொல்லு.''

''சொல்றேன். அம்மாவே போன்ல பேசினா..''

''விவரமா சொல்லு..''

''அவ எங்க இருக்கான்னு தெரி யலை. பட் எங்கையோ ஒரு இடத் துல சந்தோஷமா இருக்காடா.''

''என்னடா சொல்றே?''

''ஆமாண்டா... அவளே போன் பண்ணி பேசி என்னைத் தேடாதீங்க. கூப்ட்டாலும் வர தயாரா இல்லைன் னு க்ளியர் கட்டா சொல்லிட்டா.''

''ஆச்சரியமா இருக்கே... அந்த அளவுக்கு உங்கம்மா பேசியிருக்காங் கன்னா உன் வைஃபுக்கும் அவங்க ளுக்கும் சகிச்சுக்க முடியாத அளவு சண்டை நடந்திருக்கணும்டா..''

''என்ன கண்றாவியோ... இவளைக் கேட்டா இவ என் மேல ஒரு தப்பும் இல்லைன்னு சாதிக்கறா. பைதபை இன்னொரு விஷயம்டா.''

''என்ன?''

''என்னன்னு தெரியலை... எங்கப்பா திடீர்னு எங்களை நோக்கி திரும்ப ஆரம்பிச்சிருக்கார். தாம்பரம்கிட்ட பத்து லட்ச ரூபாய்க்கு ஒரு வீடு. அதை என் பேர்ல ரிஜிஸ்தர் பண்ணி எடுத்துக்கோன்னு சொல்லி விட்டிருக்காரு!''

''என்னடா இது புதுக்கதை... காலேஜ் ஃபீஸ் கட்ட முடியாம நீ நின்னப்பல்லாம் திரும்பிப்பார்க்காதவர் இப்ப வீடு வாங்கித்தராறா?''

''ஒண்ணுமே புரியலைடா சந்துரு. என்னை சுத்தி என்னவெல் லாமோ நடந்துகிட்டிருக்கு. ரஞ்சனி என்னடான்னா அந்த வீட்டுக்கு குடிபோயிடுவோம்கறா. என் அக்கா மாலதி வேற வந்து அவகூட சேர்ந்துகிட்டு அவளுக்கு ஜால்ரா தட்ட ஆரம்பிச்சிருக்கா..!''

– சொல்லிக்கொண்டே பக்கோடாவில் இருந்த முந்திரிப் பருப்பு ஒன்றை தேடி எடுத்து வாயில் போட்டான். சந்திரசேகர் சிரித்தான்.

''எம் பொழப்பு சிரிப்பா இருக்குல்ல உனக்கு?''

''இல்ல... நிஜமா குழப்பத்துல இருக்கியா, இல்லை நடிக்கறியா?'' – சந்திரசேகர் வார்த்தையால் ஒரு குத்து விட்டான். அரவிந்தன் முந்தி ரியை வேகமாக விழுங்கி அதன் எதிரொலியை முகத்தில் காட்டினான்.

''என்னம்மா பாக்கறே... முந்திரி பருப்பைத் தேடி எடுத்து சாப்பிடற மூட்ல இருக்கேன்னா என்னடா அர்த்தம்?''

''இடியட்... தாடி வளர்த்து துக்கம் கொண்டாடச் சொல்றியா?''

''கத்தாதடா... ஆசை யாரை விட்டது? எனக்கு இப்ப எல்லாம் புரிஞ்சு போச்சு...''

''என்ன புரிஞ்சு போச்சு..?''

''என்ன நடந்திருக்குன்னு சொல்லட்டுமா?''

– அரவிந்தன் வெறிக்க சந்திரசேகர் விவரிக்கத் தொடங்கினான்.

''உன் அப்பா உங்களை நோக்கி திரும்பிவர ஆரம்பிச்சி ருக்கார். அதுக்கு பல காரணம் இருக்கலாம். நிச்சயமா நல்ல காரணமா இருக்காது. இது உன் அம்மாவுக்கு தெரிஞ்சு தடுத்திருக்காங்க. உன் வைஃப் வீடுங்கற தூண்டில்ல விழுந்து அதை மீறியி ருக்கா. எப்ப தன் சொல்லுக்கு மதிப்பு இல் லாம போச்சோ இனி இருக்கறதுல அர்த்த மில்லைன்னு வெளியே கிளம்பிட்டாங்க.''

''பிரிஞ்சு இருக்கறவர் திரும்ப வந்து சேர்றது நல்ல விஷயம்தானே? இதுக்கு எதுக்குடா அம்மா எதிர்ப்பு காட்டணும்?''

''நல்ல கேள்விதான். ஆனா, உங்கம்மா சேர்க்கையை விரும்பலைங்கறது தெளிவா தெரியுது. சேர்றது ஆபத்துன்னு நினைச்சிருக் கணும். இல்லேன்னா தடுக்க மாட்டாங்க...''

''என்ன ஆபத்து... அப்பா குடிப்பார். இந்த காலத்துல யார் குடிக்கலை?''

''நீ பேசறதைப் பார்த்தா நீ கன்சிடர் பண்ற வனா தெரியலை – உன் அப்பா பக்கம் சாய முடிவு செய்துட்ட மாதிரிதான் தெரியுது.'' – இருவரும் கேள்வியும் பதிலுமாக அலை மோதும்போது அட்டெண்டர் நுழைந்தான்.

''அரவிந்தன் சார் உங்களைப் பார்க்க ஒரு லேடி ரிசப்ஷன்ல காத்துக்கிட்டிருக்காங்க...'' – அரவிந்தனுக்கு உச்சி மண்டையில் யாரோ ஒற்றை முடியை இழுத்தது மாதிரி இருந்தது.

''ரஞ்சனிதான் வந்திருக்கணும். இரு, பார்த் துட்டு வரேன்...'' கிளம்பினான். சந்திரசேகர் மீதமுள்ள மிக்சர் பொட்டலத்தை அப்படியே மடித்து எடுத்து டஸ்ட் பாக்ஸில் போட்டான். தன் சீட்டைத் தேடி நடந்தான்.

ரிசப்ஷனில் சாவித்ரி. சேலைத் தலைப்பால் தலையை மூடிக்கொண்டு அமர்ந்திருந்த விதமே ஒரு மாதிரியாக இருந்தது. அரவிந் தனுக்கு அடையாளம் தெரியவில்லை.



ரிசப்ஷனிஸ்ட்டிடம் கேட்டான். ''யாரோ ஒரு லேடி என்னை பார்க்க வந்துருக்கறதா தகவல் வந்ததே...''

– அவள் சாவித்ரியை நோக்கி கை காட்டி னாள். சாவித்ரியும் நிமிர்ந்தாள். அரவிந்தனை அப்போதுதான் முழுதாகப் பார்க்கிறாள்.

மிக சமீபத்திலும் பார்க்கிறாள். உணர்ச்சிகள் மேலிட கை கூப்பினாள்.

‘‘நீங்க..?’’ – கேள்வியோடு நெருங்கினான்.

‘‘என்னைத் தெரியலியா?’’

‘‘தெரிஞ்சா கேட்பேனா?’’

‘‘கொஞ்சம் உங்ககூட தனியா பேசணும்.’’

‘‘யாருன்னு சொல்லாம தனியா பேசணும்னா என்ன அர்த்தம்?’’

‘‘நான்.. உன்.. உங்க சித்தி.’’

‘‘சித்தி..?’’

‘‘மிஸஸ் சாவித்ரி ரங்கராஜன்.’’

அந்தப் பெயர் அவனை சட்டையைப் பிடித்த மாதிரி ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. அதீதமாய் வெறித்தான்.

‘‘தம்பி... உன்கூட சில முக்கியமான விஷயங்களைப் பேசணும்..’’

‘‘என்ன பேசணும்? என் அப்பா எங்களுக்கு சொத்து தர்றது பிடிக்கலையா... இவ்வளவு நாளா இல்லாம இப்ப எதுக்குடா வர்றீங்கன்னு கேட்க வந்தீங்களா... நான் சென்ஸ்! நான் ஒண்ணும் அவர்கிட்ட பிச்சை கேட்கலை. அவர்தான் டார்ச்சர் பண்ணிட்டிருக்கார். புரியுதா?’’ – அரவிந்தன் சூழ்நிலையை மறந்து வெடித்தான்.

‘‘ஸ்ஸ்..’’ – அவள் நாக்கைக் கடித்தாள்.

‘‘என்ன ஸ்ஸ்... பளிச்சுன்னு விஷயத்துக்கு வரவும் என்ன பேசறதுன்னு தெரியலியா?’’ – திரும்ப பாய்ந்தான்.

‘‘தம்பி, அவசரப்பட்டு வார்த்தைகளை கொட்டாதே. நான் அதுக்காக வரலை. உன் அப்பாவை காப்பாத்த வழி தெரியாம தவிச்சுக்கிட்டிருக்கேன். உங்க உதவி கேட்டு வந்துருக்கேன். இங்க எல்லாரும் பார்க்கறாங்க. கொஞ்சம் வெளியே வர முடியுமா?’’

அவள் கண்ணிரண்டும் துடித்தன. ஹேண்ட் பேகில் செல்போன் அலறியது. கண்ணில் தளும்பத் தொடங்கி விட்ட கண்ணீருக்கு நடுவில் கைகள் நடுங்க செல்போனை எடுத்தவள், போன் செய்வது கண்மணிதான் என்று உணர்ந்து அவசரமாக காதில் வைத்து, ‘‘சொல்லு கண்மணி... அவர் முழிச்சுட்டாரா?’’

‘‘ஆமாம்மா... கதவைப் போட்டு உடை உடைன்னு உடைக்கறாரு. சீக்கிரமா வாங்கம்மா.’’

‘‘சரி, வரேன்... பத்து நிமிஷத்துல அங்கே இருப்பேன்’’ என்றவள் மீண்டும் அரவிந்தனைப் பார்த்தாள்.

‘‘தம்பி, உன்னை கெஞ்சி கேட்டுக்கறேன். உன்கூட நான் கொஞ்சம் மனசுவிட்டு பேசணும். இப்ப நான் உங்கம்மாவைப் பார்த்தா கட்டிப் பிடிச்சு அழுதுடுவேன். என் நிலையை வார்த்தையால சொல்ல முடியாது. அவங்க எங்க இருக்காங்கன்னாவது சொல்ல முடியுமா?’’

‘‘எனக்குத் தெரியாது. அவங்க உங்களைப் பார்த்தா உயிரையே விட்டுருவாங்க.’’

‘‘தெரியும்... ஒரு விஷயம் மட்டும் நீ தெரிஞ்சுக்கோ. உன் அப்பா உங்களுக்கு சொத்து தரலை. நான்தான் அது உங்களுக்கு கிடைக்கணும்னு ஆசைப்பட்டு எப்படியோ கஷ்டபட்டு ஒரு வீட்டை கிரயம் பண்ணிட்டேன். மிச்சம் இருக்கிற சொத்துக்கள் கையை விட்டுப் போகாம அது உங்களுக்கும் உங்கம்மாவுக்கும் பயன்படணும்னு விரும்ப றேன். உன் அப்பா துளிகூட மாறலை. அபாயமான ஒரு பாதையில ரொம்ப வேகமா போய்கிட்டிருக்கார். அவரைத் தடுத்து நிறுத்தத்தான் உங்க உதவியை கேட்கறேன். இப்ப பேச அவகாசம் இல்லை. தயவுசெய்து நாளைக்கு என்னை நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோயில்ல வந்து சந்திப்பா. முடிஞ்சா உன் மனைவியோட வா. காலையில சரியா பத்து மணிக்கு. இப்ப அவசரம்... நான் கிளம்பறேன்!’’ – சாவித்ரி அருவியாய்க் கொட்டிவிட்டு வெளியேறினாள்.

அரவிந்தனுக்கு தலை சுற்றியது.

**ஆ**சிரமம்.

40-ம் நம்பர் அறையில் அந்த பெண் அறைக் கதவை சாத்தி தாளிட்டுவிட்டு விசும்பி விசும்பி அழுது கொண்டிருந்தாள். பக்கத்தில் அன்றைய தினசரி கிடந்தது. அவள் போட்டோ போட்டு கீழே ஒரு வேண்டுகோள். ‘மேலுள்ள படத்தில் காணும் நிர்மலா என்கிற பெண்ணை யார் எங்கே பார்த்தாலும் உடனடியாக கீழ்க்காணும் முகவ ரிக்கு தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகி றார்கள். இந்தப் பெண்ணின் தந்தை இறந்துவிட்டார். அவ ரது உடலை மகள் வராத நிலையில் எத்தனை நாளானாலும் புதைக்கவோ, எரிக்கவோ கூடாது என்று கூறிவிட்டார். எனவே, உடல் பதப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகிறது.

‘அன்புள்ள நிர்மலா!

நீயே ஒருக்கால் இந்த அறிவிப்பை படிக்க நேர்ந்தால் உடனே புறப்பட்டு வா. உனக்கு எதுவும் ஆகாதபடி நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். இனி என் அம்மாவால் உனக்கு எந்தப் பிரச்னையும் வராது.

இப்படிக்கு உன் கணவன் நந்தகோபால்.’

– அறிவிப்பைப் பார்த்து அவள் அழுதுகொண்டிருக்க..

**ஆ**சிரம லைப்ரரியில்,

‘‘எங்க அந்த பேப்பர்?’’ – ஸ்ரீனிவாசன் லைப்ரரி அட்டெண்டர் அனந்தமூர்த்தியிடம் கேட்டார்.

‘‘அமலா எடுத்துகிட்டுப் போயிருக்காங்க சார்.’’

‘‘அவங்க எப்படி எடுத்துகிட்டுப் போகலாம். அது லைப்ரரிலயில்ல இருக்கணும்?’’

‘‘எப்பவும் முதல்ல பேப்பர் படிக்க அவங்க வந்துடு வாங்க. அவசரமா புரட்டி ஒரு பார்வை பார்த்துட்டு வச்சுடு வாங்க. இன்னிக்கு பேப்பர் வர்றதுக்கு முந்தியே லைப்ரரிக்கு வந்தாங்க. வந்ததும் எடுத்துகிட்டு போயிட்டாங்க.’’

‘‘எடுத்துகிட்டுப் போனா நீ விட்டுடறதா? அது இன்டி சிப்ளின். போய் முதல்ல அமலாவை கூட்டிகிட்டு வா.’’

ஸ்ரீனிவாசன் சொல்லிவிட்டு அருகில் கிடந்த நாற்காலி யில் அமர, மீனாட்சி லைப்ரரியினுள் நுழைந்து கொண்டிருந்தாள்.



உள்ளே நுழைந்த மீனாட்சியை பார்க்கும்போதே அவள் சமையல் வேலையை முடித்துவிட்டு வருவது, அவளது ஈரமான சேலை முந்தானையில் தெரிந்தது.

‘‘வாங்கோ மீனாட்சிம்மா... லைப்ரரிக்கு வந்து புத்தகம் படிக்கிற பழக்கம்லாம் உண்டா?’’ – ஸ்ரீனிவாசன் வாஞ்சை ததும்பக் கேட்டார்.

‘‘அப்பாவே ‘வாயரட்டை வேண்டாம், புத்தகம் படிங்கோ’னு சொல்லியிருக்கார். எனக்கும் புத்தகம் படிக்கறதுன்னா உசுரு.’’

‘‘வெரிகுட்! ஆமா, நீங்க எதுவரைக் கும் படிச்சிருக்கேள்?’’ – ஸ்ரீனிவா சன் வெகுஇயல்பாகப் பேச்சை வளர்க்க, மீனாட்சியிடம் மெல்லிசாக ஒரு தடுமாற்றம்.

மிடறு கூட்டிக்கொண்டு, ''பி.ஏ. வரை...'' என்றாள். ஸ்ரீனிவாசனுக்குள் கொஞ்சம் மின்சாரம் புகுந்தது.

''பி.ஏ—வா?''

''அ...ஆமாம்...''

''பி.ஏ. படிச்சுட்டா இங்க இப்படி அடுப்படில...''

''யாருமே இல்லேன்னு ஆயிட்ட அநாதைகளுக்கு வாயார, ருசியா சமைச்சுப் போடறது, ஒரு ஆபீஸ்ல உக்காந்துண்டு கணக்கெழுதறது, ஃபைல் பாக்கறதவிட ரொம்ப மேலானதுதான்...''

– அந்தப் பதில் ஸ்ரீனிவாசனையே ஒரு கட்டுக் கட்டி, ஒரு அமட்டு அமட்டியது. மீனாட்சி மேற்கொண்டு பேசா தபடி பேப்பரைத் தேடத் தொடங்கினாள். ஸ்ரீனிவாசன் இப்போது மீனாட்சியை தேவதையை போல பார்த்தார்.

''என்ன தேட்றேள்?''

''இன்னிக்கு நியூஸ்பேப்பரை தேட்றேன். வரலையா?''

''வந்திருக்கு. அந்த அமலாப் பொண்ணு எடுத்துண்டு அவ ரூமுக்குப் போயிட்டானு கேள்விப்பட்டு, அட் டெண்டரை அனுப்பியிருக்கேன்...''

– அவர் சொல்லும்போதே அட்டெண்டர் அனந்தமூர்த்தி திரும்பி வந்தான். பதற்றமாகத் தெரிந்தான்.

''என்ன அனந்தமூர்த்தி?''

''அந்தப் பொண்ணு கதவை திறக்கமாட்டேங்குது சார்... உள்ள இருந்து அழுகை சத்தம் வேற கேக்குது!''

''நிஜமாவா?'' – கேள்வியோடு ஸ்ரீனிவாசன் நிமிர்ந்தார். அங்கிருந்து நகர்ந்தார். மீனாட்சியும் தயங்கிவிட்டு, அவரை பின்தொடர்ந்தாள்.

ஸ்ரீனிவாசன் கதவைத் தட்டவும் அந்தப் பெண் திறந்து விட்டாள். அவரை மலங்க மலங்கப் பார்த்தாள்.

''என்னம்மா... ஏன் அனந்தமூர்த்தி வந்தப்போ, நீ கதவை திறக்கலே? அழுதிருக்கிற மாதிரி தெரியறதே?''

– அவள் மவுனமாக நின்றாள். அழக்கூடாது என்று உறுதியாக இருந்தும் நீர்த்துளிகள் அடி இமையை முட்டித்தள்ளிக்கொண்டு கன்னக்கதுப்பில் புரண்டன.

''என்னம்மா... என்ன விஷயம்? எதுக்கு அழறே?''

''ஒண்ணுமில்ல சார்... மனசு சரியில்ல. அதான்... இந்தாங்க பேப்பர்...'' – அவளே பேப்பரை நீட்டினாள். விளம்பரம் வந்த அந்த பகுதியை மட்டும் காணவில்லை!



ஸ்ரீனிவாசன் பேப்பரை வாங்கிக்கொண்டார்.

''உங்க நடவடிக்கை எல்லாமே புதிரா இருக்கும்மா. நீங்க எதையோ மறைக்கறீங்க. நான் அப்பாகிட்ட பேச றேன்...'' – ஸ்ரீனிவாசன் நகர்ந்தார். மீனாட்சி நகரவில்லை. கதவை தாழிடப் போனவளை தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தாள். பின், அவளே கதவையும் தாழிட்டாள். நின்று தீர்க்கமாக பார்க்க ஆரம்பித்தாள்.

''ஏன் என்னை அப்படிப் பார்க்கறீங்க?''

''உண்மையை சொல்லும்மா... நீ யார்?''

''எ...என்ன கேள்வி இது? எனக்கு மனசு சரியில்ல. போங்க வெளியே...'' – அமலா கதவைத் திறந்து, வெளியில் கையைக் காட்டினாள்.

மீண்டும் கதவை பூட்டிய மீனாட்சி, ''எதுக்காக நிர்மலா இப்படி நடிக்கறே?'' என்றதும், அவளிடம் ஏராள அதிர்ச்சி.

''நான் நிர்மலாவா? இல்ல... யார் சொன்னது?'' – அவள் சமாளிக்கப் பார்த்தாள்.

''போதும்மா... நான் அந்த பேப்பரை உனக்கு முந்தியே பார்த்துட்டேன். லைப்ரரில கொண்டுவந்து போட்டதே நான்தான். பின்னாலயே நீ வந்து எடுத்துட்டுப் போனதை யும் கவனிச்சேன். ஏற்கனவே எனக்கு உன்மேல சந்தேகம்... அதை இன்றைய பேப்பர் கன்ஃபர்ம் பண்ணிடுச்சு...''

– மீனாட்சி விலாவாரியாக சொல்லச் சொல்ல, அமலா வை... இல்லையில்லை, நிர்மலாவை அழுகை பெரிதாக ஆக்ரமித்தது.

''நல்லா அழு... அப்படியே புறப்படு. உனக்காக உங்க அப்பா உடம்பு காத்திருக்கும்மா...''

''இல்ல... நான் போக மாட்டேன். என் அப்பா, என்னை அந்தஸ்து காய்ச்சல் பிடிச்சு அந்த டாக்டருக்கு வித்துட்டார். அந்தப் பாவத்துக்கு, அவர் பொணமாவே கிடக்கட்டும். அதுதான் அவருக்கு தண்டனை...''

''உனக்குப் பின்னால ஒரு மகாபாரதமே இருக்கு. எனக் குத் தெரியும். இப்ப அதைப்பத்தி பேச நேரமில்ல. நான் சொல்றதை கேளு. எவ்வளவு பாசமுள் ளவரா இருந்தா, உன் அப்பா நீ வந்துதான் காரியம் செய்யணும்னு உடம்பை போட்டு வைக்கச் சொல்லியிருப்பார். கிளம்பு...''

''இல்ல, இல்ல... நான் வேணா இங்க இருந்து வேற எங்கயாவது போயிடறேன். ஆனா... அப்பா, புருஷன்னு திரும்பப் போய் அவங்க யார் முகத்துலயும் முழிக்க மாட் டேன். என்னை விட்டுடுங்க...''

– நிர்மலா வேகவேகமாகப் பெட்டியில் தன் துணிமணிகளை எடுத்து வைக்கத் துவங்கினாள். மீனாட்சி பொறுமையாக பார்த் துக் கொண்டிருந்தாள். துளிகூட பதற்றமோ, படபடப்போ இல்லாத அழுத்தமானபார்வை. அதுவே நிர்மலாவை என்னவோ செய்தது.

''வழியை விடுங்க...'' – நிர்மலா கதவைத் திறக்க முயன்றாள்.

''போகலாம்... பொட்டியை வை. உன்கூட நான் வரேன். நேரா உன் அப்பா உடம்பு இருக்கிற இடத்துக்கு போறோம். அவருக்கு உரிய மரியாதையை நீ செய்யறே. அப்புறமா என்கூடவே திரும்பி வர்றே... அதுக்கு நான் பொறுப்பு...''

''இல்ல... என் வீட்டுக்காரர் விடமாட்டார். என் மாமியாரும் விடமாட்டாங்க. அவங்க ளுக்கு நான் வேண்டாம். என் சொத்து மட் டும்தான் வேணும். நான் மாட்டேன்...''

''பரவாயில்ல! என் வீட்டுக்காரர், என் மாமியார்னு உள்ளே வெச்சுத்தான் பேசறே... சந்தோஷப்படறேன். எவ்வளவு சிக்கல் உனக்கு இருந்தாலும், என்னால முடியலேன் னாலும் அப்பா இருக்கார்... அவர் தீர்த்து வைப்பார். என்னை நம்பு...''

''இல்லேம்மா... என் மாமியார் ராட்சஸி. பார்வையிலேயே என்னை எரிச்சுடுவா. ஐயோ... இப்ப அவங்களை நினைச்சாகூட, என் உடம்பு நடுங்குது. உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். என்னைத் தெரிஞ்சதா தயவுசெஞ்சு காட்டிக்காதீங்க. நான் வரேன்...''

''என்னம்மா நீ... இந்த நிமிஷம் ஸ்ரீனிவா சன் சார் அப்பாகிட்ட சொல்லி, அப்பா இங்க வந்துட்டு இருப்பார்...''

– மீனாட்சி சொல்லி வாய் மூடவில்லை... கதவு தட்டப்பட்டது.

''பார்த்தியா?'' – மீனாட்சியே கேள்வி யோடு போய் கதவைத் திறந்தாள்.

அவள் சொன்னதுபோல, தும்பைப் பூ வெளுப்பில் வேட்டி, ஜிப்பாவில் அப்பா அனந்தாச்சாரி. அருகில் ஸ்ரீனிவாசன், அனந்த மூர்த்தி!

அப்பா முகம் இருண்டு போயிருந்தது.

நிதானமாக உள்ளே நுழைந்தார். அவரைப் பார்க்க நிர்மலாவுக்கே திணறலாக இருந்தது. ஒரு குஞ்சுப் புறா, கூட்டுக்குள் ஒரு மூலையில் போய் முடங்குகிற மாதிரி முடங்கி நின்றாள். அவள் உடம்பெல்லாம் வியர்த்து, நடுங்கிக் கொண்டிருந்தது.

''என்னம்மா குழந்தே... என்னை இப்படி ஏமாத்திட்டியே?''

– அனந்தாச்சாரி குரலில் கோபமும் குழப்பமும் கலந்து கிடந்தது.

''அப்பா...'' – இது மீனாட்சி. அவரும் திரும்பினார்.

''அந்த பொண்ணு மேல எந்தத் தப்பும் இருக்கறதா எனக்கு தெரியலே. அவ இப்ப பெரிய தர்ம சங்கடமான சூழ் நிலையில இருக்கா. இது விசாரணை பண்ற நேரமா எனக்குத் தெரியலை. இப்ப அவ, அவங்கப்பாவோட இறுதிச் சடங்குல கலந்துண்டாகணும். நீங்க பெரிய மனசு பண்ணி, அதுக்கு அனுமதி கொடுக்கணும்...''

‘‘என்ன மீனாட்சியம்மா சொல்றீங்க?’’

‘‘நிர்மலா, தயவுசெஞ்சு அந்த பேப்பர் கட்டிங்கை அப்பாகிட்ட காட்டறியா?’’

– அடுத்த நொடி நிர்மலாவின் கை, குப்பைக் கூடையை காட்டியது. மீனாட்சி அதில் விளம்பரப் பக்கத்தை தேடி எடுத்து, கசக்கி பந்தாக்கப் பட்டிருந்த அதை விரித்து அப்பா எதிரில் நீட்டினாள்.

படித்தவருக்கு விதிர்த்தது.

‘‘அடப்பாவமே... என்னம்மா இது?’’

‘‘சொன்னேனே... அவ இப்ப இறுதிச் சடங்குக்கு போகணும். போக பயப்படறா. அவளோட கணவர் நந்தகுமார், அவளை பிடிச்சு வெச்சுப்பார். திரும்பவும் கொடுமைகள் தொடர ஆரம்பிச்சுடும்னு பயப்படறா. நாம அவளுக்கு நம்பிக்கை தரணும். எவ்வளவு பெரிய சிக்கலா இருந்தாலும் நாம தீர்த்து வைக்கறோம்னு சொல்லி, பின்னால நிக்கணும். அப்பத்தான் அவளுக்குத் தைரியம் வரும். புறப்படுவா...’’

‘‘என்ன மீனாட்சியம்மா நீங்க? நிர்மலா அநாதைன்னா ஆஸ் கார்டியன் நாம சப்போர்ட் பண்ணலாம். இப்ப, நாம எப்படி உதவ முடியும்? இடம் கொடுத்ததே பெரிய தப்பாச்சே... போர்டு மீட்டிங்ல கேக்கக்கூடாத கேள்வி யெல்லாம் கேட்பாங்களே... இது பொது ஸ்தாபனம்மா.’’

‘‘தெரியும்... எவ்வளவு பெரிய கதவை தாழிட்டாலும் ஒரு ஜன்னலாவது வழிகாட்டும்னு கேள்விப்பட்டிருக் கேன். நீங்க இப்ப விதிகளைப் பத்தி சிந்திக்காம, நிர்மலா வோட கதியைப் பத்தி மட்டும்தான் யோசிக்கணும்...’’

‘‘எனக்கு மட்டும் மனிதாபிமானம் இல்லையா? இவங்களுக்கு எப்படி உதவ முடியும்? எனக்கு வழியே தெரியலை!’’

‘‘எனக்கு சமையல்காரியா ஒரு வழியை காமிச்ச மாதிரி, இவங்களுக்கும் நீங்க ஒரு வழியை காட்ட முடியும்...’’

‘‘சரி... இவளை நான் இங்க ஒரு கிளார்க்காவே ஆக்க றேன். ஆனா, இவ கணவன் இவளை அனுப்ப முடியா துன்னா, அனுப்பிதான் தீரணும்னு எப்படி சொல்றது?’’

– மீனாட்சியும் அனந்தாச்சாரியும் வாக்குவாதத்தில் மூழ் கும்போது, நிர்மலா ஆவேசமாக அருகில் வந்து கத்தினாள்.

‘‘வேண்டாம்... எனக்கு யாரோட உதவியும் வேண் டாம். எக்கேடோ கெட்டுப் போறேன். என்னை விட்டு டுங்க. எங்கப்பாவை எரிக்கும்போது, அந்தச் சிதையில நானும் விழுந்துடறேன். அதுதான் எனக்குத் தீர்வு...’’ என்றவள், பெட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். மீனாட்சி ஓடிச்சென்று மறித்தாள். எல்லோரும் அவளை வெறித்தார்கள்.

‘‘பெட்டியை வை. அப்பா சொல்றதை வெச்சு அவசரப்படாதே... எந்தப் பிரச்னையை எப்படி அணுகணும்னு இருக்கு. நான் இருக்கேன்னு சொல்றேன்ல!’’

– மீனாட்சி பதிலுக்குப் போட்ட சத்தம் அந்த ஆசிரமத்தையே ஒடுக்கியது. அப்பாவே ஒரு கணம் மீனாட்சியின் அந்த விஸ்வரூபம் பார்த்து ஆடிப்போய் விட்டார்!



**க**ண்ணாடிப் பேழைக்குள் தர்மராஜின் சடலம். சற்றுத் தள்ளி வெள்ளத்தில் ஒதுங்கியவர்களைப் போல, ஆங்காங்கே சிலர் அமர்ந்திருந்தார்கள்.

வாசலில் வேன் நிற்கும் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தார்கள். நவஜீவன் ஆசிரமத்துக்கு சொந்தமான வேன். உள்ளிருந்து நிர்மலா இறங்க, உடன் அப்பா அனந்தாச்சாரி, மீனாட்சி, ஸ்ரீனிவாசன் என்று மூவரும் இறங்கினர்.

தீப்பிடித்துக் கொண்டது போல செய்தி உள்ளே செல்ல, மாடியில் ஈஸிசேரில் மல்லாந்திருந்த டாக்டர் நந்தகோபால் ஓடிவந்தார். இளமையான தோற்றம். வேட்டி, சட்டையில் கலையாத மிடுக்கு. வந்தவர் நிர்மலாவை வெறித்தார். அவளோ, மீனாட்சியின் முதுகுக்கு பின்னால் ஒண்டிக் கொண்டாள்.

''நிர்மலா... எங்கடி போயிட்டே? பாருடி உங்கப்பா வை... உன்னாலேயே செத்துப் பொணமா கெடக்கறதை பாருடி... இப்படியாடி பண்ணுவே? பாருடி... பாருடி உங்கப்பாவை...''

– அங்கிருப்பவர்களில் ஒருவர் பிலாக்கணம் படிக்க, நிர்மலாவின் பார்வையும் அப்பாவின் சடலம் நோக்கிச் சென்றது. அதே சமயம், அன்று ஆசிரமத்துக்கே தேடிவந்த பாண்டுரங்கன் என்பவரும் மற்றவரும் அனந்தாச்சாரி முன் வந்து, ''ஏன் சார்... இவங்க உங்க ஆசிரமத்துலதான் இருந்தாங்களா?'' என்று கடுமையான தொனியில் கேட்க... அப்பாவின் சிரம் அரைமனதாக ஆடி ஆமோதித்தது.

''என்ன சார் நீங்க? அன்னிக்குக் கெஞ்சினோமே சார்... உள்ளேகூட விடமாட்டேன்னு சொல்லிட்டீங்களே! அன் னிக்கு இவங்களை நீங்க அனுப்பியிருந்தா, இவர் பொழைச்சிருப்பாரே சார்...'' – அலறினார் பாண்டுரங்கன்.

''மிஸ்டர், கொஞ்சம் அமைதியா பேசுங்க... அன்னிக்கு இவங்க அங்க இருந்தது இவருக்கே தெரியாது. இப்பக் கூட, இந்தப் பொண்ணு இங்கே வரப் பிரியப்படலை. நாங்கதான் வற்புறுத்தி கூட்டிட்டு வந்திருக்கோம்...''

– மீனாட்சி, அப்பாவுக்காக வக்காலத்து வாங்கினாள்.

''உள்ளே யார் இருக்காங்கனுகூட தெரியாம இவர் ஆசிரமம் நடத்தறாரா?''

''உள்ளே இருக்கறவங்க தன்னை தெரிஞ்சுக்கக் கூடாதுங் கறதுக்காக, உங்க பொண்ணு தலைக்கு நரை பூசிட்டு அமலானு பேர் சொல்லி, எங்களை நம்ப வெச்சா. புரியாம பேசக்கூடாது...''

– வாக்குவாதம் பிணத்துக்கு அருகே வளர ஆரம்பித்தது அங்கே. அப்போது ரஞ்சனியும் ஒரு மலர்வளையத்துடன் பிரவேசித்துக் கொண்டிருந்தாள்!



மலர்வளையமும் கையுமாய் நுழைந்த ரஞ்சனிக்கு மீனாட்சி யை பார்க்கவும் பகீரென்றது. ரஞ்சனியின் ஆபீஸ் க்ளையன்டு களில் ஒருவர் தர்மராஜ். அந்த மரியாதைக்காக ஸ்டேட்ஸில் இருக்கும் ரஞ்சனியின் எம்.டி., உடனடியாக ஆபீஸ் சார்பில் யாராவது சென்று மலர்வளையம் வையுங்கள் என்று உத்தரவிட அந்த உத்தரவுதான் ரஞ்சனியை அங்கே அனுப்பியிருந்தது.

மீனாட்சி இங்கே எப்படி? ரஞ்சனி திணறலில் சிக்கும்போது வாக்குவாதமும் வலுத்துக்கொண்டே போய்க்கொண்டிருந்தது.

''நீங்க என்ன சொன்னாலும் நான் கேக்கமாட்டேன். உங்க ளால ஒரு பெரிய மனுஷரோட உயிரே போயிடிச்சே சார்.'' பாண்டுரங்கன் அப்பாவிடம் இறைந்து பேசிக் கொண்டிருந்தார். அப்பா மவுனமாய் கேட்டுக் கொண்டிருந்தார்.

மீனாட்சிக்கு ஒருபுறம் ரஞ்சனியை பார்த்த அதிர்வு. மறுபுறம் வந்த இடத்தில் பிணத்துக்கு நடுவில் சண்டை நிகழ்ந்து கொண்டிருக்கும் அதிர்வு. எந்த சந்தர்ப்பத்திலும் நிதா னத்தை இழந்துவிடாத அவளுக்கே நிதானம் போய் கோபம் பிடித்துக் கொண்டது. கத்தினாள்.

''இதோ பாருங்க. அவர் பேர்ல ஒரு தப்பும் இல்லை. பேப்பர் விளம்பரத்தை பார்த்து நாங்கதான் உங்க பெண்ணை சமாதானப்படுத்தி கூட்டிகிட்டு வந்து ருக்கோம். புரியாம பேசாதீங்க...''

''இதை ரெண்டுநாள் முந்தி செய்து ருந்தா இவர் உயிர் பிழைச்சிருப்பாரே...''

''யாருக்கு தெரியும்? ஒரு விஷயத்தை நீங்க தெளிவா புரிஞ்சுக்கணும். அந்தப் பொண்ணு உறவுகளே வேண்டாம்னு வெறுத்துதான் ஆஸ்ரமத்துல வந்து சேர்ந்துருக்கா. அப்படின்னா அவ என்ன பாடு பட்டிருக்கணும்..?

‘‘இதெல்லாம் இங்க பேசா தீங்கம்மா. அந்த பொண்ண பத்தி உங்களுக்கு என்ன தெரியும்? கல்யாணமாகி வந்ததுல இருந் தே எங்க டாக்டர் சாரை அம்மாவைவிட்டு பிரிச்சு கூட்டிகிட்டு போய் தனிக்குடித்தனம் இருக்க ஆசைப்பட்டாங்க. அதுதெரியுமா உங்களுக்கு..?’’ – பேச்சு தடித்துக்கொண்டே போனது. மீன்கடை போல் சலசலப்பு. மலர்வளையமும் கையுமாய் நின்று கொண்டிருந்த ரஞ்சனிக்கு ஒன்றுமே புரியவில்லை.

அப்பா சார்பாக ஸ்ரீனிவாசன் குறுக்கிட்டார்.

‘‘மன்னிச்சுக்குங்க. ஏதோ தவறு நடந்துபோச்சு. பெரியவர் உடல் முன்னால ரசாபாசம் வேண்டாம். அடுத்து நடக்கவேண்டியத பாருங்க. நாங்க வரோம்’’ – ஸ்ரீனிவாசன் அப்பாவோடு வாசல் நோக்கி நடந்தார். மீனாட்சிக்கு பின் தொடர்வதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. அவ்வளவையும் நிர்மலாவின் கண வர் நந்தகோபாலும் பார்த்துக் கொண்டுதான் இருந் தார். நிர்மலா கண்ணீர் மல்க ஓடிவந்தாள். மீனாட்சி யை பிடித்துக் கொண்டாள்.

‘‘தயவு செய்து இங்க இருங்க மீனாட்சியம்மா. இவங்க என்னை உப்புக்கண்டம் போட்ருவாங்க. நீங்க நல்லது பண்றதா நினைச்சுகிட்டு என்னை ஒரு நரகத்துல தள்ளிட்டு போறீங்க. எங்கப்பா சாவுக்கு நான் காரணம் இல்ல. அவரோட ஸ்டேட்டஸ் காய்ச் சலும் அவசர புத்தியும்தான் காரணம். என்னை நம் புங்க. இங்க இருங்க ப்ளீஸ்..’’ – நிர்மலா கதறினாள். அதற்குள் அப்பாவும் ஸ்ரீனிவாசனும் ஆஸ்ரம வேனில் ஏறி, டிரைவரும் ஸ்டார்ட் செய்துவிட்டான்.

மீனாட்சியை தர்மசங்கடம் ஆட்டிக் கொண்டிருந்தது. டிரைவர் ஹாரன் அடித்தான். ரஞ்சனி ஒரு பொம்மை போல நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். மீனாட்சி மல்லிகாவை உதறிவிட்டு வேனை நோக்கிச் சென்று அதில் ஏறினாள். வேன் புறப்பட்டது.

மல்லிகா அப்பாவின் பிணத்தைக்கூட பார்த்து அழாமல் தன் னையே பார்த்து அழுததும், பரிதவித்ததும் நெஞ்சைப் பிசைந்தது.

‘‘நல்லவேளை... நீங்க அந்தப் பெண்ணை விட்டுட்டு வந் தீங்க. இல்லேன்னா இன்னும் ரசாபாசமாகியிருக்கும்’’ என்றார் ஸ்ரீனிவாசன்.

அப்பா மவுனமாக அமர்ந்து வந்தார்.

‘‘அப்பாவோட சர்வீஸ்ல இப்படி யாரும் அவர்கிட்ட நெஞ்சு நிமிர்த்தி தப்பா பேசலை. இன்னிக்கு அந்த ஆள் பேசிட்டான். அப்பா, நீங்க வருத்தப் படாதீங்க...’’ – என்ற ஸ்ரீனிவாசனை அப்பா வெறித்தார். ‘‘நான் அதுக்காக வருத்தப்படலை சீனு... அந்தப் பொண்ணை இப் படி கதறக்கதற விட்டுட்டு வர்றதை நினைச்சாதான் வருத்தமா இருக்கு...’’ என்றார்.

‘‘நாம என்னப்பா பண்ணமுடியும். நம்ம மேல தப்பு இல்லாதப்பவே அந்த பேச்சு பேசிட் டாங்க. நாம அங்கயே இருந்து காரி யம் முடிஞ்சு அந்த பொண்ணை கூட்டிகிட்டு வர நினைச்சிருந்தா ரணகளம்ல ஆகியிருக்கும்?’’

‘‘அந்த பொண்ணோட கதறலுக்கு என்னால ஆறுதலா நடந்துக்க முடியல. நான்லாம் எப்படி அனாதரவான பல பேரை பராமரிக்க போறேன்?’’

‘‘என்ன சொல்றீங்க..?’’

''இது எனக்கு பரீட்சை சீனு. இந்த பரீட்சைல நான் ஃபெயி லாயிட்டேன்.''

''இல்லப்பா... நீங்க குழப்பிக்காதீங்க..''

''குழப்பிக்கலை. தெளிவாதான் பேசறேன். முதல்ல நம்ம ஆஸ்ரம விதிகள்ல சில மாற்றங் களை செய்யணும்..''

''எதுக்கு?''

''உறவுகளே இல் லாம இருக்கறவா மட் டும் அநாதை இல்ல சீனு... நிர்மலா மாதிரி மனசால பெரிய அள வுல பாதிக்கப்பட்ட பெண்களும் ஒரு வகை யில அநாதைகள்தான். அவங்கள பாதுகாக்க வும் நாம தயாராக ணும். அதை எனக்கு உணர்த்ததான் இந்த சம்பவம் நடந்துருக்குன்னு நினைக்கறேன்.''

அப்பாவின் அந்த நிதர்சனம் மீனாட்சிக்கு இதமாக இருந்தது.

''உண்மைதான்... நீங்க சொல்றது சத்யம். உறவுகள் இருக்கறதா பெரிசு? அதுல அர்த்தம் இருக்க வேண்டாமா?'' –திருப்பி கேட்டாள்.

''அப்போ உங்க நிலையும் அப்படித்தானா மீனாட்சியம்மா?''

மவுனமாய் தலையசைத்தாள் மீனாட்சி. அப்பாவின் கேள்வி, அங்கு வந்த ரஞ்சனியை ஞாபகப்படுத்தியது. பார்த்துவிட்டு ஓடிவந்து கட்டிக்கொள்வாள் என்று அல்பத்தனமாய் மனது ஆசைப்பட்டதை நினைத்தாள். அவள் அப்படிச் செய்யாதது வலியைத் தந்தது.

எது எப்படியோ... நான் இருக்குமிடம் அவளுக்கு தெரிந்து விட்டது. அரவிந்தனாவது வருவானா..? என்ன இது... எதற்காக மனது இதையெல்லாம் எதிர்பார்க்கிறது? இதெல்லாம் தனித்து நின்று போராட விரும்பும் வைராக்கியத்திற்கு பலவீனமாயிற்றே..?

பெண் ஜென்மங்களின் மனசே இப்படித்தானா? மீனாட்சி கேள்வி களும் குழப்பமுமாக வெளியே பார்த்துக்கொண்டே வந்தாள்.



புரொட்யூசர் ரங்கராஜன் வீட்டு முன்னால் ஸ்கூட்டரை நிறுத்தி விட்டு ஹெல்மெட்டை எடுத்து இடுப்பில் அமுக்கிக்கொண்டு உள்ளே நுழைந்த சாமிநாதனை ஒரு கூட்டமே பார்த்தது.

அவர்கள் அவர் எடுக்கப்போகும் படத்துக்கான விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தனர்.

''ஏண்ணே, டோட்டல் சப்ஜெக்ட்டும் அவுட்டோர்தானா?''

''ஆமாப்பா... பெரும்பாலும் ஸ்டுடியோ ஒர்க்கே வராது.''

‘‘அவுட்டோர்னா காஸ்ட் எகிருமே அண்ணே...’’

‘‘அதுக்கென்ன பண்ண... கதை அப்படி! நீயா கையை விட்டு கொடுக்கப் போறே?’’

– சாமிநாதன் அவர்கள் பேச்சை கேட்டபடி முதல் அறை வரை சென்று எட்டிப் பார்த்தான். ஹாலில் ரங்கராஜன் சிலரிடம் பேசிக் கொண்டிருந்தார். சாமிநாதனை பார்த்து ‘‘என்னய்யா... என்ன விஷ யம்?’’ என்று உள்ளேகூட கூப்பிடாமல் கேட்டார்.

‘‘பிசியா இருக்கீங்க போல இருக்கு. நான் அப்புறமா வரேன்.’’ – அவன் இப்படிச் சொல்லவும் அவரும் ஒழிந்தது சனி என்கிற மாதிரி தன் சகாக்கள் பக்கம் திரும்பினார்.

டேபிள் மேல் விஸ்கியும், நேந்திரங்காய் சிப்சும் இருந்தன. சாமிநாதன் அதை பார்த்தபடி வெளியே வந்தான். ஒரு பெரிய செட் ப்ராப்பர்டி வேனில் வந்து இறங்க... ‘‘பாத்து...பாத்து பின்னால் கொண்டுபோங்க..’’ என்று ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

சாமிநாதன் அதை பார்த்தபடியே ஸ்கூட்டரை நெருங்கினான். அவனை உரசிக்கொண்டு கார் வந்து நின்றது. சாவித்ரி இறங்கினாள். சாமிநாதனை பார்த்ததும் வேகமாகவந்தாள். கையில் பிரசாத தட்டு.

‘‘என்ன சாமிநாதன், உள்ளே போனீங்களா?’’

‘‘சார் இருந்தார். அப்புறம் வரேன்னு சொல்லிட்டு வந்துட்டேன்.’’

அவள் பெருமூச்சு விட்டாள். ‘‘மத்தபடி சார் ஒண்ணும் பேசிடலையே?’’ என்று கேட்டாள்.

‘‘இல்ல மேடம்... அவர் டிஸ்கஷன்ல பிசியா இருக்காரு போல...’’

‘‘சரி வாங்க... நானே போன் பண்ணணும்னு நினைச்சுகிட்டிருந்தேன்’’

சாவித்ரி பக்கவாட்டு தோட்டம் வழியே சென்றாள். அவன் தயக்கமாக பின்தொடர்ந்தான்.

லொகேஷன்... பட்ஜெட்... என்று பேசிக் கொண்டிருந்த கூட்டம் ஆச்சரியமாக பார்த்தது.

‘‘அம்மா யாருன்னு தெரியுதா வைத்தி...’’

‘‘யாரு...’’

‘‘சான்ஸ் கேட்டு வந்த பார்ட்டி. நம்மாளு மடக்கி போட்டு சின்ன வீடாக்கிட்டாரு...’’

– கிசுகிசுப்பாக பேசுவதும் காதில் விழுந்தது.

சாவித்ரியோ வீட்டு பின்புறம் சப்போட்டா மரத்தினடியில் நின்றாள். சாமிநாதனை ஏறிட்டாள்.

‘‘நேத்து அரவிந்தனை பார்த்து பேசினேன்.’’

‘‘அப்படியா... எங்க மேடம்?’’

‘‘அவனோட ஆபீசுக்கே போய்ட்டேன்!’’

‘‘இருந்தாரா... முகம் கொடுத்து பேசினாரா?’’

‘‘மனம் விட்டு பேசமுடியல. இன்னிக்கு காலைல 10 மணிக்கு நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோயிலுக்கு வரச்சொல்லியிருந்தேன். ஆனா என்னால போக முடியல...’’

‘‘இப்ப எங்க போய்ட்டு வரீங்க..?’’

‘‘பக்கத்துல இருக்கற கோயிலுக்கு போய்ட்டு வா, போதும்னு இவர் சொல்லியனுப்பிட்டார்..’’

‘‘அடடா, அரவிந்தன் சார் ஏமாந்திருப்பாரே.’’

‘‘அதான் ஒரே கவலையா இருக்கு. போன் பண்ணி பேசவும் வழி இல்லை. இங்க ஒரே கூட்டம். நீங்க சொல்லிட்றீங்களா சாமிநாதன்..’’

அவள் கேட்கும்போதே மூர்த்தி வந்து கொண் டிருந்தான். ஒட்டு கேட்க வருகிற மாதிரியே இருந்தது. எகிறி ஒரு குதி குதித்து ஒரு சப்போட் டாவை பறித்து பந்துபோல தூக்கிப் போட்டு ஒருமாதிரி பார்த்துக்கொண்டே சென்றான்.

‘‘இடியட்... ஸ்கவுண்ட்ரல்!’’ – சாவித்திரி கருவினாள்.

‘‘மேடம், இந்த ஆள்தான் சாரோட ஃப்ரெண்ட் மூர்த்தியா?’’ – சாமிநாதன் கச்சிதமாக கேட்டான்.

‘‘அவனேதான். அவரை நடுத்தெருவில் நிறுத்தாம விடப்போறதில்ல இவன்!’’ – சாவித்திரி தழுதழுத்தாள்.

சாமிநாதனுக்கும் சங்கடமாய் இருந்தது.

‘‘ஆமா... எதுக்காக அரவிந்தன் சாரை கோயிலுக்குவரச் சொல்லிருந்தீங்க? நான் தெரிஞ்சுக்கலாமா?’’

‘‘மனசுவிட்டு பேசத்தான்... இங்க இவர் இருக்கற சொத்தெல்லாம் அடகுவெச்சு கடன் வாங்கிகிட்டு இருக் காரு. எல்லாம் மூர்த்தி ஏற்பாடு. ஒரு பைசா கூட திரும்பப் போறதில்லை. இதை தடுக்க முடியாம ஒண்டிக்கட்டையா நான் போராடிகிட்டிருக்கேன். இதை சொல்லி அரவிந்தன் கிட்ட சில உதவிகள் கேட்கத்தான் வரச்சொன்னேன். இவர் எல்லாத்தையும் இழக்கறதுக்குள்ள அவங்களுக்கு நான் எதாவது செய்துர முயற்சிக்கிறேன். இவர் தன்னை தட்டிக்கேட்க யாருமில்லைங்கற தைரியத்துல தப்பு தப்பா நடந்துகிட்டிருக்காரு...’’

‘‘உங்களை நினைச்சா ஆச்சரியமா இருக்கு. இந்த நிலையில அரவிந்தன் சாரால உங்களுக்கு எந்த வகைல உதவமுடியும்னு நினைக்கறீங்க? அதுதான் புரியலை.’’

‘‘அவனாலயும் என் அக்கா மீனாட்சியாலயும்தான் இவரை காப்பாத்த முடியும். சொத்து இவர் சம்பாதிச்சது மட்டுமில்லை. அப்பாவழி சொத்தும் இதுல இருக்கு. அதுல

பங்குகேட்டு அரவிந்தனும் அக்காவும் கோர்ட் டுக்கு போனா இவரால ஒண்ணும் பண்ண முடியாது..''

''ஓ... நீங்க அப்படி வர்றீங்களா... அப்ப அரவிந்த னோட அம்மா மீனாட்சியம்மா எதையுமே வாங்கிக்காம தான் இவரைவிட்டு பிரிஞ்சு போனாங்களா?''

''ஆமா... அவ மானஸ்தி. கட்டினபுடவையோட பசங் கள கூட்டிகிட்டு வெளிய போயிட்டாங்க. பாவி நானும் அப்ப அதுக்கு ஒரு காரணமாயிட்டேன்.'' – சாவித்ரியிடம் கண்ணீர் தளும்பியது.

''அழாதீங்க மேடம். அரவிந்தன் சாரோட அக்காவும் வந்துருக்காங்க. ஆனா அவங்கல்லாம் சார் ஒண்ணா சேர ஆசைப்பட்றதா நினைச்சுகிட்டிருக்காங்க. நீங்க சொன் னதை வச்சு நானும் அப்படித்தான் சொல்லியிருக்கேன். ஆனா நீங்க அவங்க கேஸ் போடணும்னு சொல்றத நினைச்சாதான் குழப்பமா இருக்கு...''

''எல்லா குழப்பமும் அரவிந்தனும் அக்காவும் மனசு வச்சா தெளிவாயிடும் சாமிநாதன்... அக்கா இருக்கற இடம்...''

– அவள் முடிக்குமுன் ''சாவித்ரி... ஏய் சாவித்ரி...'' – என்று ரங்கராஜன் குரல் எதிரொளித்தது. பின்வழியே கதவைத் திறந்துகொண்டு அவரே வந்து கொண்டிருந்தார்.

சாமிநாதனுக்கு பூச்சி ஊர்கிற மாதிரி இருந்தது.

''இங்க என்ன பண்ணிகிட்டிருக்கே... ஏய்யா நீ இன்னும் போகலையா?''

''இல்ல சார்... நான் புறப்படும்போது அம்மா வந்துகிட்டிருந்தாங்க. அதான்..''

''வந்தா... உள்ள வந்து பேசாம இங்க என்ன மரத்தடி யில நின்னு குசுகுசுன்னு? ஏண்டி உனக்கு அறிவில்ல?''

''இல்லீங்க, அங்க யூனிட் ஆட்கள் இருக்கறதால...''

''இருந்தா என்ன... அப்படி என்ன உலகமகா ரகசியம் பேசிகிட்டிருக்கே..?''

''ரகசியமெல்லாம் ஒண்ணுமில்ல சார். அந்த வீட்டு ரிஜிஸ்ட்ரேஷன் முடிஞ்சிருச்சே. அவங்க எப்ப குடி வரப் போறாங்கன்னு கேட்டுகிட்டிருந்தாங்க'' – சாமிநாதனும் ஒரு பொய்யைச் சொல்லி சமாளித்தான்.

''எப்ப குடிவந்தா இவளுக்கென்ன? பெத்த நானே கவலப்படல. இவளுக்கென்ன வந்துச்சு. அதான் பிச்சை கேட்டு வீட்டை வாங்கிட்டாங்கல்ல? நான்சென்ஸ். சரி உள்ற வா. மாடி பீரோ சாவி எங்கே வெச்சிருக்கே..?''

– ரங்கராஜன் கேட்டபடியே திரும்பி நடந்தார். சாவித் ரியும் பின்னால் ஓடினாள். சாமிநாதனுக்கு தலை சுற்றிற்று. 'அவர்கள் எங்கே பிச்சை கேட்டார்கள்... ஒருவேளை அப்படி சொல்லித்தான் சாவித்ரி வீடு வாங்கி கொடுத்தி ருக்கிறாளா?'

– சாமிநாதனுக்குள் கேள்விகள் தட்டாமாலை சுற்றின. இரு குடும்பங்களுக்கு நடுவில் வசமாக மாட்டிக் கொண்டி ருப்பது மட்டும் புரிந்தது. கடவுளே இனி என்னாகும்?

☆☆☆



**கா**லிங் பெல் சப்தம் கேட்டு கதவை திறந்தாள் மாலதி. வாசலில் ரஞ்சனி! உள்ளே நுழையாமல், ''அக்கா கால் கழுவிக்கணும், தண்ணி கொண்டு வாங்க..'' என்றாள்.

''சும்மா வா. எழவு வீட்டுக்கா போய்ட்டு வந்துருக்கே?'' – என்றபடியே பார்த்தவளை ''எழவு வீட்டுக்குத்தான்கா போய்ட்டு வந்துருக்கேன்'' – என்று சற்று அதிரவைத்தாள்.

''ஆபீஸ் போய் சேலரி வாங்கிட்டு வரேனுல்ல போன?''

''போனா ஒரு வேலைய தலைல கட்டிட்டாங்க..''

''எழவு வீட்டுக்கு போனேன்னியே... அது?''

''அதுதான்கா அந்த வேலையே. தர்மராஜன்னு எங்க ஆபீசுக்கு ஒரு க்ளையன்ட். அவர் செத்துட்டார். ஆபீஸ் சார்பா போற வழியில ஒரு மலர் வளையம் வச்சுடுன்னாங்க. மேனேஜரும் ஊர்ல இல்ல. முடியாதுன்னு சொல்ல முடியல. அதான் போய் துக்கம் விசாரிச்சுட்டு வரேன்..''

''அப்ப அங்கயே நில்லு... இதோ வந்துட்றேன்'' – உள்ளே ஓடினாள் மாலதி.

''ராகவி ஸ்கூல்ல இருந்து வரலையா..? இன்னிக்கு அரை நாள்தான் ஸ்கூல்னு சொன்னாளே?''

''இன்னும் வரலை... வந்துகிட்டே இருக்காளே என்னவோ..''

– பதிலோடு ஒரு சொம்பில் நீரோடு வந்த மாலதி, சொம்பைக்கூட தீண்டவிடாமல் ரஞ்சனியின் காலுக்கு தண்ணீர் விட்டாள். காலில் கலீரிடும் வெள்ளிக்கொலுசு.

''கொலுசு புதுசா... நல்லா பளிச்சுனு இருக்கே?''

''பழசுதான்... பாலீஷுக்கு கொடுத்து வாங்கி போட்டு கிட்டேன். உங்க தம்பியாவது புதுசு வாங்கித் தரதாவது...''

– அங்கலாய்த்தபடி உள்ளே நுழைந்தாள். மறந்தும் மீனாட்சியை பார்த்ததை மட்டும் கூறவேயில்லை.

அரவிந்தனின் ஸ்கூட்டர் சத்தம் கேட்டது. ஸ்கூட்டரில் ராகவியும் இருந்தாள். ''வாங்கவாங்க... இப்பதான் எங்க காணோம்னு ரஞ்சனி கேட்டுகிட்டிருந்தா..''

''அத்தே... நான் அப்பாவை மூலையிலையே பார்த்து ஸ்கூட்டர்ல ஏறிக்கிட்டேனே.'' குழந்தை இறங்கி ஓடியது.

இறுக்கமான முகத்துடன் நுழைந்தான் அரவிந்தன்.

‘‘என்ன மத்யானமே வந்துட்டே... எனக்காக லீவு போட்டியா?’’ மாலதி ஆசையாக அப்படி கேட்டாள்.

‘‘இல்லக்கா... இன்னிக்கு ஆபீசுக்கே போகலை...’’ என்றபடி ஷூக்களை கழட்டி ரேக்கில் வைத்தான்.

‘‘அப்ப எங்க போய்ட்டுவரே... இப்படின்னு தெரிஞ்சி ருந்தா அப்பா வாங்கிக் கொடுத்திருக்கற அந்த வீட்டைப் போய் பாத்துட்டுவந்துருக்கலாம்ல?’’

– மாலதியின் கேள்வி எரிச்சலை பீறிட வைத்தது. அடக்கிக் கொண்டான். சாவித்ரி கோயிலுக்கு வரச் சொன்னதையும், போய் அவளை காணாமல் திரும்பிய தையும் எப்படி சொல்வது என்று தெரியாமல் அமர்ந்தான்.

‘‘சரி... இப்பகூட கெட்டுப் போயிடல. எல்லாருமா அந்த வீட்டை போய் பார்ப்போமா?’’

– மாலதி வீடுவீடு என்று அதிலேயே காய்ந்தாள். ரஞ்சனி தலைதுவட்டியபடி வந்தாள். ஆச்சரியப்பட்டாள்.

‘‘என்ன சார்... நீங்களும் இன்னிக்கு லீவா?’’ கேட்கும்போதே போன் அடித்தது. போய் எடுத்தாள்.

‘‘யார் மன்னியா..?’’

‘‘ஆமா... என்ன சாமிநாதன்?’’

‘‘சாரி மன்னி... சாவித்ரியம்மாவால அவங்க சொன்ன படி 10 மணிக்கு வர முடியலையாம். நாளைக்கு சந்திக்க லாம்னு சொல்லச் சொன்னாங்க..’’

‘‘நீங்க என்ன சொல்றீங்க?’’ ரஞ்சனிக்கு அவன் பேசு வது புரியவில்லை. அரவிந்தனுக்கோ படபடவென்று வர ஆரம்பித்தது!



ரஞ்சனி டெலிபோனில் கேட்ட அதிசய தகவலோடு அரவிந்தனை ஒரு பார்வை பார்த்தாள். அவன் தடுமாற தொடங்கியிருந்தான்.

''சாமிநாதன், அப்ப என் மாமனாரோட அந்த சின்ன வீடு.. ஐ மீன்.. நீங்க சொன்ன சாவித்ரி என் வீட்டுக்காரரை பார்க்கறதா சொல்லியிருந்தாங்களா?'' – ரஞ்சனி கேட்க சாமிநாதனுக்கும் புரிந்துவிட்டது. ''உங்களுக்கு இந்த விஷயமே தெரியாதா மன்னி?''

''தெரிஞ்சா இப்படி கேட்பேனா. ஆமா, என்ன விஷயம் அவ ஏன் இவரை பார்க்க ணும்கறா..?'' – ரஞ்சனி பேச்சை வளர்க்க, அரவிந்தன் எழுந்து அவள் அருகில் நின்றான்.

''மன்னி... அவங்கள நீங்க தப்பா நினைக்கறீங்கன்னு நினைக்கறேன். அதான் அவ இவனு வார்த்தைகள் வருது. அவங்க ரொம்ப நல்லவங்க. என்மேலயும் தப்பு இருக்கு. அவங்கள பத்தி உங்ககிட்ட முந்தியே சொல்லியிருக்கணும்..''

''என்ன சாமிநாதன், வந்து ஒட்டிண்டவளுக்காக இவ்வளவு உருகறீங்களே. எதுக்கு இவரை பார்க்க ணும்னா?''

''சாரி மன்னி... சில விஷயங்கள போன்ல பேச முடியாது. நான் நேர்ல சொல்றேனே..''

''சரி உங்க இஷ்டம்... வீடு விஷயமா ஒண்ணும் சிக்கல் இல்லையே..''

''அதெல்லாம் இல்ல. சார் இல்லியா?''

''இருக்கார். தகவல் சொல்லவா?''

''இல்ல... நீங்க சொல்லிட்டா சரி. அனேகமா நாளைக்கு அவங்க சந்திக்க விரும்பி போன் பண்ணலாம். அதுதான் தகவல்.''

‘‘சரி நான் சொல்லிக்கறேன். நீங்க வச்சுடுங்க..’’ – ரஞ்சனி திரும்பினாள். சலனப்பட்ட முகத்தோடு அரவிந்தன்.

‘‘அந்த சின்ன வீடு உங்களோட பேச விரும்பினாங்களாமே?’’

‘‘சாமிநாதனா பேசினது?’’

‘‘அவனேதான். அவங்களால இன்னிக்கு உங்கள பாக்க வர முடியலையாம். சொல்லச் சொன்னான். சொல்லிட்டேன்.’’ – வார்த்தைகளை ஒருமாதிரி சீவிச் சீவி அவள் பேசிய தொனியில் ‘எங்கிட்டயே ரகசியமா நடந்துக்க ஆரம்பிச்சுட்டேல்ல..’ எனும் கோபத்தின் குமைச்சல்.

‘‘யார் ரஞ்சனி அது சாமிநாதன்? சின்னவீடு பெரிய வீடுன்னா யாரு?’’–மாலதி குறுக்கில் புகுந்தாள்.

‘‘என்னக்கா இன்னுமா உங்களுக்கு புரியல? எல்லாம் உங்கப்பாவோட அந்த கீப்புதான்.’’

‘‘அடக் கருமாந்தரமே... அவ எதுக்கு இவனோட பேச விரும்பறா..?’’

‘‘கேளுங்க... கட்ன பொண்டாட்டிகிட்டகூட ஷேர் பண்ணிக்காத அளவு சீக்ரெட்டா வெச்சிருந்ததும் ஏன்னு கேளுங்க..’’ நன்றாகவே கொம்பு சீவிவிட்டாள்.

‘‘அரவிந்தா... என்னடா இதெல்லாம்?’’ – மாலதியும் முட்ட ஆரம்பித்தாள்.

‘‘எனக்கென்னக்கா தெரியும்? திடீர்னு நேத்து ஆபீ சுக்கு வந்தாங்க. தனியா பேசணும்னாங்க. நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவிலுக்கு வான்னுட்டு போய்ட்டாங்க’’

‘‘இப்ப புரியுதாக்கா.. அதுக்குதான் ஐயா இன்னிக்கு லீவு போட்டுருக்கார்.’’

‘‘சும்மா இரு ரஞ்சனி. விஷயம் தெரியாம பேசாதே..’’– அரவிந்தனிடம் ஆவேசம் துடுப்பு போட ஆரம்பித்தது.

‘‘என்ன சும்மா இரு... இதை ஏன் என்கிட்ட நீங்க சொல்லலை..?’’

‘‘ஆமா, அவங்க பெரிய கவர்னர். எனக்கு அப்பாய்ன்மென்ட் குடுத்துருக்காங்க. உன்கிட்ட சொல் லாததுதான் தப்பாயிடுச்சு..’’

‘‘அப்ப கவர்னரா இருந்தாதான் சொல்வீங்களா.. அப்படித்தானே...?’’

‘‘ரஞ்சனி சும்மா இரு. நான் பேசிக்கறேன். அரவிந்த் என்னடா குழப்பம்? அப்பா திரும்ப நம்மளோட சேர நினைக்கறது அவளுக்கு பிடிக்கலையா. உன்னை கூப்பிட்டு எச்சரிக்கை பண்ண நினைச்சாளா..?’’

‘‘எதுவும் தெரியாதுக்கா... ஆனா ஒண்ணு! அவங்கள பத்தி நம்ம பர்சப்ஷன் ரொம்ப தவறு. இதுமட்டும் என்னால சொல்லமுடியும்.’’

‘‘எங்ககிட்ட ஏன் மறைச்சே?’’

''காலைல ஆபீஸ் கிளம்பற வரை நான் அவங்கள சந்திக்கறதா வேண்டாமாங்கற குழப்பத்துலையே இருந்தேன். நானே தெளிவா முடிவு எடுக்க முடியாத நிலைல உங்ககிட்ட என்னத்த சொல்றது.?''

''அடப்போடா... குழப்பமாம் குழப்பம். எப்ப அப்பாவுக்கு தெரியாம சந்திக்க விரும்பினாளோ அப்பவே அதுல ஏதோ இருக்குன்னுதானே அர்த்தம்.''

''அதனால...''

''எங்ககிட்ட சொல்லியிருந்தா நானோ ரஞ்சனியோ ஐடியா கொடுத்துருப்போம். சரி விடு. நாளைக்கு சந்திக்கறேன்னு சொல்லியிருக்கால்ல. அப்ப நாங்களும் வரோம். என்ன சொல்றானு பாக்கறேன். ஆமா எனக்கு ஒரு சந்தேகம்.''

''என்ன?''

''அவ கழுத்துல தாலி இருக்கா...?''

''அதெல்லாம் எதுக்கு பாக்கணும்..?''

''மட்டி... மட்டி... அதுதாண்டா அவ லீகலா, இல்லீகலாங்கறதுக்கு சாட்சி.'' – மாலதிக்கு புத்தி எங்கெங்கோ போனது.

குழந்தை ராகவிக்கு ஆயாசமாய் இருந்தது. ''எனக்கு பசிக்குது... என்னை யாராவது கவனிக்கி றீங்களா?'' – என்று வயிற்றைத் தட்டி காட்டியது.

''இவ ஒருத்தி... வாடி...'' – ரஞ்சனி அவளை இழுத்துக்கொண்டு டைனிங் டேபிள் நோக்கி நடந்தாள்.

தப்பித்தவறிக்கூட மீனாட்சியை அந்த சாவு வீட்டில் பார்த்ததை, மீனாட்சி நவ ஜீவன் ஆஸ்ரம வேனில் ஏறிச் சென்றதை பற்றி மூச்சு விடவில்லை. சொன்னால் அரவிந்தன் என்ன செய்வான் என்று ஒரு விநாடி யோசித்துப் பார்த்தாள்.

நேராக ஆஸ்ரமத்துக்கு போய் காலில் விழுந்து கூட்டிக்கொண்டு வரலாம். அவள் வர சம்மதிக்கா விட்டாலும் இவன் தினம் போய் அவளை சந்திக்கலாம். புது வீட்டை பற்றி பேசலாம். அவள் அதை தொடர்ந்து தட்டிவிட முயற்சி எடுக்க லாம். எல்லாம் கூடிவந்து சாவி வாங்கப் போகும்போது அதை தடுத்துவிட்டால்...?

கேள்வி மனசுக்குள் கொத்த, கைகள் சோற்றை அள்ளிப்போட்டு நெய்விட்டு பிசையத் தொடங்கியது. அதை பார்த்தபடி வந்த மாலதி ''ரஞ்சனி... சாப்ட்டுட்டு நாம அந்த புதுவீட்டை பாத்துட்டு வந்துரு வோமா?'' என்றபடி டைனிங் சேரை இழுத்துப்போட்டு அமர்ந்தாள்.

எரிச்சலாக வந்தது ரஞ்சனிக்கு. அடக்கிக்கொண்டு உம் கொட்டினாள்.

''சாவி இப்ப யார்ட்ட இருக்கு..?''

''சாமிநாதன்கிட்டன்னு நினைக்கி றேன். போன் பண்ணிச் சொன்னா அவன் அங்க வந்துடுவான்.''

‘‘முதல்ல சொல்லு. இனிமே சாவி ஏன் அவன்ட்ட இருக்கணும்? அதான் ரிஜிஸ்ட்ரேஷன் முடிஞ்சுருச்சுல்ல..’’

‘‘உம்... பத்திரமெல்லாம்கூட சாமிநாதன்கிட்டதான் இருக்கணும்.’’

‘‘முதல்ல அதை வாங்கு. அப்புறம் கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாம போய்டப் போகுது..’’ எனக்கு தெரியாதாக்கும்? என்கிற மாதிரி மாலதியை பார்த்த ரஞ்சனி ‘உன்னைத்தான் எப்படி சமாளிக்கப் போறேனோ தெரியல’ என்று தனக்கு தானே சொல்லிக் கொண்டாள்.



அந்தப் பெண் பார்ப்பதற்கு தண் ணீரில் விழுந்த ரோஜா போல இருந்தாள். கூடவே ஒரு நாற்பது வயதுக்காரன் அமர்ந்திருந்தான். அவனிடம் சுத்தமாய் பளபளப்பில்லை. அறுவடையான வயலைப் போல சிரைக்காத தாடை, எண்ணெய்ப் பசை மின்னும் தோல் பாகம், வகிடு இருந்தும் அது தெரி யாதபடி கலைந்த தலை, சுமாரான சட்டை என்று பாதயாத்திரைக்காரனைப் போல் இருந்தான். அவனை பார்த்தபடியே வந்து தன் இருக்கையில் அமர்ந்தான் மூர்த்தி.

அந்த பெண்ணும் அந்த ஆணும் எழுந்து வணக்கம் சொன்னார்கள்.

மூர்த்தி மேஜையில் கிடந்த பேப்பரை எடுத்தபடி அதை ஒரு அரைப் பார்வை பார்த்தான். குடித்திருப்பது கண்ணில் தெரிந்தது. ஒரு கட்டுமானமும் இருந்தது. தினம் குடிப்பவர்களுக்கு வசப்படுகிற விஷயம் அது.

‘‘வணக்கங்க...’’ – இது அந்த மனிதன்.

‘‘வணக்கம். என்ன லோகு, சான்ஸா?’’ – நேரிடையான விசாரிப்பு. பார்வை என்னவோ பேப்பர் மேலே.

‘‘ஆமாங்க... நேத்து ஸ்டுடியோல பார்த்தப்ப சொன்னேங்களே... இதுதாங்க அந்தப் பொண்ணு...’’

‘‘அப்படியா... உன்னை வரச் சொல்லியிருந்தேனா..?’’

‘‘ஆமாங்க... இல்லாட்டி ஒருமணி நேரமா காத்து கிட்டிருப்பேங்களா?’’

‘‘சரி... நான் ஏதோ ஞாபகத்துல வரச் சொல்லிட்டேன். டைரக்டர் ஆர்ட்டிஸ்ட் செலக்ஷன் எல்லாம் முடிச்சுட்டாரேய்யா. போனவாரம் வந்து பார்த்துருக்கக்கூடாது?’’ – மூர்த்தி சிகரட் பற்றவைத்து அந்த அறையை புகையால் மூட ஆரம்பித்தான். அந்தப் பெண் சற்று இருமினாள்.

‘‘என்னய்யா... இந்த புகைக்கே இப்படி இருமுது. இப்படி இருந்தா எப்படிய்யா சினிமால முன்னுக்கு வர முடியும்?’’ – மூர்த்தி மீண்டும் புகையோடுகூட கொஞ்சம் புன்னகையோடு கேட்க பதிலுக்கு லோகு என்னும் அவன்

‘‘இல்லீங்க... எல்லாம் சொல்லித்தாங்க கூட்டிகிட்டு வந்திருக்கேன். நீங்கதாங்க பெரிய மனசு பண்ணனும்’’ – என்று படுவேகமாக சொல்லி முடித்தான்.

மூர்த்தி நிதானமாய் அந்தப் பெண்ணை ஊடுருவத் தொடங்கினான். களையான முகம். அங்கங்களில் பூரிப் பான வளர்ச்சி. ஆனாலும் மழைப்புறா போல அவளிடம் ஒருவித முடங்கலும் மருகலும் இழையோடிக் கொண்டி ருந்தது.

‘‘பேர் என்ன சொன்னே?’’

‘‘வச்ச பேர் அன்னலட்சுமிங்க. சினிமாவுக்காக நியூமரா லஜில்லாம் பார்த்து ஸ்ரீலட்சுமின்னு வச்சுகிட்டிருக்குங்க..’’

‘‘ஸ்டேஜ ப்ளே ஏதாவது பண்ணியிருக்கா..?’’

‘‘பண்ணிருக்குங்க... காலேஜ்லல்லாம் நடிச்சிருக்காம். அன்னம் சொல்லு..’’ – அவன் திரும்பி ஊக்கிவிட்டான்.

அந்த பெண் ஆம் என்கிறமாதிரி தலையை ஆட்டிற்று.

‘‘வாய திறந்து பேசமாட்டியா... இப்படி இருந்தா எப்படி டயலாக் பேசுவே?’’ – மூர்த்தி கிளறினான்.

‘‘இல்ல... நல்லா பேசுவேன்!’’ – அவளும் மெல்ல வாயைத் திறந்தாள்.

‘‘வாய்ஸ் கட்டையா ஆம்பளைக் குரல்ல இருக்கே... அதுக்கு டப்பிங்ல அட்ஜஸ் பண்ணிக்கலாம். சரி போட்டோ கொடுத்துட்டு போ. அடுத்த படத்துக்கு பயன் படுத்திக்க பாக்கறேன்’’ – மூர்த்தி சாதுர்யமாக ஒரு மாதிரி ஆசை காண்பித்து பின் இப்பொழுது முடியாது என்கிற மாதிரி பேச, ‘‘அப்படி எல்லாம் சொல்லக்கூடாது. இப்பவே நீங்க மனசு வெச்சா வாய்ப்பு தரலாம். துண்டு ரோலா இருந்தாலும் பரவால்ல. சொன்னா நம்பமாட்டீங்க. சினிமால நடிக்கற ஆசைல வீட்டைவிட்டே வந்துடுச்சு..’’ – என்று லோகநாதனும் விடாமல் வலை விரித்தான்.

மூர்த்தி உதட்டில் ஒரு குரூரச் சிரிப்பு. கூடவே புகை. பின் ஏளனமாய் கேள்வி.

‘‘அது என்னய்யாது... ஓடி வர்ற பொண்ணுங்கல்லாம் உன்கிட்டயே வர்றாங்க. இப்ப சக்கை போடு போட்டு கிட்டிருக்காளே ஷைலா... அவகூட நீ அறிமுகப்படுத் தினவதானே?’’

‘‘ஆமாங்க...’’

‘‘உங்கிட்ட நன்றியோட இருக்காளா?’’

‘‘எங்கயாவது பாத்தா, அண்ணே நல்லா இருக்கீங்க ளான்னு கேட்கும். அவ்வளவுதாங்க..’’

‘‘அப்ப உனக்கு கமிஷன்லாம் கிடையாதா?’’

‘‘முதல் மூணு படத்துல சம்பாதிக்கறதுல ஒரு பர்சன்டேஜ் போட்டுக் கொடுத்துடுவாங்க. நானும் அதிகம் எதிர்பார்க்கறதில்லீங்க.’’

‘‘அதான் டிப்பிக்கல் மாமா மாதிரியே இருக்கே. இப்படி இருக்காதே. ஆள் பாதி ஆடை பாதி... தெரியும்தானே?’’

பதிலுக்கு லோகுவிடம் ஆமோதிப்பான தலையாட்டல்.

‘‘சரி... நான் டைரக்டர்கிட்ட பேசிட்டு எதாவது பண் றேன். சம்பளமெல்லாம் பெருசா எதிர்பாக்காதே. உனக்கு தான் தெரியுமே... இங்கல்லாம் முன்னவிட்டு பின்னதானே பிடிக்கணும்?’’

‘‘எல்லாம் சொல்லித்தாங்க கூட்டிகிட்டு வந்துருக்கேன். அதெல்லாம் நெளிவுசுளிவோட நடந்துக்கும்ங்க..’’

‘‘அப்ப சரி.. நீ போயிட்டு சாயந்திரமா வா. இது இங்கேயே இருக்கட்டும். புரொட்யூசரும் பாத்துடட்டும்..’’

‘‘தாராளமாங்க.. உங்க எதிர்பார்ப்புக்கு குந்தகம் வராம நடந்துக்கும். கொஞ்சம் என்னையும் கவனிச்சா நல்லது..’’ – லோகு தலையைச் சொரிய மூர்த்தி சிரித்துக்கொண்டே ஒரு ஐந்நூறு ரூபாய் தாளை எடுத்து நீட்டினான்.

‘‘சந்தோஷம்ங்க.. நான் வரேங்க..’’ – அவன் வெளியேற கச்சிதமாய் காரிலிருந்து இறங்கி உள்ளே நுழைந்து கொண்டிருந்தார் ரங்கராஜன். அவரைப் பார்த்தவன் குழைவோடு ஒரு பெரிய கும்பிடு போட்டான். அவர் லட்சியமே செய்யவில்லை. விறுவிறுவென்று நடந்தார். டிராயிங் ரூமில் அந்தப் பொண்ணையும், மூர்த்தியையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு நேராக தனது ஏ.ஸி. அறை கதவை திறந்து உள்ளே சென்று அமர்ந்தார். மூர்த்தியும் பின்தொடர்ந்து அவர் முன்னால் போய் அமர்ந்தான்.

‘‘யாரு மூர்த்தி அது... சான்ஸ் கேட்டு வந்துருக்குதா?’’

‘‘ஆமாம் ராஜு. பொண்ணு ஊட்டி கேரட்டாட்டம் படு ஃப்ரெஷ்ஷா இருக்கா. ஆனாலும் புதுசு..’’

‘‘எப்படி யூஸ் பண்ணிக்கப் போறே.. அதான் எல்லா கேரக்டருக்கும் ஆளை போட்டுட்டோமே..’’

‘‘இப்ப என்ன.. புதுசா ஒரு கேரக்டரை சேர்த்து ஸ்க்ரீன் ப்ளே பண்ண சொல்லிட்டா போச்சு. இப்ப மூட்ல இருக் கியா, அனுப்பட்டுமா?’’

‘‘ஐயோ.. வேண்டாம்ப்பா. உடம்பே சரியில்லை.. இப்பக்கூட டாக்டர்கிட்ட போயிட்டுதான் வரேன்..’’

‘‘என்ன ஆச்சு.. திரும்ப நெஞ்சுவலியா?’’

‘‘ஆமா.. டாக்டர் பிடிச்சு தாளிச்சுட்டாரு. கொஞ்ச நாளைக்காவது தண்ணி, எண்ணெய் சேக்காம இருக்கக் கூடாதாங்கறாரு. என்னப்பா லைஃப் இது?’’

‘‘என்ன ராஜு பயமுறுத்தறே. சரி.. சரி.. நீ போய் ரெஸ்ட் எடு. மிச்ச விஷயங்களை நான் பாத்துக்கறேன்..’’

‘‘வரச் சொல்லிட்டு இப்ப போன்னா எப்படிப்பா, செக்கெல்லாம் கையெழுத்து போடணும்னியே?’’

‘‘சொன்னேன்.. நீ உடம்பு சரியில்லேன்னு சொல்லவும் எனக்கு பக்குங்குது. செக்கை பார்த்தே, பி.பி எகிறிடும்..’’

‘‘எப்படியும் நான்தானே போடணும். கொண்டா போட் டுட்டே போறேன்..’’

‘‘இப்ப வேண்டாம்.. நீ புறப்படு. முதல்ல ரெஸ்ட் எடு. எல்லாத்தையும் அப்புறமா பார்த்துக்கலாம்..’’ மூர்த்தி படுசெயற்கையாக பரபரத்தாலும் ரங்கராஜனுக்கு புரியவேயில்லை. இதெல்லாம் புரியவே புரியாது என்று தெரிந்துதான் இப்படிப் பேசுகிறானோ.. அவ்வளவு சொல் லியும் ரங்கராஜன் கிளம்பாமல் வழிசலாக பார்த்தார்.

‘‘என்ன ராஜு.. கிளம்புங்கறேன்ல..’’

‘‘அட போப்பா.. உன்கிட்ட நான் டாக்டரைப் பார்த்த விஷயத்தைச் சொல்லியிருக்கவே கூடாது’’ – ரங்கராஜன் ஒரு மாதிரி அலுத்துக் கொண்டார். மூர்த்தி அதை கேட்டு ரசித்து சிரித்தான். பின், ‘‘உனக்கு கூழுக்கும் ஆசை.. மீசைக்கும் ஆசை. சரி இப்ப நான் என்ன பண்ணணும் கறே?’’ – ஒரு மாதிரி குழையடித்தான்.

‘‘மனசே சரியில்ல. நீதான் உற்சாகப்படுத்தணும்..’’

‘‘எதுக்கு சுத்தி வளைக்கறே. அந்த ஊட்டி கேரட் இப்ப உனக்கு வேணும். அவ்வளவுதானே?’’

பதிலுக்கு ரங்கராஜன் கண்சிமிட்டினார்.

‘‘உடம்பு சரியில்லேங்கறே.. ஆசையும் படறியேப்பா..’’

‘‘எனக்கு ஒண்ணும் ஆகாது.. நீ அனுப்பு..’’

‘‘மாடி ரூமுக்குப் போ. நான் அனுப்பறேன். அப்படியே செக்குகள்ள கையெழுத்தும் போட்டு அனுப்பிடு..’’

ரங்கராஜன் மந்திரித்த கோழி போல தலையை ஆட்டிவிட்டு கிளம்பினார். சில நிமிடங்களில் அந்தப் பெண் பின்னாலேயே படிகளில் ஏறிச் சென்றாள். அவளுக்கு பின்னால் மூர்த்தியின் கைத்தடி ஒருவன் செக்புக்குகளுடன் பின்தொடர மூர்த்தி அவனை வைத்து ஒரு பத்திரத்தையும் கையில் வைத்தான். அவனோ, ‘‘கையெழுத்து போடு வாருங்களா?’’ என்று சந்தேகமாக திருப்பிக் கேட்டான். ‘‘ராஜு இப்ப எந்த பேப்பர்ல வேணும்னாலும் கையெழுத்து போடுவான். என்ன இது பத்திரம்னு படிக்க ஆரம்பிச்சா, சாரி முதலாளி இது உங்களுக்கு இல்லை; தப்பா எடுத்துட்டு வந்துட்டேன். இது ஆர்டிஸ்ட் கான்ட்ராக்ட் பத்திரம்னு எடுத்துக்கிட்டு வந்துடு..’’

‘‘சரிங்க..’’

‘‘பாத்துடா... சொதப்பிடாதே!’’ – மூர்த்தி எச்சரிக்க அவனும் தலையை ஆட்டிவிட்டு மாடி ஏறினான். ஐந்தாவது நிமிடமே சிரித்தபடி இறங்கிவந்து அவற்றை மூர்த்தியிடம் தந்தான். மூர்த்தியின் முகத்தில் பரவசம்!

மிரட்டலாக இருந்தது அந்த வீடு.

நிச்சயம் பத்து லட்சம் என்பது மட்டமான தொகை. முந்நூறு சதுர அடிக்கு குறையாத ஹால். அதில் ராஜஸ் தான் மார்பிள். காலை வைக்கும்போது ஜில்லிப்பு கவ்வியது. மாலதிக்கு விழுந்து புரள வேண்டும் போல் இருந்தது. அரவிந்தனும் அசந்திருந்தான். மாலதி ‘‘சூப்பர்.. சூப்பர்..’’ என்றாள். ரஞ்சனி ஏற்கனவே பார்த்திருந்த தால் வாசலில் சாமிநாதனுடன் ஒதுங்கியிருந்தாள். சாவித்ரி அரவிந்தனை சந்திக்க விரும்பிய விஷயத்தை கிளறிப் பார்த்தாள். அவன் மென்று விழுங்கிக் கொண்டிருந்தான்.

‘‘மன்னி.. நான் ஒரு உண்மையைச் சொன்னா நீங்க என்னை கோவிச்சுக்கக்கூடாது..’’

‘‘எதுவா இருந்தாலும் சரி.. சொல்லுங்க..’’

‘‘உண்மையில இந்த வீடு உங்களுக்கு கிடைக்கணும்னு ஆசைப்பட்டது சாவித்ரியம்மாதான்..’’

‘‘அப்ப என் மாமனார்..?’’

‘‘அவருக்கு உங்களை எல்லாம் நினைச்சுப் பார்க்கக் கூட பிடிக்கலேங்கறதுதான் உண்மை..’’

‘‘இவ எதுக்காக எங்களுக்கு கரிசனப்படணும்..’’

‘‘விலாவாரியால்லாம் தெரியாது மன்னி. அவங்கதான் இந்த வீட்டை கொடுக்க ஆசைப்படறாங்கங்கன்னு முந் தியே தெரிஞ்சா நீங்க பிடிகொடுக்காம போயிடுவீங்கன்னு நினைச்சுட்டாங்க. என்னையும் சொல்லாதேனுட்டாங்க.’’

‘‘அப்ப என் மாமனாரோட சொத்துபத்தெல்லாம் இப்ப அவ பேர்லதான் இருக்கா..?’’

‘‘இல்ல மன்னி... இந்த சொத்தையே அவங்க உங்களுக்காக சிரமப்பட்டு வாங்கித் தந்துருக்காங்க..’’

‘‘என்னால நம்ப முடியல சாமிநாதன். சினிமால வர்ற திடுக்கிடும் திருப்பம் மாதிரி இருக்கு. எங்கேயாவது ஆடுகளுக்காக ஓநாய் வருத்தப்படுமா..?’’

‘‘சத்தியமா அவங்க ஓநாய் இல்லை. அவங்ககிட்டே பேசுங்க. புரிஞ்சுக்குவீங்க. கஷ்டப்பட்டு வாங்கித் தந்தி ருக்கற இந்த வீட்டை வேண்டாம்னு மட்டும் சொல்லி டாதீங்க. சார் அவசரப்பட்டுடப் போறார்..’’

‘‘அவர் கிடக்கறார்.. எது எப்படி இருந்தாலும் இது என் மாமனார் பணத்துல வந்ததுதானே? இதுல எங்க ளுக்கு இல்லாத உரிமையா?’’

''இதேதான்.. இதைத்தான் அவங்களும் உங்ககிட்ட எதிர்பார்க்கறாங்க. ரங்கராஜன் சார் சொத்துக்கு நீங்க உரிமை கொண்டாடணும். அவர் சொத்தையெல்லாம் பிளாக் பண்ணணும். இதுதான் அவங்க விருப்பம்..''

''நீங்க சொல்றதை பார்த்தா சொத்தெல்லாம் அந்த சாவித்ரிக்குகூட சேராம வேற எங்கேயோ போகுதா..?''

''போதும் மன்னி.. நான் இவ்வளவு பேசினதே அதிகம். ஒரு விஷயம்.. அவங்களுக்கு இப்ப உங்களைவிட உங்க மாமியார் முக்கியம். அவங்களைப் பார்க்க துடிச்சு கிட்டிருக்காங்க. இருக்கற இடம் தெரிஞ்சிச்சா..?''

சாமிநாதன் அங்கு தொட்டு இங்கு தொட்டு மீனாட்சியிடம் வந்து நின்றான். ஒரு க்ஷணம் ரஞ்சனிக்கு நெஞ்சைய டைத்தது. இருந்தும், தான் அறிந்த உண்மைக்கு திரை போட்டவளாய் ''இன்னும் தெரியலை, சாமிநாதன்!'' என்றாள்.



**சா**மிநாதனிடம் மீனாட்சியைத் தெரியாது என்று மறைத் துப் பேசிய ரஞ்சனி தொடர்ந்து அவனை நோண்டியபடியே கேட்க அவனும் ''என்னை எதுவும் கேக்காதீங்க...''என்றே எல்லாவற்றையும் சொல்லியபடி இருந்தான்.

அரவிந்தனும் மாலதியும் மொட்டைமாடியில் இருந்தனர். வடக்குப்பக்கமாய் நட்டிருந்த ஒரு தென்னை, மொட்டை மாடி கைச்சுவர் அருகில் பாளை தள்ளி கலீர் என்று பூத்தி ருக்க ராகவி அதை தொட்டுப்பார்த்து பரவசப்பட்டுக் கொண் டிருந்தது.

வாசலை ஒட்டிய போர்டிகோ நிழலில் ரஞ்சனியின் பீறாய்வு.

''ஆமா... என் மாமியாரை எதுக்கு அந்த சின்ன வீடு பாக்கணும்கறா?''

''என்ன மன்னி. உங்க மாமியார்தானே சட்டபடி ரங்கராஜன் சாரோட மனைவி..''

''அப்ப இவ சட்டப்படி என் மாமனாரை கல்யாணம் பண்ணிக்க லையா?''

''அப்படித்தான் நினைக்கறேன். உங்க மாமனார் பயங்கர கில்லாடி. தாலிகட்டாமலே அவங்களை இவ்வளவு நாள் சமாளிச்சிருக்காங்க..''

''ஆனா அவளுக்கு பசங்க இருக்காங்கல்ல..''

''ஒரே பொண்ணு. ஏற்காடு கான்வென்ட்ல படிச்சுகிட்டிருக்காங்க..''

''என்ன வயசிருக்கும்..?''

''ப்ளஸ் ஒண்ணோ டூவோ படிச்சுகிட்டு இருக்குன்னு நினைக்கிறேன்.''

''வயசு வந்த பொண்ணா.. கெட்டிக் காரிதான். பொண்ணையாவது படிக்க வைக்கணும்னு தெரிஞ்சிருக்கே..''

''இன்னும் அவ இவன்னே பேசிகிட்டிருக் கீங்களே. சங்கடமா இருக்கு மன்னி..''

''போதும் சாமிநாதன். உங்களை இனி எதுக்கும் நம்பறதா இல்லை. இவ்வளவு விஷயங்களை தெரிஞ்சு வச்சுகிட்டு ஊமைக் கோண்டா நீங்க எங்ககிட்ட எவ்வளவு வேலை பாத்துருக்கீங்க..''

''என்ன மன்னி... நான் நல்ல காரியம் தானே பண்ணியிருக்கேன்..''

''அத எப்படி இப்ப நான் சொல்ல முடி யும். சரி பத்திரம் உங்ககிட்டதான இருக்கு?''

''ஆமா. சார் வாங்கிக்கறேன்னு சொல்லிட் டாரா?''

''அவர் என்ன சொல்றது.. வீட்டுக்குள்ள நுழைஞ்சு அவங்க ஜொள்ளு விட்டுகிட்டு அங்குலம் அங்குலமா பாக்கறதப்பாருங்க..''

''எது எப்படியோ... என்னை சார் தப்பா நினைச்சுடக்கூடாது. அதுக்கு நீங்கதான் பொறுப்பு''

''அப்ப நான் தப்பா நினைச்சா உங்களுக்கு கவலை இல்லையா?''

''ஐயோ... என்னை யார் தப்பா நினைச்சா லும் வருத்தப்படுவேன். சத்யமா சொல்றேன். இந்த வீடு விஷயமா ஆரம்பத்துல எனக்கே எதுவும் தெரியாது. ரங்கராஜன் சார் பிரியமா பண்றதாதான் நினைச்சு கிட்டிருந்தேன்..''

''சரி சரி... பத்திரத்தை கொண்டாங்க. என் நாத் தனார் ஒருத்தி. இப்ப அவளை வேற சமாளிச் சாகணும்..''

அவன் ஹேண்ட் பேகிலிருந்து பத்திரம் எடுத்து நீட்டினான்.

''என்ன.. பத்திரமா. ரஞ்சனி அவசரப்படாதே. நல்ல நேரம் பாத்து வாங்கணும்..'' – மாடியிலிருந்து மாலதியின் குரல் காத்திருந்த மாதிரி பாய்ந்து தடுத்தது. ரஞ்சனிக்கு அவளைச் சுடலாம் போலிருந்தது.

''போச்சு... ஆரியக்கூத்தாடிக்கு காரியத்துல கண்ணுங்கற மாதிரி இவ ஒருத்தி. நீங்க தாங்க..'' – வாங்கி தன் ஜோல்னா பையில் போட்டு ஜிப்பை இழுத்து மூடினாள்.

மாலதியும் அரவிந்தனுடன் இறங்கி வந்து பெருமூச்சை சிதறவிட்டாள். மூச்சு முட்டலோடு ''பத்திரத்தை வாங் கிட்டியா?'' – என்று படபடத்தாள்.

''இப்ப நல்ல டயம்தான்கா. தெரிஞ்சுதான் வாங்கி னேன்..'' என்று ரஞ்சனியும் அரவிந்தனைப் பார்த்தாள்.

அவனிடம் எந்த எதிர்ப்புமில்லை. விஸ்தாரமான வீடு அவனை மயக்கி கட்டிப்போட்டுவிட்டிருந்தது.

''என்ன சார்... வீடு பிடிச்சிருக்கா?'' – ரஞ்சனி கேட்டாள்.

''பிடிக்கலைன்னா என்னை குருடன்னு திட்டுவே. அதான் பத்திரத்தை வாங்கிட்டியே இன்னும் என்ன?'' – அவனும் நன்றாகவே சமாளித்தான்.

''ரஞ்சா... என் விஷயத்தை விட்டுட்டியே..'' – மாலதி கையை உதறிக்கொண்டு கேட்ட விதத்தில் அவள் பரித விப்பு பளிச்சென்று தெரிந்தது.

''அதான் பேசிகிட்டிருக்கேன். நல்ல வீடா பாத்து கிட்டே இருக்கேன். கூடிய சீக்கிரம் அமைஞ்சிடும்கறார் சாமிநாதன்.''

ரஞ்சனி சாமர்த்தியமாக சமாளிக்க சாமிநாதன் மிரண்டு போனான். மாலதியை சற்று பரிதாபமாகப் பார்த்தான்.

''என்ன பாக்கறீங்க... மெட்ராஸ்ல வீடுகளுக்கா பஞ் சம். எங்க அப்பா என் வீட்டைப் பத்தி சொன்னாரா?''

– இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது..? அவன் பதிலை தேடும்போது ரஞ்சனி முந்திக்கொண்டாள்.

''என்னக்கா நீங்க... அவரோட அவ்வளவு சொத்துமே நமக்குத்தானே வரப்போகுது. அவர் மறந்தாலும் இவர் விடுவாரா... இல்ல நான்தான் விட்றுவேனா..?'' – என்று மாலதியை தற்காலிகமாக சமாளித்தாள்.

''சரி மன்னி, அப்ப நான் கிளம்பறேன்'' – சாமிநாதன் இனியும் நிற்பது பேச்சை வளர்த்து சிக்கலில் மாட்டிவிட லாம் என்று உணர்ந்தவனாய் நழுவக் காலெடுத்தான்.

''சரி... நீங்க கிளம்புங்க. நான் உங்களுக்கு அப்புறமா போன் பண்றேன்'' – என்ற ரஞ்சனி அரவிந்தன் பக்கம் வேகமாக திரும்பி ''ஏங்க ஒரு கலர் வாஷ் கொடுத்தா வீடு இன்னும் பளிச்சின்னு ஆயிடும்ல?'' என்று அவன் சாமிநாதனை இழுத்து வைத்து பேச ஆரம்பித்துவிடாதபடி திசை திருப்பினாள்.

அவன் தலை அரைமனசாய் ஆடி ஆமோதித்தது.

''அதெல்லாம் வேண்டாம். குடிவந்து கொஞ்சநாள் கழிச்சு அதை எல்லாம் பண்ணிக்கலாம். இப்பவே யாராவது பார்த்தா கண்ணுபடும். அப்படி இருக்கு வீடு..'' என்று மாலதி

மீண்டும் தனது நாட்டாமையை விஸ்தரிக்க ரஞ்சனிக்குள் பெட்ரோல் இல்லாமலேயே மனதில் ஆளுஞ யரத்துக்கு தீ முண்டது.

சாமிநாதன் போய்விட்டிருந்தான். ராகவி அருகில் உள்ள செம்பருத்திச் செடியில் பூப்பறித்துக் கொண்டிருந்தது.

''அடியே... எதுக்குடி இப்ப பூவைப் பறிக்கறே. வாடி இங்க...'' – அதட்டி அவளை அருகில் அழைத்தாள் ரஞ்சனி. அதுவும் கையில் பூக்களுடன் அவளை நெருங்கி வந்து ''பாட்டிக்கு செம்பருத்தின்னா ரொம்பப் பிடிக்கும்தானே?'' என்று கேட்டது. இதனால் மீண்டும் மீனாட்சி ஞாபகம் ரஞ்சனிக்குள் நங்கூரம் போட அரவிந்தனும் அம்மா ஞாபகம் வந்தனாய் ''அம்மா இந்த வீட்டைப் பார்த்தா என்ன சொல்வாளோ. இல்லக்கா..'' என்றான்.

''சொல்ல என்ன இருக்கு. இருபதுவருஷம் கழிச்சு இப்பவாவது அப்பாவுக்கு நமக்கெல் லாம் செய்யணும் கொள்ளணும்னு தோணிச் சேன்னு சந்தோஷப்பட்டா தேவலை. ஆனா அது பிடிக்காம எங்கயோன்னா போய் உக்காந்துகிட்டிருக்கா?''



– மாலதி திரும்பவும் இழுத்து பெருமூச்சு விட்டாள்.

''சரி சரி கிளம்புங்க... அவங்களப் பத்தி இப்ப நாம யோசிச்சா நமக்கும் மூட் அவுட் ஆயிடும். எங்கயோ அவங்க சந் தோஷமா இருந்தா சரி. சந்தோஷமா இருக் கேன்னு போன் பண்ணி னாங்களே. எதுக்கு நமக்கு அநாவசிய கவலை?''

– ரஞ்சனி நடந்தபடியே சர்வசாதாரணமாக சொன்னது அரவிந்தனையும் மாலதியையும் ஒரு இடி இடித்தது.

''எப்ப ரஞ்சனி அம்மா போன் பண்ணினாங்க?'' கோர ஸாக கேட்டனர்.

''வீட்டை விட்டு புறப்படும்போதுதான். இந்த ஜோல்னா வை எடுக்க உள்ளே போனேன்ல அப்ப..

''இதை ஏன் அப்பவே சொல்லலை..''

''மறந்துட்டேன். இப்ப என்ன?'' – சடாரென்று சீறினாள். அரவிந்தன் ஒரு வினாடி ஆடிப்போனான்.

''ஆமா எங்க இருக்கேன்னு சொன்னாளா?'' – இது மாலதி.

''கேட்டேனே... டொக்குன்னு போனை வச்சுட்டாங்க. எனக்கும் மூஞ்சியில அறைஞ்ச மாதிரி ஆயிடிச்சு. அதான் உங்ககிட்ட சொல்லத்தோணலை. இப்ப அவங்க பேச்சு வரவும் ஞாபகம் வந்து சொல்லிட்டேன். விடுங்கக்கா... அவங்க இல்லைன்னா என்ன. அவங்களுக்கு பதிலாதான் நீங்க இருக்கீங்கல்ல... எனக்கு அது போதும்..''

– ரஞ்சனி இட்டுகட்டி சொல்லிய பொய்யும், அதை வளைத்து ஒடித்து அதில் மாலதியை கட்டிய அழகும் மாலதியை அப்படியே சொக்க வைத்துவிட்டது.

''நீ சொன்னாலும் சொல்லலேன்னாலும் நான் இருக் கேன் ரஞ்சனி. நான் ஒண்ணும் என் அம்மா மாதிரி வறட்டுப் பிடிவாதக்காரி கிடையாது. அவளுக்கு கொடுப் பினை இல்லை... சரி விடு. அரவிந்தா அடுத்து நாம இப்ப எங்க போறோம். நேரா வீட்டுக்குதானே?''

''ஆங்... வீட்டுக்கா. பத்திரம் கைக்கு வந்திருக்கு. கோவிலுக்கு போய் சுவாமி காலடில வெச்சு எடுத்துக்க வேண்டாமா. அப் றமா உட்லண்ட்ஸ்ல அக்காக்கு பிடிச்ச தந்தூரி ஐட்டம் சாப்டுட்டுதான் வீட்டுக்கு..''

– ரஞ்சனி திரும்பவும் ஒரு சுருக்குமுடி போட்டு மாலதியை ஒரு கட்டு கட்ட அரவிந்தன் கோயில் மாடு மாதிரி தலை யை ஆட்டினான்.

ஆஸ்ரமம்.

எல்லோரும் ப்ரேயர் ஹாலில் கூடியிருந்தார்கள். அப்பா வந்தால் ஒரு ஐந்து நிமிஷம் அவர் பேசிய பிறகு த்யான ஸ்லோகமும் பாராயணமும் ஆரம்பமாகிவிடும். அப்பாவும் வந்து அவருக்காக போடப்பட்டிருந்த ஜாதிபத்ரி மரத்தால் ஆன மனையில் அமர்ந்தார். எப்போதும் பிரம்ம ஸ்வரூபமாய் நல்ல தேஜஸ் விளங்க தெரியும் அவர் முகம் ஏனோ வாடியிருந்தது. தாடையிலும் வெளளைப் புள்ளிகளாய் சிரைக்காத முடிகள்.

துக்கம் அனுஷ்டிப்பவர்கள்தான் இப்படி இருப்பார் கள். இவருக்கு என்ன வந்தது? முதல் வரிசையில் அமர்ந்திருந்த மீனாட்சி அவரை கவலையோடு பார்த்தாள். முதல் நாள் நடந்து முடிந்த சம்பவங்கள்தான் காரணமாக இருக்கவேண்டும் என்று தோன்றியது.

அப்பாவும் தனது பேச்சைத் தொடங்கிவிட்டார். வழக்கம்போல் அதில் நிறைய உதாரணங்கள், விளக்கங் கள். பின் ஓம்கார நாமம். அதன்பின் தியானஸ்லோகம் என்று வரிசையாக நித்ய அனுஷ்டானங்களில் சிரமப்படி எல்லாமே நடந்து முடிந்தது.

இனி எல்லோரும் காலை ஆகாரத்துக்கு கிளம்பிச் செல்லலாம். அப்பாவும் ஆபீஸ் ரூம் நோக்கி நடந்தார்.

மீனாட்சிக்கு அவர் அப்படி இருப்பது பொறுக்க வில்லை. பக்தவத்சலத்திடம் சொல்லிக்கொண்டு ஆபீஸ் ரூம் நோக்கி நடந்தாள். அப்பா முன் பணிவாக நின்றாள்.

''என்ன மீனாட்சியம்மா..?''

''ஒண்ணுமில்லை.. உங்க முகத்துல ஒரு சோகம் தெரிய றது. ஷவரம்கூட பண்ணிக்காம இன்னிக்கு தியான கூடத் துக்கு வந்துட்டீங்க. எனக்கு ஆச்சரியமா இருக்கு..''

''இவ்ளோதானா.. கொஞ்சம் உடம்பு சரியா இல்ல. அதோட குளிச்சேனா அதனால கொஞ்சம் ஜலதோஷம் வேற.. அவ்ளோதான். ஆமா இப்ப நீங்க எல்லாருக்கும் காலை ஆகாரம் பரிமாறணுமே.. இங்க எதுக்கு டயத்தை வேஸ்ட் பண்ணிண்டு..''

''அண்ணாகிட்ட சொல்லிட்டுதான் வந்தேன். உங்களை இந்த நிலைல பாக்க பிடிக்காமதான் வந்தேன். இப்பக்கூட சொல்றேன். நீங்க என்கிட்ட சமாளிக்கிறீங்க..''

மீனாட்சி அசராமல் அவரை மடக்க அவரிடம் ஆமோதிப்பான பெருமூச்சு.

''நான் என்னன்னு சொல்லவா?'' மீனாட்சியே கேட்டாள். அப்பாவும் சொல்லேன் பார்க்கலாம் என்கிற மாதிரி பார்த்தார்.

''அந்த நிர்மலாவை அவ கெஞ்சக் கெஞ்ச விட்டுட்டு வந்தது உங்களுக்கு சங்கடத்தை தந்துகிட்டே இருக்குது. அந்த பொண்ணோட நிலை இப்ப எப்படி இருக்கோ? அது நல்லா இருக்கோ இல்லை, கஷ்டப்பட்டிருக்கோன்னு கவலைல இருக்கீங்க.. சரிதானே?''

''சரியாத்தான் சொல்லியிருக்கீங்க.. உதவின்னு ஒருத்தர் நம்மகிட்ட கேட்கும்போது முடிஞ்சதைச் செய்யணும்கறது என்னோட சங்கல்பம். எல்லோரும் காசிக்குப் போய் கங்கைல ஸ்நானம் பண்ணும்போது தங்களுக்கு ரொம்ப பிடித்தமான ஒண்ணை கங்கைக்கு அர்ப்பணம் பண்ண ணும்னு சொல்வா. நான் கங்கைல குளிச்சப்போ அப்படி அர்ப்பணம் பண்ணின ஒரு விஷயம் என்ன தெரியுமா?''

அப்பா இடைவெளி விட்டார். மீனாட்சி கூர்மையாக அவர் சொல்லப் போவதை கவனித்தாள்.

''என்னை ஆட்டிப் படைக்கற சுயநலத்தை இந்த நிமி ஷம் விட்டுட்டேன். இனி என் வாழ்க்கைல உதவின்னு யார் எதைக் கேட்டாலும் என்னால முடிஞ்சதைச் செய்வேன்னுதான் அங்க சங்கல்பம் பண்ணிண்டேன்..''

– அப்பா சொன்ன மறுவிநாடி மீனாட்சிக்கு சுரீர் என்றது. இனி காபி குடிக்க மாட்டேன், சர்க்கரை சேர்க்கமாட்டேன், உடல்நலத்துக்கு தோதாக உப்பு சேர்க்க மாட்டேன் என்று அங்கும் சுயநலத்தோடுதான் எல்லோரும் சங்கல்பம் செய்து கொள்வார்கள். அப்படித்தான் எதையாவது சொல்லப் போகிறார் அப்பா என்று எதிர்பார்த்திருந்த மீனாட்சிக்கு அப்பாவின் பதில் ஒரு உலுக்கே உலுக்கிவிட்டது.

ஒரு மனிதன் தன் நலத்தையே அர்ப்பணிப்பது என்பது எப்பேர்ப்பட்ட செயல்?

''அதனாலதான் உங்க சங்கல்பத்துக்கு பங்கம் வந்துட் டதா நினைச்சு கவலைப் படறீங்களா?''

''இல்லையா பின்னே..''

''நான் என்னன்னு சொல்வேன். ஒரு விதத்துல அந்தப் பொண்ணை அடை யாளம் கண்டுக் கிட்ட நான்கூட இப்ப உங்க முன்னால ஒரு குற்றவாளி யாதான் தெரியறேன். நான் ஒண்ணு சொல் லவா?''

''என்ன மீனாட்சி..?''

''அவளுக்கு நிச்சயம் எதுவும் ஆகியிருக்காது. அவளோட புருஷன் பேப்பர் விளம்பரத்துல சொல்லியிருந்த மாதிரி நிச்சயம் இனி பிரச்னை வராத மாதிரி நடந்துக்கு வார்னுதான் நான் நினைக்கறேன். நிர்மலா நிச்சயம் நல்லா இருப்பா. நீங்க அவளை நினைச்சு கவலைப்பட வேண் டாம். இது ஆறுதல் இல்லை. சத்யமான வார்த்தை. அவ நல்லா இருக்காளா இல்லை யாங்கறதை கண்டறி யறது என் பொறுப்பு. அப்படி ஒருவேளை தொடர்ந்து கஷ்டப் பட்டா அப்ப நாம என்ன செய்ய முடியுமோ அதை

செய்வோம். அவளுக்கு நீங்க எந்த உதவி யையும் மறுத் துடலை. தள்ளித்தான் போட்ருக்கீங்க..''

– மீனாட்சியின் கருத்து அவருக்கும் ஆறு தலாகத்தான் இருந்தது.

''நல்லது... நீங்க போய் வேலையப் பாருங்க'' - அப்பாவும் சகஜமாகத் தொடங்க இடையிட்டது தொலை பேசி. எடுத்து காதைக் கொடுத்தார்.

மறுமுனையில் டைரக்டர் பூர்ணசந்தர்.

''நமஸ்காரம். நான் டைரக்டர் பூர்ணசந்தர் பேசறேன். நாளைல இருந்து உங்க ஆஸ்ரமத் துல ஷூட்டிங் வச்சுக்க லாம்னு முடிவு செய்திருக் கேன்..''

''அப்படியா.. ரொம்ப சந்தோஷம்..''

''நீங்க அனுப்பின பேஷண்டுக்கு அநேகமா இன்னிக்கு பைபாஸ் சர்ஜரி முடிஞ்சிடும். ஆஸ்பத்திரியில எனக்கு போன் பண்ணி சொன் னாங்க..''

''ஓ... ரொம்ப சந்தோஷம். இந்த நிமிஷம் நீங்க எனக்கு கடன்படலை. நான்தான் உங்களுக்கு கடன் பட்டுருக்கேன்..''

''எதுக்கு பெரிய வார்த்தையெல்லாம்.. அப்ப நான் உங்களை நாளைக்கு சந்திக்கறேன். இன்னிக்கு எங்க யூனிட் ஆட்களும், ஆர்ட் டைரக்டரும் வந்து முன்னேற்பாடுகள் செய்வாங்க. நீங்க ஒத்துழைக்கணும்..''

''தாராளமா வரட்டும். என்னால ஆனதை செய்யறேன்..''

அப்பா ரிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தார்.

மீனாட்சி நகராமல் அதைக் கேட்டு கலங்கி இருந்தாள்.



டைரக்டர் பூர்ணசந்தர் வரப்போகிறார், ஆசிரமம் களைகட்டப் போகிறது. சமூகத்தின் எந்த நடவடிக்கைகளிலும் சிக்காமல் தேமேயென்று ஒதுங்கிக் கிடக்கும் ஜீவன்களுக்கும் சில நாட்கள் நன்றாக பொழுது போகும்.

ஆனால், மீனாட்சிக்கு மட்டும் அதையெல்லாம் நினைத்து வயிற்றைக் கலக்கியது. எப்படி பூர்ணசந்தரின் பார்வையில் படாமல் தவிர்க்கப் போகிறோம் என்பதே கவலையாக இருந்தது. நிச்சயமாக கடந்த முறை போல இந்த முறை சமாளிக்க முடியாது. 'உங்களுக்கு ஏம்மா இந்த தலை யெழுத்து' என்று ஆரம்பித்துவிடுவார் என்று மனது பயந்தது.

புரொட்யூசர் ரங்கராஜன் தயாரிப்பில் பூர்ணசந்தர் ஒரு படம் இயக்கினார். அப்போதுதான் மீனாட்சியுடன் பரிச்சயமாயிற்று. லட்ச லட்சமாக பூர்ணசந்தருக்கு தேவைப்பட்ட போதெல்லாம் கொடுத்தவள் தான் மீனாட்சி.

அன்று அள்ளிக் கொடுத்தவள் இன்று அநாதை ஆசிரமத்தில் சமையல்கா ரியாக இருந்தால் யாருக்குதான் பொறுக்கும்?

நிச்சயம் பூர்ணசந்தர் கேட்பார். பழைய குப்பைகளை கிளறப் போவது உறுதி. எதை மறக்க வேண்டும், எதை நினைக்கவே கூடாது என்று மீனாட்சி வாழ்ந்து கொண்டிருக்கிறாளோ அது நேர் எதிர் திசையில் செயல்பட இருக்கிறது. என்ன செய்யலாம்..? நான்கு நாள் திருப்பதி, குருவாயூர் என்று சுற்றிவிட்டு வரலாமா? பாங்க் அக்கவுன்டை பார்த்தாள். போய் வரலாம் என்றது அது. அதுதான் சரி என்றும் தோன்றியது.

முதல் காரியமாக பக்தவத்சலத்தை பார்த்துப் பேச அடுப்படி நோக்கி நடந்தாள். அவர் எதையோ தேடியபடி இருந்தார். சாம்பார் வாளியை புரட்டிப் போட்டு அதன் மேல் ஏறி பரணில் ஒரு பொட்டலத்தை நோக்கிக் கையை துழாவிக் கொண்டிருக்க.. அதை கவனிக்காமல் 'அண்ணா' என்று மீனாட்சி குரல் கொடுக்க அவரும் வேகமாக திரும்ப, அந்த அதிர்வில் பக்கெட் படக்கென்று நழுவி அப்படியே அவரை குப்புறத் தள்ளியது.

க்ஷணத்தில் நடந்துவிட்டது. 'ஐயோ அண்ணா பார்த்து!' மீனாட்சி தொட்டுத் தூக்கி அவரை உட்கார்த்தி வைத்தாள்.

பக்தவத்சலத்தை குப்புறக் கவிழ்த்ததோடு மட்டுமல்லாமல் காலிலும் ஒரு வெட்டு. ரத்தம் சுதந்திரம் பெற்ற கைதி போல குபுகுபுவென்று பீறிட்டு தரையில் சிவப்புப் பாம்பு கணக்காக நெளிந்து ஓட மீனாட்சிக்கு மயக்கம் வராத குறை.

''என்னண்ணா இது.. இப்படியா வாளியை எல்லாம் கவுத்துப் போட்டு ஏறுவீங்க. இப்பப் பாருங்க..''



ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸை தேடி ஓடினாள். அதை எடுத்து வந்தவள் பக்தவத்சலத்தின் முகத்தைக்கூட பார்க்காமல் மளமளவென்று பஞ்சால் ரத்தத்தைத் துடைத்து மருந்து போடப் பார்த்தாள்.

வெட்டு ஆழமாக இருந்தது. துடைக்கத் துடைக்க ரத்தம் துளிர்த்தது. பக்தவத்சலம் மயங்கத் தொடங்கி விட்டார். மற்றவர்களும் ஸ்ரீனிவாசனும் ஓடிவந்தனர்.

''அடடா.. வெட்டு பலமா இருக்கே? மீனாட்சியம்மா இது ஃபர்ஸ்ட் எய்ட்ல்லாம் சரியாகாது. ஸ்டிச் போடணும். டாக்டர்கிட்டதான் காட்டணும். ஐயாசாமி வேனை ரெடி பண்ணு..'' ஸ்ரீனிவாசன் துரிதமானார்.

பக்தவத்சலமும் வேட்டி-பனியன் கோலத்தோடு ஸ்ரீனிவாசன் மேல் சாய்ந்தபடி கெந்திக் கெந்தி வேனை நோக்கிப் புறப்பட,

''மீனாட்சியம்மா.. நீங்கதான் டோட்டலா அடுப்படியை கவனிச்சுக்கணும். உதவிக்கு யாரை யாவது கூப்பிட்டுக்குங்க. நிச்ச யம் பக்தாவால நாலு நாளைக்கு காலை அசைக்க முடியாதுன்னு நினைக்கிறேன்..'' ஸ்ரீனிவாசன் பேச்சோடு விலகிப் போனார்.

மீனாட்சிக்கு அதிர்ச்சியாக இருந்தது. நேரம் காலம் மாறி அவளை அங்கேயே கட்டிப் போட விரும்புவது புரிந்துவிட்டது. இந்த மாதிரி சமயங்களில் காலத்தை எதிர்த்து போரிடுவதும் விபரீதமாகிவிடும். காலம் இப்படித்தான் பேசும். எதிர்க்கப் போகிறாயா என்றும் கேட்கும்.

மவுனமாக திருப்பதி, குருவாயூர் ஆசையை உதறியவள் சமையல்கட்டில் பரவிக்கிடந்த ரத்தத்தை துடைக்க ஆரம்பித்தாள்.

என்னென்ன நடக்கப் போகிறதோ? காலம் போகும் போக்கில் போய் அதை எதிர்கொண்டு தானே தீரவேண்டும்? அப்போதுதானே ஜெயிக்கலாம்?

விடிந்தது.

பாக்கெட் பால், ஹிண்டு இரண்டும் வாசல்படி அருகே கிடக்க அரவிந்தன் கதவை திறந்து அவற்றை எடுத்துக் கொண்டு திரும்பினான். பேப்பர் கனத்தது. ஞாயிற்றுக்கிழமை என்று சொல்லா மல் சொன்னது.

உடம்பும் மனசும் ஞாயிறுகளில் லேசா வதை அனுபவித்தால் உணர முடியும். அதிலும் சென்னையில் தினசரி சிடி பஸ் ஏறி, அல்லது ஸ்கூட்டரை மிதித்து டிராஃபிக்கில் ஓ(ட்)டுபவர்களுக்கு அன்றைய தினம் ஒரு கோடி ரூபாய் சன்மானத்துக்கு சமமான சந்தோஷம் தரும் தினம். ஞாயிற்றுக்கிழமைகள் வாழ்க!

உடம்பின் உள் உறுப்புகள் எல்லாம் இதை தெரிந்து வைத்துக்கொண்டு அன்றைக்கு படபடக்காமல் இருப்பது ஆராய வேண்டிய ஒரு அதிசயமான விஷயம்.

அதனாலேயே குழந்தை ராகவிகூட ஆனந்தமாக உறக்கத்தில் இருந்தது. ரஞ்சனியும் எழுந்திருக்கவில்லை. மாலதி மட்டும் எழுந்து கொல்லை வாசல்படி யருகே உட்கார்ந்து நிதானமாக நகம் வெட்டுவது, ஈருளிச் சீப்பால் தலையில் தீவிரவாதிகள் போல் ஒளிந்திருக்கும் பேன்களை பிடித்து கட்டை விரல் நகத்தில் வைத்து நசுக்குவது என்கிற தனது அன்றாடத்தில் இருந்தாள்.

முதல் நாள் ஹோட்டலில் அரவிந்தனும் செமத்தியாக கவனித்திருந்தான். பில் கிட்டத்தட்ட ஐந்நூறு வந்திருந்தது. சத்தியமாக மாலதி அவ்வளவு செலவு செய்து சாப்பிட மாட்டாள். மனசு வராது.

அவள் கணவன் செலவழிக்க தயாரானாலும் தடுத்து அதில் ஒரு புடவை வாங்கலாம் என்று ஆசைப்படுவாள். புடவை என்றால் அப்படி ஒரு ஆசை. அது தெரிந்த ரஞ்சனி

ஒரு புடவை வாங்கித் தந்துவிட்டாள். கார்டன் சில்க். தனியாக ரவிக் கைக்கு அலைய அவசியமில்லாதபடி புடவையோடு சேர்ந்தே இருந்தது.

காணாமல் போன அம்மா பற்றிய கவ லையின்றி எப்படி இப்படி சாப்பிட்டு ஆசையாக புடவையும் வாங்கிக் கொள்ள முடிந்தது என்பதெல்லாம் கேட்க வேண்டிய கேள்விகளாக இருக்கலாம். ஆனாலும் கேட்கக்கூடாத கேள்வியாகத்தான் அரவிந்தனுக்கு தோன்றியது.

ஹிண்டுவை திறந்ததும் 'மீனாட்சி சில்க்ஸ்' என்னும் துணிக்கடை விளம்பரம் கண்ணில்பட அம்மா நினைப்பில் விழுந்து பேப்பரை மடித்து வைத்தான். அவனுக்கு ஏனோ நெருடலாக இருந்தது.

'அரவிந்தா நீ இப்படி இருக்கறது நியாயமாடா?' என்று அவனுக்குள் ஒரு குரல் கேட்கிற மாதிரியும் தோன்றியது.

அப்பா பற்றி பேசியதற்கே வீட்டை விட்டு போய்விட்டவள் இப்போது அவர் கிரயப்படுத்தி தந்திருக்கும் வீட்டுக்கு தான் சொந்தக்காரனாகிவிட்டது தெரிந்தால் என்ன நினைப்பாளோ என்று யோசித்த வன், அந்த கேள்வியில் கிடந்த பாரத்தை சுமக்கமாட்டாதவன் போல தலையை கோதிவிட்டுக்கொண்டு அப்படியும் இப்படியும் பார்த்தான்.

தொட்டியில் ஒரு குரோட்டன்ஸ் செடி. தண்ணீர் பார்த்து நாளாகிவிட்ட மாதிரி வாடிக் கிடந்தது. ஜன்னல் கிரில்களில் சிலந்திப் பூச்சிகள் அடுக்குமாடிகளை கட்டிக்கொண்டு குடித்தனம் நடத்துவதும் கண்ணில்பட்டது.

தாடையை கைகள் தடவிக் கொண்ட போது நரநரவென்று முடிக்கூட்டம். எப்போது சிரைக்கப் போகிறாய் என்றது.

எரிச்சலாக வந்தது. எல்லாமே ஞாயிறு வேலைகள். செய்யத் தவறினால் வீடும் முகமும் களையிழந்து விடும் .

மீனாட்சி இருந்தவரை இதெல்லாம் கண்ணில்பட்டதேயில்லை...

''அரவா, காபி கொண்டுகிட்டு வரட்டா?'' உள்ளிருந்து மாலதி குரலை அனுப்பினாள்.

''உம்..'' என்றான் அநிச்சையாக. பத்தாவது நிமிஷம் காபியோடு வந்தாள்.

காபி என்று கஷ்டப்பட்டு நம்பி குடிக்க வேண்டும். டபரா இல்லாமல் வெறும் தம்ளரில் அதீத சூட்டோடு மாலதி தந்த விதத்திலும் பொறுப்பான பெண்ணிமை இல்லை. மீனாட்சி நேர் எதிரானவள்.

'அம்மா உன் கைக்கு காப்பு பண்ணிப் போடணும்மா' என்று விமரிசனம் செய்யும் அளவுக்கு அந்த முந்நூறு மில்லி திரவத்திலும் வெற்றிச் சங்கு ஊதுவாள் மீனாட்சி. 'அவள் வயிற்றில் பிறந்தும் இவளுக்கு அந்த சாதுர்ய லாவண்யங்கள் வசப்படாமல் போய்விட்டதே?' மனதில் எழும்பிய கேள்வியோடு பார்த்தான் அரவிந்தன்.

''என்னடா பாக்கறே.. ஆமா, இன்னிக்கு அந்த சின்ன வீட்டு சிந்தாமணியை போய் பார்க்கப் போறியா?''

‘‘அடடே.. ஆமால்ல அவங்க இன்னிக்கு சந்திக்கிறதா சொல்லியிருக்காங்கல்ல..’’ கைகளை உதறினான்.

‘‘எப்படிடா அரவா இப்படி இருக்கே. நிஜமா சொல்றேண்டா ரஞ்சனி மட்டும் இல்லேன்னா நீ முன்னுக்கு வர்றதுங்கறது இந்த ஜென்மத்துல சாத்யமில்லடா..’’

அவள் சலித்துக்கொள்ள அரவிந்தன் முறைத்தான்.

‘‘என்ன பாக்கறே.. நான் கேட்டதுல என்ன தப்பு? எனக்கு ராத்திரி பூரா தூக்கம் இல்லை தெரியுமா?’’

‘‘...’’

‘‘இப்படியே முறைச்சா.. எதனாலன்னு கேளேன்..’’

அவன் கேட்கவில்லை. அவள் தொடர்ந்தாள்..

‘‘அவ எந்த குண்டைத் தூக்கிப் போடப் போறாளோ.. அது எப்படி வெடிக்கப் போகுதோன்னு எனக்கும் ரஞ்சனிக்கும் ஒரே கவலை. நீ என்னடான்னா அவ நினைப்பே இல்லாம உட்கார்ந்துக்கிட்டிருக்கே..’’

– அரவிந்தன் மவுனமே இவள் வரையில் சரியான ஆயுதம் என்கிற மாதிரி தொடர்ந்து வெறிக்க அவளும் விடாமல் தொடர்ந்தாள். ‘‘இன்னிக்கு நீ அவளைப் பார்க்கப் போகும்போது நானும் ரஞ்சனியும் உன்கூட வர்றதா இருக்கோம்..’’

பகீரென்றது அரவிந்தனுக்கு. ‘‘நீங்க எதுக்கு?‘‘

‘‘அவ என்ன சொல்றான்னு தெரிஞ்சுக்க வேண்டாமா?’’

‘‘நா வந்து சொல்லிட்டுப் போறேன்..’’

‘‘கிழிச்சே.. உனக்கெல்லாம் சாமர்த்தியம் போதாது. அவளும் விவரமான பொம்பளைதான். பேச நினைக்கறவ நேரா வீட்டுக்கே வரலாம்ல?’’

‘‘என்னக்கா சொல்ற நீ?’’

‘‘அவ பயங்கர கைகாரி. அதான் வீடுதேடி வந்து பேசினா எனக்கும் ரஞ்சனிகும் தெரிஞ்சிடும்னு உன்னை தனியா வரச் சொல்லியிருக்கா..’’

‘‘என்ன பேசப் போறாங்கன்னே தெரியாம எதுக்கு இப்படி கற்பனைல வளர்த்துகிட்டு போறே?’’

‘‘எல்லாம் தெரியும். நான் சொல்றத நீ நல்லா கேட்டுக் கோடா. அப்பாக்கு நம்ம ஞாபகம் வந்து சேர துடிச்சிகிட்டிருப்பாரு. சேர்ந்துட்டா இவ கதி அதோ கதின்னு பயந்து போயிருப்பா. அதான் அங்க அவரை கட்டிப் போட்டுட்டு உன்னை கூப்பிட்டு ஒரு வீட்டை வாங்கிகிட்டதோட ஒதுங்கிக்குங்க; திரும்ப சொந்தம் கொண்டாட வந்துடாதீங்கனு சொல்ல நினைச்சிருப்பா..’’ மாலதி கையை ஆட்டிச் சொன்னவிதத்தில் நல்ல அழுத்தம்.

குழப்பத்தோடு அரவிந்தன் வெறிக்க தலைமுடியை அள்ளி முடிந்தபடி ரஞ்சனியும் வந்து நின்றாள்.

‘‘குட்மார்னிங்.. என்ன காலங்கார்த்தால மாநாடு?’’ கொட்டாவி பிரிய கேட்டவிதத்தில் ஒருவித குத்தல். ‘‘வா.. எல்லாம் அவளை பத்திதான் பேசிகிட்டி ருக்கேன்..’’

‘‘இவர்கிட்ட போய் எதுக்கு காலங்காத்தால அந்த பேச்சு. அதான் நானும் கூட போகப் போறேன்ல? எல்லாத்தயும் நான் பார்த்துக்கறேன். ஆமா, சாமிநாதன்கிட்ட இருந்து போன் வந்துச்சா?’’

‘‘அதெல்லாம் வரல. ஆமா என்னை ஏன் விட்டுட்டே. நானும்தானே வரப்போறேன்?’’

மாலதி ஒருவித ஆவேசத்தை குழைத்தபடி கேட்க ரஞ்சனிக்குள் ‘சனியன்.. சனியன்..’ என்று ஒரு குரல் ஒலித்து அடங்க ‘‘நீங்களும்தான்கா..’’ என்றாள் இழுத்து.

‘‘நீங்க யாரும் என்கூட வரக்கூடாது. இது என் குடும்ப விஷயம்!’’ க்ஷணமும் தாமதிக்காமல் சீறினான் அரவிந்தன்.

‘‘உன் குடும்ப விஷயமா.. அப்ப நாங்க யார் தெருவுல போறவங்களா?’’ மாலதி பேச்சோடு மோவாய்க்கு வலக் கையை கொண்டு செல்ல ரஞ்சனியும் முறைத்தாள்.

‘‘எனக்கு எதிரா பேசற யாரும் என் குடும்பம் கிடையாது. போதுமா?’’ அரவிந்தன் எழுந்து நின்றான்.

இதமான ஒரு பரிசு என்று கருதும் ஞாயிற்றுக்கிழமை மாலை வேறுவிதமாக மாறத் தொடங்கிவிட்டது.

‘‘என்னடா அரவா இப்படி எடுத்தெரிஞ்சு பேசறே.. நான் சொல்றது உனக்கு புரியலயா..? அவ ஜாலக்காரிடா.. அதோட ஒரு பொம்பள புத்தி இன்னொரு பொம்பளைக்கு தான் தெரியும். அதான் நாங்க வரோம்கறோம். நீ இதை புரிஞ்சுக்காம இப்படிப் பேசினா என்ன அர்த்தம்?’’

– மாலதியிடம் சுருதி குறைய தொடங்கியது. ரஞ்சனி ‘‘அக்கா.. விடுங்க.. அவரே போயிட்டு வரட்டும். வந்து என்ன பேசினாங்கன்னு சொன்னா சொல்லட்டும். இல்லாட்டி தெரியாம ஒண்ணும் போயிடப் போறதில்லக்கா.. எப்படி தெரிஞ்சுக்கணும்னு எனக்குத் தெரியும். வாங்க..’’

ரஞ்சனி மாலதியை கிளப்பினாள். அவனோ வேகமாக பாத்ரூம் நோக்கி போயே போய்விட்டான்.

மாலதிக்கு ஒரே பதைப்பாக இருந்தது.

‘‘ரஞ்சனி.. என்ன இவன் இப்படி நடந்துக்கறான்..‘‘ மாலதி ரஞ்சனியிடம் வருத்தத்தைச் சொல்ல,

‘‘பாத்துக்குங்க.. இந்த மாதிரி விஷயத்துக்கெல்லாம் இவர் அப்படியே உங்கம்மா. ஒண்ணு பிடிச்சா பிடிச்சது தான். நான் இவர்கிட்டே எவ்வளவு கஷ்டப்படுவேன்னு யோசிச்சுப்

பாருங்க...'' என்று கிடைத்த சந்தர்ப்பத்தில் ஒரு கோல் போட்டு மாலதியையும் கட்டியவள் தொடர்ந்து நின்றால் பேச்சு வளரும் என்று நழுவினாள்.

பாவம் மாலதி!

என்ன செய்வது என்று குழம்ப ஆரம்பித்துவிட்டாள்.



ஆஞ்சநேயர் கோயிலில் அவ்வளவவாக கூட்டமில்லை.

சாவித்ரி காத்துக் கொண்டிருந்தாள்.

ஹெல்மெட்டும் கையுமாய் வியர்வையை வழித்தபடி அரவிந்தன் வரவும் நெகிழ்வோடு அவனை எதிர்கொள்ளத் தயாரானாள். கை கூப்புவதா இல்லை சகஜமாக சிரிப்பதா இல்லை பார்ப்பதா என்று ஒன்றும் பிடிபடாமல் அவளை குழப்பத்துடன் பார்த்தான்.

''வாப்பா.. நீ மட்டும்தான் வந்தியா.. ரஞ்சனியை கூட்டிகிட்டு வரலியா?' என்று சாவித்ரி இதமாய் ஆரம்பித்தாள். அவனுக்கு ஆச்சரியம். அங்கே அவர்கள் அளந்து வைத்திருப்பதற்கு நேர் எதிரான பேச்சு.

''இல்ல. நான் மட்டுமதான் வந்துருக்கேன். அவ வந்தா உங்களுக்கு சங்கடமா இருக்கலாம்னு தவிர்த்துட்டேன்..''

– நிதானமாக சொல்லி முடிக்க அவளுக்கு அதிர்ச்சி.

''எனக்கு சங்கடமா? இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி உன் மனைவி குழந்தையை பார்க்க நினைச்சேன். வழி இல்லாம போச்சே..''

அவனுக்குள் ஆச்சரியம் அதிகரித்தது.

''சரி.. என்ன விஷயம்? எதுக்கு இவ்வளவு நாள் இல்லாம இப்ப எங்களைப் பார்க்க ஆசைப்பட்டீங்க..?''

''அப்படி உக்காந்து பேசுவோமா?'' அவள் கைகாட்ட அவனும் ஆமோதித்தவ னாக ஆஞ்சநேயர் பார்வை பரவலாக விழும் அந்த பிரகாரத்தின் ஒரு மூலையில் போய் அமர அவள் புடவைத் தலைப்பை தலைக்கு இழுத்துப் போர்த்திக்கொண்டு அவனை ஒரு மாதிரி பார்த்தாள். கண்கள் கலங்கி ஜலசேர்க்கை ஆரம்பித் திருந்தது.

''வரச் சொல்லிட்டு கண்கலங்கினா என்ன அர்த்தம்?''

''என் வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து நீ வந்த சந்தோஷம். வேற ஒண்ணும் இல்லை..''

‘‘சரி.. விஷயத்துக்கு வாங்க..’’

‘‘உங்கம்மா எங்க இருக்காங்கன்னு தெரிஞ்சுச்சா?’’

‘‘இல்ல.. தெரியலை!’’

‘‘நல்லா தேடினியா..?’’

‘‘இப்ப எதுக்கு இந்த கேள்வி. விஷயத்துக்கு வாங்க..’’

‘‘தப்பா எடுத்துக்காதேப்பா. உங்கம்மா வீட்டை விட்டு போயிருக்கக்கூடாது. அதுவும் முக்கியமான இந்த சமயத்துல அவங்க போனது எனக்கு பெரிய இழப்பு..’’

‘‘நீங்க பேசறதே புரியலை.. நீங்க பேச வந்ததுக்கும் அவஙகளுக்கும் என்ன சம்பந்தம்?’’

‘‘நிறைய இருக்கு.. நீங்கள்லாம் என்னை ரொம்ப தப்பா புரிஞ்சு வச்சிருப்பீங்க. குறிப்பா உன் அம்மா என் மேலே ரொம்ப கோபத்துல இருப்பாங்க..’’

‘‘விஷயத்துக்கு வர்றீங்களா..?’’

‘‘நான் வந்திருக்கறது நறுக்குன்னு நாலு வார்த்தை பேசிட்டுப் போக இல்ல அரவிந்தா. நிறைய பேசி வேண்டியிருக்கு..’’

‘‘நிறைய பேச என்ன இருக்கு.. இத்தனை வருஷம் இல்லாம அப்பா எங்களுக்கு வீடு, வாசல்னு வாங்கித் தரேன்னு சொல்லவும் உங்களுக்கு பயமா போச்சா.. பயப்படாதீங்க. இப்பகூட இந்த வீட்டை வாங்கிக்கிறதுல எனக்கு இஷ்டமில்ல. ரஞ்சனிதான் அதுல தப்பு இல்லைன்னு சொல்லி என்னை கட்டிப் போட்டுட்டா..’’

‘‘அப்ப நான் ரஞ்சனிக்குதான் நன்றி சொல்லணும்..’’

சாவித்ரியின் பதில் அரவிந்தனை கூர்மையாக்கியது.

‘‘அரவிந்தா.. அது உன் சொத்து. அப்பா சொத்து பிள்ளைக்குதானே சேரணும்? என் ஆசை, அது உனக்கும் உன் அம்மாவுக்கும்தான் கிடைக்கணும். உன் அம்மா ஒரு ஓரமா நான் இருந்துக்க அனுமதிச்சா போதும்ப்பா..’’

அவனிடம் திக்குமுக்காடல்.

‘‘உனக்கு நான் இப்படி பேசறது ஆச்சரியமா இருக்கலாம். நீ இப்ப எங்கிட்ட பேசின விதத்தை வச்சு பார்த்தா நான் உங்களை கண்டிச்சு எச்சரிக்கை செய்யறதுக்கோ இல்லை வேற எதுக்கோதான் கூப்பிட்டிருப்பேன்னு நினைச்சு நீ வந்துருக்கேன்னு நினைக்கறேன். சத்தியமா இல்லப்பா. உன்னை கூப்பிட்டது நீ நினைக்கற மாதிரியான விஷயத்துக்காக சத்தியமா இல்லை..’’

சாவித்ரி இடைவெளிவிட அரவிந்தன் ஆச்சரிய உச்சிக்கு போய்க்கொண்டே ‘‘அப்ப எதுக்கு கூப்பிட்டீங்க?’’ என்று கேட்க, அவள் கண்கள் ஆஞ்சநேயரை பார்த்தன. கைகள் கூப்பின. கண்களை மூடி சில நொடிகள் பிராத்தித்தவள் மெள்ள திறந்து ‘‘நான் இப்ப சொல்றதை கேட்டு நீ அதிர்ச்சியடையக் கூடாது’’ என்றாள் நிதானமாக.

''சொல்லுங்க..''

''உன் அப்பா ஒரு திருத்த முடியாத ஈனஜென்மம். அதல பாதாளத்துல விழுந்துகிட்டிருக்காரு. அவரை காப்பாத்துன்னு சொல்றதுக் காக இங்க வரலை..''

''பீடிகை போடாதீங்க. வேற என்னதான் விஷயம்?''

''உங்கப்பா சொத்துல நயா பைசாகூட அவர் சம்பாதிச்சது கிடையாது. அவ்வளவும் உன் தாத்தா சம்பாதிச்சது''

''சரி, அதுக்கென்ன?''

''அது இருக்கறதாலேயே அவர் ஆடற ஆட்டம் இருக்கே.. கொஞ்ச நஞ்சமல்ல..''

''அதனால?''

''அந்த சொத்தை கேட்டு நீ கோர்ட்டுக்கு போகணும்!''

அரவிந்தன் திடுக்கிட அவள் தொடர்ந்தாள்.

''ஒவ்வொரு சொத்தா அடகுவச்சு சினிமா எடுக்கறேன்னு அழிச்சுக்கிட்டிருக்காரு.. அதோட தன்னையும் அழிச்சு கிட்டிருக்கிற அவரை தடுத்து நிறுத்தணும்னா நீ இம்மீடியட்டா அவர் சொத்துக்கு சொந்தம் கொண்டாடி வக்கீல் நோட்டீஸ் அனுப்பணும். எந்தவொரு சொத்தையும் அவர் விக்கவோ அதன் மேல் அவர் கடன் வாங்கவோ அவருக்கு அனுமதி இல்லைன்னு பேப்பர்ல விளம்பரம் கொடுக்கணும்!''

சாவித்ரி முடிக்கவும் அரவிந்தன் சட்டென்று எழுந்தான்.



**சா**வித்ரியின் அந்த புதுமையான வேண்டுகோள் அரவிந்தன் வரையில் சம்மட்டியால் அடித்த மாதிரிதான் இருந்தது. ஒருபுறம் அது அதிர்வளித்தாலும் மறுபுறத்தில்

அடுக்கடுக்காக சாவித்ரி அளித்த மிக வேறுபட்ட, மாலதியும், ரஞ்சனியும் எதிர்பார்த்தது போல் இல்லாத பதில்கள் ஆச்சரியத்தையும் அளித்ததோடு அவனைக் குழப்பவும் செய்தது.

‘‘உனக்கு இது ஆச்சரியமா இருக்கும். அதிர்ச்சியாகவும் இருக்கும்னு எனக்குத் தெரியும் அரவிந்தா. இருந்தாலும் எனக்கு வேறு வழி தெரியலை. லட்சம் தடவை யோசிச்சுட்டுத்தான் நான் இந்த முடிவுக்கும் வந்தேன். நல்லவேளை அப்பப் பார்த்து சாமிநாதன் ரூபத்துல கடவுள் எனக்கு உதவி செய்தார். அதைப் பயன்படுத்தி என்னால உங்களை நெருங்க முடிஞ்சது’’

– சாவித்ரி அவன் முகம் போன போக்கைப் பார்த்தபடியே தொடர்ந்தாள்.

‘‘அப்ப இந்த வீட்டை என் அப்பா எங்களுக்கு ஆசையா தரலையா?’’

– அரவிந்தனின் அந்தக் கேள்விக்கு மட்டும் சாவித்ரியின் தலை மிகநிதானமாக ஆடியது.

‘‘என்னம்மா சொல்றீங்க.. சாமிநாதன் சொன்னதுக்கும் நீங்க சொல்றதுக்கும் நேர்மாறா இருக்கே..?’’

– அவன் குரலில் சற்று சத்தம் கூடியது.

‘‘வீட்டை நீங்க மறுக்காம வாங்கிக்க நான்தான் சாமிநாதன்கிட்ட இந்த உண்மையை மறைச்சு பேசச் சொன்னேன்.’’



‘‘நல்லாருக்கு.. உங்களுக்கு ஏன் திடீர்னு எங்க மேல இவ்வளவு அக்கறை?’’

– கேட்க வேண்டிய கேள்வியைத்தான் அவன் கேட்டான். ஆனால், சாவித்ரி அதற்கு மட்டும் எப்படி பதில் கூறுவது என்பது தெரியாதபடி அவனை மிகப் பரிதாபமாக பார்த்தாள்.

‘‘உங்களைத்தான்... உங்களுக்கு ஏன் எங்க மேல இவ்வளவு அக்கறை?’’

‘‘அக்கறை மட்டுமில்ல அரவிந்தா.. அனுதாபமும்தான்..’’

‘‘நீங்க அனுதாபப்படற நிலையிலையா நாங்க இருக்கோம். நாங்கதான் ஒதுங்கி ஒரு ஓரமாப் போயிட்டோமே..?’’

‘‘அதுக்கு நானும்தானே ஒரு காரணம்?’’

‘‘அதுக்காக.. இப்படி பொய்யாவா காரியங்களைப் பண்ணுவீங்க?’’

‘‘இதை பொய்யா நான் நினைக்கல அரவிந்தா. ஒரு நல்ல காரியமா நினைச்சுத்தான் செய்யறேன்’’

‘‘எது நல்ல காரியம்? அன்னிக்கு உங்களால என் அம்மா எங்க அப்பாவைப் பிரிஞ்சாங்க. இப்ப எங்க குடும்பத்தைவிட்டே பிரிஞ்சுட்டாங்க. அது தெரியுமா உங்களுக்கு?’’

‘‘என்னாலையா?’’

‘‘இல்லையா பின்னே.. இருபது வருஷம் கழிச்சும் நீங்க வீடு ரூபத்துல எங்க குடும்பத்துல எவ்வளவு பெரிய குழப்பத்தை உருவாக்கியிருக்கீங்க தெரியுமா?’’

‘‘நல்லது நினைச்சுத்தான் செய்தேன் அரவிந்தா. சொத்து போயிடக்கூடாதுங்கறதுக்காக மட்டுமில்ல.. அப்பதான் உன் அப்பாவை தடுத்து நிறுத்த முடியும்கறது என் எண்ணம்.’’

‘‘இல்லம்மா.. நீங்க சொல்றதை என்னால ஒத்துக்க முடியாது. இத்தனை வருஷம் கழிச்சு உங்க எண்ணபடி நாங்க நடந்தா நாலு பேர் என்ன நினைப்பாங்க. சொத்துக்காக திரும்ப வந்துட்டதா நினைக்கமாட்டாங்க?’’

‘‘இப்படிச் செய்யத் தவறினா அதே நாலு பேர் நீங்கள்லாம் இருந்தும் அவர் நடுத்தெருவுக்கு வந்தா அதை தப்பா பேசமாட்டாங்களா?’’

‘‘எதை வெச்சு அவர் நடுத்தெருவுக்கு வருவார்னு நீங்க சொல்றீங்க? அப்படியே வந்தா அது அவரோட குற்றம். அதுக்கு நாங்க என்ன செய்ய முடியும்?’’

‘‘இது இப்படி எடை போட்டு பாக்கற விஷயமில்ல அரவிந்தா. புத்திசாலித்தனமாவும் ஒரு நல்லது நடக்க சகிப்புத்தன்மையோடையும் செயல்பட வேண்டிய நேரம்.’’

‘‘ஏன் இதை உங்களால செய்ய முடியாதா?’’

– அரவிந்தன் ஆவேசத்தோடு கேட்க சாவித்ரிக்கு சிரிப்புதான் வந்தது.

‘‘என்ன சிரிக்கறீங்க?’’

‘‘சிரிக்காம என்ன பண்றது? சட்டபூர்வமா எல்லா உரிமையும் ரத்த சம்பந்தமும் உள்ள நீயே யோசிக்கிற ஒரு விஷயத்தை என்னால எப்படி முடிக்க முடியும்? நான் பாதியில வந்தவ அரவிந்தா. உன் அப்பா என்னை இன்னும் துரத்திவிடாம வெச்சுக்கிட்டிருக்கறதே யார் செய்த புண்ணியமோன்னுதான் நான் நினைக் கறேன்..’’

‘‘என்னம்மா கதை இது. இந்த காலத்துல முறையான உறவுக்கு இருக்கற சக்தியைவிட முறை இல்லாத உறவுக்குதாம்மா சக்தி அதிகம். அது தெரியாத பாப்பான்னு என்னை நினைச்சுப் பேசறீங்களா?’’

‘‘அப்படி ஒரு சக்தி எனக்கிருந்தா இப்ப உன்கிட்ட இப்படியா உதவி கேட்பேன். எப்பவோ உங்களோட அவரைச் சேர்த்து நாம எல்லாரும் ஒத்துமையால்ல வாழ்ந்துக்கிட்டிருப்போம்?’’

– பதிலுக்கு அரவிந்தன் சாவித்ரியை மிக ஆச்சரியமாக பார்த்தான். அப்படிப் பார்க்கத்தான் அவனால் முடிந்தது. இவள் சின்ன வீடு என்ற பெயரில் இருக்கும் ஒரு நல்ல தேவதையா.. இல்லை நடிக்கிறாளா?’’

‘‘என்ன பாக்கறே? ‘எந்த வைப்பாட்டி இப்படியெல் லாம் நடந்துப்பா?’ன்னு திரும்பவும் ஒரு கேள்வியைக் கேட்காதே.. காலம் எனக்கு புரிய வைச்ச விஷயங்கள் கொஞ்சநஞ்சமில்ல. நிஜமா சொல்றேன். உன் அம்மா போல ஒரு தீர்க்கதரிசனமான சுயமரியாதையுள்ள பெருந்தன்மையான ஒருத்தரைப் பார்க்க முடியாது. இங்க நீ வந்துருக்கறதால உட்கார்ந்து பேசிக்கிட்டிருக்கேன். உன் அம்மாவா இருந்திருந்தா கால்ல விழுந்து அந்த காலைப் பிடிச்சுக்கிட்டுத்தான் பேசியிருப்பேன்.. என் மனசு உனக்குப் புரியுதோ இல்லையோ அவங்களுக்கு நிச்சயமா புரியும்கற நம்பிக்கை எனக்கு இருக்கு. அவங்க எங்க இருக்காங்கன்னு சொல்லுப்பா. நான் அவங்ககிட்டேயும் பேசறேன். நிச்சயமா என் கருத்துக்கு அவங்க சம்மதிப்பாங்க..’’

‘‘இருக்கற இடம் தெரிஞ்சிருந்தா நான் இப்படி தனியாவா உங்களைப் பார்க்க வந்திருப்பேன்? அவங்களும்ல சேர்ந்து வந்திருப்பாங்க..’’



‘‘இப்பவும் கெட்டுப் போயிடலை. அவங்கள எப்படியாவது கண்டுபிடி. நானும் அதுக்கு என்ன உதவி வேணும்னாலும் செய்யறேன். அவங்களோட சேர்ந்து நீ உன் அப்பா மேல கேஸ் போடணும். அவரோட சொத்துக்கள் எதையும் அவர் விற்க முடியாதபடி செய்யணும். அதை அடகு வெச்சு பணம் வாங்க அவருக்கு உரிமை கிடையாது. யாராவது பணம் கொடுத்துருந்தா அது அவங்க சொந்த ரிஸ்க்குலதான் இருக்கணும். அடமான ஈடா அது இருக்கக்கூடாதுன்னு பேப்பர்லையும் ஒரு விளம்பரம் கொடுக்கணும்..’’

‘‘இல்லம்மா.. இதுக்கு என் அம்மா ஒருக்காலும் சம்மதிக்கமாட்டாங்க. அவரே வேண்டாம்னு வந்துட்ட எங்களுக்கு அவர் சொத்து எதுக்கு..? இப்ப சொல்றேன் இந்த வீட்டைக்கூட நான் திருப்பிக் கொடுத்துடறேன். அவர் எக்கேடோ கெட்டுப் போகட்டும். தயவுசெய்து எங்களை விட்ருங்க..’’

‘‘அரவிந்தா, சொத்துக்காக மட்டும் நான் இதை சொல்லலை. தண்ணி அடிச்சு தண்ணி விலகாது. நீங்க அவரைவிட்டு எவ்வளவுதான் ஒதுங்கியிருந்தாலும் நீ அவரோட மகன்கறதை யாராலயும் மாத்த முடியாது. உன் அம்மா அவர் மனைவி இல்லைன்னும் ஆயிடாது. உன் அம்மா உறவு வேண்டாம்னு நினைச்சிருந்தா அப்பவே விவாகரத்து வாங்கியிருக்கலாம். அவங்க ஏன் அப்படி நடந்துக்கலைன்னு யோசி..

உன் அப்பாவை சில பேராசை பிடிச்ச மனுஷங்க ஆட்டி வைக்கறாங்க.

இந்த வயசுலையும் நாள் தவறாம பாவம் பண்ணி பல பெண்கள் அழிய அவரும் ஒரு காரணமா இருக்காரு. இதுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்கற நல்ல ஆயுதம்தான் வழக்கு..’’

அவள் கரிசனமாய் பேசும்பாவனைகளில் உண்மை இருப்பதாகத்தான் அவனுக்கும் தோன்றியது. ஆனால், இதெல்லாம் எந்த அளவு சாத்யம்..? இந்த விஷயத்தில் மீனாட்சியின் கருத்து என்னவாக இருக்கும்? வழக்கு போடு என்பாளா..? இல்லை விட்டது விட்டதுதான் எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்று பிடிவாதமாக இன்று இருக்கிற மாதிரியே இருந்து விடுவாளா?

குழம்பியது.

சட்டென்று ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. தாமதமாகக்கூட இம்மட்டில் ஒரு முடிவுக்கு வர தன்னால் முடியாது என்றுதான் தோன்றியது. அப்படியே குழப்பத்தோடு மவுனத்தில் ஆழ்ந்துவிட்டான். அவளோ அவன் நல்ல பதிலைக் கூற வேண்டும் என்பதுபோல ஆஞ்சநேய சுவாமியைப் பிரார்த்தித்தப்படி இருந்தாள்.

அந்தக் காட்சியை ஆஞ்சநேய சுவாமியோடு சேர்ந்து மூர்த்தியும் பார்த்துக் கொண்டிருந்ததுதான் ஆச்சரியம்.

சாவித்ரி ஏதோ சதி செய்கிறாள் என்கிற யூகத்தில் அவளைக் கண்காணித்தது அவன் வரையில் மிக புத்திசாலித்தனமான ஒரு விஷயமாகிவிட்டது.

அரவிந்தன் என்ன சொல்லப்போகிறான் என்று கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தவன், அரவிந்தன் எந்த பதிலும் சொல்லாமல் கிளம்பிச் செல்வதைப் பார்த்து கொஞ்சம் போல நிம்மதிப் பெருமூச்சுவிட்டான். சாவித்ரிக்கு அவனது மவுனமும் விலகலும் பெருத்த ஏமாற்றமாக இருந்தது. அதேமசயம் மூர்த்தி எதிரில் வந்து நிற்கவும் பகீரென்றது!

அவன் முகத்தில் குரூரமான ஒரு சிரிப்பு மட்டும்.

எல்லோரும் வேடிக்கை பார்க்க, ஆசிரமத்தில் ஷூட்டிங் தொடங்கிவிட்டிருந்தது. அங்கங்கே ராட்சஸ ஒளிவிளக்குகள்! அதன் அருகே ஃபில்டர்களையும் தெர்மோகோல் அட்டையையும் பிடித்தபடி நிற்கும் லைட்மேன்களும் யூனிட் ஆட்களும் ஆசிரமவாசிகளுக்கு ஒரு கண்காட்சிப் பொருள் மாதிரிதான் தெரிந்து கொண்டிருந்தார்கள்.

நெற்றியை மறைத்தபடி ஒரு கர்ச்சீப்பை கட்டிக்கொண்டு தலையையும் மூடிக் கொண்டிருந்த ஒருவன்தான் அசிஸ்டெண்ட் டைரக்டராக இருக்கவேண்டும் என்று தோன்றியது.

‘‘தாப்பா.. யாருப்பா அது? அது ஃபீல்ட். அங்க யாரோ துணியை காயப் போட்டுருக்காங்க பார். அதை ரிமூவ் பண்ணு. ஆறுமுகம் நீ கொஞ்சம் அந்த பேபியை பின்னால தூக்கிட்டுப் போய் வை.. இங்க ட்ராலி வரப்போகுது, கல்லு கச்சடா இருந்தா பொறுக்கிப் போடுங்க...’’

கத்திக் கொண்டிருந்தான். ஆசிரமத்தில் நிறைய தூங்கு மூஞ்சி மரங்கள் வளர்ந்திருக்கின்றன. தரைப்பாகத்தில் நிழலை உருட்டிக்கொண்டே இருப்பதுதான் அவைகளுக்கு வேலை. அதில்தான் நடிகர்–நடிகைகள் அமர்ந்திருந்தனர்.

கால் மேல் கால் போட்டு அமர்ந்திருப்பவன்தான் ஹீரோ என்பதும் எதிரில் மற்றவர்கள் அரை மனசோடு அமர்ந்திருக்கிற மாதிரியும் தெரிந்தது.

கூடவே கையில் கண்ணாடியும், தோளில் ஒரு ஸ்வாபுமாக ஹீரோவின் உதவியாளன். ஹீரோவின் செல்போனில் இருந்து, மூக்குக் கண்ணாடி வரை எல்லாவற்றையும் ஹீரோவுக்காக அவனே வைத்திருந்தான். அப்படி வைத்திருந்தால்தான் அவன் ஒரு நல்ல உதவியாளனும்கூட! டைரக்டர் பூர்ணசந்தர் ஒரு ஏர்கூலர் பேனுக்கு முன்னால் ஸ்க்ரிப்ட் பேப்பரை புரட்டியபடி அமர்ந்து கொண்டிருந்தார். ஸ்டார்ட், கட், ரோலிங் என்கிற ஷூட்டிங் இயக்க வார்த்தைகள் அங்கே நெடுநேரமாய் கேட்க ஆரம்பித்துவிட்டது.

யாரென்று தெரியவில்லை. அம்மாவாக நடிக்கும் பெண் பாடாய்ப் படுத்திக் கொண்டிருந்தாள். அவளால் சராசரியாக பதினைந்து டேக் வரை போயிற்று ஒவ்வொரு காட்சியும்.

வசனத்தை ஒழுங்காக பேசினால் முகத்தில் ரீ ஆக்ஷன் விடுபட்டுப் போனது. ஆக்ஷனில் கவனம் போனால் வசனம் மறந்து விடுகிறது. சமயங்களில் மாற்றிப் பேசி அர்த்தமே வேறானது.

பூர்ண சந்தருக்கு அந்த ஆர்டிஸ்ட் விஷயத்தில் ஒரே கவலையாக இருந்தது. கூட நடிக்கும் ஹீரோ படுகாஸ்ட்லியான ஒரு ஆர்டிஸ்ட் ஒருநாள் சம்பளமே அவனுக்கு ஐம்பதாயிரம்!

அவனை வைத்து ஷூட் செய்யும்போது எப்படியாவது முப்பது நிமிஷ கால அளவுக்கு காட்சிகள் ஓகே ஆகிற மாதிரி எடுத்தால்தான் கட்டுப்படி ஆகும். இல்லாவிடடால் தயாரிப்பாளர் ஒரு கிழிசல் துண்டாகப் பார்த்துத் தலையில் போட்டுக்கொண்டு பிச்சை எடுக்கப் போய்விடுவதுதான் உசிதம் என்கிற மாதிரியிருந்தது சூழ்நிலை. இருந்தும் அம்மா நடிகையின் சொதப்பலால் அந்த காஸ்டலி ஹீரோவிடம் பெரிதாக வேலை வாங்க முடியவில்லை.

அவனும்கூட அலுத்துக்கொண்டான். ‘‘ஏன் சார் இப்படி ஐந்நூறுக்கும் அறுநூறுக்கும் ஆர்டிஸ்ட்டைப் பிடிச்சுக்கிட்டு வந்து எங்க உயிரையும் சேர்த்து வாங்கறீங்க. காசு போனாலும் பரவாயில்லைன்னு புரொபஷனல் ஆர்ட்டிஸ்ட்டுகளை போடலாம்ல?’’ என்று முனங்க வேறு ஆரம்பித்துவிட்டான். எல்லா கூத்துக்களையும் பார்த்தபடி அங்கங்கே அமர்ந்திருக்கும் ஆசிரமவாசிகளில் சிலர் ஒரு ஷூட்டிங் என்பது இவ்வளவு போரடிக்கும் ஒரு சமாசாரமாக இருக்கும் என்று எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அது அவர்களின் சோர்ந்த முகங்களில் நன்றாகவே தெரிந்தது.

அவ்வப்போது ஸ்ரீனிவாசன் மட்டும் எட்டி எட்டிப் பார்த்துவிட்டு ஆபீஸ் ரூமுக்கு திரும்பிக் கொண்டிருந்தார். நடுவில் அந்த அம்மா நடிகையின் தலை சமையல் கட்டுக்குள் எட்டிப் பார்த்தது. மீனாட்சியும் பார்த்தாள். அவள் பார்ப்பது தெரிந்து மிகச் சன்னமாக சிரித்த அவள் ‘‘கொஞ்சம் வெந்நீர் கிடைக்குமா?’’ என்று கேட்டாள். மீனாட்சியும் மறுதலிக்காமல் பக்குவமாக ஒரு தம்ளரில் குடிக்க முடிந்த சூட்டோடு எடுத்து வந்து கொடுத்தாள்.

வாங்கிக் குடித்தவள் முகத்தில் ஏகத்துக்கும் வாட்டம்.

‘‘ஈஸ்வரா இப்ப எடுக்கப் போற டேக்காவது ஓகேயாயிடணும்..’’ என்று மீனாட்சி காதுபட முனங்கியவள் அங்கேயே அந்த காட்சிக்கான வசனத்தை பேசிப் பார்க்க ஆரம்பித்துவிட்டாள்.

‘‘எங்கப்பா வந்தே.. அம்மா இருக்கேனா இல்லை செத்துட்டேனான்னு பார்க்க வந்திருக்கியா? உயிரோடதான் இருக்கேன். ஆனா, நிச்சயம் இனி திரும்பி வந்து உன் குடும்பத்தோட மட்டும் நான் வாழ மாட்டேன்.

எனக்கு எதுவானாலும் சரி... இந்த ஆசிரமம்தான் இனிமே என் வீடு.. இந்த ஆசிரமம்தான் இனி என்னோட உலகம்...’’

– அவள் பேசிப் பார்த்த வசனம் மீனாட்சியை ஒரு சுண்டு சுண்டியது. ஒருவேளை அரவிந்தன் அவளைப் பார்க்க வந்துவிட்டால் இதே வசனத்தைத்தான் அவளும் ஒப்பித்தாக வேண்டும். என்ன ஒரு ஒற்றுமை?

மீனாட்சி அந்த அம்மா நடிகை பேசிப் பார்த்த டயலாக்கைக் கேட்டு ஆச்சரியப்பட்ட அதே நொடி, ''சாரதாம்மா.. ரெடியா?'' என்று ஒரு அழைப்பொலி.

''ஆங் ரெடி.. இதோ வந்துட்டேன்..'' பதிலோடு அவள் அங்கிருந்து விலகினாள். மீனாட்சியையும் அந்த அழைப்பொலி இழுத்தது. அந்த வசனத்தின் தொடர்ச்சி எதுவாக இருக்கும்? ஆவல் மனதுக்குள் கேள்வி எழுப்பி காட்சியை அவளும் வேடிக்கை பார்க்கத் தூண்டியது.

தனது வாழ்க்கை நிஜம் இங்கே ஒரு கற்பனைக் காட்சியாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது! இதன் தொடர்ச்சி எப்படிப்பட்டதாக இருக்கும்..? மகன் காலில் விழுந்து கெஞ்சப் போகிறானா? கதறி அழுது அம்மா நீ என்னோட வந்துதான் தீரணும் என்று பதில் வசனம் பேசப் போகிறானா?

நிச்சயம் அரவிந்தன் வந்தால் அப்படித்தான் பேசுவான்.. அவன் அப்படிப் பேசினாலும் தான் போகப் போவதில்லை என்பதுதான் முடிவு. ஆனால், இவள் என்ன செய்யப் போகிறாள்...

புடவை முந்தியால் கையையும் முகத்தையும் துடைத்து விட்டுக் கொண்டவள் அடுப்புப் பக்கமாகப் பார்த்தாள். சமையல் முடிந்து அடுப்பு அவிந்திருந்தது. சமையல் கட்டு கடிகாரமும் மணி பதினொன்றறைதான் என்றது. மதியச் சாப்பாட்டு மணி ஒரு மணிக்குத்தான் ஒலிக்கும். அதுவரை துண்டு துக்கடா வேலைகள்தான்.. அதை பிறகும்கூட ஒரு மூச்சில் பார்த்து முடித்துவிடலாம்.

மளமளவென்று புடவைத் தலைப்பால் முட்டாக்கு போட்டுக் கொண்டவள் சமையல் கட்டைவிட்டு வெளியேறி ஷூட்டிங் நடைபெறும் பிரார்த்தனை மண்டபத்தில் கூட்டமாக நிற்கும் ஆசிரமவாசிகளின் கூட்டத்தில் போய் கலந்தாள். பார்ப்பது தெரியாமல் படப்பிடிப்புக்கான காட்சியை பார்க்க ஆரம்பித்தாள். ஹீரோ தெனாவெட்டாக நின்று கொண்டிருந்தான். அவன் எதிரில் அந்த அம்மா நடிகை. சற்றுத்தள்ளி காமிராவை ஒட்டி டைரக்டர் பூர்ணசந்தர்.

'சைலன்ஸ்..!' என்று உக்ரமான குரல். அதைத் தொடர்ந்து அமைதி. அசிஸ்டெண்ட் ஒருவன் கிளாப் கட்டையுடன் அம்மா நடிகை முன்னால் காமிராவைப் பார்த்தபடி நிற்க, பூர்ணசந்தரும் பரபரப்பான முகத்தோடு ''ரெடி ஸ்டார்ட் ரோலிங்.. ஆக்ஷன்'' என்று குரல் கொடுக்க காட்சி ஆரம்பமானது.

''நான் வரமாட்டேம்பா.. நீ எவ்வளவு கூப்பிட்டாலும் வரவேமாட்டேன்..'' இது அம்மா நடிகை.

''நானும் உன்னைக் கூப்பிட வரலை. நீ வந்தாலும் நானும் என் பெண்டாட்டியும் சேத்துக்கறதாவும் இல்லை. அதை சொல்லிட்டு போகத்தான் வந்தேன்..'' இது ஹீரோ.

''சபாஷ்.. அருமையான பிள்ளைப்பா நீ. இதைச் சொல்றதுக்கு நீ இங்க வரணுமா. அதுதான் தெரிஞ்ச விஷயமாச்சே எனக்கு..''

‘‘இந்த வாய்.. இந்த வாய்தான் உனக்கு பகையே. இந்த வாயோட இந்த ஆசிரமத்துல இருந்தே இங்கேயும் உன்னைத் துரத்திடுவாங்க. ஞாபகம் வெச்சுக்கோ..’’

‘‘அடப்பாவி தேடி வந்து என்னை வார்த்தையால சித்ரவதை செய்யறியேடா..?’’

அம்மா நடிகை எந்த உணர்வுமின்றி பதட்டம் கோபம், வருத்தம் என்கிற அந்த உணர்வுமின்றி டயலாக்கை சொன்னவிதம் பூர்ணசந்தரைக் கோபப்பட வைத்ததோ என்னவோ ‘கட்’ என்றார். காமிராவும் நின்றது. பூர்ணசந்தர் எழுந்தார். அம்மா நடிகையை நெருங்கினார்.

‘‘ஏம்மா... இதை இப்படியா பேசுவீங்க? முகத்துல ஒரு கோபமும் வருத்தமும் தெரியவேண்டாம். பரீட்சைக்கு பாடம் படிக்கறவங்க மனப்பாடம் பண்ணி ஒப்பிக்கிற மாதிரி ஒப்பிச்சா என்னம்மா அர்த்தம். ஏம்மா இப்படி உயிரை வாங்கறே?’’ – பயங்கர கோபத்துடன் அவர் கேட்டவிதம் அந்த நடிகையை திக்குமுக்காடவிட சட்டென்று கண்ணில் நீர் கோர்த்துக் கொண்டுவிட்டது.

‘‘ஆ ஊன்னா இப்படி அழுதிடுங்க.. உங்களுக்கு நடிப்பு வரலைம்மா.. பேசாம என்னால முடியலைன்னு சொல்லி ஒதுங்கிடுங்க. அப்பதான் புரொட்யூசரும் காசு போனாலும் பாதகமில்லேன்னு புரொ‌ஃபஷனல் ஆர்டிஸ்ட்டை போடுவார். எங்களுக்கும் வேலை நடக்கும். இது ரொம்ப பெரிய ரோல் முந்நூறு எபிசோட் வரை போகப் போற மெகா தொடர். யோசிச்சுக்குங்க..’’

அவன் சொன்னதில் அவளிடம் அழுகை கூடிப்போனது. அவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்த மீனாட்சிக்கு அந்த நடிகையைப் பார்க்க மிக பரிதாபமாக இருந்தது.

மெள்ள அங்கே வந்தவள் முட்டாக்கை விலக்கியபடி நடிகையைப் பார்த்தாள். நடுவில் திரும்ப அழைப்பு வந்து அந்த வசனப் பயிற்சியாளன் விலக மீனாட்சியின் கரம் அந்த நடிகையின் தோளைத் தொட்டது. அவளும் திரும்பினாள்.

‘‘கவலைப்படாதீங்க.. நான்கூட நடிப்புன்னா அது என்ன ஒரு பெரிய உலக மகா விஷயம்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். ஆனா, இப்பதான் தெரியுது. இப்பக்கூட ஒண்ணும் கெட்டுப்போயிடலை. துக்கமான சில விஷயங்களை நினைச்சுக்குங்க. அந்த பாவனை தன்னால வந்துடும். மற்றபடி டயலாக்கெல்லாம் நீங்க ரொம்ப தெளிவா பேசறீங்க..’’

அவள் சொல்லச் சொல்ல அந்த நடிகை முகத்தில் மெல்லிசாக தன்னம்பிக்கையின் படர்வு.

‘‘நான் டயலாக்கை மென்னு முழுங்கலியே..’’

‘‘சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்லை. இந்த மாதிரி இடத்துல உங்களுக்கு நிஜமா ஒரு மகன் இருந்து அவன் இப்படி நடந்துக்கிட்டா உங்க ரீ ஆக்ஷன் எப்படி இருக்கும்னு யோசியுங்க.

கிட்டத்தட்ட உங்க காரெக்டர் நிலைதான் இங்கே என்னோட நிலையும்.. நீங்க அங்க காட்ட மறந்த பாவனை என்னையும் அறியாம என் முகத்துல வெளிப்பட்டது.

அந்த ஹீரோ பேசினமாதிரி என் அரவிந்தன் பேசியிருந்தா நான் என்ன பண்ணியிருப்பேன் தெரியுமா?’’

''யார் அது அரவிந்தன்?''

''ஓ.. அதைச் சொல்லலியோ? என் மகன்மா!''

''அப்ப நீங்க எப்படி இங்க?''

''அது பெரிய கதை. அதுவா இப்ப முக்கியம். என்னை கவனியுங்க. நான் எப்படி ரீ ஆக்ட் பண்றேன்னு பாருங்க..''

மீனாட்சி தன்னை மறந்து அந்த பெண் முன்னால் நடித்துக் காட்டத் தொடங்க அங்கே பூர்ணசந்தரும் வந்தவண்ணமிருந்தார்.

அவர் வருவதோ பார்ப்பதோ தெரியாமல் மீனாட்சி கொதித்துப் போய் உரிய முகபாவங்களோடு வசனம்பேச பூர்ணசந்தர் மனதில் புதிதாய் ஒரு முடிவு.. அது..?



டைரக்டர் பூர்ணசந்தர், மீனாட்சியையும் அந்த நடிகையையும் பார்த்தபடியே நெருங்கிவர, அவர்களை மரியாதை கலந்த ஒரு பதற்றம் தொற்றிக் கொண்டது. அவர் முகத்திலோ மர்மப் புன்னகை. அத்துடன் உதடு பிரிய ஒரு கேள்வி...

''என்னம்மா... என் வேலையை நீங்க பாக்கறீங்க போலிருக்கே?'' – அவர் கேட்டு முடிக்க, பின்னாலேயே அவரது உதவியாளர் சுந்தரம் ஓடிவந்தான். அவர் கேள்வியை வைத்து, அன்றைக்கு ஷூட்டிங் கேன்சலாகப் போகிறது என்று க்ஷணத்தில் யோசித்தவன், கைகளைக் குத்தி பிசைந்து கொண்டான்.

''ஏம்மா... சும்மா இருக்கமாட்டீங்களா..? டைரக்டர் இருக்காருல்ல... அவருக்கு தெரியாதது, உங்களுக்கு தெரிஞ்சு போச்சா..?'' என்று மீனாட்சி முன் போய் கத்தினான்.

பெரிய டைரக்டர்கள், இந்த மாதிரி தரு ணங்களில் 'பேக்கப்' என்று கத்திவிட்டு காரை நோக்கி நடக்க ஆரம்பித்துவிடுவார்கள். பூர்ணசந்தரும் அப்படி நடந்ததை நிறைய முறை

பார்த்திருக்கிறான். அவனுக்கு அந்த பயம். ஆனால், பூர்ணசந்தர் இம்முறை நேர்மாறாக நடக்க ஆரம்பித்தார்.

''சுந்தரம்... மைண்ட் யுவர் வேர்ட்ஸ்! என்ன பேசறீங்க நீங்க? மீனாட்சியம்மா யார்னு தெரியுமா உங்களுக்கு?'' என்று ஆக்ரோஷமாக அவனிடம் திரும்பினார்.

''சார்ர்..!''



''போங்க.. போய் லைட்டிங்கை சேஞ்ச் பண்ணுங்க.''

– அவன் வியப்போடு திரும்பி நடந்தான். அந்த நடிகையும் மீனாட்சியும் நொறுங்கிப்போய் இருந்தார்கள். அது, அவர்கள் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.

''ஸாரிம்மா... அவன் அவசரப்பட்டுட்டான். நீங்க எனக்கு உதவிதான் பண்ணியிருக்கீங்க!'' என்ற பூர்ணசந்தர் லகுவாக சிரித்தார்.

''இல்ல... அவர் சொன்னதுதான் சரி. நான் ஒரு முந்திரிக்கொட்டை. அவசரப்பட்டுட்டேன்னு நினைக்கிறேன்...'' என்றாள் மீனாட்சி.

''நோ, நோ... பெரிய வார்த்தை யெல்லாம் எதுக்கு பேசறீங்க? உங்க கிட்ட ரொம்ப யதார்த்தமான நடிப்பைப் பார்த்தேன்... இட்ஸ் குட்!'' – அவர் மீனாட்சியை பாராட்ட, நடிகையை அது என்னவோ செய்தது.

ஸ்ரீனிவாசனும் ஓடிவந்தார். ''என்ன சார், ஏதாவது குழப்பமா?''

''ஒரு குழப்பமும் இல்லை. இப்பதான் எனக்கு நம்பிக்கை வந்திருக்கு. அம்மா, நீங்க போங்க.. நான் கூப்பிடும்போது வந்தா போதும்..''

– நடிகையை கத்தரித்து அனுப்பியவர், மீனாட்சியை உன்னிப்பாக பார்த்தார். அவளுக்குள் பூச்சிகள் பறப்பது போலப் பிரமை... எங்கே அவர் தனது பழைய கதையை கிளறுவாரோ? என்கிற தடுமாற்றம் கண்ணில் மின்னியது.

''எதுக்கு டென்ஷனாகறீங்க..? கொஞ்சம் தனியா வாங்க, உங்ககூட பேசணும்...'' – சுற்றி நிற்பவர்களை விலக்கிக் கொண்டு, ஒரு புங்கை மரத்தடியில் போய் நின்றார். மீனாட்சி தயங்கி ஸ்ரீனிவாசனை பார்த்தாள்.

''போங்க... ஏதோ பேச விரும்பறார். என்னன்னு கேளுங்க...'' – ஸ்ரீனிவாசனும் போகச் சொன்னார்.

அரைமனதாக மீனாட்சி நடந்தாள். சில அடி இடைவெளியில் நின்று அவரை பார்த்தாள். அவரும் பார்த்தார்.

''உங்ககிட்ட ஒரு உதவி கேட்கப் போறேன். நல்லா யோசிச்சுட்டுதான் கேக்கறேன். நீங்க எந்தக் காரணத்துக்காகவும் மறுத்துடக்கூடாது...''

– மீனாட்சி முகத்தில் ஆச்சரியம் கூடாரம் போட்டது.

''நீங்க ஏன் இங்கே இருக்கீங்கனு உங்க பர்சனல் லைஃப்ல நுழையறது என் நோக்கம் கிடையாது. நுழையவும் மாட்டேன். ஒண்ணு நல்லா தெரியும். சரியான காரணம் இல்லாம, நீங்க இங்கே இல்லை.''

– அவரிடம் பீடிகை. அதை அசைபோட்டபடி, ''ஏதோ உதவின்னீங்களே..?'' – பிரதான விஷயத்துக்கு இழுத்தாள்.

''கட்டாயம் செய்யணும்...''

''என்னால முடிஞ்சா செய்வேன். உங்களுக்கு உதவற அளவுக்கு என்கிட்ட என்ன இருக்குனுதான் தெரியலை...''

''நிறைய இருக்கு! நீங்க மட்டும் அந்த உதவியை செய்துட்டா, இந்த சீரியலை சூப்பர்ஹிட் ஆக்கிடுவேன்..''

''சொல்லுங்க... என்னால முடிஞ்சா செய்யறேன்...''

''எந்த கேரக்டருக்கு நீங்க நடிச்சுக் காட்டினீங்களோ, அந்த கேரக்டராவே நடிக்கணும்...'' – பூர்ணசந்தர் சொல்லி முடிக்க, மீனாட்சிக்கு தூக்கிவாரிப் போட்டது.

''உங்களால முடியும்... ஒரு டைரக்டர்ங்கிற முறையில என்னோட அனுபவத்தை வச்சு சொல்றேன். நீங்க பண்ணினா, அந்த கேரக்டர் எங்கேயோ போயிடும்...''

''வெரி ஸாரி சார். எனக்கு எது கட்டோட பிடிக்காதோ, அதை நீங்க சொல்றீங்க! என்னை மன்னிச்சுடுங்க. இந்த சினிமா என் வாழ்க்கையில, என் கணவர் மூலமா விளையாடினது போதாதா..? இதுல நான் வேற இறங்கணுமா – அதுலயும் இந்த வயசுல... மன்னிச்சுக்குங்க. முடியாது.'' – சொல்லி விட்டு, அவர் பதிலைக்கூட எதிர்பாராமல் விறுவிறுவென்று அங்கிருந்து விலகினாள்.

அவள் விலகவும் ஸ்ரீனிவாசன் நெருங்கி வந்தார்.

''என்ன சார், ஏதாவது பிராப்ளமா? நான் தெரிஞ்சுக்கலாமா..?''

''ஒண்ணுமில்லே மிஸ்டர் ஸ்ரீனிவாசன்... ஆமா, அவங்க இங்கே என்னவா இருக்காங்க?''

''சமையல் பண்றாங்க. எதுக்கு கேக்கறீங்க..?''

''ஒரு சமையல்காரியை ஒரு கேரக்டர் ஆர்டிஸ்ட்டா ப்ரமோட் பண்ண ஆசைப்பட்டேன். அவ்வளவுதான்... தப்பில்லையே..?''

''யூ மீன்...''

'' 'நடிக்க முடியுமா இந்த சீரியல்ல..?'னு கேட்டேன்...''

''ஐ ஸீ... என்ன சொன்னாங்க..?''

''நான் எதிர்பார்த்த பதிலைத்தான் சொன்னாங்க. ஆனா, நான் விடறதா இல்லை...''

''நடிக்க முடியாதுனு சொன்னாங்களா..?''

''ஆமாம்... ஆனா, அவங்க நடிக்கணும். நடிப்பாங்க! உங்களுக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லையே..?''

''இதுல நாங்க ஆட்சேபிக்க என்ன இருக்கு..? ஆனா, அவங்க ஒரு யூஷுவல் கேரக்டர் இல்லைங்கறது என் னோட அபிப்ராயம். ஆகையால...''

''அதனாலதான் அவங்க நடிக்கணும்னு சொல்றேன். இவங்களைப் பத்தி உங்களுக்கு வேற என்னவெல்லாம் தெரியும்..?''

''குட் கேரக்டர்! அவ்வளவுதான்... அவங்க வேற எந்த தகவலும் எங்களுக்கு தரலை...''

''அவங்க உண்மையில யார்னு தெரிஞ்சா அதிர்ந்து போயிடுவீங்க, தெரியுமா?'' – பூர்ண சந்தர், மீனாட்சியின் ரகசியத்தை போட்டு உடைத்துவிடுகிற மாதிரி தெரிந்தது.

''அவங்களைப் பத்தி உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா..?''

''தெரியுமாவா? நல்லா கேட்டீங்க போங்க''

''யார் சார் அவங்க..? நீங்களாவது சொல்லுங்க, தெரிஞ்சுக்கறேன்...''

''ஆதி ரங்கராஜ்னு ஒரு ஃபிலிம் புரொட்யூசர் பத்திக் கேள்விப்பட்டிருக்கீங்களா..?''

''கேள்விப்பட்ட மாதிரியும் இருக்கு, படாத மாதிரியும் இருக்கு. எனக்கு சினிமாக்காரங்க பத்தி எப்பவுமே பெரிசா கவனம் இருந்தது கிடையாது. எக்ஸப்ட்... உங்களைப் போல உள்ள சில டைரக்டர்களைத் தவிர, வேறு யாரையும் தெரியாது...''

''ஆதி ரங்கராஜ் பெரிய்ய சினிமா தயாரிப்பாளர். சொல்லிக்கிற மாதிரி படங்கள் கொடுக்கலையே தவிர, ஃபீல்டுல ஒரு தவிர்க்க முடியாத பர்சனாலிட்டி அவர்!''

''அவருக்கும் இந்தம்மாவுக்கும் என்ன சம்பந்தம்?''

''இவங்கதான் மிஸஸ் ஆதி ரங்கராஜ். பெரிய லட்சாதிபதி சாமி இவங்க!''

– ஸ்ரீனிவாசனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''இதை நீங்க ஏன் சார், முதல் தடவை இவங்களைப் பார்த்தப்பவே எங்ககிட்ட சொல்லலே..?''

''எங்கே இந்த உண்மையை சொல்லிடுவேனோன்னு அவங்க பயந்த மாதிரி தெரிஞ்சுது. அதான், சொல்லலை. இப்ப சொல்லியிருக்கேன்னா காரணம் இருக்கு. இனியும் இவங்க இங்கே கஷ்டப்படக்கூடாது. இவங்க எங்கேயோ போக வேண்டியவங்க மிஸ்டர் சீனு...''

''ஆமா... சினிமாவை சார்ந்த இவங்களா சினிமாவை வெறுக்கறாங்க..?''

''சினிமாவை வெறுக்கலே... தப்பான சினிமாக்காரங்களைத்தான் வெறுக்கறாங்கனு நினைக்கிறேன். நான் நிச்சயம் தப்பான சினிமாக்காரன் இல்லை. இந்தத் தொழில் என்வரையில் தெய்வீகமான ஒண்ணு... பிரம்மாவுக்கு பிறகு பல மனித வாழ்க்கைகளை பூமியில ரத்தமும் சதையுமா படைக்கிற சிருஷ்டிகர்த்தாக்கள் சினிமா டைரக்டர்கள் தான். அதுல நானும் ஒருத்தன். நிச்சயம் என்னை இவங்க வெறுக்கமாட்டாங்க. இவங்க என் சீரியல்ல நடிப்பாங்க... நடிக்கணும்!''

– பூர்ணசந்தர் நம்பிக்கை ததும்ப பேசினார். ஸ்ரீனிவாசன் ஸ்தம்பித்திருந்தார்!



**ம**ணி ஒன்பதை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

விடிந்ததிலிருந்தே அரவிந்தனிடம் எந்த பேச்சும் இல்லை. வழக்கமாக பக்கம் விடாமல் படிக்கும் ஹிந்து, வந்து விழுந்த விதத்தில் அப்படியே கிடந்தது. ஆபீஸ் ப்ரீஃப்கேஸை திறப்பதும் மூடுவதுமாக இருந்தான்.

நடுவில் ராகவி பிராக்ரஸ் ரிப்போர்ட்டை நீட்டியது. எந்திரம் போல் கையெழுத்து போட்டு கொடுத்துவிட்டு, சாக்ஸை எடுத்துத் தலைகீழாகப் போட்டு, பின் கழற்றி சரிசெய்து போட்டுக்கொண்டு, ஷூவை தேடினான்.

மாலதி தலைக்கு எண்ணெய் வைத்துக்கொண்டு, ஓர மாக அமர்ந்து நகம் வெட்டிக் கொண்டிருந்தாள். ரஞ்சனி உப்புமாவை கிண்டுவதும் அவன்மேல் ஒரு பார்வையு மாக இருந்தாள்.

உப்புமா அடிப்பிடித்து தீய்ந்த வாடையை கசிய விட்டது.

''ரஞ்சா... உப்புமா தீயுது பார், ஒரு கிளறு கிளறு...'' என்று மாலதி குரல் ஒலித்தது. ஆனால், அரவிந்தன் காதில் எதுவும் விழவில்லை. மூக்கிலும் எதுவும் நுழையவில்லை.

நிச்சயம் ஏதோ நடந்திருக்கிறது... அவ்வளவும் சாவித்ரியை சந்தித்த பிறகுதான். அந்த சந்திப்பை பற்றியும் மூச்சுவிட மறுக்கிறான். மாலதி நெம்பி நெம்பி கேட்டுப் பார்த்தும் பதிலில்லை. ரஞ்சனி எதுவுமே கேட்கவில்லை. கேட்கக்கூடாது என்று முடிவெடுத்த மாதிரி தோன்றியது. அரவிந்தனிடம் கேட்பதைவிட, சாவித்ரியிடம் கேட்டு விடுவதுமேல் என்று முடிவெடுத்திருந்ததால், அவனை அவன்போக்கிலேயே விட்டுவிட்டாள்.

தீய்ந்த உப்புமாவையும் அள்ளிப் போட்டு எடுத்து வந்து அவன்முன் வைத்துவிட்டு, தொடர்ந்து அவனை கவனிக்கத் தொடங்கினாள்.

அவன் டிபன்பாக்ஸை எடுத்து ப்ரீஃப்கேஸில் வைத்துக் கொண்டான். முதல் நாள் போட்ட சட்டையையே போட்டுக் கொண்டிருந்தான். வாசல்வரை போனவன், திரும்ப வந்தான். காலண்டரின் ஆணிக்காதில் புதிதாக வாங்கிய வீட்டின் சாவிக்கொத்து தொங்கிக் கொண்டிருந்தது. அதை எடுத்துக்கொண்டு நடந்தான். ரஞ்சனிக்கு பகீரென்றது!

நிச்சயம் அந்த சொத்து கையைவிட்டு போகப் போகிறது. சாவித்ரி அதுசம்பந்தமாக இவனிடம் சண்டை போட்டிருக்க வேண்டும். அதுதான் திருப்பி கொடுத்து விடுவதற்காக சாவியை எடுத்துக்கொண்டு போகிறானோ..? அப்படியானால் வீட்டுப் பத்திரம்..?

விறுவிறுவென்று முந்தியால் கைகளை துடைத்துக் கொண்டு, பீரோவை நோக்கி நடந்தாள். திறந்து பார்த்தாள். பகீர் உணர்வு இரண்டு மடங்கானது. பத்திரமும் இல்லை! பீரோ திறக்கும் சத்தம்கேட்டு மாலதியும் எழுந்து வந்தாள்.

எண்ணெய்க்கோடு நெற்றியில் நெளிய, ''என்ன ரஞ்சனி, அவன் கிளம்பவும் பீரோவை வந்து பாக்கறே..? பத்திரம் இருக்கா, இல்லையான்னா?'' – பளிச்சென்று கேட்டாள்.

ரஞ்சனிக்கு அவளது கூர்மை எரிச்சலை தந்தது. அடக்கிக் கொண்டவள், ''ஆமாங்க்கா...'' என்றாள்.

''நினைச்சேன்... அந்த சாவித்ரி இவனை என்னவோ பண்ணியிருக்கா. அதான் அம்மாவுக்கு பிள்ளை நான்தான்கிற மாதிரி வீட்டை திருப்பி ஒப்படைக்க, எல்லாத்தையும் எடுத்துட்டுப் போயிட்டான்னு நினைக்கிறேன்...''

''இல்லேக்கா... அதையும் தாண்டி, வேற என்னவோ நடந்திருக்கு...''

''நீ என்ன சொல்றே..?''

''ஒண்ணு பண்றீங்களா..?''

''என்ன ரஞ்சா..?''

''இவர் இனிமே நாம எதைக் கேட்டாலும் வாயைத் திறந்து பதில் சொல்லமாட்டார். அந்த சாவித்ரியையே நாம சந்திச்சுப் பேசிட்டா..?''

''அந்த கண்றாவி பிடிச்சவளையா..?''

''அவ யாரா இருந்தா நமக்கென்ன..? சொத்துல நமக்கு உரிமை இருக்கு. ரங்கராஜன் உங்களுக்கு அப்பா, எனக்கு மாமனார். நமக்கு இப்ப அந்த உரிமைதான் முக்கியம்...''

''சரி, அவளை பாக்கறோம்னுவை. பாத்து என்னத்த பண்ணப்போறோம்..? 'ஏண்டி இப்படி எங்க அப்பா எங்களுக்கு எதையாவது செய்ய நினைச்சாலும் நீ கெடுக்க நினைக்கிறே..?'னு சண்டை போடலாம்கிறியா..?''

''இல்லேக்கா... வீட்டை தாண்டி பெருசா ஏதோ விஷயம் இருக்கு. அது என்னன்னு தெரியணும். அதை தெரிஞ்சுக்கணும் முதல்ல. இல்லேன்னா, எனக்கு மட்டுமில்லே... உங்களுக்கும் சொத்து இல்லேன்னு ஆயிடும்...''

– ரஞ்சனி திரும்பவும் மாலதியை வளைத்துக் கட்ட, மாலதி முகத்தில் அதைக் கேட்டு கொஞ்சமாக பரவசம்.

''சரி ரஞ்சா... நான் குளிச்சுட்டு கிளம்பறேன். என்னதான் சொல்றானு பார்ப்போம்...'' என்று எண்ணெய்த் தலையை ஒருமுறை அவிழ்த்து பூமுடி போட்டுக் கொண்டவள், பாத்ரூம் வரை போய்விட்டு திரும்பி வந்தாள்.

''என்னக்கா..?''

‘‘நாம அவ வீட்டுக்கு போகப் போறோமா..? இல்லே, வேற எங்கயாவது அவளை வரச் சொல்ல போறோமா..?’’

‘‘அவளை நான் வெளியவே வரச் சொல்றேன். நான் பேசறதைவிட பெரியவங்க நீங்க பேசறதுதான் நல்லாயிருக்கும். என்னைவிட நீங்கதான் நல்லா கேட்பீங்க...’’

‘‘அதுசரி... எப்படி சொல்லப்போற இதை..? அவ போன் நம்பர் ஏதாவது உன்கிட்ட இருக்கா..?’’

‘‘எதுக்கு இருக்கார் சாமிநாதன்? நீங்க கவலைப் படாதீங்க... போங்க, போய் குளிச்சுட்டு வாங்க...’’

– ரஞ்சனி ஒரு யுத்தத்துக்கு எல்லாவிதத்திலும் புத்திசாலித்தனமாக தயாராகிவிட்டது பளிச்சென்று தெரிந்தது. குழந்தை ராகவி பார்த்துக்கொண்டே இருந்தது!

**ர**ங்கராஜனின் வீட்டுக்கு மார்வாடி ஒருவர் வந்திருந்தார். மூர்த்திதான் அழைத்து வந்திருந்தான். மார்வாடியைப் பார்த்த சாவித்ரிக்கு தேள்கொட்டியது போலிருந்தது.

அந்த மார்வாடி சினிமாக்காரர்கள் நடுவில் பிரசித்தி பெற்றவர். எத்தனை கோடி கடன் கேட்டாலும் தரக்கூடியவர். அவரிடம் அதற்காக அடமானம் வைத்த பொருளைத்தான் இதுவரை யாரும் மீட்டதாக சரித்திரம் இல்லை.

‘‘நமஸ்தே ரங்கராஜ் ஜி... எப்டி இருக்கீங்கோ..?’’

‘‘என்ன கேள்வி சேட்டு இது... நீங்க கடன் கொடுத்தா, நான் தப்பிக்கலாம். அதுதான் இப்ப என் நிலை. மூர்த்தி சொல்லியிருப்பானே...’’

‘‘சொல்லிச்சு, சொல்லிச்சு... ஆமா, ப்ராஜக்ட் செலவு எவ்ளோ..? பிசினஸ் மார்க்கெட் எவ்ளோ..?’’

‘‘மூர்த்தி... அந்த விஷயமெல்லாம் நீ சொல்லலையா..?’’

‘‘இல்லே ராஜா... அதெல்லாம் நீ உன் வாயால சொல்றதுதான் சரியா இருக்கும்...’’

‘‘அட, என்னப்பா நீ? நீதானே புரொடக்ஷன் மானேஜர். உனக்குத் தெரியாததா, எனக்கு தெரிஞ்சுடப் போகுது..?’’

‘‘சேட் பிசினஸை பிசினஸா பண்ற நபர். நான் தோரா யமா சொல்லியிருக்கேன். நீ தெளிவாகவே சொல்லிடு...’’ – மூர்த்தியிடம் மாறாத அந்த போலி பவ்யம்.

‘‘சேட்ஜி... நேராவே விஷயத்துக்கு வரேன். 25 வருஷமா நான் ஃபீல்டுல இருக்கேன். இருக்கேன்னு பேர்தான். சம்பாதிச்சதவிட விட்டதுதான் அதிகம். இதுல விட்டதை இதுலயே பிடிச்சுடணும்னு பாக்கறேன். மூர்த்தி ஒரு ஜோசியரை கூட்டியாந்தான். அவர்தான் சொன்னார். குரு எனக்கு இப்ப ஒன்பதாம் இடத்துக்கு மார்றானாம். ஒன்பதுல குரு வந்தா, தொட்டதெல்லாம் பொன்னாகுமாமே? அதான், துணிச்சலா பெரிய அளவுல இறங்கறதா தீர்மானிச்சுட்டேன்.’’

‘‘பெரிய அளவுன்னா..?’’

‘‘அஞ்சு கோடி சேட்டு...’’

‘‘அச்சா!’’

‘‘ஆர்ட்டிஸ்ட் சம்பளமே இரண்டுக்கு மேல போயிடும். ஹீரோவுக்கே ஒண்ணரை சம்பளம்! ஆனா, அந்தாளுக்கு தான் இப்ப மார்க்கெட்டு. பேர சொன்னா வித்துடுதாம்ல’’

‘‘அச்சா!’’

‘‘என்கிட்ட சில்லரையா ஒரு அம்பதுதான் இருக்கு. ரிஸ்க் எடுத்தாகணும். எனக்கு இப்ப நாலரை வேணும்...’’

‘‘நாலரை என்னா... அஞ்சு, ஆறு, ஏழுகூடத் தரான் இந்த சேட்! கண்டிஷன்ஸ் தெரியும்தானே..?’’

‘‘என்ன... என் சொத்தோட மதிப்பு எவ்வளவுனு உங்களுக்கு தெரியணும்... அவ்வளவுதானே..?’’

‘‘அதுமட்டுமில்லே... அது சுத்தமா இருக்கணும். அதுல க்ராஸ் இருக்கக்கூடாது...’’

‘‘எங்க வேணா செக் பண்ணிக்கோ. இன்னிக்கெல்லாம் அஞ்சு கோடிக்கு குறையாது. மவுண்ட் ரோட்ல இருக்கிற ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் ஒண்ணு போதுமே...’’

‘‘அதுமேல அம்பது வாங்கியிருக்கிறதா கேள்விப்பட்டேனே...’’

‘‘சரிதான்! எல்லா விஷயமும் தெரிஞ்சுதான் வச்சிருக் கீங்க. அதும் பேர்லயும் பாலாத்தங்கரை மாந்தோப்பு பேர்லயும் பணம் கொடுங்க. ஐம்பதை திருப்பி குடுத்துட்டு அந்த பார்ட்டியை ரிலீஸ் பண்ணிடறேன்...’’

‘‘அச்சா! படம் நல்லா வந்தா, டிஸ்ட்ரிபியூஷன் எடுத்துக்குவேன். நார்த் ஆர்க்காட் நம்ம ஏரியா. ஓகே–வா..?’’

‘‘யாருக்கோ கொடுக்கறதுக்கு, உங்களுக்கே கொடுத்துட்டுப் போறேன். இப்ப என்ன..?’’

‘‘படம் நல்லா வரணும். அது முக்கியம். மெடல் வாங்கற ஆசையில, வெஜிடேரியன்குக் பண்ணிடக்கூடாது. மும்பையில ‘சோனா’னு ஒரு படம். பக்கா நான்வெஜ்! நானே ஸ்க்ரீன் ப்ளே செஞ்சு தந்தேன். அஞ்சு ரூபால முடிச்சு, பதினஞ்சு ரூபாக்கு ஃபர்ஸ்ட் பிசினஸ் பண்ணோம். இப்ப செகண்ட் ரவுண்ட்ல, முப்பது ரூபா தாண்டிடுச்சு!’’

‘‘மூர்த்தி எல்லாம் சொன்னான். எனக்கு ஜெயிக்கணும் சேட்... டெல்லி அவார்ட்லாம் யாருக்கு வேணும்..? நம்ம டைரக்டர் பையனும் புதுசு. இதுல ஜெயிச்சாதான் அவனுக்கும் வாழ்க்கைல கதவு திறக்கும். இல்லே, சமாதி தான்...’’ – ரங்கராஜன் விஸ்தாரமாகச் சொல்லிக்கொண்டு இருக்க, மூர்த்தி அருகில் நின்றபடியே இருந்தான்.

‘‘உட்காரு மூர்த்தி... நீ ஏன் நிக்கறே..?’’

‘‘இல்லே ராஜா... இங்கே இப்ப நீ என் நண்பன் கிடையாது. புரொட்யூசர். நான் மானேஜர். உன் எதிரே உட்காரமாட்டேன். உன் எதிர்க்கக்கூட உட்கார்ந்துடுவேன், சேட் எதிர்க்க நிச்சயமா மாட்டேன்...’’ — மூர்த்தி இதுதான் சமயம் என்று சேட்டையும் ஒரு தூக்கு தூக்க, சேட் ஆனந்தமாகச் சிரித்தார்.

‘‘இவன் ஒருத்தன் சேட்... என் கூடவே இருக்கான். எனக்காக ரொம்ப கஷ்டப்படற ஒருத்தன். அடுத்த படத்துல இவனை கோ—புரொட்யூசரா ஆக்கப்போறேன்...’’

‘‘அச்சா... அதை இப்பவே செஞ்சுரலாம்ல?’’ - சேட் டமார் என்று தூக்கிப் போட்டார்.

‘‘இப்பவேவா..?!’’ — அதிர்ந்தார் ஆதி ரங்கராஜ். ஆமோதிப்பாய் சேட்டின் சிரம் ஆடியது.

‘‘சேட்... அதெல்லாம் வேண்டாம். ராஜாவுக்கு எனக்கு எப்ப, என்ன பண்ணணும்னு தெரியும். நீங்க வேற..’’ — மறுப்பதுபோல் ஒரு மெல்லிய பாவ்லா மூர்த்தியிடம்!

‘‘இல்லே மூர்த்தி.. ரங்கராஜு ஹெல்த் பத்தி சேட் அடிக்கடி கேள்விப்பட்றான். நடுவுல எதுவும் ஆயிடக் கூடாது. நீ பவர் வாங்கிக்கோ. கோ புரொட்யூசர்னு பேரும் போட்டுக்கோ. நாளைக்கி ஜீக்கு ஏதாவது ஆச்சுன்னா, அப்புறம் டோட்டல் ப்ராஜக்ட்தானே அடிவாங்கும்..’’

‘‘அது எப்படி சேட்... அதான் பத்திரத்தை எல்லாம் ப்ளெட்ஜ் பண்ணி கொடுத்துட்றேன்ல. நான் கடனை திருப்பி கொடுத்தா, அது எனக்கு திரும்பப்போகுது. இல்லாட்டி அது உங்களுக்குதானே?’’ — ரங்கராஜ் வேகமாக மேஜைமுன் வந்து மார்பையும் நிமர்த்தினார்.

‘‘க்யாஜி... க்யா..? எனக்குச் சட்டம் தெரியாதுனு நினைக்கறீங்களா நீங்கோ..?’’ — சேட் கேள்வியோடு தங்க பொடி டப்பாவைத் திறந்தார்.

‘‘இதுல சட்டச்சிக்கல் எங்க இருக்கு?’’

‘‘ஏன் இல்ல? உங்களுக்கு வாரிசுங்க இருக்குதுல்ல?’’ — சேட்டின் கேள்வி ரங்கராஜ் பொட்டில் வலியாக மாறத் தொடங்கியது. மூர்த்தி யைத்தான் பதிலுக்கு பார்த்தார்.

‘‘சேட் உன் முதல் சம்சாரம் பத்தியும், அவங்க மகன் மகளை பத்தியும் சொல்றார்னு நினைக்கிறேன்’’ — மூர்த்தி எடுத்துக் கொடுத்தான்.

‘‘அது முடிஞ்சுபோய் இருபது வருஷமாச்சு. என் பையன் எப்படி இருப்பான்னுகூட எனக்கு தெரியாது...’’

‘‘நூறு வருஷம் ஆகட்டும். சட்டப்படி அவங்களுக்கு பவர் உண்டுதானே?’’

‘‘அதெல்லாம் ஒரு புடலங்காயும் கிடையாது. மூர்த்தி என்ன சொல்றான் இந்த ஆளு... பையன், பொண்ணுன்னு கிட்டு...’’ — ரங்கராஜ் சற்று கோபமாகப் படபடத்தார்.

‘‘பதட்டப்படாதே ராஜா. பிசினஸ் பேசும்போது சேட் எல்லாத்தையும் அலசத் தான் செய்வார். முழுசா கேளேன்.’’

‘‘அது சரி... இதெல்லாம் இவருக்கு எப்படி தெரியும்?‘‘

''சேட்டுக்கு ரெண்டு கண் மூஞ்சி மேலேனா இருவது கண்ணு பிசினஸ்ல... சட்டப்படி உங்க சொத்துல எந்த உரிமையும் அவங்களுக்கு இருக்கக்கூடாது. இருபது வருஷமா பிரிஞ்சு இருக்கறவங்களை சட்டப்படி பிரிச்சுவிடுங்கோ. அப்பதான் சொத்துல வில்லங்கம் இல்லே ப்யூர் ப்ராப்பர்டின்னு ஆகும். அப்புறம் இந்த சேட் அஞ்சு என்ன, பத்துகோடிகூட தரான். டீக் ஹே..?''

– சேட் தன் எதிர்பார்ப்பை போட்டு உடைக்க, அவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்டபடி இருந்த சாவித்ரிக்கு பகீர் என்றது.

போன் அலறியது. எடுத்தாள். சாமிநாதன் பேசினான்.

''அரவிந்தன் சாரை பாத்துப் பேசிட்டீங்க போல?''

''ஆமா... ஏதாவது சொன்னாரா..?''

''அவர் எதுவும் சொல்லல. ஆனா, அவர் மனைவி ரஞ்சனியும் அக்கா மாலதியும் உங்களோட பேசணுமாம்..''

''அப்படியா..?''

''ஆமா மேடம். எங்க சந்திக்கலாம்னு கேக்கறாங்க..''

''எங்கவேணா சந்திக்கலாம். அனேகமா நான் அரவிந்தன்கிட்ட பேசினதோட எதிரொலியாதான் எல்லாம் இருக்கும்னு நினைக்கறேன். இங்கேயும் விஷயம் விபரீதமா போய்கிட்டு இருக்கு..''

''அப்ப உடனே கிளம்பிவர்றீங்களா..?''

''வரேன்... நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோயிலுக்கே வரச் சொல்லிடுங்க..''

''நல்லது!''

– சாவித்ரி போனை வைத்துவிட்டு திரும்பினாள். மூர்த்தி பார்த்துக் கொண்டிருந்தான். முகத்தில் அசாத்ய இறுக்கம்!



மூர்த்தியை பார்த்ததுமே சாவித்ரிக்கும் முத்துமுத்தாக வியர்க்க ஆரம்பித் தது.

உள்ளே சேட்டும் ரங்கராஜனும் சற்று சத்தமாகவே பேசிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது.

மூர்த்தி அவளை சமீபித்தான்.

''என்ன சாவித்ரி.. யார் போன்ல?''

''உனக்கு சொல்லணும்கற அவசிய மில்லை!''

''நீ சொல்லித்தான் எனக்குத் தெரியணும்கற அவசியமும் கிடையாது சாவித்ரி. சேட் பேசினதை கேட்டுகிட்டுத்தானே இருந்தே?''

அந்தக் கேள்விமுன் சாவித்ரி திணறினாள். ''சேட் சொன்னாருல்ல.. எனக்கு முகத்துல ரெண்டு கண்ணுன்னா பிசினஸ்ல இருபது கண்ணுன்னு.. கேட்ருப்பியே..''

''அதுக்கென்ன இப்ப?''

''எனக்கும் அப்படித்தான்..''

''அதான் தெரியுமே..''

''தெரிஞ்சிருந்தும் தப்பு பண்றியே. அந்த அரவிந்தனை பார்த்து ரங்கா மேல கேஸ் போடுன்னுல்லாம் சொல்லியிருக்க போல..?''

– சாவித்ரி ஆடிப்போனாள்.



''உனக்கு இந்த விஷயத்துல நான் நன்றி தான் சொல்லணும். நீ அப்படி ஒரு ரூட் போடலேன்னா நான் சேட் மூலமா இங்க இப்படி ரூட் போட முடியாம போயிருக்கும்..''

மூர்த்தி புதிர் போட்டவனாக சிரித்தான். அவளுக்கு சப்தநாடியும் ஒடுங்கிப் போகும்போல தோன்றியது. இவ்வளவு தெரிந்தவன் இன்னும் ரங்கராஜனிடம் போட்டுத் தராதது ஏன் என்றும் கேள்வி முளைவிட்டது.

''என்ன பாக்கறே.. காரணமாத்தான் அவன் கிட்ட இன்னும் உன்னைப் பத்தி பேசலை. நீ பண்ணிகிட்டிருக்கிற கூத்தை அவன்கிட்ட சொன்னா என்ன நடக்கும்னு உனக்கும் தெரியும். 'வெளில போடி'ன்னுல்லாம் சொல்ல

மாட்டான். 'உலகத்தை விட்டே போயிடு'ன்னு கழுத்தை நெறிச்சு கொன்னுடுவான். தெரியும்தானே?''

அவன் கேட்க, அவள் விழிகள் அகண்டு ஆமோதிக்கிற தினுசில் அவனை வெறித்தன.

''காரணமாத்தான் உன்னை விட்டு வச்சிருக்கேன். இந்த நிமிஷம் நீ யாருக்கு பயப்படறியோ இல்லையோ எனக்கு பயப்டுத்தான் தீரணும். இதைக் கொஞ்சம் பாரு..''

– சட்டைப் பாக்கெட்டிலிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்து காண்பித்தான். அவளும் அரவிந்தனும் கோயில் பிராகாரத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் காட்சி!

சாவித்ரி மிரட்சியின் உச்சிக்கே போய்விட்டாள்.

''அதிர்ச்சியா இருக்குல்ல..? இது ஆரம்பம்தான். ஆங்.. ஒரு முக்கிய விஷயம்..''

அவள் அகண்ட விழிகளுடன் அவன் சொல்லப் போவதை கவனித்தாள்.

''எனக்கு இப்பக்கூட உன்மேல அன்பு இருக்கு சாவித்ரி. ரங்கா நடவடிக்கை பிடிக்காமத்தான் நீ இப்படி எல்லாம் நடந்துக்கறே. இத்தனை வருஷமாகியும் அவன் உனக்கு சட்டபூர்வமா அந்தஸ்து தரலேங்கற வருத்தம்.. உன் பொண்ணுக்கு சமூகத்துல உண்மையான அப்பா யாருங்கறதுல குழப்பம்.. இதெல்லாம்தான் உன்னை இப்படி நடக்க வைக்குது. கவலைப்படாதே... அங்க

இருக்கற லிங்க்கை கழட்டிவிட்டு இங்க உனக்கு சட்டபூர்வமான லிங்க்குக்கும் நான் ஏற்பாடு பண்றேன். ஆனா, எப்பவும் நீ என் பேச்சை கேக்கறவளா இருக்கணும். அதாவது நான் உன்னை முதன்முதலா சந்திச்சப்போ எப்படி நீ இருந்தியோ அப்படியிருக்கணும். முடியாதுடா மவனே.. நீ அயோக்ய பேர்வழி – நான் இப்ப உத்தமப் பொம்பளையாயிட்டேன்னு சொன்னேன்னு வை...''

– இடைவெளி விட்டான் மூர்த்தி. சாவித்ரியும் மிரட்சி குறையாமல் வெறுப்பை தொடர்ந்தாள்.

''சொன்னேன்னு வை.. அப்ப இந்த போட்டோ பேசற விதமா பேசும். அதுக்கப்புறம் நீ நடுத்தெருவுக்குதான் போவியோ இல்ல சுடுகாட்டுக்குதான் போவியோ எனக்கு தெரியாது. ஆனா ஒண்ணு. இந்த துறைல நான் ஒரு ராட்சஸன். என் குறி தப்பவே தப்பாது. ரங்கராஜனே என் பேச்சை கேக்கற வரைலதான் உயிரோட இருக்க முடியும். ஞாபகத்துல வச்சுக்கிட்டு புத்திசாலியா நடந்துக்கோ..''

தான் ஒரு தேர்ந்த கிரிமினல் என்கிற ஊர்ஜிதத்தோடு பேசிவிட்டு தாடையை சொறிந்தான் மூர்த்தி. உள் அறையில் இருந்து ரங்கராஜனின் தேய்ந்த குரல் அழைத்தது.

''மூர்த்தி..''

''வந்துட்டேன் ராஜா..''

ஒரு மாதிரி சிரித்துக்கொண்டே திரும்பி நடந்தான். சாவித்ரி பிள்ளையார் பிடிக்க குரங்காகிவிட்ட அதிர்வில் வியர்த்து விட்டிருந்தாள்.

உள்ளே ரங்கராஜன் மூர்த்தியோடு தனியே ஒதுங்கினார்.

''சேட் சொல்றதையெல்லாம் கேட்டேன். அவனுக்கு என் கதை பூரா தெரிஞ்சிருக்கு. எனக்குள்ள இதுநாள்வரை இல்லாத பயத்தை எல்லாம் உருவாக்கிட்டான்.. விட்டுட்டுப் போன மீனாட்சி, என் பையன், பொண்ணு, சொத்துல பங்குன்னு கண்ட கச்சடால்லாம் பேசறான். இதெல்லாம் டூமச்! என் சொத்து பேர்ல கடன் கொடுக்க இவன் இவ்வளவு கேள்வி கேட்கறது அதிர்ச்சியா இருக்குது. இவன் வேண்டாம். விட்ரு. வேற பார்ட்டி யாராவது இருந்த பாரு...''

''இல்ல ராஜா... சேட் அளவு கோடிக்கணக்குல தர யாரும் தயாரா இல்லை. அப்படியே இருந்தாலும் அவங்களுக்கும் இந்த பயமெல்லாம் உண்டு. சேட் சொல்றதுல உனக்கு நல்லதுதான் இருக்கு. கடன் வாங்கறோம், வாங்கலை அது அப்புறம். நாளைக்கு உன் சொத்துக்கு சொந்தம் கொண்டாடிகிட்டு பொண்டாட்டியோ புள்ளையோ வந்தா?''

''அவங்க வருவாங்கன்னு நீயுமா நம்பறே..? போகட்டும். மீனாட்சியை நானா போகச் சொன்னேன். அவதானே என்னைவிட்டு விலகிப்போனா..?''

''போனா சரி... தாலியை கழட்டி உறவையும் அறுத்துக்கிட்டிருக்கலாம்ல? அதைச் செய்யலையே..''

''இப்பக்கூட ஒண்ணும் கெட்டுப் போயிடலை. நானே வேண்டாம்னும்போது தாலி எதுக்குடி உன் கழுத்துலன்னா கழட்டிக் கொடுக்க மாட்டாளா?''

''ரொம்ப சாதாரணமா இந்த விஷயத்தை நினைக்கறே. உனக்கு இப்ப காலம் இருக்கற இருப்பு பத்தி தெரியாது..''

''அட என்ன நீ.. என்கூட வா. அந்தக் கழுதை எங்க இருக்கா சொல்லு. அதான் ஒரு வீட்டை வேற கிரயம் பண்ணி கொடுத்திருக்கேன்ல. ஒண்ணு என்கூட வந்து இரு. என் பேச்சைக் கேளு.. இல்லாட்டி விடுதலைப் பத்திரம் எழுதித்தான்னு இரண்டுல ஒண்ணு பாக்கறேன்..''

''உனக்கு விஷயம் தெரியாதுன்னு நினைக்கறேன். மீனாட்சி இப்ப மகனோட இல்லை. மருமகளோட சண்டை போட்டுகிட்டு எங்கேயோ போயிட்டா..''

''அப்படியா.. உனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?''

''ஒரு சேட்டுக்கு உன் குடும்பக் கதை தெரியும், எனக்கு தெரியாதா.. எல்லாம் அந்த புரோக்கர்பய பேசினதை வச்சு தெரிஞ்சுகிட்டதுதான்..''

‘‘அப்ப அவ இருக்கற இடத்தை கண்டுபிடி. நானே போறேன்..’’

‘‘அதுவரைக்கும் நம்ம ப்ராஜக்ட்டை நிறுத்தி வைக்கவா? இப்பவே வட்டி குட்டி போட்டுகிட்டு இருக்கு ராஜா..’’

‘‘அதுக்காக சேட் கால்ல சாஷ்டாங்கமா விழச் சொல்றியா..?’’

‘‘சேட் இப்படி பேசலைன்னா உனக்கு இப்ப உன் பொண்டாட்டியை சந்திச்சு விடுதலைப் பத்திரம் எழுதி வாங்கணும்னு தோணியிருக்குமா? நான் சேட்டை சமாதானப்படுத்தி இப்போதைக்கு ஒரு கோடி ஏற்பாடு பண்றேன். விடுதலைப்பத்திரம் வாங்கின பிறகு சிக்கல் இருக்காது..’’

‘‘விடுதலைப் பத்திரத்துக்கும் இவன் கடன் தர்றதுக்கும் என்ன சம்பந்தம்? சொத்துல வில்லங்கமா இருக்கு..?’’

‘‘சேட் கிட்ட நீ கடன் வாங்கிட்ட பின்னால உன் மகன் வந்து ‘சொத்தை அடகு வைக்க உனக்கு ரைட் கிடையாது; அது என் பாட்டன் சொத்து. எனக்கு அதுல உரிமை இருக்கு’ன்னு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினா என்ன பண்ணுவே?’’

மூர்த்தியின் மடக்கல் நன்றாக வேலை செய்தது.

‘‘இத்தனை வருஷமா இல்லாம இப்ப எதுக்கு உன்கிட்ட வீடு வேணும்னு கேட்டு வாங்கிக்கணும். சரி, வாங்கிகிட்டவங்க பழசை மறந்து உன்னை வந்து பார்த்தாங்களா? இதையெல்லாம் யோசிச்சியா நீ?’’ அடுத்த பிடியை போட்டான்.

ரங்கராஜனால் பதில் சொல்ல முடியவில்லை. ‘‘இந்த சமயத்துல நீ வீட்டை அவங்களுக்கு கிரயம் பண்ணிக் கொடுத்திருக்கக்கூடாது. அதுவே இன்னும் உனக்கும் அவங்களுக்கும் உறவு அறுந்து போக லைங்கறதுக்கு சாட்சியாயிடிச்சுல்ல?’’ மூர்த்தி கேள்விகளால் ஒரு சுவர் எழுப்ப ரங்கராஜன் ஆடிப்போனார்.

‘‘நல்லா யோசி ராஜா.. வெளிய சேட் என்னவோ ஏதோன்னு உட்கார்ந்துகிட்டிருப்பார். நல்லவிதமா பேசி அனுப்பிட்டு வர்றேன்..’’

ஆடிப்போனவரை ஆசுவாசிக்க விட்டுவிட்டு விலகினான் மூர்த்தி.

ரங்கராஜனுக்கு தலையைச் சுற்றியது. அது அப்படியே சாவித்ரியின் மேல் கோபமாகத் திரும்பியது. ‘‘ஏய் சாவித்ரி..’’ நரம்பு புடைக்க உக்ரமாகக் கத்தினார். அவளும் தலைதெறிக்க ஓடிப்போய் நின்றாள்.

‘‘உன்னால இப்ப எவ்வளவு பிரச்னை தெரியுமா?’’ கேட்டுக் கொண்டே ஃப்ரிட்ஜை திறந்து மதுபாட்டிலை எடுத்தார். அப்படியே எந்த கலவையும் இல்லாமல் வாயில் கொட்டிக் கொண்டார்.

டாக்டர்கள் புறக்கணிக்கச் சொன்ன முதல் விஷயம். முடியாது என்கிற மாதிரி இருந்தது அவர் வேகம். சாவித்ரி பிடுங்க முயன்றாள்.

‘‘போடி மூதேவி.. செய்யறதெல்லாம் செய்துட்டு இப்ப பத்தினி மாதிரி பாசாங்கு பண்றியா? போடி அந்தப் பக்கம்’’ தள்ளிவிட அவளும் விழுந்தாள். சுதாரித்து எழுந்தவள்

கண்கள் கலங்க அவரைப் பார்த்தாள். அவரிடம் போதை ஏற ஆரம்பித்திருந்தது. மூர்க்கமும்.

‘‘நிம்மதியா இருந்தேண்டி.. ஒரு புது உறவுக்கு அச்சாரம் போட்டு என்னை இப்ப ஒருத்தன் கேள்வி கேட்கற மாதிரி செய்திட்டியேடி.. உன்னையெல்லாம் வேட்டைத் துப்பாக்கியாலயே சுடணும். உனக்கு நான் இடம் கொடுத்தேன் பாரு. அதான் நான் செய்த பெரிய தப்பு...’’

‘‘அப்படி என்ன தப்பு செய்துட்டேன்?’’ அவளாலும் பொறுக்க முடியவில்லை.

‘‘தெரியாத மாதிரி கேளு.. புதுசுபுதுசா எவன் எவனோ படம் எடுக்கறான்டி. ஆனா என்னால முடியாது போல இருக்கே. கடன் கேட்டா ஆயிரம் கேள்வி கேட்கறானே..’’

‘‘சினிமாவே நமக்கு வேண்டாம். உங்களுக்கு அதை தொழிலா பண்ணத்தெரியலை..’’

‘‘நீ பெரிய தொழில் மேதை பாரு. எனக்கு தான் ஒண்ணும் தெரியாம போயிடுச்சு..’’

‘‘உளறினது போதும், குடிச்சதும் போதும், உங்க உடம்புக்கு ஆகாது. சொன்னா கேளுங்க’’ அவரை நெருங்கி மீண்டும் பாட்டிலை பிடுங்க முயன்றாள். அது கீழே விழுந்து சூரைத் தேங்காய் போல சிதறியது. ரங்கராஜன் மேலும் மூர்க்கமாகி சாவித்ரியை ஆவேசமாக தள்ளினார். பாட்டிலின் உடைந்த பாகங்கள் அவள் உடலில் சிலீரென்று ஏறி ரத்தம் பீறிட அவரும் தடுமாறிக் கொண்டே அவள் மேல் விழுந்தார். அவர் மேலும் சில கண்ணாடி துண்டுகள் ஊடுருவின.

‘‘மூர்த்தீஈஈ..’’ சத்தம் வெளியே காரில் ஏறப்போன சேட் வரை கேட்டது. மூர்த்தி, ‘‘சேட் நீங்க கிளம்புங்க. ரங்கராஜன் பயங்கர டென்ஷன்ல இருக்கான். அதான் கத்தறான். என்னன்னு நான் போய் பார்க்கறேன்..’’

‘‘போ... போ.. நான் சொன்னமாதிரி புத்திசாலித்தனமா அப்படியே டாக்குமெண்ட்ல கையெழுத்து வாங்கிடு’’

‘‘அதெல்லாம் பாத்துக்கறேன் சேட். இப்படி டென்ஷ னாகி கத்துனா இன்னும் மூணுமாசம்கூட இருக்க மாட்டான். அவன் உடம்போட ஜாதகம் எனக்கு தெரியுமே...’’

‘‘அரே சைத்தான்.. இவன் மாதிரி பார்ட்டி மூணுமணிலே கூட போயிடுவாங்க. நீ ஜல்தீ வேலை பண்ணு. செத்துட்டா எல்லா சொத்தும் பசங்களுக்கு போயிடப் போகுது...’’

‘‘போகாது. நீங்க போங்கோ சேட்..’’

மூர்த்தி கதவை அழுத்தி மூட, கார் சீறிக் கிளம்பியது.

உள்ளே ஓடினான்.

சாவித்ரி புடவையை கிழித்து ரங்கராஜனுக்கு கட்டு போட்டுக் கொண்டிருந்தாள். அவள் உடம்பிலும் ரத்தக் கசிவுகள். ரங்கராஜன் போதையில் முனகிக்கொண்டிருந்தார்.

‘‘சாவித்ரி நீ விலகு.. அஞ்சு நிமிஷத்துல இவ்வளவு கூத்தா.. ராஜா இவ்வளவு டென்ஷன் ஆகாதுப்பா..’’

ரங்கராஜனை முட்டுக் கொடுத்து தூக்கி நிறுத்தியபடியே சாவித்ரியை பார்த்தான். ரங்கராஜன் தலை துவண்டு அவன் தோள் மேல் சாய்ந்திருந்தது.

''சாவித்திரி.. போய் முதல்ல டாக்டரைப் பார். நான் இவனை பாத்துக்கறேன். சொன்னது ஞாபகமிருக்கட்டும்!'' – அந்த நிலையிலும் கூர்மையான எச்சரிக்கை.

சாவித்ரியிடம் அழுகை பீறிட்டது. அவன் விலகினதும் யாரோ நுழைவதுபோல் இருந்தது. வேலைக்காரி கண்மணி.

''ஐயோ வாங்கம்மா டாக்டர்கிட்ட போகலாம்..''

''என்ன விடு. எல்லா ரத்தமும் ஒழுகி ஓயட்டும். நான் இப்படியே செத்துப் போயிடறேன். என்னை விடு..'' சாவித்ரி இயலாமையோடு வெடித்து அழுதாள்.

''உளறாதீங்க.. உங்களுக்கும் சமயத்துல புத்தி வேலை செய்யமாட்டேங்குதே. இப்படியா அடிச்சுக்குவீங்க..'' – கண்மணி வேகமாக இயங்கத் தொடங்கினாள்!



அரவிந்தன் ஆபீஸ் முன்னால் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்து கொண்டிருந்தான் சாமிநாதன். பலமுறை வந்திருப்பதால் தடுமாற்றமே இன்றி நேராக பலரைக் கடந்துகொண்டு அரவிந்தன் எதிரில்போய் நின்றான்.

''ஒரு நிமிஷம்!'' என்ற அரவிந்தன் ஃபைலில் சில விஷயங்களை வேகமாக எழுதி மூடினான். ப்ரீஃப்கேஸை திறந்து வீட்டுப் பத்திரம் இருந்த பிளாஸ்டிக் ஃபோல்டர், ஒரு இரும்புச் சாவியோடு சில பித்தளைச் சாவிகள் அடங்கிய சாவிக் கொத்து இரண்டையும் எடுத்து சாமிநாதன் முன்னால் போட்டுவிட்டு பெட்டியை திரும்ப மூடினான்.

''என்ன சார்.. எதுக்கு இதையெல்லாம் எடுக்கறீங்க...?''

''சாமிநாதன்.. அந்த வீடு அதனால எங்கப்பாவோட புது இணைப்புன்னு எதுவும் எனக்கு வேண்டாம். என் அம்மா இல்லாத நிலைல நான் இதெல்லாம் வாங்கிகிட்டது எவ்வளவு

பெரிய தப்புன்னு உங்களுக்குத் தெரியாது. அதான் இதை சரண்டர் பண்ண உங்களை கூப்பிட்டேன்..''

''சார்ர்...''

''ப்ளீஸ். இதை கொண்டுபோய் என் அப்பாகிட்டயே கொடுத்துருங்க. ரிஜிஸ்டர் ஆபீஸ்ல பத்திரத்தையும் மாத்தி பதிவுசெய்ய ஏற்பாடு பண்ணுங்க. நான் வந்து கையெழுத்து போட்டுக் கொடுத்துடறேன்.

''சார் அவசரப்படறீங்க.. இது மன்னிக்கு தெரியுமா?''

''அநாவசிய கேள்விகள் வேண்டாம். நிறைய வேலை இருக்கு..'' அரவிந்தன் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு சொன்னவிதம் சாமிநாதனை பேசவிடவில்லை.

மவுனமாக ஃபோல்டரையும், சாவிக் கொத்தையும் எடுத்துக் கொண்டான். எழுந்தான்.

''இது எங்க குடும்பத்தோட ரொம்ப சென்சிடிவான ஒரு விஷயம். வாஸ்தவமா இதை நான் என் அப்பாவை நேர்ல பார்த்துக் கொடுக்கறதுதான் சரியா இருக்கும். ஆனா, அம்மா அனுமதி இல்லாம அவரைப் பார்க்க நான் விரும்பலை. அவரும் என்னை வந்துபார்த்து இதை செய்யலை. எல்லாம் உங்க மூலமா நடந்ததால நானும் உங்க மூலமாகவே திருப்பறேன். இனி இந்த வீடு விஷயமா எந்த பேச்சும் என்னிக்கும் நீங்க பேசக்கூடாது. மைண்ட் இட்!''

ரெனால்ட் பேனாவை ஆட் டிக்கொண்டே அரவிந்தன் சொன்னது சாமிநாதனை என்னவெல்லாமோ செய்தது. நடந்தான்.

அவ்வளவையும் பார்த்துக் கொண்டேயிருந்த சந்திரசேகர் நெருங்கி வந்தான்.

''அரவிந்தா என்னடா இதெல்லாம்?''

''எல்லாம் முடிஞ்சு போச்சு. அவ்வளவுதான்!''

''வீடு ரிஜிஸ்ட்ரேஷன்கறது ஒரு அபூர்வ விஷயம்டா.. அதுல இப்படி பந்து விளையாடக்கூடாது..''

''உனக்கு தெரியாதுடா. அந்த வீட்டை ஒண்ணு என் அப்பா எங்கமேல உள்ள பாசத்துல வாங்கித் தரலை..''

அரவிந்தன் மெள்ள விஷயத்துக்கு வர சந்திரசேகர் எதிரில் அமர்ந்தவனாக,

''என்னடா புதுசா சொல்றே? உங்கப்பா ஆசையா திரும்ப வராருங்கற மாதிரிதானே என்கிட்ட பேசினே?''

''அப்படி நினைச்சதுதான் என் தப்பு. எப்ப இந்த வீடு விஷயமா பேச ஆரம்பிச்சோமே அப்பவே எல்லா குழப்பமும் ஆரம்பமாயிடுச்சு. அம்மா என்னைவிட்டு போயிட்டா. அக்கா வந்து டேரா போட்டுகிட்டு தனக்கும் ஒரு வீடுன்னு கனவு காண ஆரம்பிச்சுட்டா. ரஞ்சனியும் பேராசைப் பேயாவே மாறிட்டா. ஓ... எத்தனை பிரச்னைகள்..!'' – அரவிந்தன் பெருமூச்செறிந்தான்.

‘‘உங்க அப்பா பாசத்தோட இதை தரலேன்னு சொன்னியே... அது எப்படி உனக்கு தெரியும்?’’

‘‘சாப்பிடும்போது சொல்றேன், வேலை இருக்கு..’’

‘‘சரி.. அம்மா இருக்கற இடம் தகவல் தெரிஞ்சதா?’’

‘‘இல்ல.. ஆனா அப்பப்ப போன்பண்ணி ‘நான் நல்லா இருக்கேன், நீ கவலைப்படாதே’ன்னு பேசிட்றா.’’

‘‘போன் எங்க இருந்து வருதுன்னு தெரிஞ்சா அவங்க இருக்கற இடம் தெரியாதா?’’

‘‘பிரயோஜனம் கிடையாது. ஏதாவது பப்ளிக் பூத்ல இருந்துதான் பேசுவா. அம்மா ஒரு கிராஜுவேட். வீரப்பன் மாதிரி ஒளிஞ்சு கண்ணாமூச்சி விளையாட அவளுக்கு நல்லாவே தெரியும். நீ கிளம்பு.’’

– மீண்டும் ஃபைலை திறந்து அதில் கண்களை ஓட விட்டான் அரவிந்தன். சந்திரசேகரும் விலகினான்.

**வீ**ட்டு பத்திரத்தையும், சாவிக் கொத்தையும் வாங்கி ஒரு பழைய பட்டுப் புடவைக்குள் மூடி சுருட்டி வைத்து விட்டு பீரோவை பூட்டியவளாக திரும்பினாள் ரஞ்சனி.

ஹாலில் பேந்தப்பேந்த விழித்தபடி உட்கார்ந்து இருந்தான் சாமிநாதன். அருகிலேயே மாலதியும்.

ரஞ்சனி எதிரில் வரவும், ‘‘மன்னி... சாரை நினைச்சா பயமா இருக்கு மன்னி. நான் இதை ரங்கரா ஜன்சார்கிட்ட ஒப்ப டைக்காம உங்ககிட்ட கொடுத்தது தெரிஞ்சா..’’

‘‘உங்களுக்கு ஒரு பிரச் னையும் வராது சாமிநாதன். கொஞ்சநாள் அவர் கண்லயே படாதீங்க. செல் லுல கூப்ட்டாலும் பேசாதீங்க. ஆஃப் பண்ணிடுங்க. அவரை நான் பாத்துக்கறேன்.’’

‘‘நீங்க எவ்வளவு சமாதா னம் சொன்னாலும் நான் செய்யறது பெரிய தப்போன்னு தோணுது...’’

‘‘நான் அவரை சமாளிச்சுக்கறேன். அவர் உங்ககிட்ட வரமாட்டார். வரவும் நான் விடமாட்டேன். போதுமா?’’

‘‘உங்களை நம்பித்தான் மன்னி இப்ப இருக்கேன்.’’

‘‘கவலையே படாதீங்க. அவர் ஒரு அம்மா கோண்டு. எப்படி வழிக்கு கொண்டு வரணும்னு எனக்குத் தெரியும். அதேசமயம், அந்த சாவித்ரி என்ன பேசினாங்கன்னும் தெரியணும். அவங்களுக்கு சொல்லிட்டீங்கள்ல?’’

‘‘ஆமா. நீங்க எப்ப வேணா அவங்களை சந்திக்கலாம். அவங்ககிட்ட பேசி டயத்தையும் தெரிஞ்சுக்கலாம். செல் நம்பர்தான் கொடுத்திருக்கேனே..’’

‘‘சந்தோஷம்.. ஒரு நிமிஷம் இருங்க.’’

- கத்தரித்துக் கொண்டு உள்ளே சென்றவள் திரும்ப வந்தவள் கையில் ஆயிரம் ரூபாய். அதை நீட்டினாள்.

‘‘எதுக்கு மன்னி... கமிஷன்தான் வாங்கிட்டேனே!’’

‘‘இது இந்த சிஸ்டர் தர்ற அன்பளிப்பு. வாங்கிக்குங்க.’’

தயக்கத்தோடு வாங்கிக்கொண்டு வெளியேறினான்.

மாலதி விறைப்பாக பார்த்துக் கொண்டிருந்தாள்.

‘‘அக்கா, இப்பவே சாவித்ரிகூட பேசிடட்டுமா? இவர் வரதுக்குள்ற அவளை சந்திச்சுட்டா நல்லா இருக்கும்.’’

‘‘பண்ணு.. பண்ணு..’’ – மாலதியும் தூண்டினாள்.

‘‘நீங்களே பண்ணுங்கக்கா. வீட்டுக்கு பெரியவங்க..’’

‘‘எனக்கு அவகூட பேச என்னமோ மாதிரி இருக்கே..’’

‘‘உங்களுக்கும் வீடு வேணுமா வேண்டாமா?’’

‘‘வேணும்.. ஆனா, அரவிந்தன் எதனால இப்படி நடந்து கிட்டான்னு தெரிஞ்சுகிட்டு நம்ம ரூம்ல பேசுவோமே..?’’

‘‘அதான் சாவித்ரிகிட்டே பேசும்போது தெரிஞ்சிருமே.’’

‘‘ஓ.. நீ அப்படி வர்றியா?’’

‘‘அப்படியேதான். நீங்க பேசுங்க. பயமா இருக்கா?’’

‘‘பயப்படலை. தம்பி தப்பா புரிஞ்சுப்பானோன்னு..’’

‘‘எங்க மேனேஜர் ரூம்ல அவர் தலைக்கு மேல ஒரு ஸ்லோகன் ஸ்டிக்கர் ஒட்டியிருக்கும். என்ன தெரியுமா? வலி இல்லையேல் வலிமை இல்லை! – என்ன ஒரு அருமையான வாசகம் தெரியுமா... யோசிச்சுப் பாருங்க!’’

‘‘அதில்ல ரஞ்சா...’’

‘‘அக்கா... சிலருக்கு வாழ்க்கை ஆடு புலி ஆட்டம். ஆடுங்களா நாம இருந்தா கடிச்சு சாப்டுட்டு போய்கிட்டே இருப்பாங்க. நம்மை மாதிரி மிடில்கிளாசுக்கெல்லாம் எப்பவும் ஆட்டு புத்தி. எதுக்கெடுத்தாலும் பயம். ஆனா, நீங்க புலிங்கறது என் அபிப்ராயம். உங்களப் பார்த்துதான் நானே புலியா என்னை நினைச்சுக்க ஆரமிச்சிருக்கேன்..’’

– ரஞ்சனி ஏற்றிய குளூகோஸ் அருமையாக வேலை செய்தது. மாலதி படுவேகமாக போய் ரிசீவரை எடுத்தாள்!

அட்வான்ஸ் தொகை சுளையாக பத்தாயிரம்! வெற்றிலை பாக்கு பழத்தோடு டைரக்டர் பூர்ணசந்தர் நீட்டினார்.

மீனாட்சி தயக்கத்தோடு வாங்கிக்கொள்ள அப்பா அனந்தாச்சாரியும் ஸ்ரீனிவாசனும் மெல்லிசாக கைதட்டினர்.

மீனாட்சி அதில் மூவாயிரத்தை எடுத்துக்கொண்டு சொச்சத்தை அப்பா எதிரில் நீட்டினாள்.

''இல்லம்மா... இது உங்க முதல் சம்பாத்யம். லட்ச லட்சமா சம்பாதியுங்கோ அப்புறம் தாங்கோ..''

''நான் நடிக்க ஒப்புக்கிட்டதே ஆஸ்ரமத்துக்கு உதவத் தானே?''

– மீனாட்சியின் பதில் பூர்ணசந்தரை உலுக்கியது.

''அப்போ அந்த மூவாயிரம்?'' – ஸ்ரீனிவாசன் ஆவலை அடக்கமாட்டாது கேட்டார்.

''என் பேத்திக்கு சைக்கிள் வாங்கி தர்றதா சொல்லியிருந்தேன். அதுக்காக!''

– பூர்ணசந்தர் கண்களில் உடனடியாக பனிப்பு!



தொலைபேசியின் சிணுங்கலைத் தொடர்ந்து ஓடிப்போய் எடுத்தாள் குழந்தை ராகவி.

''ஹலோ, யார் பேசறது?'' – ராகவி அப்படிக் கேட்ட நொடி மறுமுனையில் மீனாட்சி குரல் ஒலித்தது.

''ராகா... பாட்டி பேசறேன்டா கண்ணு.''

''பாட்டீஈஈஈ..''

‘‘எப்படிடா இருக்கே?‘‘

‘‘நான்.. நான்... என்னைவிடு.. நீ எப்படி இருக்கே பாட்டி?‘‘

‘‘பாட்டிக்கென்னடா... நான் நல்லாத்தான் இருக்கேன். ஆமா வீட்ல யார் இருக்கா?’’

‘‘யாருமே இல்ல பாட்டி... எல்லாரும் வெளிய போயிருக்காங்க.’’

‘‘என்னம்மா சொல்றே? இன்னிக்கு மே தினமாச்சே உன் அப்பன், அம்மா எல்லாருக்கும் லீவுதானே..?’’

‘‘அத ஏன் கேக்கறே... அப்பாக்கு ஆபீஸ்ல இன்னிக்கும் வேலையாம். அம்மா மூணு நாளா வேலைக்கு போறதில்லை. அத்தை வந்திருக்காங்கல்ல..’’

‘‘அவ இன்னும் ஊருக்கு போகலையா?’’

‘‘இல்ல பாட்டி. இப்பகூட அத்தையும் அம்மாவும்தான் எங்கயோ வெளிய போயிருக்காங்க.’’

‘‘உன்னை தனியா விட்டுட்டா..?’’

‘‘ஆமா.. கேட்டை பூட்டி சாவி கொடுத்துட்டு போயிட்டாங்க. பாட்டி இப்ப நீ எங்க இருக்கே, அத சொல்லு...’’

‘‘நான்.. நான்... நான் இதோ வரேண்டா கண்ணு. நீ வீட்லயே இரு.’’

‘‘ஹையா... நீ வரப்போறியா? எப்ப வருவே.. இப்பவேவா – இல்ல கொஞ்ச நேரம் கழிச்சா?’’

‘‘இதோ இப்பவேதான்.. பாட்டி உனக்கொரு பரிசும் தரப்போறேன்.’’

‘‘என்ன பாட்டி.. என்ன பரிசு?’’

‘‘நேர்ல பார்க்கத்தானே போறே.. போனை வெச்சுட்றேன். நீ ஜாக்ரதையா வீட்லயே இரு. வந்துட்டே இருக்கேன்.’’

– தொலைபேசி முடங்கியது. அந்த குழந்தையின் முகத்தில் அசாத்ய மாற்றம்.

ஹாலில் டிஸ்ப்ளே ஷெல்ஃப் இருக்கிறது. ஒரிஸ்ஸா குதிரை பொம்மையிலிருந்து விதவிதமாய் எவ்வளவோ கிஃப்ட் அயிட்டங்கள். ஒரு முலையில் அரவிந்தன்-ரஞ்சனி கல்யாணப் படமும் மறுபுறம் ராகவியை மீனாட்சி கட்டிக் கொண்டிருக்கும் படமும் இருக்கிறது. குழந்தை கண்ணாடி ரேக்கை தள்ளி அந்த படத்தை எடுத்து உற்சாகமாக மீனாட்சியின் கன்னத்தில் ஒரு முத்தம் பதித்தது.

அதை எடுத்துக்கொண்டு மெயின் கேட் அருகில் போய் உட்கார்ந்தது. அப்புறம் என்ன நினைத்ததோ... எழுந்து திரும்ப உள்ளே வந்தது மெயின் கேட் டில் உட்புறமாக பூட்டப்பட்டு தொங்கும் பூட்டின் சாவி டீ.வி. மேல் இருந்தது.

அதை எடுத்துக்கொண்டு வந்து திரும்ப மெயின் கேட் அருகே வந்து உட்கார்ந்துகொண்டது. அதன்பின் அவளை பொறுத்தவரையில் ஒவ்வொரு வினாடியும் ஒரு மணி நேர பொழுது போலத்தான் கழிய ஆரம்பித்தது.

வீதியில் ஏகத்துக்கும் மனித நடமாட் டம். எதற்கோ வெளியில் வந்த எதிர் வீட்டு புவனேஸ்வரி ராகவியை சற்று ஆச்சர்யமாக பார்த்தாள்.

ராகவி உடனே முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டாள்.

‘‘ஏய் ராகவி... உள்ள உக்காராம அங்க ஏன் உக்காந்துகிட்டிருக்கே?’‘

– கையாட்டி கத்தியபடியே கேட்டாள். குழந்தை பதில் சொல்லாமல் தொடர்ந்து வேறு பக்கமாகவே பார்த்தாள்.

‘‘உள்ற போடி... உங்கம்மா உன்னை உள்ளதானே இருக்கச் சொன்னாங்க. போ உள்ளே..’’

– புவனேஸ்வரி விடாமல் சீண்டவும் சீறினதுபோல கோபம் வந்து திரும்பினாள்.

‘‘போகமாட்டேன். எங்க பாட்டி வரப்போறாங்க. நான் இங்கதான் உக்காந்திருப்பேன்.’’

‘‘என்னது... உங்க பாட்டியா?’‘

‘‘ஆமா.. இப்பதான் போன் பண்ணி சொன்னாங்க..’’

அடுத்த நொடி புவனேஸ்வரியையும் ஆர்வம் தொற்றிக்கொண்டது.

விறுவிறுவென்று நடந்தாள். கதவருகே நின்று கொண்டு ‘‘நிஜமாவா சொல்றே?’’ என்று கேட்டாள்.

‘‘ஆமா..’’ – ராகவி அழுத்தமாக சொல்லிவிட்டு தெருவில் விர்ரென்று பறந்துபோன ஆட்டோ ஒன்றை ஆவலாக பார்த்தது.

புவனேஸ்வரி கையை சொடுக்கிக்கொண்டாள். வீட்டு வாசலிலேயே நோட்டம் போடுபவள் போல நின்றும்கொண்டாள். நேரம் உருண்டது.

பனகல் பார்க்!

சாப்பாட்டுக்கே கஷ்டப்படும் ஏழை எப்படியோ சாப்பிட்டு உயிர் வாழ்வது போல பார்க்கில் அங்கும் இங்குமாக கொஞ்சம் பசுமை.

அதையே மகா பெரிய விஷயமாக நினைத்துக் கொண்டு குழுமியிருக்கும் ஜனக்கூட்டம். அந்தக் கூட்டத்திடம் கூட தனக்கொரு பிழைப்பு இருப்பதாக கருதிக் கொண்டு சுற்றிச்சுற்றி வரும் சுண்டல் வடை சிறுவர்கள்.

அவர்களை ஓவர்டேக் செய்து உள்ளங்கை பார்த்து கைரேகை என்கிற பெயரில் கண்டதை சொல்லிக் கொண்டிருக்கும் ஜோசியக்காரர்கள். அத்தனை பேருக்கு நடுவில் கெந்திக் கெந்தி உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள் சாவித்ரி.

‘‘நாங்க பச்சைப்புடவை உடுத்தியிருப்போம். நான் கொண்டை போட்டுப்பேன். என் தம்பி சம்சாரம் போனி டெய்ல்ல இருப்பா. இதுதான் எங்க அடையாளம்.’’

– போனில் மாலதி சொன்ன அடையாளத்தை தேடிய படி சுழன்றடித்தது அவள் விழிகள்.

அதிகம் தேட அவசியமில்லாதபடி அவர்களே காரில் வந்து இறங்கி அவள் எதிரில் வந்தனர்.

‘‘நீங்க..’’

‘‘நாங்களேதான்...’’

– அந்த விசாரிப்புக்கும் பதிலுக்கும் பிறகு ஒரு அளப்புப் பார்வை மாலதியிடம். ரஞ்சனியும் ஒரு தினுசாகவே பார்த்தாள்.

‘‘ஏன் அப்படி பாக்கறீங்க.. இதுல மாலதி யாரு? ரஞ்சனியாரு..?’’

– சாவித்திரி வாஞ்சையாக கேட்டாள்.

‘‘நான்தான் மாலதி. இவ ரஞ்சனி. நான் எங்கப்பா ஜாடை. அதை வச்சுகூடவா உன்னால கண்டுபிடிக்க.. ஸாரி, உங்களால கண்டுபிடிக்க முடியலை.’’

‘‘ஓ... நீதான் மாலதியா..?’’ – பதிலுக்கு கேட்டுவிட்டு அவளை நெகிழ்வுடன் சாவித்ரி பார்த்த விதத்தில் ஒரு பாசப்பரவசம்.

‘‘அப்படி உக்காந்து பேசலாமா?’’ – ரஞ்சனி படுஷார்ப்பாக விஷயத்துக்கு இழுத்து மரத்தடியை காண்பித்தாள்.

‘‘ஓ... பேசலாமே.. பேசலாமே...’’

– சாவித்ரி சொல்லிக்கொண்டே நடந்தாள். முகத்தில் வலிச் சிணுங்கல். உடம்பில் ஏறிய பிராந்தி பாட்டில்களின் காயங்களிலும் எரிச்சலான காந்தல்.

‘‘என்ன... உடம்பு சரியில்லையா உங்களுக்கு?‘‘

ரஞ்சனிதான் கேட்டாள்.

‘‘அ.. ஆமா. சின்ன காயம். பெரிசா ஒண்ணும் இல்லை.’’

– சொல்லும்போதே மூடியிருந்த புடவை மாராப்பை மீறி தோள்பட்டை அருகில் ரத்தம் கசிந்து ஒரு ஆஸ்திரேலியா மேப் போல வடிவமாகியது.

‘‘ஐயோ! என்ன இது ரத்தம்.. பெரிய்ய காயமா இருக்கும் போல இருக்கே..’’

‘‘சொல்றேன்... அதுக்குத்தானே வந்துருக்கேன்.’’

– சாவித்ரியின் பதில் மாலதியை கொஞ்சம் இடித்தது.

‘‘மன்னிக்கணும். நாங்க ஒண்ணும் உங்க சந்தோஷங்களையோ துக்கங்களையோ விசாரிக்க வரலை. என் தம்பி கிட்ட நீங்க பேசினதை தெரிஞ்சுக்கத்தான் வந்துருக்கோம்.’’

– சூடான கடலையை ஊதி தோலை உதிர்க்கிற மாதிரி இருந்தது அவள் பேச்சு.

‘‘தெரியும்... சாமி எல்லாத்தையும் சொன்னான்.’’

‘‘என்ன சொன்னான்.. என்ன சொன்னான்?’’ - பாய்ந்தாள் மாலதி.

‘‘வீட்டுப் பத்திரத்தை அரவிந்தன் திருப்பிச் கொடுத்தது, அதை நீங்க வாங்கி வெச்சுகிட்டது, என் அக்கா இப்ப வீட்ல இல்லாதது... எல்லாம் எனக்குத் தெரியும்.‘‘

– அந்த பதில் மாலதியை கட்டியது. ரஞ்சனியோ மாலதிக்கு கிடைத்த அந்த சரியான பதிலை ரசித்தவளைப் போல தன் ரவுண்டை ஆரம்பித்தாள்.

‘‘பரவால்ல... உங்களுக்கு எல்லா லெவல்லயும் ஆட்கள் இருக்காங்க. இல்லேன்னா என் மாமனாரை நீங்க மயக்கியிருக்க முடியுமா, என்ன? அதுபோகட்டும்... என் வீட்டுக்காரர்கிட்ட என்ன பேசினீங்க. அவர் ஏன் வீட்டுப் பத்திரத்தை திருப்பிக்கொடுக்க நினைச்சாரு?’’

– ரஞ்சனி தான் வாழைப்பழத்தில் ஊசியைச் செருகும் பார்ட்டி என்கிற ரகமாய் வார்த்தைகளைவிட சாவித்ரியின் கண்களில் கலக்கம். கண்ணீர் திரைபோடத் தொடங்கியது.

‘‘ஸாரி... நீங்க இப்படி அழுதால்லாம் நானோ அக்காவோ உங்களுக்காக பரிதாபமெல்லாம் பட்டுட மாட்டோம். அக்காவுக்குகூட கொஞ்சம் இளகின மனசு. நான் அப்படி இல்லை. நீங்க என் வீட்டுக்காரர்கிட்ட பேசினது என்னன்னு எனக்கு தெரியணும். என்னக்கா?’’

ரஞ்சனி பார்வையை மாலதி பக்கம் விட்டாள்.

‘‘கரெக்ட். வளவள கொளகொளா வேண்டாம். இதுக்குதான் கூப்பிட்டேன். இதைத்தான் சொன்னேன்னு சொன்னா போதும். நாங்க போயிட்றோம்.’’

– மாலதியின் அசட்டுத்தனமான தீர்க்கம் அந்த நிலையிலும் சாவித்ரிக்கு சிரிப்பைத்தான் தந்தது.

‘‘பரவால்லம்மா. நீ கெட்டிக்காரிதான்..’’ - என்றாள் கண்ணீரை சுண்டியபடி.

‘‘இது பாராட்டா... இல்ல பாராட்ற மாதிரி குத்தலா?’’ – துளியும் சீற்றம் குறையாமல் பதிலுக்கு ரஞ்சனி. அது மேலும் சாவித்ரிக்கு சிரிப்பை தந்தது.

‘‘அக்கா நான் சொல்லல... நம்ம டென்ஷனை என்னமா ரசிக்கறாங்க பாத்தீங்களா?‘‘

– ரஞ்சனி சுருதி கூட்ட சாவித்ரியின் முகமும் அசாத்யத்துக்கு மாற...



‘டுர்ர்ர்... டுப்... டுப்.. டுப்..!’

ஆட்டோ அரவிந்தன் வீட்டு முன் தேங்க, அதிலிருந்து முதலில் சைக்கிள் இறங்கியது. பின்னால் மீனாட்சி.

‘‘பாட்டீஈஈ..’’ – ராகவி ஓடிவந்து கதவை திறக்க முனைய, சாவி கீழே விழுந்தது. பார்த்துக் கொண்டே இருந்த புவனேஸ்வரியும் பாய்ந்து வரத் தொடங்கினாள்.

சைக்கிளை ஓரமாக நிறுத்திய மீனாட்சி ஆட்டோவை பார்த்து ‘‘நீங்க அப்படி ஓரமா நில்லுங்க.. வந்துட்றேன்’’ என்றாள். புவனேஸ்வரியின் காதிலும் அது விழுந்தது.

‘‘வாங்க மீனாட்சியம்மா... இப்பதான் வழி தெரிஞ்சுச்சா? இவ்வளவு நாள் எங்க போயிட்டீங்க.. உங்களை இவங்க தேடாத இடம் இல்லை தெரியுமா?’’

– கேள்விகளாய் அடுக்கியவள் பார்வை சைக்கிளின் மேலும் சென்றது. புதிய சைக்கிள் என்பதன் அடையாளமாய் பாரில் காகித உறை பிரிக்கப்படாமல் இருந்தது. மீனாட்சி அவள் கேள்விக்கெல்லாம் பதில் சொல்லாமல் ‘‘நீ சவுக்யமா புவனேஸ்வரி?’’ என்றாள் படுசகஜமாய்.

‘‘பாட்டி நீ உள்றவா... சைக்கிள் எனக்கா?’’ – ராகவி சைக்கிள் அருகே போய் வருடியபடியே அழைத்தது.

‘‘உனக்குதாண்டா கண்ணு. உனக்கே உனக்குதான்’’ என்றவள். ‘‘நான் உன்னை அப்புறமா பாக்கறேன் புவனேஸ்வரி’’ என்றபடியே உள்ளே சென்றாள். ஆட்டோ டிரைவர் சைக்கிளை தூக்கிக்கொண்டு பின்னால் வந்தான்.

புவனேஸ்வரி முகத்தில் பதில் கிடைக்காத ஆத்திரம். திரும்பிப் போகாமல் அவளும் பின்னாலேயே நுழைந்தாள். ராகவி மீனாட்சியின் இடுப்பில் ஏறிக்கொண்டது. கழுத்தை கட்டிக்கொண்டு முத்தம் கொட்டியது. பதிலுக்கு மீனாட்சியும்... அப்படியே உள்ளே வீட்டை ஒரு பார்வை பார்த்தவள் முகத்தில் மளுக்கென்று சிம்னி விளக்கு எரிந்தாற்போல அதிர்ச்சி.

‘‘என்னடா கண்ணு இது... வீடு இப்படி ஒரே குப்பையா இருக்கு.. இன்னுமா உங்கம்மாவும் அத்தையும் வரலை.’’

‘‘இல்ல பாட்டி... நீ போனதுல இருந்தே எல்லாம் மாறிப்போச்சு. அம்மா ரொம்ப மோசம். அத்தையும் எப்பப்பார் எதாவது பேசிகிட்டேதான் இருக்காங்க..’’

‘‘அதுசரி... வந்ததும் வராததுமா உன் பாட்டிகிட்ட அம்மாவை போட்டு விட்டுட்டியா. உன்னை திருத்த முடியாது..’’ என்று பின்னால் இருந்தபடியே புவனேஸ்வரி பேச, சைக்கிளை முகப்பில் வைத்துவிட்டு திரும்பிப் போனான் டிரைவர்.

மீனாட்சி புவனேஸ்வரியை ஒருமுறை முறைத்தாள். ''புவனேஸ்வரி... நான் உன்னை அப்புறம் பாக்கறேன்னு சொன்னேன்ல..'' என்றாள்.

''இல்ல மீனாட்சியம்மா. உங்களைப் பாக்கவும் எனக்கு கையும் ஓடமாட்டேங்குது. காலும் ஓடமாட்டேங்கு. நீங்க எங்க போயிட்டீங்கன்னு தெருவுல கேக்காதவங்க இல்ல!''

''நான் என்ன உன்னை மாதிரி குமரிப்பொண்ணா... ஓடிப்போறதுக்கும், போனா கவலைப் பட்றதுக்கும்? நான் எங்கையும் போகலை. இதே ஊர்லதான் இருக்கேன். எனக்காக ஒண்ணும் யாரும் கவலைப்பட வேண்டாம். எல்லார்கிட்டயும் சொல்லிடு. என்ன?''

''சொல்லிட்றேன்.. ஆமா இப்ப எங்க இருக்கீங்க. இப்பகூட உடனே திரும்பி போயிடுவீங்க போல இருக்குதே. ஆட்டோகாரர் கூட போசாம நிக்கறாரு.''

''இதோ பார்... உன் கேள்விக்கு நான் பதில் சொல்லிட்டேன். இப்ப நான் என் பேத்திகூட பேசணும். கொஞ்சம் நீ கிளம்பறியா?''

– மீனாட்சியின் குரலில் கடுமை தொனிக்கவும் புவனேஸ்வரிக்கு ஆர்வத்தின் வால் சுருள ஆரம்பித்தது. தேங்கித் தேங்கி பின் செல்ல அவளைத் தொடர்ந்த மீனாட்சி, வாசல் கேட்டை திரும்ப பூட்டினாள்.



**மா**லதியும், ரஞ்சனியும் ஸ்தம்பிப்பில் இருந்தனர். அவர்கள் எதிர்பார்த்து வந்ததற்கு நேர் எதிராக சாவித்ரி சொன்ன ஒவ்வொரு விஷயமும் அவர்களை அப்படியே கட்டிப் போட்டிருந்தது.

''ஒரு நல்ல காரணத்துக்காக.. அதுவும் அவர் திருந்தி வழிக்கு வரணும்கறதுக்காகதான் அரவிந்தனை நான் கேஸ் போட சொன்னேன். ஆனா, அரவிந்தன் அதை சரியா புரிஞ்சுக்கலையோ இல்ல அக்கா எதாவது சொல்லிடுவாங்களோன்னு பயப்பட்றானோ தெரியில. ஆனா நான் பல மாசமாவே உங்களை சந்திக்கவும் பேசவும் துடிச்சதெல்லாம் இதுக்குத்தான். இந்த காயமெல்லாம் அவர் குடி போதைல இருக்கும்போது ஏற்பட்டதுதான்... எனக்கு எதுவேணும்னா ஆயிட்டு போகட்டும். அவர் நல்லா இருக்கணும். அதைவிட நீங்க இனியாவது நல்லா இருக்கணும். என்னால பிரிஞ்ச குடும்பம் என்னாலயே ஒண்ணு சேரணும். இதெல்லாம்தான் இப்ப என் பிரார்த்தனை...''

– சாவித்ரி கண்ணீர் சிந்த பேசியபோது ஹேண்ட் பேகில் அவள் செல்போன் சிணுங்கியது.

''ஸாரிம்மா..'' என்றபடியே காதைக் கொடுத்தாள். மறுமுனையில் கண்மணி.

''அம்மா, அய்யா உங்களை தேட ஆரம்பிச்சுட்டாரு. ஒரே ரகளை. சீக்கிரமா வாங்க..''

‘‘வந்துட்றேன்.. வந்துட்றேன்..’’ – பதிலுக்கு சாவித்ரியும் சொல்லிவிட்டு இருவரையும் பார்த்தாள்.

‘‘இப்ப யார் போன்ல?’’

‘‘அவர் என்னை தேட்றாராம்.. ஒரே ரகளையாம்.’’

‘‘ச்சே... என் அப்பா ஒரு திருந்தாத ஜென்மம். ரஞ்சா அவரை சும்மா விடக்கூடாதுடி..’’

‘‘ஆமாங்க்கா... இவங்கள நாம தப்பா புரிஞ்சுகிட்டோம். ஸாரிங்க. இப்ப சொல்றேன். இந்த நிமிஷம் நாங்க உங்க பக்கம்..’’

‘‘அப்படின்னா?’’

‘‘என் வீட்டுக்காரர் அவர் அப்பா மேல கேஸ் போடுவார். போட வைக்கறேன். போதுமா?’’

‘‘அம்மா இதை மட்டும் நீ செஞ்சுட்டா அதைவிட ஒரு நல்ல காரியம் இருக்கவே முடியாது. வேகமா செய்யச் சொல்லு. சினிமா ஷூட்டிங் ஆரம்பிக்கறதுக்கு முன்னயே செய்யலேன்னா எல்லாம் போயிடும்.’’

‘‘நான் பாத்துக்கறேன் - நீங்க கவலைப்படாதீங்க. அது எங்க சொத்து. கண்ட நாய்ங்க கொண்டுபோக விட மாட்டோம்.’’

‘‘ரொம்ப சந்தோஷம்... ஆமா, அக்கா எங்க இருக்காங்கன்னு தெரியுமா... உங்களை சமாதானப்படுத்தின மாதிரி அவங்க கால்ல விழுந்து சமாதானப்படுத்தறேன்.’’

‘‘அது.. அது..’’ – ரஞ்சனி தேங்க, மாலதி பாய்ந்தாள்.

‘‘இதோ பாருங்க... யார் செஞ்ச புண்ணியமோ அம்மா இப்ப ஒதுங்கியிருக்கா. அவ அப்படியே இருக்கட்டும். அதுதான் நல்லது...’’

‘‘இல்ல... இதுல மூலமே அவங்கதான். நாளைக்கு என்னை அவங்க தவறா புரிஞ்சுக்ககூடாது. அவங்கள கண்டுபிடிச்சு விஷயத்தை சொல்ற விதமா சொன்னா அக்கா நிச்சயம் கேப்பாங்க..’’

– சாவித்திரி விடாப்பிடியாக பேச, ‘‘ஒரு நிமிஷம் அந்த செல்ஃபோனை தரமுடியுமா?’’ – ரஞ்சனி கேட்டாள்.

‘‘தாராளமா..?’’ – நீட்டினாள் சாவித்திரி.

‘‘அக்கா வீட்ல ராகவி தனியா இருக்கால்ல. எதிர்வீட்டு புவனேஸ்வரிய ஒரு பார்வை பார்த்துக்க சொல்லிட்டு வந்தேன். அவகிட்ட விசாரிச்சுட்றேன். கிளம்பி வந்துகிட்டே இருக்கோம்னும் சொல்லிட்றேன். வீட்டுக்குப்போய் உங்க தம்பிகிட்டே மண்டகப்படியை வெச்சுப்போம்.‘’

‘‘சரி சரி.. பண்ணு.. பாவம் குழந்தை தனியா இருப்பா.’’

– ரஞ்சனி மளமளவென்று எண்களை தட்ட புவனேஸ்வரி படுவேகமாக காதில் பாய்ந்தாள்.

''அக்கா.. உங்க மாமியார் வந்துருக்காங்க. சைக்கிள்லாம் வாங்கிட்டு வந்துருக்காங்க. உடனே திரும்பிடுவாங்கபோல தெரியுது. ஆட்டோகாரன் வெளிலயே நிக்கறான்''

– புவனேஸ்வரி சொன்னது எரி அம்பாய் பாய்ந்து வந்தது.

'என்னது... மாமியார் வந்துட்டாங்களா?' – சட்டென்று புறப்பட்டுவிட்ட கேள்வியை அப்படியே அடக்கி திருப்பியவள் ''புவனேஸ்வரி... நாங்க வரதுக்கு நேரமாகும். ராத்திரி பத்துமணிகூட ஆகலாம். நீ கொஞ்சம் ஜாக்ரதையா ராகவியை பாத்துக்கோ..'' என்றபடியே செல்லை முடக்கினாள். மாலதி முகத்தில் ஆச்சரியம்!



ரஞ்சனி செல்போனில் கேட்கக்கூடாத ஒன்றைக் கேட்டுவிட்டு தடுமாறு வதை மாலதியும் சாவித்திரியும் கவனித்தார்கள்.

மாலதி கேட்டே விட்டாள்.

''ரஞ்சா, என்ன, ஏன் ஒருமாதிரி ஆயிட்டே? ராதா வீட்லதானே இருக்கா?''

''அ... ஆமா... ஆமா... அவ நாம இந்தப் பக்கம் வரவும் அந்தப் பக்கமா விளையாடப் போயிட்டாளாம். அதான் புவனேஸ்வரி சொன்னா. வீட்டைக் கவனமா பார்த்துட்டு உட்கார்ந்திருன்னா கேட்டாதானே?'' – படுசமயோசிதமாகச் சமாளித்தாள் ரஞ்சனி.

''சரி, நாம வர்றதுக்கு ராத்திரி பத்து மணியாகும்னு சொன்னியே... ஏன்?''

''அது... அது... போகும்போதே வக்கீலைப் பார்த்துட்டுப் போயிடலாம்னு தான். எப்படி கேஸ் போடலாம், எந்த மாதிரி நோட்டீஸ் அனுப்பணும்னு எவ்வளவு விஷயம் இருக்கு?''

''ஓ! அதான், அப்படிச் சொன்னியாக் கும்?''

''ஆமாம்... ஆமாம்...''

– ரஞ்சனிக்குச் சமாளிப்பதற்குள் மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கிவிட்டது.

சாவித்ரி பெரிதாக ஓய்வெடுத்தாள். கும்பிட்டாள்.



''எப்படியாவது அக்காவையும் அரவிந்தனையும் சம்மதிக்க வெச்சு, இந்த விஷயத்துல நீங்க அவரைக் காப்பாத்தணும்...''

''நீங்க கவலையேபடாமப் போங்க. நாங்க பார்த்துக்கறோம்...''

''அப்ப, நான் கிளம்பறேன்...'' – சாவித்ரி திரும்பவும் கெந்திக் கெந்தி காரை நோக்கி நடக்க, மாலதியும் ரஞ்சனியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''ரொம்ப நல்லவதான்... நாமதான் தப்பா புரிஞ்சுக்கிட்டோம், இல்ல...'' – மாலதி சற்று அசடு வழிய, ''ஆமாங்கா... சரி, நடங்க... வக்கீலைப் போய்ப் பார்ப்போம்...'' – ரஞ்சனி இழுத்தாள்.

''ஆமா! என்ன நீ... அரவிந்தன்கிட்ட பேசாமலே வக்கீல், வராத கீலைப் பார்க்கணும்கறே... அப்புறம் அவன் எகிறிக் குதிக்க மாட்டான்?''

''அவரை விடுங்க... உங்க வீட்ல எப்படி?''

''யாரு... அத்தானைச் சொல்றியா?''

''நான் வேற யாரைச் சொல்வேன்?''

''அவர் கிடக்கறார்... யார் கல்யாணம் பண்ணிக்குவான்னு இருந்த வரை, நான் கல்யாணம் பண்ணிக்கிட்டிருக்கேன். வருமானம் டெலிபோன் பில்லுக்கும் எலக்ட்ரிக் பில்லுக்குமே சரியா இருக்கு. இதுல அவர் என்ன சொல்வாரோ, இவர் என்ன சொல்வாரோனு யோசிச்சா போக வேண்டியதுதான்...''

''கரெக்ட்க்கா! அதிர்ஷ்டம் எப்பவாவது ஒரு தடவைதான் கதவைத் தட்டும். அப்ப, நாம கதவைத் திறக்காம விட்டுட்டா, காலமெல்லாம் துந்தணா தான்!''

''சரி, முடிவா சொல்லு... அரவிந்தன் கேஸ் போட முரண்டு பிடிச்சா, என்ன பண்ணுவே?''

''நானும் உங்களைக் கேக்கறேன். உங்க வீட்டுக்காரர், அப்புறம் உங்கம்மா...''

''அவ எங்க வந்தா? அவதான் இருக்கிற இடமே தெரியலையே...''

''ஒருக்கால் தெரியவந்து, 'அவங்க இப்படி மூணு பேரும் சேர்ந்து மிஸ்டர் ரங்கராஜ்ங்கறவரைப் பத்தி நினைச்சுக் கூடப் பார்க்கக்கூடாது. அவர் எக்கேடோ கெட்டுப்

போகட்டும்'னு சொன்னா, நீங்க என்ன பண்ணுவீங்க? நீங்க அவங்க பக்கமா, இல்லை... என் பக்கமா?''

''என்னடி ரஞ்சனி? இவ்வளவு தூரம் வந்ததுக்குப் பிறகு நான் மாறு வேனா? அவங்களையும் கன்வின்ஸ் பண்ணி, சொத்தையும் போகவிடாம நமக்கு வரவைக்கணும். அதுக்கு வழி சொல்லாம, கண்ட கேள்வி கேக்கறியே...''

''அப்ப, இனி நீங்க எப்பவும் என் கட்சி... அப்படித்தானே?''

''ஆமாம்! அதுல உனக்குச் சந்தேகமே வேண்டாம். ஆனா, ஒண்ணு... சொத்துல சரிபாதி எனக்கு. அதை மறந்துடாதே. 'பையனுக்குத் தான் சொத்து எல்லாம்... பொண்ணுக்குக் கிடையாது'னு புது நியாயம் பேசக் கூடாது...''

''பேசவும் முடியாது. சட்டத் திருத்தமே பண்ணியாச்சு தெரியுமா உங்களுக்கு?''

''அப்படியா சேதி! அட்ரா சக்கைன்னானாம்... அப்பக் கிளம்பு! ஆமா, யார் அந்த வக்கீல்?''

''பார்க்கத்தானே போறோம்...''

– ரஞ்சனி நடந்தாள். மாலதி பூனைபோலப் பின்தொடர்ந்தாள்.

புவனேஸ்வரி வீட்டு போன் திரும்ப சப்தித்தது.



''புவா, நான் ரஞ்சனி பேசறேன். என் மாமியார் இருக்காங்களா, போயிட்டாங்களா?''

''இப்ப... இப்பதான்க்கா போறாங்க. எங்க வீட்டுக்குக்கூட வந்தாங்க. கொஞ்ச நேரம் பேசிக்கிட்டிருந்தாங்க...''

''எங்கே இருக்கேன்னு ஏதாவது சொன்னாங்களா?''

''அதப்பத்தி மட்டும் மூச்சு விடலை... 'நான் எங்க இருக்கேன்கறதா பெரிசு? என் பசங்க நல்லாயிருந்தா சரி'னு அம்மாகிட்ட மழுப்பலா பேசிக்கிட்டிருந்தாங்க!''

''அப்ப, இப்ப இல்லை... போயிட்டாங்கனு சொல்லு...''

''ஆமாம்... நீங்க அப்பவே வந்திருந்தா, அவங்களை அமுக்கியிருக்கலாம். விட்டுட்டீங்களேக்கா...''

''எல்லாம் காரணமாத்தான் நான் வரலை. அதைப் பத்தி நான் உனக்கு அப்புறமா சொல்றேன். இங்க என் நாத்தனார் கழுத்தறுப்பு ஒண்ணு. அதுக்குத் தெரியாமத்தான் இப்ப பேசிக்கிட்டிருக்கேன். ராகவியைப் பார்த்துக்கோ, வந்துகிட்டே இருக்கேன்...''

– சொன்னதுபோலவே அடுத்த பதினைந்தாவது நிமிடம் ஆட்டோவில் வந்தபோது, ராகவி புதிய சைக்கிள்மேல் ஸ்டாண்ட் போட்ட நிலையில் அமர்ந்து, சைக்கிளை பெடல் செய்து கொண்டிருந்தாள்.

ரஞ்சனியும் தெரியாததுபோல் கேட்டாள் – ''ஏதுடி சைக்கிள்... எப்படி வந்தது?''

''பாட்டி வந்தாங்க... அவங்கதான் வாங்கிட்டு வந்தாங்க. ஆமாம்... நீ இப்படித்தான் லேட்டா வருவியா?''

''என்னது... எங்கம்மா வந்தாளா? எப்போ? எப்படி?'' – மாலதியிடம் ஆர்வம் தவளையாட்டம் எகிறியது.

''சாயந்திரமே வந்துட்டாங்க. இப்பத்தான் போறாங்க. உங்களுக்காக எவ்வளவு நேரம் காத்திருந்தாங்க, தெரியுமா?''

''நிஜமாவா! ஆமா, நான் வந்திருக்கிறதைச் சொன்னியா?''

''ஓ! சொன்னேனே...''

''ஆமா... எங்க இருக்காளாம்? எதாவது சொன்னாளா?''

''நான் எவ்வளவோ கேட்டேன் அத்தை... அதைப் பத்தி மட்டும் எதுவுமே பேசமாட்டேன்னுட்டாங்க. ஆங்... உங்களுக்கு கத்தரிக்கா பாத்னா ரொம்பப் பிடிக்குமாமே! செஞ்சு வெச்சிருக்காங்க...'' – குழந்தை சொல்ல... ஆமோதித்தது, சமையல்கட்டில் அதன் மணக்கும் வாசனை!

அப்படியே ஹாலிலும் ஒரு திருத்தம். எல்லா ஹிந்து பேப்பர்களும் மடிக்கப்பட்டு ஷெல்ஃப்பில் பதவிசாக இருக்க, புக்ஷெல்ஃப்பில் இருந்து டிஸ்ப்ளே பொம்மைகள் வரை எல்லாமே நேராகியிருந்தன!

வாசலில் செடிகளின் தொட்டியில் எல்லாம்கூட தண்ணீர் குடித்த ஈரம். சமையல் மேடை ஸிங்க்கிலும் ஒரு பத்துப்பாத்திரம் இல்லை!

''பாட்டி ரொம்ப நேரம் பார்த்துட்டு, உங்களுக்கு ஒரு லெட்டர் எழுதி வெச்சிருக்காங்க...''
– ராகவி ஓடிப்போய்க் கடிதத்தை எடுத்துவந்து நீட்டியது.



'**சௌ**பாக்யவதி மாலதிக்கு...

அம்மா அநேக ஆசீர்வாதம். என்னைத் தேட வேண்டும் என்று வந்த நீ... அங்கே மாப்பிள்ளை, பேத்தி கார்த்திகாவைப் பற்றி கவலையேபடாமல், இங்கேயே இருப்பதாக அறிந்தேன்.

என்னைப் பற்றிய கவலையை விட்டுவிடு. நான் யாருக்கும் பாரமாக இருக்க விரும்பாதபடி, ஒரு வழியைப் பார்த்துக்கொண்டு விட்டேன். நல்லபடியாகவும் இருக்கிறேன். எங்கே இருக்கிறேன், எப்படி இருக்கிறேன் என்கிற கவலையே உனக்கோ, அரவிந்தனுக்கோ வேண்டாம்.

எனக்குத் தோன்றும்போது, உங்களை வந்து பார்ப்பேன்.

நீ ஊருக்குக் கிளம்பு. அரவிந்தன், ரஞ்சனிக்கு என் ஆசீர்வாதங்கள்.

குழந்தை ராகவிக்குக் கொஞ்சம் சைக்கிள் ஓட்ட மட்டும் சொல்லிக் கொடுக்கவும். அவள் கெட்டிக்காரி. சீக்கிரமே கற்றுக்கொண்டு விடுவாள். அதன்பின் அவளை சைக்கிளிலேயே அனுப்பவும். திரும்பவும் சொல்கிறேன். என்னைப் பற்றிய கவலை வேண்டாம்.

இன்னொரு விஷயம்... அந்தப் பழைய வீட்டை நீங்கள் கிரயம் செய்து வாங்கிவிட்டதாகவும் ஆனால், அதை அரவிந்தன் திருப்பிக் கொடுத்து விட்டதாகவும் குழந்தை என்னிடம் பேசியதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

அதுதான் நல்ல முடிவு.


உங்களுக்கு ஒரு நல்ல வீட்டை எதிர்காலத்தில் கடவுள் நிச்சயம் தருவார். நானேகூட அதை வாங்கித் தரும் நிலை வரலாம்.

பொறுமையாக இருப்பதில் திருப்தி கண்டு வாழவும். அதுதான் எதிர்காலத்துக்கு நல்லது. மீண்டும் அனைவருக்கும் என் ஆசிகள்.

அன்புடன் அம்மா மீனாட்சி.'

– கடிதத்தைப் படித்த மாலதிக்குத் திணறியது. ரஞ்சனி வெடுக்கென்று கடிதத்தைப் பிடுங்கித் தான் வாசிக்க ஆரம்பித்தாள்.

வெளியில் அரவிந்தன் வேறு வந்துவிட்டதற்கு அடையாளமாக ஸ்கூட்டரின் சத்தம்!



ரஞ்சனியின் கையில் மீனாட்சி எழுதிய கடிதம் படபடத்தது. அருகில் திருதிருவென்று மாலதி... உள்ளே நுழைந்த அரவிந்தன் அது என்ன கடிதம் என்கிற மாதிரி பார்த்தான். அவள் வாயைத் திறந்து சொல்வதற்குள் ராகவி முந்திக்கொண்டது.

''அப்பா... பாட்டி வந்தாங்களே...'' – வந்தாங்களே என்கிற முடிவில் ஒரு ராகம் வேறு. அரவிந்தன் அடுத்த நொடியே இன்பமாய் அதிர்ந்தான்.

''எப்ப.. நிஜமாத்தான் சொல்றியா?'' - பேண்ட்டில் இருந்து பெல்ட்டை உருவிய படியே வேகமாக கேட்டான். ''வீடெல்லாம் எவ்வளவு நீட்டா இருக்குது... அதைப் பார்த்துமா உனக்கு தெரியலை..'' – ராகவி பதிலுக்குச் சொல்ல, அவன் பார்வை வட்டம் கட்டியது.

ஆமோதித்தது அந்த ஹால். காலண்டரில் சரியாக தாள்கள் கிழிக்கப்பட்டிருந்தன. டிஸ்ப்ளேயில் கடிகாரம் கீ கொடுக்கப்பட்டு ஓடிக்கொண்டிருந்தது. டேபிள் மேல் ஹிந்துவும் விகடனும் சீராக மடக்கி அடுக்கப்பட்டிருந்தன. பூஜை அறையிலும் ஊதுபத்தி வாசம்... குறிப்பாக தாழ்வாரத்து மணி பிளான்ட் காற்றில் கயிறு அறுந்து தரையில் தவழ

சிரமப்பட்டுக் கொண்டிருந்தது. அது இப்போது கயிற்றால் கட்டப்பட்டு மேலேறிய வண்ணம் இருந்தது. உண்மைதான்!

அரவிந்தன் முகத்தில் உடனேயே சந்தோஷ கார்களின் டிராஃபிக்ஜாம். சட்டென்று அவள் வீட்டில் இருப்பதாக நினைத்துக்கொண்டு ''அம்மா.. அம்மா...'' என்று சமையில் கட்டிலும், பின்னாலும் போய் எட்டிப் பார்த்தான். ராகவி அதைப் பார்த்து கை கொட்டிச் சிரித்தாள்.

''ஐய்யோப்பா... பாட்டி வந்துட்டு எனக்கு சைக்கிளும் வாங்கிக் கொடுத்துட்டு போய்ட்டாங்க...'' என்று ராகவி சொல்லவும் உச்சந்தலையில் ஒற்றை முடியை மட்டும் யாரோ பிடித்து இழுத்த மாதிரி இருந்தது.

ரஞ்சனி கிட்டத்தட்ட குக்கர் அடுப்பு போல கொதித்துப்போய் ஒருவித பிரஷருடன் அவன் எதிரில் அந்த கடிதத்தை நீட்டினாள்.

''என்ன லெட்டர்..?''

''படியுங்க.. தெரியும்...'' – வார்த்தைகளில் அநியாயத்துக்கு ஒருவித உணர்ச்சிச் சொரசொரப்பு. அவனும் வாங்கி மளமளவென்று பார்வையை ஓடவிட்டான். படித்து முடித்த நிலையில் லேசாய் கண்களும் கலங்கி விட்டிருந்தன.

ரஞ்சனி நடுவில் மாலதியை ஒருபார்வை பார்த்தாள். அவள் கடிதத்தில் அம்மா தன்னை ஊருக்குப் போகச் சொல்லி எழுதியிருந்த வருத்தத்தில் புகைந்து கொண்டிருந்தாள்.

''படிச்சாச்சா... அதான் கண்கலங் கிடிச்சோ?'' – ரஞ்சனி வார்த்தை யுத்தத்துக்கு அடித்தளம் போடுவதுபோல தோன்றியது.

''நாங்க இரண்டு பேரும் இப்பதான் உள்ள நுழையறோம். வெளிய போயிருந்தோம். கோவிலுக்கு... வந்து பார்த்தா வீட்ல சமையல் வேலைகூட முடிஞ்சு பத்து பத்திரத்தையும் தேச்சு வெச்சுட்டு இந்த லட்டரையும் எழுதி வெச்சுட்டு போயிருக்கா அம்மா.. ஏன்.. வெளிய போனா நாங்களோ இல்ல நீயோ வராமலா போய்டுவோம்? இருந்து பாத்துட்டுப் போகலாம்ல...''

''அது என்ன அவசரமோ?'' - மாலதியும் சிவப்புக் கொடியை ஏற்ற ஆரம்பித்தாள்.

''அது எப்படிக்கா... நம்மைப் பாத்துட்டா தான் கேள்வி கேப்போமே... இங்க என்ன குறைன்னு நான் கேட்பேன்.. ஓடிப்போற வயசான்னு நீங்க கேப்பீங்க. இவர் இருந்தா கால்லையே விழுந்து நீ இனி எங்கேயும் போகக்கூடாதுன்னு சொல்வாரு... அதான் எல்லாருக்கும் அல்வா கொடுத்துட்டு ஓடிப் போய்ட்டாங்க...'' – ரஞ்சனியின் குத்தலுக்கு வேகமான பதில் ராகவியிடம் இருந்துவர ஆரம்பித்தது.

''பொய்யி... பாட்டிக்கு நீங்க வெளிய போயிருக்கறதே தெரியாது. அதோட ரொம்ப நேரம் உங்களுக்காக காத்துகிட்டிருந்தாங்க. மூணு மணிக்கு வெளியபோன நீங்க இப்ப வந்துட்டு பாட்டியை திட்றீங்களா?''

– அரவிந்தன் அடுத்த நொடி ரஞ்சனி பக்கம் திரும்பினான்.

''மூணு மணிக்கே வெளிய கிளம்பி போய்ட்டீங்களா... எங்க போனீங்க?''

– திடீரென்று ராகவியால் திசைமாற ஆரம்பித்த சூழ்நிலையை ரஞ்சனியும் துணிவுடன் எதிர்கொண்டாள். மாலதியைப் பார்த்தபடியே கண் சிமிட்டியவள் ‘‘எங்க அத்தைக்கு உடம்பு முடியலையாம். அம்பத்தூர்ல இருக்கற அவங்களை பாக்கத்தான் போயிருந்தோம். அம்பத்தூர் என்ன பக்கத்துலையா இருக்கு? அதுலையும் தி.நகர்ல இருந்து பஸ்பிடிச்சு போய்ட்டு வரதுன்னா சும்மாவா..?’’

‘‘அப்ப கோயிலுக்கு போய்ட்டு வந்ததா சொன்னியே?’’ - ராகவியே அரவிந்தன் சார்பில் மடக்கிற்று. ‘‘அப்படியே கோயிலுக்கும் போய்ட்டு வந்தேண்டி கிழவி.. வாயைப் பாரு. இந்த விண்ணாரத்தைப் படிப்புல காட்டு. போ… போடி அந்தப் பக்கம்’’ – துரத்தினாள். அரவிந்தன் என்ன சொல்வது என்று தெரியாமல் அப்படியே சோபாவில் விழுந்தான். மாலதி திரும்பவும் எதையோ சொல்ல வாயெடுத்தாள். ரஞ்சனி சைகையிலேயே தடுத்தாள். பின் ‘‘நீங்க வாங்கக்கா… இனி நாம பேச என்ன இருக்கு? அவர் என்ன பண்றாரோ பண்ணிக்கட்டும். ஆனா, ஒண்ணுக்கா… இத்தனை நெஞ்சழுத்தம் உங்கம்மாவுக்கு கூடாது.’’

‘‘அதுசரி… என்னை ஊருக்கு கிளம்புன்னு சொல்லியிருக்காளே.. நான் என்ன பண்ணட்டும்?’’

‘‘என்னக்கா, அவங்க சொன்னா நானும் சொல்வேனா? இப்ப சொல்றேன்… நீங்க போகக்கூடாது. இன்னும் பத்துநாள்… இல்லைல்ல ஒரு மாசம் இங்க இருங்க, நானாச்சு.’’

– பேசிக்கொண்டே இருவரும் அறையில் புகுந்து கதவைச் சாத்திக்கொண்டனர். புடவை மாற்றிக் கொண்டு திரும்பிவந்த போதும் அரவிந்தன் அப்படியே உட்கார்ந்து இருந்தான்.

மாலதி நைஸாக ரஞ்சனியை நெருங்கி அவள் காதோரமாக கேட்டாள்.

‘‘ஏண்டி… எப்படிடி கேஸ் போட்றது சம்மந்தமா பேசப்போறே?’’

‘‘இன்னிக்கு பேசக் கூடாதுக்கா. ரெண்டுநாள் போகட்டும். அப்புறம் ஆரம்பிக்கலாம்.’’

‘‘ஆமா, உன் பொண்ணு அந்த வீட்டு விஷயத்தை பாட்டிகிட்ட சொல்லியிருப்பாளா?’’

‘‘அந்த கேள்வியையும் இப்ப கேக்கவேண்டாம். அது ஒரு பாட்டி பைத்தியம். நிச்சயம் சொல்லியிருக்கும்.’’

‘‘அப்படின்னா லட்டர்ல அதபத்தியும் எழுதியிருப் பாங்களே…’’

‘‘எழுதியிருக்காங்களே… நல்ல வீடா பாத்து நானே வாங்கித் தரேன்னா என்ன அர்த்தம்?’’

‘‘ஒஹோ நீ அப்படி வர்றியா… ஆமா எங்கம்மாவால எப்படி வீடு வாங்கித்தர முடியும்?’’

‘‘யாருகண்டா… லாட்டரி கீட்டரி வாங்கியிருப்பாங்க. அதுல பரிசு விழுந்தா வாங்கித்தரலாம்னு நினைச்சுகிட்டிருப்பாங்க.’’

‘‘இருக்கும் இருக்கும்.. வயசான காலத்துல இவ இப்படி படுத்த வேண்டாம்.. என்ன சொல்றே?’’

‘‘கவலையை விடுங்க. கோடிக்கணக்கான சொத்துக்கு இந்த நிமிஷம் நீங்க வாரிசுங்க. ஒரே ஒரு வக்கீல் நோட்டீஸ் போதும். அப்றமா பாருங்க இந்த வீட்டு வாசல்ல உங்கப்பாவோட கார் வந்து நிக்கப் போறத...’’

– ரஞ்சனி ஆசை காட்டி வைத்த நெருப்பு மாலதியின் கண்களில் பற்றி எரிந்தது.

‘‘ஆறு நிறைய தண்ணி போனாலும் நாய் நக்கித்தான் குடிக்கும். ஆனா, நாம நாயா இல்லை அந்த ஆத்துக்கு நடுவே அணையை கட்டி அதை அப்படியே அனுபவிக்கப் போற புத்திசாலிகளான்னு போகப் போக பாருங்க...’’

‘‘இதோ பார்... அரவிந்தனே மாட்டேன்னாலும் நான் விடப்போறதில்ல. இப்பத்தான் பெண்களுக்கும் சொத்துல பங்கு உண்டே. எங்கப்பா சட்டைகாலரை எப்படி பிடிக்கறேன்னு பாரு.’’

‘‘அப்படிப் போடுங்க. அதிகபட்சம் ஒரு மாசமா நீங்க மட்டும் நோட்டீஸ் அனுப்பினா, உங்கப்பா உங்க காலடில வந்து விழுந்துடுவாரு. வக்கீல் என்ன சொன்னார்னு ஞாபகம் இருக்குல்ல?’’

‘‘ஆமாமா... சப்ஜாடா எங்க தாத்தா சொத்து அவ்வளவையும் எங்கப்பாவே ஒரு குறிப்பிட்ட தவணைல எங்களுக்கு கொடுக்க கெடு விதிக்கலாம்னுல்லாம் சொன்னாரே...’’

‘‘அந்த கெடு ஒரே மாசம்தான். அப்புறம் பாருங்க...’’

– ரஞ்சனி மாலதியை கனவில் மிதக்க வைத்துவிட்டு ஹாலுக்கு திரும்பி வந்தாள். அரவிந்தன் உட்கார்ந்து கொண்டேயிருந்தான். ராகவியும் மவுனமாக உட்கார்ந்து கொண்டேயிருந்தது.

‘‘நீ என்னடி இன்னும் முழிச்சுகிட்டு... போடி’’ என்று அவளை விரட்டிவிட்டு அரவிந்தனின் ஷூவையும் சாக்ஸையும் அவளே கழட்ட ஆரம்பித்தாள். கல்யாணமான புதிதில்கூட அவள் இப்படி எல்லாம் நடந்து கொண்டதில்லை. அவனுக்கு ஆச்சரியமாக இருந்தாலும் காட்டிக்கொள்ளாமல் அவளுக்கு ஒத்துழைத்தான்.

‘‘கவலைப்படாதீங்க... உங்கம்மாவை சீக்கிரமா கண்டு பிடிக்கறோம். நம்மோட அவங்கள எங்கேயும் போக விடாம கெட்டியா பிடிச்சு வச்சுக்கறோம். இப்ப வந்து சாப்ட்டுட்டு படுங்க...’’

– மிக இதமாக அந்த நேரத்துக்கு அவனுக்கு எது இதமோ அதை பதிலாக சொல்லி டைனிங் டேபிளுக்கும் அழைத்துச் சென்றாள்.

புத்திசாலிப் பெண்!

அதே நேரம் ஆசிரமத்தில் வேறொரு காட்சி அரங்கேறிக் கொண்டிருந்தது.



ஆசிரமம்!

மீனாட்சியை சுற்றி ஆசிரமவாசிகள் அவ்வளவு பேரும் உட்கார்ந்திருந்தனர்.

மீனாட்சி அன்று ஷூட்டிங்கில் தான் நடித்ததை அவர்களுக்கும் நடித்துக் காட்டிக்கொண்டிருந்தாள்.



''ஒரு ஆச்சரியம் பாருங்க... எனக்கு அந்த டீ.வி. தொடர்லயும் இந்த மாதிரி ஒரு ஆசிரமத்துல வந்து கஷ்டப்பட்ற மாதிரி ஒரு வேஷம்... அதாவது கதைப்படி எனக்கு ஒரு பையன் இருக்கான். அவனுக்கு நிறைய வருமானம். இருந்தும் பொண்டாட்டி பேச்சை கேட்டுகிட்டு அவன் என்னை வெளிய துரத்தி விட்டுட்றான். நானும் ஆசிரமத்துல வந்து சேந்துட்றேன். அப்படி நான் வந்து சேர்ந்த பிறகு ஒரு திடீர் திருப்பம்.'' - மீனாட்சி கதையில் சஸ்பென்ஸாக நிறுத்துகிற மாதிரி திருப்பம் என்று சொல்லிவிட்டு எல்லோரையும் பார்த்தாள்.

எல்லோரும் அவளையே வைத்தகண் வாங்காமல் பார்த்தபடி இருந்தனர். ஒரே ஒரு பாட்டி மட்டும் ''மீனாட்சி... அது என்ன திருப்பம்னு நான் சொல்லட்டுமா?'' – என்று கேட்டாள். எல்லோர் கவனமும் அவள் பக்கம் திரும்பியது.

''இந்த மாதிரி ஆசிரமத்துக்கு வந்துட்ட உனக்கு சொத்து ஏதாவது கோர்ட்டுல தீர்ப்பாகியிருக்கும். இல்ல லாட்டரில கோடி ரூபா விழுந்துருக்கும். உடனே உன் மகனும் மருமகளும் வந்து தாங்க ஆரம்பிச்சிருப்பாங்க... சரியா?''

- அந்த பாட்டி ஓரளவு சரியாகவே கேட்ட மாதிரி தோன்றியது. மீனாட்சியின் ஆச்சரியமுகம் அதை எதிரொலித்தது.

''சபாஷ் லலிதாம்மா.. பேசாம நீங்க கதை எழுதப் போகலாம். அவ்வளவு ஷார்ப் நீங்க..'' – என்றாள் உடனே.

''இதுக்கு எதுக்கும்மா நான் கதை எழுதப் போகணும். இங்க வந்த எனக்கு அப்படித்தானே நடந்தது?''

- அந்த லலிதா பாட்டி அளித்த அதிர்வு எல்லோரிடமும் வேகமாகப் பரவியது.

''நிஜமாவா...?''

''ஏய் லல்லு.. என்னடி சொல்றே?''

''அப்ப நீ அநாதை இல்லையா... உனக்கு பையன் இருக்கானா?''

– எல்லோரும் சளசளவென்று கேள்விகளில் விழ லலிதா பாட்டி அதைப் புறந்தள்ளியவளாக மீனாட்சியைப் பார்த்து ''மீனாட்சி... நீ என்ன முடிவெடுத்தே..?'' – கேட்டாள்.

''அது தெரியாது... அந்த சீன்லாம் நாளைக்குத்தான் ஷூட் பண்ணப் போறாங்க...''

''அப்படியா... நான் இப்பவே நாளைக்கு சீன் எப்படி இருக்கும்னு சொல்லவா?''

''எங்க சொல்லுங்க பார்ப்போம்?''

''நீ பையனை நிர்தாட்சண்யமா 'போடா'ன்னு சொல்லிட்டு சொத்தையும் வித்து அந்த பணத்தை ஆசிரமத்துக்கு தந்துடுவே...''



– பாட்டியின் பதிலால் மேலும் ஒரு அதிர்வு எல்லோரிடமும்.

''ஏன்னா நான் அப்படித்தான் பண்ணினேன். எனக்கு ஏழெட்டு லட்சம் வந்தது. அவ்வளவையும் அப்பா கிட்ட கொடுத்துட்டேன். அதே சமயம் என் பையனையும் கைகழுவிட்டேன். செத்தா எனக்கு அவன் கொள்ளிகூட போடக்கூடாது. எனக்கு அப்பாதான் போடணும்னு சொல்லிட்டேன். அதனாலதான் நான் முழு அநாதை ஆனேன்.

எல்லா சொந்தங்களும் இருந்து அர்த்தமில்லாத ஒரு உறவோட இருக்கறதைவிட அப்பழுக்கில்லாத அநாதையா இருக்கறது மேல். அநாதையா ஆயிட்டாலே கடவுளுக்கும் நமக்கும் உள்ள தூரமும் குறைஞ்சு போயிடுது. டைரக்டா கடவுள்கிட்ட இனி நீதான் என்னை கவனிச்சுக்கணும்னு உரிமையோட சண்டை போடலாம். ஆனா, உறவுகள் இருக்கும்போது அந்த உரிமை வரவே வராது.''

– லலிதாபாட்டி அநாதை என்னும் வார்த்தைக்கு புதிய பதவுரை சொல்லி, மீனாட்சியையே ஒரு உலுக்கு உலுக்கினாள்.

''ஆமாம்... மீனாட்சி உனக்கு பசங்கள்ளாம் இருக்காங்களா... இல்லை நீ நம்ம லலிதா மாதிரி உறவிருந்தும் அநாதையா, ஆனவளா?'' - அவர்களில் யாரோதான் கேட்டது.

மீனாட்சி ஆடிப்போய்விட்டாள். என்ன பதிலைச் சொல்வது? ஒருகணம் தடுமாறினாலும் சுதாரித்தாள்.

‘‘என்னால அநாதையா ஆகவே முடியாது. ஏன்னா எனக்குதான் அண்ணா, அக்கா, தங்கைன்னு இங்க ஏகப்பட்ட பேர் இருக்கீங்களே’’ - என்றாள்.

சிறு குழந்தைகள் பள்ளியில் ஹோவென்று கோரஸாய் கத்துவது போல அவர்களும் செய்து மீனாட்சியின் பதிலை ரசித்ததுதான் ஒரு ஆச்சரியம்.

நடுவில் ஆபீஸ் க்ளார்க் ஆபீஸ்ரூம் வாசலில் நின்றுகொண்டு ‘‘மீனாட்சிம்மா உங்களுக்கு போன்..’’ – என்று கத்தினான்.

‘‘ஒரு நிமிஷம்...’’ – என்று மீனாட்சியும் அங்கிருந்து நழுவினாள்.

பிரிந்து கிடந்த ரிஸீவர் எடுத்து காதைக் கொடுத்தாள். மறுமுனையில் நிசப்தம்.

‘‘ஹலோ...’’

‘‘......’’

‘‘ஹலோ யார் பேசறது.. நான் மீனாட்சி பேசறேன்..’’

– மீனாட்சி சொல்லியும் பதிலில்லை. மீனாட்சி குழப்பத்துடன் க்ளார்க்கைப் பார்த்தாள். ‘‘என்னப்பா யார் போன் பண்ணினது... டெட்டா இருக்கே?’’

‘‘இப்பதான்மா ஒரு பொண்ணு உங்களைக் கேட் டாங்க.’’

‘‘பொண்ணா..?’’

‘‘ஆமாம்மா... குரல்கூட முந்தி இங்க இருந்துச்சே அமலான்னு.. அந்த பொண்ணு குரல் மாதிரியே இருந்திச்சு.’’ – மீனாட்சி அதிர... ‘டொடக்’கென்று மறுமுனையில் ரிஸீவரை யாரோ வைக்கும் சத்தம் மட்டும் கேட்டது.

மீனாட்சி முகத்தில் பரபரப்பு தொற்றிக்கொள்ள ஆரம்பித்து விட்டது.

‘‘ஒரே ரோதனைம்மா... இரண்டு மூணு தடவை மணி அடிச்சு எடுக்கப் போனா நின்னு போயிடும். அப்புறமாதான் ஒரு வழியா லைன்ல வந்தாங்க. என்ன பிரச்னையோ?’’

– க்ளார்க் சாதாரணமாக அதே சமயம் கச்சிதமாக யூகித்துப் பேசினான்.

‘நிர்மலாவுக்கு எதாவது சிக்கலா?’ - மீனாட்சிக்குள் கேள்வியின் விஸ்வரூபம்!

பங்களா முகப்பில் ஆட்டோ தேங்கி நின்றது. மீனாட்சிதான் அதிலிருந்து இறங்கினாள். போகன் வில்லா மூடிய மதில்கள். வேல்கம்பை வரிசையாக வைத்து இணைத்துக்கட்டி செய்தாற்போன்ற மெயின் கேட்... கேட்டை ஒட்டி ஒரு சிறிய ஆஸ்பெஸ்டாஸ்டென். அதில் ஒரு இன்டர்காம் டெலிபோன். அதை ஒட்டி ஒரு வார ஜோதிட புத்தகத்தைப் படித்துக்கொண்டு வயதான ஒருவன் அமர்ந்திருந்தான்.



மெயின் கேட்டைத் தள்ளிக்கொண்டு மீனாட்சி வரவும் நிமிர்ந்தான். பார்வையே யார் என்று கேட்டது?

‘‘நிர்மலாவுக்கு நான் தெரிஞ்சவ... அவளைப் பாக்க வந்துருக்கேன்.’’ – மீனாட்சியின் பதில் அவனைக் கொஞ்சம் துவட்டியது.

‘‘அவங்களுக்குத் தெரிஞ்சவங்கன்னா... உறவுக்காரங்களா?’’

‘‘ஏன்ப்பா... விலாவரியா சொல்லணுமா உனக்கு... நிர்மலா வீட்ல இருக்காள்ல?‘‘

– மீனாட்சி பதிலோடு உள்ளே செல்ல காலெடுத்தாள். அடுத்த நொடி புத்தகத்தை விட்டெறிந்துவிட்டு ஓடிப் போய் அவள் முன் நின்று மறித்தவன்.

‘‘ஏம்மா நான் இங்க வேலைல இருக்கறது உங்களுக்கு பிடிக்கலையா?’’ என்றான்.

‘‘என்னப்பா சொல்றே...?’’

‘‘தயவு செய்து போங்கம்மா. அவங்க பேரைச் சொல்லிகிட்டு யார் வந்தாலும் பெரியம்மாவைக் கேக்காம நான் உள்ள விடமுடியாது..’’

‘‘யாரு... நிர்மலா மாமியாரை சொல்றியா?’’

‘‘ஆமாம்மா... போய்டுங்க.’’

‘‘ஏன் இப்படி துரத்தறே... அந்த பெரியம்மாகிட்டையே சொல்லு. என்பேர் மீனாட்சி. நான் நிர்மலாவை பார்க்க வந்துருக்கறதா சொல்லு...’’

‘‘சொல்ல முடியாதும்மா... அவங்க இப்ப வீட்ல இல்லை. வெளிய போயிருக்காங்க.’’

‘‘அப்ப அவங்க அனுமதியில்லாம நிர்மலாவை பார்க்க முடியாதா?’’

‘‘ஆமாம்மா... அந்த பொண்ணு இரண்டு நாளைக்கு முந்தி வீட்டை விட்டு ஓடப்பார்த்து ஒரே ரகளை. இப்ப அதை உள்ற போட்டு பூட்டி வெச்சிருக்காங்க. இந்த நிலைல நான் எப்படி உங்களை விடமுடியும்?‘‘

அவன் வெள்ளந்தி யாக நடந்த தைச் சொல்ல மீனாட்சி ஆடிப்போனாள்.

‘‘ஓடிப்போற அளவுக்கு என்னப்பா சிக்கல்?’’ – என்றாள் வேகமாக.

‘‘அம்மா தயவு செய்து என் வாயைக் கிளறாம கிளம்புங்கம்மா. அய்யா உள்றதான் இருக்காரு. அவரு பார்த்தா என்னை நோண்டி நொங்கு எடுத்துடுவாரு. கிளம்புங்கம்மா...’’

– வாட்ச்மேன் கைகளைக் கூப்பினான். மீனாட்சியால் அதற்கு மேல் அவனிடம் எதுவும் பேசமுடியவில்லை.

ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்தது.

நிர்மலா நிச்சயம் சந்தோஷமாக இல்லை!

மீனாட்சி சொன்னதைக் கேட்டு அப்பா பெருமூச்சு விட்டார். கண்களை மூடிக்கொண்டு ஏதோ ஸ்லோகமும் சொன்னார்.



''நிர்மலாவுக்கு நிச்சயம் ஏதோ ஆபத்து. அதைச் சொல்லி அழத்தான் போன் பண்ணியிருக்கணும். ஆனா, நான் போய் அட்டெண்ட் பண்றதுக்குள்ற அவளை அவ வீட்ல யாராவது பார்த்துட்டு தடுத்துருக்கலாம்னு நினைக்கிறேன்.''

''சரி... அதுக்காக இங்க நாம என்ன பண்ண முடியும்? அவ தலையெழுத்து அப்படின்னு நினைக்கறத தவிர...'' – சீனிவாசனின் பதிலில் எதார்த்தமும் இயலாமையும் பளிச்சிட்டது. ஆனால், அப்பா கண்ணிலோ ஜலக்கூடு.

உள்ளுக்குள் ஒரு பெரிய தவறை அவர் செய்துவிட்ட மாதிரி ஒரு பதைப்பு.

''அப்பா நீங்க ஏன் வருத்தப்பட்றேள். நம்ம மேல ஒரு தப்பும் இல்லையே..''

''அப்படி இல்ல சீனு... உலகம்னு இருந்தா மேடும் பள்ளமும் இருக்கத்தான் செய்யும். அதுக்காக பொதுவா கவலைப்பட முடியுமே தவிர, கவலையே பட்டுண்டு இருக்க முடியாது. ஆனா, கண் எதிர்க்க ஒரு குளத்துல ஒருத்தர் மூழ்கறதப் பார்த்துட்டு அந்த பொது நியாயத்துல போகக்கூடாது. அது மகா பாவம்.''

''அப்ப அவளுக்காக எதாவது பண்ணணும்னு நினைக்கறேளா?''

''முதல்ல அவ பிரச்னை என்னன்னு தெரியணும். அது தெரியாம எந்த முடிவுக்கு நாம வர முடியும்?''

''அதை தெரிஞ்சுக்கப்போய்தான் முடியாம மீனாட்சியம்மா திரும்பி வந்துட்டாங்களே...''

''இந்த மாதிரி விஷயத்துல ராமனா நடந்துக்கப்படாது. கிருஷ்ணனா செயல்படணும்.'' அப்பா ஏதோ ஒரு புதுவழியை காட்டுகிற மாதிரி தோன்றியது மீனாட்சிக்கு...

''புரியலையேப்பா... கிருஷ்ணனான்னா?'' – கேட்டாள்.

''பீமனும் ஜராசந்தனும் மோதிக்கற சம்பவம் ஞாபகம் இருக்கா?'' – அப்பா மகாபாரதத்துக்குள் நுழைந்தார். மீனாட்சி கப்பென்று பிடித்துக்கொண்டாள்.

''புரியறது.. ஜராசந்தனை பீமன் தன் பலத்தால எத்தனை முறை பிளந்து போட்டும் பலனில்லை. அவன் உடம்பு ஒண்ணா சேர்ந்துக்குது. அப்ப பக்கத்துல இருந்த கிருஷ்ணன் ஒரு துரும்பைக் கிள்ளி அதை மாத்திப் போட்டு பீமனுக்கு இன்ஸ்ட்ரக் ஷன் கொடுக்கறார். அப்புறமா பீமன் ஜராசந்தவதத்தை முடிக்கறான். அந்த மாதிரி ஒரு சமயோகிதம் வேணும்னு சொல்றீங் களா?''

‘‘ஆமாம், தந்திரங்களை தர்மங்களால ஜெயிக்க முடியாது. அப்ப தர்மத்துக்கும் தந்திரத்தை கத்துக்கொடுக்கற புத்தி நமக்கு வேணும். அதே சமயம் அது பொதுநலத்துக்காக இருக்கணும். அப்படி இருந்துட்டா வழிதானா கிடைக்கும்?’’

– அப்பா கோடுதான் போட்டார். மீனாட்சி அதில் ரோடு போடவே தயாரான மாதிரி எழுந்தாள்.

‘‘அப்பா நீங்க கவலையை விடுங்க. நிர்மலா எவ்வளவு மோசமான நிலைல இருந்தாலும் அவளை மீட்கறது என் பொறுப்பு’’ – என்றாள்.

சீனிவாசனுக்கே அது பெரிய ஆச்சரியமாக இருந்தது. ‘அப்பாவா இப்படி கோடு தாண்டச் சொல்கிறார்?’ ஆச்சரியத்தோடு சந்தேகமும் சேர்ந்து கொண்டது. அப்பாவுக்கு கற்பூரபுத்தி. புரிந்துகொண்ட மாதிரி அதற்கும் பதில் சொல்லத் தொடங்கினார்.

‘‘என்ன சீனு… நானா இப்படி சொல்றேன்னு ஆச்சரியமா இருக்கா?’’

‘‘ஆமாம்ப்பா… இந்த ஆசிரமத்துல எங்க பார் ஒரே எறும்பா இருந்து கடிச்சப்போ நான் எறும்பு மருந்து வாங்கிப் போட்டேன். அதைப் பார்த்துட்டு வருத்தப் பட்டு அந்த பாவத்துக்காக என்னை ஆயிரத்தெட்டு காயத்ரி ஜெபிக்கச் சொன்னீர். நீங்களா இப்போ..?’’

‘‘அர்ஜுனன் மாதிரியே கேள்வி கேக்கறே சீனு நீ… அஹிம்ஸை, தர்மம், நியாயங்கள் இவைகளை எல்லாம் ரொம்ப மென்மையான விஷயங்களாவும் நீ நினைக்கறே போல இருக்கு. அதெல்லாம் நெருப்பு மாதிரி. ஒரு நெருப்பை இன்னொரு நெருப்பாலதான் தீண்டி தானும் அணையாம தீண்டியதையும் அணைக்காம பாத்துக்க முடியும்…’’

– அப்பா சொன்னது சீனிவாசனுக்கு கொஞ்சம் புரிந்தது. புரியாத மாதிரியும் இருந்தது. ஆனால், மீனாட்சி புத்திசாலித்தனமாக நிர்மலாவின் பங்களாவுக்குள் நுழைய யோசிக்க ஆரம்பித்திருந்தாள்!

ரஞ்சனியும் தீவிர யோசனையில்தான் இருந்தாள். அருகிலேயே மாலதி.

‘‘என்ன ரஞ்சா… என்ன சிந்தனை?’’

‘‘என் மாமனார்க்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பறது பத்தித்தான்க்கா…’’

‘‘எனக்கும் அதுதான் புரியல… அரவிந்தனை எப்படி இதுல இழுத்துவிடப் போறே?’’

‘‘இந்த மாதிரி விஷயத்துகெல்லாம் ராமனா யோசிச்சா பருப்பு வேகாதுக்கா.. கொஞ்சம் கிருஷ்ண லீலை பண்ணத் தெரியணும்.’’

‘‘எப்படி.. எப்படி?’’

‘‘அதான் யோசிச்சுகிட்டிருக்கேன். அதிகபட்சம் 24 மணி நேரத்துல வக்கீல் நோட்டீஸ் போயாகணும். இல்லேன்னா – அந்த சாவித்ரி சொன்ன மாதிரி சொத்துப் பத்திரங்கள் சேட்டோட கைக்கு போயிடும்…’’

‘‘அதைத்தான் எப்படி சாதிக்கப் போறே?’’

‘‘அந்த ஆள்கிட்ட பேசியெல்லாம் ஒண்ணும் பண்ண முடியாது. ஒரே வழிதான் இருக்கு..’’

‘‘என்ன... என்ன?’’

‘‘உங்கம்மாவே உங்க தம்பியை கேஸ் போடச் சொல்றதுதான்.’’

‘‘என் அம்மாவா... என் தம்பி கிட்டையா...? என்ன உளற்றே?’’

‘‘உளறல்தான். ஆனா இந்த உளறல்தான் நாம நினைச்சதை சாதிக்கப்போகுது.’’

‘‘இதோ பார்... இமய மலைகூட இடம் மாறும் ஆனா என் அம்மா என் தம்பிகிட்ட கேஸ் போடுன்னு சொல்ல மாட்டா. தெரியாதா உனக்கு.’’

‘‘எங்க இதைப் பாருங்க... இப்ப சொல்லுங்க – பார்ப்போம்’’ – ரஞ்சனி ஒரு கடிதத்தை மாலதி எதிரில் நீட்டினாள்.

அதில்..?



கடிதம் ரஞ்சனி கையில் இருக்க மாலதி அதை படிக்கத் தொடங்கியிருந்தாள்.

‘அன்புள்ள அரவிந்தனுக்கு,

அம்மாவின் மங்களாசீர்வாதங்கள்!

நீ உன் அப்பா சம்பந்தமாய் பெரிய குழப்பத்தில் இருப்பதை அறிகிறேன். அவரது ஆசைநாயகி சாவித்ரி உன்னை சந்தித்து பேசிய விவரமெல்லாம் எனக்கு தெரியும். எப்படி தெரியும் என்றெல்லாம் கேட்காதே.

சாவித்ரி சொல்வதில் நிறைய நியாயம் இருக்கிறது. உன் அப்பா தொடர்ந்து தப்பு செய்யாமல் இருக்கவும், சினிமாத்துறையை விட்டு விலகவும் அவள் செய்த தந்திரம் அவர் மேல் நீ வழக்குப் போடுவது என்பது. தாத்தா சொத்து பேரனுக்கு என்பது படிப்பறிவு இல்லாதவர்களுக்குகூட தெரிந்த விஷயம். எனவே அந்த சொத்துக்கள் தப்பான வழியில் களவு போகாமல் தடுக்கவும். அதனால் உன் அப்பாவைக் காப்பாற்ற நீ வக்கீல் நோட்டீஸ் அனுப்பி சொத்துக்கள் மேல் யாரும் கடன் தர இயலாத ஒரு நிலையை உரு வாக்குவதில் தப்பே இல்லை. அதை அவர் விற்றுவிடாமல் இருக்கவும் இப்படி நீ செய்ய வேண்டியது அவசியம். எனவே சாவித்திரி விருப்பப்படி செயல் பட்டு உன் அப்பாவை தப்புசெய்ய வழியில்லாதபடி தடுத்து நிறுத்து. என்னை தேடாதே. உரிய நேரத்தில் நான் வருவேன். இப் போது நான் உன்னிடம் இருப்பதும் தவறு. எனவே நான் வடக்கில் அமர்நாத் வரை யாத்திரை போக கிளம்பிவிட்டேன். நான் திரும்பி வரும்போது நீ, ரஞ்சனி ராகவியோடு உன் அப்பாவுடன் ஒன்றாக இருக்க வேண்டும். நானும் அங்கே பிரசாதத்துடன் வந்து உங்களை எல்லாம் பார்ப்பேன். நீ உடனடியாக ஆக வேண்டியவதைப் பார்.

– அன்புடன் அம்மா



கடிதத்தை படித்த மாலதிக்கு தலையை சுற்றியது.

''ரஞ்சனி.. என்ன இது! அம்மா.. எப்ப இப்படி ஒரு கடிதம் எழுதினா?''

''அவங்க எழுதலக்கா.. இனி மேதான் எழுதப் போறாங்க..''

''எழுதப் போறாளா.. என் அம்மாவா?''

''ஆமாங்க்கா.. சந்தேகமா இருக்கா..?''

''சந்தேகமா இருக்காவா.. இமயமலைகூட இடம் பெயரும். ஆனா, எங்க அம்மா மட்டும் தப்பித்தவறிகூட இப்படி ஒரு கடுதாசிய எழுத மாட்டா. ஞாபகம் வெச்சுக்கோ..''

''ஆனாக்கா.. அவங்க இப்படி எழுதினாத்தானே என் வீட்டுக்காரர்ங்கற தேரு நிலைய விட்டு அசையும்..''

''அது சரிடி.. ஆனா என் அம்மா எழுதணுமே?''

''மனசு வெச்சா முடியும்கா.. நான் சொல்லலை. கொஞ்சம் கிருஷ்ண லீலை பண்ணணும்னு..''

''இதுக்கும் கிருஷ்ணலீலைக்கும் என்னடி சம்பந்தம்?''

''இருக்குக்கா... அமாவாசைல மஹாளய அமாவாசைன்னு ஒண்ணு வருமே தெரியுமா?''

''ஆமா.. அதுக்கென்ன?''

''அது எப்படி வந்தது தெரியுமா?''

‘‘மகாபாரதம்லாம் படிச்சா நான் ஏண்டி இப்படி இருக்கேன். நீயே சொல்லு..’’

‘‘அது ஒரு சரியான ஏமாத்து வேலைக்கா. கிருஷ்ணர் தன் சங்கு சக்கரத்தை வெச்சுக்கிட்டு கவுரவர்களுக்கு எதிரா தர்மத்தை நிலைநாட்ட எவ்வளவு தந்திரம்லாம் பண்ணுவார் தெரியுமா?’’

‘‘நீ விஷயத்துக்கு வா. இப்ப நீ இங்க என்ன தந்திரம் பண்ணப் போறே?’’

‘‘அந்த கதையை சொல்லிடறேனே..’’

‘‘நான் பாரதத்தை படிச்சே தெரிஞ்சுக்கறேன். இந்த லெட்டர் விஷயத்துக்கு வா. இப்படி என் அம்மா ஒரு கடிதம் எழுதினா அரவிந்தன் அசைவான்கறது வாஸ்தவம். ஆனா, அவ எழுதணு மேடி. அவ இருக்கிற இடமேல்ல தெரியாம இருக்கோம்..’’

‘‘அவங்க இங்க வரவே வேண்டாம். நாமளும் அவங்களை தேடி அலை பாயவேண்டாம். ஷாட்டா ஒரு வழி இருக்கு..’’

‘‘என்ன... என்ன?’’

‘‘இந்த நிமிஷம் நீங்கதான் அம்மா..’’

‘‘நானா.. என்ன உளர்றே?’’

‘‘நேத்து நீங்க அத்தானுக்கு எழுதின கடிதத்தை பார்த்தேன். உங்க கையெழுத்துக்கும் உங்கம்மா கையெழுத்துக்கும் வித்தியாசமே இல்லை..’’

‘‘அப்போ..’’ – மாலதியின் கண்கள் அகண்டன.

‘‘கொஞ்சம் சிரமப்பட்டு இத நீங்க எழுதிட்டா நம்ம பிளான் சக்ஸஸ் ஆயிடும். இப்ப புரியுதா?’’ – ரஞ்சனி முடிக்க மாலதியிடம் பதிலே இல்லை.

‘‘என்னக்கா.. பயமா இருக்கா?’’

‘‘பயமா இருக்காவா.. ஈரக்குலையே நடுங்க ஆரம்பிச்சிடுச்சு..’’

‘‘சரிதான்.. உங்ககிட்ட இருந்துதான் நான் தைரியத்தையே கத்துகிட்டேன். நீங்களா இப்படி பேசறது?’’

‘‘இல்ல ரஞ்சனி.. இதுமட்டும் அம்மாவுக்கு தெரிஞ்சுது.. சாகறவரை என் முகத்துல முழிக்க மாட்டா..’’

‘‘அது உங்க கற்பனை. ஆனா உண்மை என்ன தெரியுமா?’’

‘‘என்ன..?’’

‘‘உங்கம்மா பொறுப்பில்லாம ஓடிப் போயிட்ட நிலைல நீங்க உங்க சொத்தை காப்பாத்தறதோட உங்கப்பாவையும் சேர்த்து காப்பாத்தறீங்க. இல்லேன்னா அவ்வளவையும் அந்த சேட் கொண்டு போயிருவான். பரவால்லியா?’’

‘‘அதுக்கு.. அதுக்கு..’’

‘‘நான் சொன்னத மறந்துட்டீங்க. வலி இல்லையேல் வலிமை இல்லை. இப்ப நீங்க செய்யப் போறது தியாகம். ஒருவிதத்துல புரட்சியும்கூட..’’

‘‘ரஞ்சனி..’’

‘‘என்ன ரஞ்சனி.. ஒரு காசா இரண்டு காசா.. அஞ்சு கோடி. யாரோ கொண்டு போகவா?’’

‘‘ரஞ்சனி..’’

‘‘தடுத்து நிறுத்துங்க. அப்புறமா அதை தர்ம ஸ்தாபனத்துக்குக்கூட குடுத்துடலாம். அப்ப எல்லாருக்கும் தெரியும். நாம நல்லதுக்குதான் பாடுபட்டோம்கறது..’’

‘‘அப்படிங்கறே..’’

‘‘அப்படியேதான்கறேன்..’’

‘‘சரி.. உன் மேல பாரத்தைப் போட்டு இந்த தப்பை பண்றேன். நடக்கறது அந்த நாராயணன் செயல்..’’

‘‘அப்படிச் சொல்லுங்கக்கா.. இந்தாங்க பேனா. உங்கம்மா உங்களை ஊருக்கு போகச் சொல்லி எழுதின லெட்டரும் இருக்கு. அதப் பார்த்து கவனமா அப்படியே அவங்க வார்த்தைகளையே போட்டு நான் எழுதின இந்த லெட்டரை காப்பி எடுங்க..’’

– ரஞ்சனி நீட்டினாள். கைநடுங்க மாலதி வாங்கிக் கொண்டாள்.

‘‘ம் போங்க.. மொட்டை மாடிக்கு போயிடுங்க..’’

– மாடிப்படியை நோக்கி கைகளை காட்டினாள். மாலதியும் விலகினாள். அடுத்தநொடி தொலைபேசியை நோக்கிச் சென்றாள். டைரக்டரியில் நவஜீவன் ஆஸ்ரம நம்பரை தேடிப் பிடித்தாள். சுழற்றினாள். மறுமுனையில் கிளார்க்தான் எடுத்தான்.

‘‘மீனாட்சியம்மா இருக்காங்களா?’’

‘‘இருங்க வரச் சொல்றேன்..’’ – க்ளார்க் விலகிச்சென்று விட்டு திரும்பி வந்து ‘‘அவங்க வெளிய போயிருக்காங்க..’’ என்றான்.

‘‘சரி.. அப்ப நான் சொல்ற தகவலை அவங்களுக்கு கொடுத்துட றீங்களா?’’

‘‘சொல்லுங்க..’’

‘‘அரவிந்தன்கறவரும் அவர் குடும்பமும் ஒரு மாசத்துக்கு வட நாட்டுக்கு யாத்திரை போறோம். போனையும் டிஸ்கனெக்ட் பண்ணிட்டோம்னு சொல்லிடுங்க..’’

‘‘சொல்லிடறேன். அரவிந்தன் யாருன்னு சொல்லலையே..’’

‘‘அவங்களுக்கு தெரியும்!’’ – இரு வார்த்தைகளில் ஒரு முற்றுப் புள்ளியோடு போனை வைத்தவள் முதல் காரியமாக ரிசீவருடனான வயர் தொடர்பை பிடுங்கிவிட்டாள்.

கண்களிலும் ஒருவித வெறி மின்னிக் கொண்டிருந்தது!



**அ**ந்த முதிய குண்டுப் பெண்மணியும்கூட தொலைபேசி தொடர்பை அறுத்துதான் விட்டிருந்தாள்.

அருகிலேயே கண்ணீரில் ஊறி பருத்துப்போன முகத்தோடு நிர்மலா! மழைப்புறா எப்படி ஒரு மாடத்தில் ஒடுங்கியிருக்குமோ அப்படி ஒடுங்கிப் போய் சோபாவின் ஓரத்தில் கால்களையும் மேல் இழுத்து வைத்துக்கொண்டு கண்ணீர் தளும்பும் விழிகளுடன் அந்த குண்டு பெண்மணியைப் பார்த்தாள்.

‘‘கண்ணைத் தோண்டிடுவேன். பாக்கறதைப் பாரு.. வந்து சேர்ந்தியே எனக்குன்னு மருமகளா..’’

– உக்ரமாய் புலம்பிவிட்டு திரும்பினாள். அவளது ஒரே மகனும் நிர்மலாவின் கணவனுமான நந்தகோபால் வந்து கொண்டிருந்தான்.

கையில் ஒரு கறுப்பு நிற பிரீஃப்கேஸ். ஹாஸ்பிடலில் இருந்து நேரே அவன் வருவதற்கான அறிகுறி. லேசாக வியர்த்திருந்தான். கொஞ்சம் போல குடித்துமிருந்தான். நிர்மலாவின் நடுக்கம் கூடியது.

‘‘என்ன சொல்றா.. சொன்னத கேட்டுட்டு இருப்பாளாமா.. இல்ல..’’

– அவன் கைகள் முழுக்கை சட்டையின் பட்டனை அவிழ்த்து மேலேற்றிவிட்டுக் கொண்டன.

‘‘என்னால முடியலப்பா. இவளும் வழிக்கு வரப்போறதில்ல. நீயும் குடும்பம் நடத்தப் போறதில்ல. பேசாம ஊசியப் போட்டு கொன்னுடு. எனக்கு வேற வழியே தெரியலை..’’

– அவள் அம்பாரமாக சடைத்துக் கொண்டாள். உடனே அவன் பார்வை நிர்மலா மேல் கூத்தீட்டி போல பதிந்தது.

அவளும் கதற ஆரம்பித்தாள்.

‘‘அப்படி பார்க்காதே.. எனக்கு பயமா இருக்கு. என்னை விட்டுடு. நான் எங்கேயாவது கண்காணாத இடத்துக்குப் போயிடறேன். ப்ளீஸ்..’’ உதடுகள் துடிக்க கெஞ்சினாள்.

‘‘சாரி.. வெரி சாரி. அந்த கட்டத்தை எல்லாம் நீ கடந்தாச்சு. உனக்கு இருக்கிற ஒரே வழி என் பேச்ச கேட்கறதுதான்..’’

‘‘முடியாது.. நான் சம்மதிக்க மாட்டேன்..’’

''பாக்கறேன். எத்தனை நாளைக்கு இப்படியே சொல்வேன்னு பார்க்கறேன்டி.. அம்மா நீ வா. எனக்கு சாப்பாடு போடு..''

– அவன் நகரவும் அவளும் கிளம்பினாள். அறுத்துவிட்ட தொலைபேசியை ஞாபகமாக எடுத்துக்கொண்டாள்.

அவனுக்கு புரிந்தது.

''என்னம்மா.. இன்னிக்கும் போன் பண்ணப் பார்த்தாளா?''

''ஆமாண்டா. இவளோட சித்தப்பன் ஒருத்தன் உன்னை வந்து பாக்கறதா சொல்லிக்கிட்டிருந்தானே.. பார்த்தானா?''

– கேட்டபடி அந்த அறையை இழுத்துப் பூட்டினாள்.

''வந்தான்.. கண்டதை சொல்லி சமாளிச்சேன்..''

''பயமா இருக்குடா.. இவ பத்திரிகைக்கெல்லாம் போன் பண்ணப் பாத்துருக்கா. எல்லார்கிட்டேயும் ஹிஸ்டீரியாக்காரின்னு சொல்லி எத்தனை நாளைக்கு சமாளிக்க முடியும்..''

''அதுக்காக..?'' நந்தகோபால் ஆவேசமாக திரும்பினான்.

''இல்லடா.. இவ நம்ப வழிக்கு வரமாட்டாடா.. அதச் சொல்ல வந்தேண்டா..'' அவளுக்கே உடல் நடுங்கியது.

''எதுவா இருந்தாலும் ஆறு மாசத்துக்கு இவமேல கை வைக்க முடியாது. எங்க என்ன பிரச்னைன்னு மீடியால அலைஞ்சுகிட்டு இருக்காங்க. போன வருஷம் ஒருத்தன் ஒரு கொலை பண்ணிருக்கான். அது இன்னிக்கு மீடியாக்காரங்களால வெளிய வந்துருக்கு. சமாதிய தோண்டி எலும்பையெல்லாம் எடுத்து லேபுக்கு அனுப்பிருக்காங்க. என் ஃப்ரெண்ட் குமரேஷ் அட்டெண்ட் பண்றார்..''

''அப்ப இவள வெச்சுக்கிட்டு போராட வேண்டியதுதானா?''

''அதுதான் உன்னோட தலையெழுத்து.. ரொம்ப மிரட்டாத. லூஸ்ல விடு. அதே சமயம் அவ யாரையும் சந்திக்கவும் கூடாது..''

''இந்த ஊர்ல இருக்கறவரை அது சாத்தியமில்லை நந்தா. சொன்னா கேளு.. நம்ம வாட்ச்மேனே என்னை ஒருமாதிரி பார்க்கறான்.. அவன் பொண்ணு கல்யாணத்துக்கு பத்தாயிரத்தை தாராளமா கொடுத்து அவனை கட்டிப் போட்டிருக்கேன்..''

''தெரியும். பத்து நாள் பொறுத்துக்கோ. கொடைக்கானல்ல ஒரு பங்களா வாடகைக்கு கேட்ருக்கேன். அது காலியானதும் அங்க போயிடலாம். இவளை நான் எங்க வழிக்கு கொண்டு வரேன்..''

– டைனிங் டேபிளில் விலாவரியான பேச்சும் முடிவுமாக சாப்பிட ஆரம்பித்தான்.



**க**ஸ்தூரி நர்சிங்ஹோம்!

பெரிய பெயர்ப் பலகையை பார்த்துவிட்டு உள்ளே நிழைந்தாள் மீனாட்சி. நன்றாக இருட்டியிருந்தது. ரிசப்ஷனில் ஆனாலும் ஒல்லியாக ஒரு பெண்.

''இங்க டாக்டர் நந்தகோபால்னு..'' – அவள் கேட்குமுன் ''அவர் ஈவினிங்கே போயிட்டாரே.. இனிமே நாளைக்குத்தான் வருவார்'' என்றாள்.

''வீட்டு போன் நம்பர் கிடைக்குமா?''

''நீங்க யார்.. அவரை நாளைக்கு இங்க வார்டுல பார்க்கலாமே..''

''நான் அவரோட தூரத்து உறவு..''

''உறவுங்கறீங்க.. வீட்டு போன் நம்பர் தெரியாதா?''

''பண்ணேம்மா.. பழைய நம்பர்லாம்தான் இப்ப நிறைய மாறியிருக்கே..''

''ஒரு நிமிஷம்..'' அந்த ஒல்லிக்குச்சிப் பெண் லெட்ஜரைத் திறந்து பார்த்து ஒரு நம்பரை துண்டுக் காகிதம் ஒன்றில் எழுதி நீட்டினாள்.

''ரொம்ப நன்றிம்மா..''

– நம்பருடன் வெளியே வந்தவள் தொலைபேசி பூத் ஒன்றில் நுழைந்து நம்பரை சுழற்றினாள். ரிங் சவுண்ட் மட்டும் கேட்டது. யாரும் எடுக்கிற மாதிரியே தெரியவில்லை.

'வீட்டில் ஒருவேளை யாரும் இல்லையோ?'

கேள்வியோடு திரும்பத் தொடங்கினாள். ஆசிரமத்துக்குள் நுழையவும் க்ளார்க் ரஞ்சனி கொடுத்த சேதியை அவள் முன் வைத்தான். ஒரு கணம் நெஞ்சில் குத்து விழுந்த மாதிரி வலித்தது. எதற்கும் முயற்சித்து பார்ப்போமே என்று அரவிந்தனுக்காக எண்களை அங்கிருந்தே சுழற்றினாள். மறுமுனையில் ரிங் சவுண்ட் கேட்டது. ஆனால், ஆளில்லை என்பது தெரிந்துபோயிற்று. 'நிஜமாலுமே வடநாட்டுப் பக்கம் யாத்திரை போய்விட்டார்களா? ஒரு மாசத்துக்கு குழந்தை ராகவிக்கு ஸ்கூலில் லீவு தருவார்களா.. அரவிந்தன் ஆபீசில் அரைநாள் லீவுக்கே அவன் மானேஜர் மூக்கால் அழுவாரே..?' – கேள்விகள் ஓடின.

சட்டென்று எதிர்வீட்டு புவனேஸ்வரி ஞாபகம் வந்தது. அவளிடம் கேட்டால் மேற்கொண்டு உண்மை பொய் தெரியும் என்று தோன்றியது.

டைரக்டரியைப் புரட்டினாள். அவள் அப்பா ஆதிகேசவன் பெயரில்தால் போன் இருக்கிறது. அந்த பெயரில் தேடினாள். தெருவும் டோர் நம்பரும் ஒத்து வந்த விலாசத்துக்கு நேர் எதிரில் உள்ள எண்ணில் புவனேஸ்வரியைப் பிடித்தாள்.

''அம்மாடி நான் மீனாட்சி பேசறேன்.. எங்க வீட்ல யாரும் இல்லையா?''

''இருக்காங்களே... எதுக்கு கேக்கறீங்க மீனாட்சி யம்மா..?''

''இல்லம்மா போன் பண்ணேன். ரிங் போகுது. யாரும் எடுக்கலை.. அதான் கேட்டேன். அவுட் ஆஃப் ஆர்டர் போல இருக்கு..''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல. ரஞ்சனிக்கா ஆபீஸ்ல இருந்து கால் வரும்கறதுக்காக ஒருவேளை டிஸ்கனெக்ட் பண்ணியிருப்பாங்க. அப்படிப் பண்ணா ரிங் சவுண்ட் கேட்கும். ஆனா இங்க கனெக்ஷன் இல்லாததால வொர்க் ஆகாது..''

''ஓ அப்படி ஒரு வழி இருக்கா?''

– கேள்வியோடு கத்தரித்தவளுக்குள் புத்தி வேகமாக வேலை செய்யத் தொடங்கியது. 'ரஞ்சனி ஏதோ நாடகம் போடுகிறாள். ஒருவேளை நான் வருவதே பிடிக்காமல் இப்படிச் செய்திருக்கிறாளோ..?' – மீனாட்சியை குழப்பம் ஆட்டுவிக்க ஆரம்பித்தது.

இடையில் கிளார்க் ஞாபகம் வந்தது போல, ''அம்மா.. நாளைக்கு காலைல உங்களுக்கு கார் வந்துடுமாம். ஷூட்டிங் செம்பரம்பாக்கம் கிராமத்துல ஒரு வீட்லயாம். புரொடக்ஷன் மானேஜர் போன் பண்ணி சொல்லச் சொன்னார்..'' என்றான்.

''உம்..'' என்று ஆமோதித்தவள் நினைப்பு அப்படியே நிர்மலா விஷயத்துக்கும் தாவியது.

அங்கேயும் இதேபோல் தொலை பேசியை டிஸ்கனெக்ட் செய்து வைத்திருக்க வேண்டும் என்று தோன்றியது.

'என்ன செய்யலாம்?' – கேள்வியில் விழுந்து விடைக்காக யோசிக்கத் தொடங்கினாள்.

**ஆ**பீஸ் முடிந்து வீடு திரும்பிய அரவிந்தன் கைகால்களை கழுவிக் கொண்டு டைனிங் டேபிளில் வந்து அமர்ந்தான்.

ஆவிமணக்க காபியை கொண்டு வந்து வைத்த ரஞ்சனி ஒரு ஒட்டிய கவரையும் அவன் முன் வைத்தாள்.

''என்ன இது?''

''உங்கம்மா கொடுத்ததா ஒருத்தர் வந்து கொடுத்துட்டுப் போனார்..''

மிகச் சாதாரணமாக ரஞ்சனி சொல்லிவிட்டு விலகிப் போனாள். மாலதி சற்றே தூர அமர்ந்திருந்த நிலையில் மெலிதான நடுக்கத்துடன் அடுத்து அவன் என்ன செய்யப் போகிறான் என்று கவனிக்க ஆரம்பித்தாள்.

அரவிந்தனும் கடிதத்தை கவரை உடைத்து வெளியில் எடுத்து படிக்க ஆரம்பித்தான்.



கடிதத்தை படித்த அரவிந்தனுக்கு படபடவென்று வந்தது. நம்பமுடியவில்லை - நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. திருப்பித் திருப்பி பார்த்தான்.

நல்லவேளை. மாலதி தொண்ணூறுசதம் மீனாட்சி எழுதுகிற மாதிரியேதான் எழுதியிருந்தாள். சில வார்த்தைப் பிரயோகங்களை தப்பாக போட்டபோது ரஞ்சனி அதை அடித்து திருத்தம் செய்து தந்திருந்தாள்.

அதெல்லாம் அரவிந்தனிடம் அழுத்தமான வேலையை காட்ட ஆரம்பித்தது.

தீவிர சிந்தனையோடு தன்னையே உற்றுப்பார்த்தபடி இருந்த மாலதியை பார்த்தான். அவளுக்குள் அமிலம் சுரந்து கொண்டிருந்தது. கண்டுபிடித்துவிடுவானோ என்கிற பயம். அதனால் மொத்தக் காரியமும் கெட்டு சொத்து கைவிட்டு போயே போய்விடுமோ என்கிற படபடப்பு.



ரஞ்சனி இதுதான் சமயம் என்று முதல்காரியமாக தன்னை லேசாக்கிக்கொண்டு படுகேஷுவலாக தலையை அவிழ்த்து ஒரு சீப்பை எடுத்து ஊடுருவ விட்டாள்.

''என்ன அரவா... என்ன பாக்கறே... என்ன செய்யறதுன்னே தெரியலையா?'' மாலதி சுதாரிப்போடு கேட்க

''ஆமாக்கா... அம்மாவா இப்படி எழுதினதுன்னு ஒரே ஆச்சரியமா இருக்கு..'' என்றான் அரவிந்தனும்.

''பின்ன என்ன உங்கக்காவா எழுதியிருக்காங்க. உங்கம்மாவேதான்...'' - ரஞ்சனி லாகவமாக சட்டென்று குறுக்கில் வார்த்தைகளை விட

‘‘இதை எதுக்கு இப்படி லெட்டர்ல எழுதி சொல்லணும்? நேர்லயோ இல்ல போன்லயோ சொல்லலாமே..?’’ என்றான் அவனும் விடாமல்.

‘‘போன் அவுட் ஆஃப் ஆர்டர். தெரியும்ல?’’ - ரஞ்சனி அவன் சந்தேகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கத்தயாராகி அவன் எதிரில்வந்து அமர்ந்தவள் ‘‘நேர்ல வந்து உங்களையோ என்னையோ பார்த்தா நாம அவங்களை வெளியே போவிடுவோமா... அதான் வரலை. இது தெரியலையா உங்களுக்கு?’’ - சீப்புக்கையை ஆட்டிக் கொண்டே கேட்டவள் சிறு இடைவெளிக்கு பிறகு

‘‘அவங்களுக்கு அவங்க வறட்டு கவுரவத்துக்கும் குந்தகம் வந்துடக்கூடாது. அதேசமயம் உங்கப்பாவை முழுக்காவும் இழந்துடக்கூடாது. அந்த நிலைல, இருக்கற ஒரே வழி இதுதானே?’‘ என்றாள்.

‘‘இல்ல ரஞ்சா... அம்மாவப் பத்தி உனக்கு தெரியாது. நாங்க சாப்பாட்டுக்கே இல்லாமல்லாம் தவிச்சிருக்கோம். அப்ப அப்பா சார்பா சிலர் வந்து சமரசம் பண்ணவும் முயற்சி செஞ்சாங்க. அம்மா திட்டமா மறுத்துட்டாங்க. அப்பா விஷயம் ஒரு முடிஞ்ச கதைங்கறதுதான் எனக்கு தெரிஞ்சு அவங்க முடிவு. அதனாலதான் வீட்டை ஏத்துக்க தயங்கி திருப்பிக் கொடுத்தேன். அப்ப இருந்ததுக்கு நாங்க இப்ப இருக்கறது எவ்வளவோ உயரம்னுதான் சொல்லணும். அப்படி இருக்க அம்மா இப்பப் போய் அப்பா சொத்து பறிபோயிடும்னு நினைச்சு கேஸ் போட சொல்றது கொஞ்சமும் சரியா இல்லை. எங்கேயோ இடிக்குது.’’

‘‘உக்கும்... அவங்க ஒண்ணும் தனக்கு காசு பணம் வேணும்னோ உங்களுக்கும் அக்காவுக்கும் வீடுவாசல் வேணும்னோ இதை செய்யச் சொல்லலை. அந்த சின்ன வீட்டுக்காரி சொன்னமாதிரி இப்ப நீங்க சொத்தை பிடிச்சு வைக்காம விட்டா, அவர் அழிஞ்சு மண்ணோடு மண்ணா போயிடுவாரு. குறைஞ்சபட்சம் சாகறவரை அவர் நல்லா இருக்கணும்கறதுக்காகவாவது இதை நீங்க செய்துதான் தீரணும். தோளுக்கு ஒசந்த பையன், பொண்ணுன்னு இருந்தும் ஆதிரங்கராஜ் தானும் அழிஞ்சு, பூர்வீக சொத்தையும் அழிச்சுட்டார்னு யாரும் நாக்கு மேல பல்ல போட்டு பேசிடக்கூடாது இல்லையா, அதை நினைச்சுதான் இப்படி எழுதியிருப்பாங்க.’’

- ரஞ்சனி விலாவரியாக சிடுக்கெடுக்க மாலதியும் தயாரானாள்.

‘‘ஆமாண்டா அரவா... எல்லாரும் சொத்து தங்களுக்கு வரணும்னுதான் கேஸ்போடுவாங்க. ஆனா, நீயும் நானும் அப்பாவை காப்பாத்த கேஸ் போட்றோம்டா. உலகத்துலயே யாரும் இப்படி நடந்துகிட்டு இருக்கமாட்டாங்கடா. நல்லா யோசிச்சுப்பாருடா...’’

‘‘சரியாச் சொன்னீங்கக்கா.. ஆனா, உங்க அளவு நான் அழுத்தம் கொடுத்து பேச முடியாது. ஏன்னா இவர் வரைல நான் ஒரு பேராசை பிடிச்ச ஜென்மம்! ஆகையால நான் எவ்வளவுதான் உண்மையை எடுத்துச் சொன்னாலும் அது இவருக்கு பெருசாவே படாது. அவ்வளவு ஏன்... நாளைக்கே இவர் கேஸ் போட்டு இவங்கப்பா கொட்டமும் அடங்கி எல்லாரும் ஒத்துமையா வாழற ஒரு சூழ்நிலை வருதுன்னு வையுங்க...’’

‘‘வந்தா நல்லது தானேடி... தண்ணி அடிச்சு தண்ணி விலகுமா... ஆயிரம்தான் ஆனாலும் அவர் என் அப்பாடி...’’

''நான் ஒண்ணும் அவர் உங்க சித்தப்பான்னு சொல்லலை. கொஞ்சம் என்னயும் பேசவிடுங்களேன். அப்படி ஒரு நல்லகாரியம் நடந்தாலும் நான் இந்த வீட்டை விட்டு வரமாட்டேன். இப்ப பாத்துகிட்டுருக்கற வேலையையும் விடமாட்டேன்னு சொல்ல வந்தேன். என் வரைல கேஸ் போட்றதுங்கறது என் மாமனாரை ஒரு நல்ல மனுஷனாக்கப் போற விஷயம். அதை தடுத்தேன்கற பாவம் எனக்கு வேண்டாம். அவ்வளவுதான்...''



- ரஞ்சனியும் மாலதியும் பாவும் தறியும் இல்லாமலே மாற்றிமாற்றி நெய்தது அரவிந் தனை அசைத்துவிட்டது போல தெரிந்தது.

''வக்கீலை பார்த்து பேசறேன்.. எனக்கென்னவோ இதனாலல்லாம் எங்கப்பா திருந்தி மனுஷனா மாறுவார்னு தோணல'' - என்றான்.

''நம்புடா... நம்பு! எதுவுமே நம்பிக்கைல தான் இருக்கு. காசு பணம் அவருக்கு மட்டும் சொந்தம் இல்லேன்னாலே அவரை சுத்தி அலையற கழுகுங்க பறந்து போயிடுவாங்க. அப்றமா நாமளும் ஒண்ணா சேர்ந்துடுவோம். அவர் வரைல ஒரு புதுவாழ்க்கையை நல்ல விதமா அவர் தொடங்கித்தான் தீரணும்.. தெரிஞ்சுக்கோ'' - என்றபடி மாலதி ரஞ்சனி யை பார்த்து கட்டைவிரலை உயர்த்திக் காட்டி னாள்.

ரஞ்சனி மார்பைத் தழைத்து ஒரு பெரு மூச்சு விட்டாள்.

**அ**திகாலை நேரம்!

நான்கு மணிக்கே எழுந்து அரைமணி நேரம் தியானம், அதன்பின் சில யோக பயிற்சிகள், அதற்கும் பின் ஒரு நீண்ட வாக்கிங் என்பதெல்லாம் அப்பா அனந் தாச்சாரியின் மாறாத அன்றாடங்கள்.

வெண்ணிற பைஜாமா குர்தா சகிதம் ஒரு ஷாலை தோளில்போட்டு சீராக அவர் நடக்கும்போது சிலசமயம் ஸ்ரீனிவாசனும் உடன் செல்வார்.

வழியில் பல பெரிய மனிதர்கள் எதிர்ப்படுவார்கள். நைச்சியமாக பல நல்ல விஷயங்களை அப்போது பேசுவதும் ஒரு சுகமான அனுபவம்.

இன்று ஸ்ரீனிவாசன் இடத்தில் மீனாட்சி.

அப்பா வாக்கிங் கிளம்பவும் காத்திருந்து சேர்ந்து கொண்டாள்.

''என்னம்மா என்னண்ட மனசுவிட்டு எதாவது பேசணுமாக்கும்?'' - நடந்துகொண்டே அவரும் கேட்டார்.

''ஆமாம்ப்பா. நிர்மலா விஷயமா உங்களோட நிறைய பேசணும்.''

''நானும் கேக்கணும்னு இருந்தேன். நேத்து நீங்க அவளை சந்திச்சுபேச முடிஞ்சுதா?''

''இல்ல. அவளை யாரும் சந்திச்சுடகூடாது அப்படீனு காவல் பலமா போட்டிருக்கறதா நான் நினைக்கறேன்.''

''அவ புருஷனை..?''



''பாக்க முடியலை. இத்தனைக்கும் அவரை சந்திக்க டிஸ்பென்சரிக்கே போனேன். அவர் இல்லை. நம்பரை வாங்கி போன் செய்தா ரிங்போகுது. யாரும் எடுக்கமாட்டேங்கறாங்க. வீட்டுக்குள்ளயே டிஸ்கனெக்ட் பண்ணா ரிங் போகும்னும் கேள்விப்பட்டேன்..''

''வீட்ல நிஜமாலுமே யாரும் இல்லியோ?''

''நிச்சயமா, வீட்ல எல்லாரும் இருக்காங்க. வாட்ச்மேன் திருதிருன்னு முழிக்கிறான். உள்ள யாரையும் விடக்கூடாதுன்னு சொன்னதா சொன்னானே? மீறி சந்திக்க முயற்சி செய்தா தன் வேலை போய்டும்னும் அழுதானே?''

-அவள் சொல்லச்சொல்ல அப்பா முகத்தில் பலத்த மாறுதல். சாலையில் தெரு விளக்கு வெளிச்சங்களின் இடையில் மிகமிக லேசான பனிப்புகையின் சஞ்சாரம். சாலையோர தூங்கு மூஞ்சிமரத்து பறவைகள்கூட சளசளவென்று சடைத்துக் கொண்டிருந்தன.

பேப்பர் போடும் சிறுவன் ஒருவன் சைக்கிளில் கடந்து போய்க்கொண்டிருந்தான்.

நெடுந்தூரம் இருவரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. ஒரு விளக்குக் கம்பத்தின் கீழ் அப்பா கைக்கடிகாரத்தை பார்த்தார். மணி ஐந்தரை. அவர் தீவிரமாக வழிவகைதேடி யோசிக்கிறார் என்பது மீனாட்சிக்கு புரிந்தது.

இன்னும் அரைமணியில் சூரியன் உதயமாகி விடுவான். வெளிச்சம் வந்து இருட்டை ஒரு ஸ்ட்ரா போட்டு உறிஞ்சிக் குடித்த மாதிரி குடித்துவிடும்.

ஊருக்குள் இருட்டு போய்விடும். ஆனால், நிர்மலா விஷயத்தில்......?

எதிரில் அந்த ஏரியாவில் குடிஇருக்கும் நீதிபதி சுந்தரமூர்த்தி வாக்கிங் வந்தபடி இருந்தார். அப்பாவைப் பார்க்கவும் சிநேகமாக நமஸ்காரம் சொன்னார். அப்பாவும் ''ஒருவாரமா உங்களைக் காணலையே..'' என்று நின்று அவரிடம் ஆரம்பித்தார்.

''ஒரு வேலையா டெல்லி போய்ட்டேன். ஆஸ்ரமம்லாம் நல்லா நடக்குதுதானே?''

''பேஷா... ஒரு ஞாயித்துக்கிழமை பிரார்த்தனைக் கூட்டத்துக்கு வரலாமே... பலதடவை கூப்டுட்டேன்''

''வரணும் மிஸ்டர் அனந்தாச்சாரி. கட்டாயம் வரணும். வரேன்.. நானே உங்களுக்கு போன் பண்றேனே...''

- கைகளை கோத்துப் பிடித்துக்கொண்டு மதிப்பான பாவனையில் சொன்னார்.

''இவங்க பேர் மீனாட்சி... எங்க ஆஸ்ரமத் தோட ஒரு ஸ்ட்ராங் பில்லர்!'' - அப்பா நீதிபதி சுந்தரமூர்த்தியிடம் அறிமுகம் செய்ய மீனாட்சியும் கைகளை கூப்பினாள். பதிலுக்கு அவரும் கைகூப்பியவராக விடை பெற்றுக் கொண்டார். மீனாட்சி வரையில் அந்த

நொடியில் சூரியனை முந்திக்கொண்டு வந்து இன்னொரு சூரியனாகத்தான் அவர் தெரிந்தார்.

''எனக்கு ஒரு ஐடியா தோணியிருக்கு... சொல்லலாமா?'' - மீனாட்சி நிர்மலா விஷயத்தை மீண்டும் ஆரம்பித்தாள்.

''என்னம்மா.. இந்த ஜட்ஜ் மூலமா நிர்மலா வீட்டுக்குள்ள நுழைய முடியும்னு தோணுதா?''

- அப்பாவிடம் கச்சிதமான எதிர்க்கேள்வி. ''ஆமா. இவர்ட்ட சொல்லி போலீஸ் மூலமா.''

''இது ரொம்ப அவசரம்... அப்புறமா அப்பட்டமான சினிமாத்தனம். ஆமா என்ன பிரச்னைன்னு சொல்லுவீங்க?''

''நாம சொல்ல வேண்டாம்... நிர்மலாவே என்னன்னு சொல்லிடுவா.''



''அது அவளைப் பார்த்த பிறகு... இப்ப அவ பிரச்னைலதான் இருக்காளா.. அப்படி இருந்தா அது எந்தமாதிரி பிரச்னைன்னு எதாவது நமக்கு தெரியுமா?''

''அப்படி எதுவும் இல்லேன்னா வீட்டுக்குபோன நான் அவளை சந்திச்சிருக்க முடியுமே. என்னை சந்திக்கவே விடலையே. அப்ப ஏதோ பிரச்னை இருக்குன்னுதான அர்த்தம்?''

''இல்லம்மா... இதெல்லாம் நம்ம யூகங்கள். இது சத்யமான உண்மையாவே இருந்தாலும் இதவச்சு மட்டும் அவளை நெருங்கிட முடியாது. பளிச்சுன்னு தெரியணும். யார் கிட்டேயாவது சொன்னா அவங்களும் ஒத்துக் கணும். ஏற்கனவே அவ விஷயத்துல ஆஸ்ரமத்துக்கு கெட்ட பேர். அன்னிக்கு அவளை கொண்டுவிடப் போனப்போ என்னென்ன கேட்டாங்கனுதான் உங்களுக்கு தெரியுமே?''

- அப்பாவின் கேள்வியில் அழுத்தமான உண்மைகள். மீனாட்சி முகம் வாடிப்போனது.

''உங்க மனசு துடிக்கறது எனக்கு தெரியுது.. எனக்கும்தான். இந்த மாதிரி நேரங்கள்ளதான் நமக்கு கைகொடுக்க கடவுள் இருக்கான். பரிபூரணமான நம்பிக்கையோட அவன்கிட்ட இப்ப போயிடணும். ஏன்னா நம்ம கைல இப்ப எதுவும் இல்லை. ஆனா, அவன் மனசு வச்சாதான் பாறையிலையும் பூ பூக்குமே?''

- அவர் அழகாக வழியையும் காட்டினார்.

''அப்ப பிரார்த்தனைதான் இப்ப நமக்கு இருக்கற ஒரே தீர்வா?''

- மீனாட்சி கேள்வியில் சுரத்தே இல்லை.

''நிச்சயமா... ஆனா உங்க கேள்வியோட தொனியில இருந்த மாதிரி ஒரு சீரியஸான விஷயத்துலல்லாம் பிரார்த்தனையால பெரிசா என்ன நடந்துட முடியும், அது தாமதமாகிற வழிங்கற மாதிரி ஒரு அபிப்ராயம் உங்களுக்கு இருக்கறமாதிரி தெரியறது. சரியா?''

- அப்பாவின் யூகம் மிகச் சரியாக இருந்து மீனாட்சியும் தலையை அசைத்தாள்.

''அந்த அபிப்ராயத்தை மாத்திக்குங்கோ. பிரார்த்தனையை போல ஒரு பலமான ஆயு தம் எதுவுமே இல்லை! நம்ம மனசோட தெளி வையும் நம்பிக்கையும் பொறுத்து அது செயல்படும். இப்பகூட இந்த நிமிஷம் நானும் நீங்களும் இஷ்ட தெய்வத்தை நினைச்சுண்டு தெரிஞ்சோ தெரியாமலோ எங்களால ஒரு பொண்ணு ஆபத்துல மாட்டிண்டுட்டா. அதுல அவளைத் தள்ளின குற்ற உணர்வுல நாங்க தவிக்கறோம். அதுக்கு பரிகாரம் தேட துடிக்கறோம். எங்களுக்கு எந்த விதத்துலயாவது உதவி செய்ன்னு பிரார்த்தனை பண்ணிண்டா நிச்சயம் ஒரு வழி கிடைக்கும். அந்த பெண் பற்றி நாம தப்பா நினைச்சுண்டு இருந்தா அது தப்புன்னும் சரியா நினைச்சிருந்தா அது சரின்னும் தெரியவருவதோடு நிர்மலாவை சந்திக்கவும் பேசவும் ஒரு வாய்ப்பு நிச்சயமா கிடைக்கும். இந்த ஷணம் நான் அதைதான் செய்யப் போறேன். என் கருத்துல உங்க ளுக்கு நம்பிக்கை ஏற்பட்டா நீங்களும் செய்யலாம்.''

- அப்பா சொல்லி முடிக்க சாலையோர பிள்ளையார்கோயில் ஒன்று கண்ணில் பட மீனாட்சி அடுத்த நொடி பிள்ளையார்முன்சென்று மண்டியிட்டாள்.

அப்பாவும் பிரார்த்தித்துக்கொண்டார்.

மீனாட்சியின் மூடியிருந்த கண்களை மீறி நீர் பெருக்கெடுத்தது. அப்பாவும் அதை கவனித்தார். நெகிழ்ச்சியாக இருந்தது.

பிரார்த்தனையை முடித்துக்கொண்டு ஆசி ரம வாசலுக்கு திரும்பியபோது ஷூட்டிங்கை ஞாபகப்படுத்தும் விதத்தில் யூனிட் கார் மீனாட்சிக்காக காத்துக்கொண்டிருந்தது.

நிர்மலா விஷயத்திற்கு நடுவில் ஷூட்டிங்கிற்கு போவது என்னவோ போல் இருந்தாலும் ஒப்புக்கொண்ட கடமையை உதற தைரி யம் இல்லை. ஐந்தாவது நிமிடம் ஷூட்டிங் காஸ்ட்யூமான பட்டுப்புடவை சரசரக்க காரில் ஏறினாள். காரிலும் நிர்மலா சிந்தனைதான்.

தன் வீட்டு விஷயம், ரஞ்சனி வடக்கே யாத்திரை போவதாக சொன்ன பொய் எல்லாமே மிகமிகப் பின்னால் போய்விட்டது. துப்புரவாக வீட்டு நினைப்பே இல்லை.

காரில் புரொடக்ஷன் மேனேஜர் துளசிதாஸ் இருந்தார்.

''அம்மா உங்களுக்கு தொடர்ச்சியா 20 நாள் ஷூட்டிங் இருக்கும்மா. அவுட்டோர்லாம்கூட போகவேண்டி வரும். டைரக்டர் சொல்லச் சொன்னார். அப்புறம்..''

- துளசிதாஸ் கொஞ்சம் தேங்கினார்.

''என்ன அப்புறம்?''

''நீங்க நடிக்கற விஷயம் பத்திரிகைல வந்தா நல்லா இருக்கும்னு டைரக்டர் ஃபீல் பண்றார். ஆனா, ஒரு ஸ்டில் கூட கொடுக்கக்கூடாதுனு சொல்லியிருக்கீங்களாமே?''

''ஆமாம்ப்பா... தயவுசெய்து பத்திரிகை விளம்பரமெல் லாம் வேண்டாம். நானென்ன சூப்பர் ஸ்டாரா? வேண்டவே வேண் டாம்.''

''அதை நீங்களே டைரக்டர் கிட்டே சொல்லிடுங்கம்மா..''

‘‘சொல்லிட்டா போச்சு. ஆமா, இந்த தொடரோட டெலிகாஸ்ட் எப்ப ஆரம்பமாகுது?‘‘

‘‘இது மெகாம்மா. சாதாரணமா மெகா சீரியல்ல டெலிகாஸ்ட்டுக்கு மூணு மாசம் முந்தியே ஷூட்டிங் ஆரம்பமாயிடும். கைல ஒரு நூறு எபிஸோட் ஸ்டாக் இருந்தாதான் தைரியமா போகமுடியும். அதே சமயம் புலிவாலை பிடிச்சுட்ட மாதிரியும்கூட. சீரியல் ஹிட்டாயிட்டா வருஷக்கணக்குல அதுபாட்டும் போகும். எடுக்கறவங்க நடிக்கறவங்க யாருக்கும் முதுகு சொரியக்கூட நேரம் இருக்காதும்மா.’’

- துளசிதாஸ் கேஷுவலாக சொல்லிக்கொண்டே வர கார் திடீரென்று தேங்கி நின்றது. மக்கர் செய்தது.

‘‘என்னய்யா, என்ன விஷயம்?’’

‘‘என்ஜின் ஹீட்டாயி ரேடியட்டர்ல தண்ணி தீர்ந்து போச்சுன்னு நினைக்கறேன் சார்...’’

- டிரைவர் பதிலோடு இறங்கி முன்பக்க பானட்டை தூக்கினான். குபீரென்று ஆவிப்புகை முகத்தில்அறைந்தது.

‘‘உங்ககிட்ட வண்டியே புக் பண்ணக்கூடாதுய்யா.. எந்தக் காலத்து வண்டிய்யா இது..?’’ - துளசிதாஸ் கோபப்பட மீனாட்சி வெளியே பார்த்தாள்.

அவள் முதல்நாள் வந்துசென்ற நிர்மலாவின் கணவன் டாக்டர் நந்தகோபாலின் பங்களா வாசல்!

ஜிலீர் என்றானது அவளுக்கு!

நந்தகோபாலும் வெளியே புல்வெளியில் எக்ஸர்சைஸ் செய்துகொண்டிருந்தான். வாட்டர் கேனுடன் டிரைவர் தண்ணீர் கேட்டு வாட்ச்மேனிடம் நெருங்கியிருந்தான்.

மீனாட்சிக்குள் அப்பா பிரார்த்தனை பற்றி சொன்னதன் எதிரொலிகள். பரவசத்தோடு காரைவிட்டு இறங்க முயன்றாள். ஆனால், கதவும் சண்டித்தனம் செய்தது.

‘‘என்னம்மா இறங்கணுமா?’’ - துளசிதாஸ் கேட்டான்.

‘‘ஆமா... அதோ அவரைப் பாக்கணும், பேசணும்.’’ - அவள் சொல்லும்போதே நந்தகோபால் டிரைவருக்கு கதவை திறந்துவிடச் சொல்லி தோட்டத்து குழாயில் தண்ணீர் பிடித்துக்கொள்ளவும் சொன்னான்.

டிரைவர் நன்றியோடு ‘‘ஷூட்டிங்க்கு போற வண்டிங்க. லேட்டாயிடுமோன்னு பயந்தேன். ரொம்ப தேங்ஸுங்க’’ என்றபடியே தண்ணீர் பிடிக்க குழாயை திருகினான்.

‘‘ஷூட்டிங்குக்கா... கார்ல யார் இருக்கா..?

‘‘ஹீரோயின் அம்மாங்க...’’

‘‘அப்படியா... யாரு? பானுப்ரியாவா, ஸ்ரீ வித்யாவா?’’

‘‘புதுசுங்க. ஆனா, என்னமா நடிக்கறாங்க தெரியுமா?’’

- டிரைவரிடம் நந்தகோபால் அதற்குள் ஒரு மினி பேட்டியே எடுத்துவிட வாட்டர்கேனும் நிரம்பியிருந்தது.

தூக்கிக்கொண்டு திரும்பும்போது காரைவிட்டு மீனாட்சி இறங்கி வந்துகொண்டிருந்தாள்.

''அம்மா நீங்க போங்கம்மா... அஞ்சு நிமிஷத்துல கிளம்பிடலாம்'' - டிரைவர் சொன்னதை காதிலேயே வாங்காமல் அவள் நந்தகோபாலை பார்க்க நந்தகோபாலும் அவளை பார்த்து நடிகை என்கிற அந்தஸ்துக்காக விஷ் செய்தான்.

துப்புரவாக மீனாட்சியை அவனுக்கு ஞாபகம் இல்லை. அவள் பிரார்த்தனையின் அதிசயங்கள் அரங்கேறத் தொடங்கின.

''வாங்க மேடம்... வெல்கம்..'' என்று வரவேற்றான். ஆனால், வாட்ச்மேன் தலையை சொறிந்து கொண்டிருந்தான்.

''தேங்க்ஸ்.. நீங்க டாக்டர் நந்தகோபால்தானே?'' - மீனாட்சி சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டவளாக பேசினாள்.

''ஓ... என்னைத் தெரியுமா.. எக்ஸலன்ட்!''

''நல்லா தெரியுமே... கஸ்தூரி நர்சிங்ஹோம்லதான் நீங்க ரொம்ப பாப்புலராச்சே..?''

''ஓ... என்னப்பத்தி இவ்ளோ தெரிஞ்சிருக்கே உங்களுக்கு, ப்ளீஸ் உள்ற வாங்க...''

- அவன் வேகமாக முன்னே செல்ல.. முதல்நாளில் துரத்தியடிக்கப்பட்ட அந்த பங்களாவுக்குள் ராஜ உபசாரத்துடன் காலை வைத்தாள் மீனாட்சி. அதேசமயம் வீல் என்கிற ஒரு அலறலும் அவள் காதை வந்து தாக்கியது.



அந்த அலறல் சத்தம் மீனாட்சியை கலக்கியது. நந்தகோபால் முகமும் ஷணத்தில் மாறிப்போனது. மீனாட்சி, நந்தகோபாலையே வெறித்தாள். அவன் சமாளிக்கத் தொடங்கிவிட்டான்.

''என்ன பயந்துட்டீங்களா... அம்மா டீவில சினிமா பாத்துகிட்டிருக்காங்கன்னு நினைக்கறேன்.''

''அப்படியா?''



- நெஞ்சை தழைத்து பெருமூச்சுடன் அடுத்தஅடி எடுத்துவைத்தாள்.

''இல்ல... இது மருந்து இல்ல. விஷம்! நான் குடிக்க மாட்டேன் சித்ரவதை செஞ்சாலும் சரி குடிக்க மாட்டேன்...'' - உள்ளே அவள் நடக்க நடக்க, மாடியில் இருந்து ஒரு பெண்ணின் குரல் ஒலிக்க சரியாக இருந்தது.

நந்தகோபாலுக்கு டென்ஷன் எகிறியது.

''அம்மாாாா...!'' - ஓங்கலாய் அலறினான்.

''வந்துட்டேன் தம்பி...'' - மாடியில் இருந்து பதில் குரல் கேட்டது.

''அந்த டீவிய அணைச்சுட்டு கீழ வா. யார் வந்துருக்காங்கன்னு பார்...''

- மீனாட்சி வந்திருப்பதை சூசகமாக சொன்னபடி தொடர்ந்து சமாளித்தான். கதவு தாழிடும் சத்தம். கையை துடைத்துக்கொண்டு ஒரு வயதான பெண்மணி மாடிப்படி இறங்குவதை மீனாட்சி கவனித்தாள்.

பட்டுச்சேலையில் மீனாட்சியை பார்த்த வளுக்கு ஒன்றும் புரியவில்லை. நிர்மலாவின் உறவுக்காரர்களில் ஒருவராக இருக்க வேண்டும் என்ற யூகத்துக்கு வந்தவள்,

''என்னதம்பி... யார் இவங்க? உன் பொண்டாட்டியோட உறவுக்காரங்களா... காலங்காத்தால வந்துருக்காங்க..''

- படபடவென்று கேள்விகளை அடுக்கினாள். நந்தகோபாலுக்கு தொப்புளில் அவள் ஊசி ஏற்றுகிற மாதிரி இருந்தது.

''ஐயோ அம்மா... இவங்க சினிமா ஸ்டார்மா. நம்ம பங்களா வாசல்ல இவங்க கார் பிரேக் டவுனாயிடிச்சு. நான்தான் உள்ற வரச்சொல்லி கூட்டிகிட்டு வந்தேன். ஆமா, நீங்க இன்னுமா அந்த படத்தை பார்த்து முடிக்கலை...''


- நந்தகோபால் சமாளி... சமாளி என்று சொல்லாமல் சொல்ல அவளும் கெட்டியாக பிடித்துக்கொண்டாள்.

''அ.. அதுவா! அது.. அது இப்பத்தான் க்ளைமாக்ஸ் வந்துருக்குது. அதுக்குள்ளார நீ கூப்டுட்டே.. நிக்கறாங்க பார். உக்காருங் கம்மா.. ஆமா நீங்க எந்த படத்துல நடிச்சி ருக்கீங்க..? உங்களை எங்கயோ பார்த்த மாதிரியும் இருக்கு, பாக்காத மாதிரியும் இருக்கு...''

- சமாளிப்பு, உபசரிப்பு, சந்தேக கலவையுடன் மீனாட்சிக்கு எதிரில் அமர்ந்தாள்.

''அம்மா முதல்ல போய் காபி கொண்டு கிட்டுவாங்க... அவங்க கிளம்பற அவசரத்துல இருக்காங்க...''

- உட்கார்ந்தவளை கிளப்பிவிட்டான் நந்த கோபால். அவளும் எழுந்தாள். நந்தகோபால் வழிந்தான். மீனாட்சியின் பார்வை நாலாபுறமும் சுழன்றது.



அந்த நாளைய கட்டிடம் என்பது தேக்கு நிலைக்கால்களிலும் சுவர் ஜன்னல் வேலைப் பாடுகளிலும் கிராதிக் கம்பிகளிலும் துல்லியமாக தெரிந்தது.

சுவர்களிலும் வண்ண ஓவியங்கள்.

ஒரு இடத்தில் ஜமீன்தார் தோற்றமுடைய ஒருவரின் புகைப்படம். தலையில் ஜரிகைப் பாகை, தோளில் அங்கவஸ்த்ரம், கவர்னர் கோட், கீழே மயில்கண்தோகை முகப்பு தெரியும் விதத்தில் கச்சவேட்டி கட்டு, காலில் முன்புறம் வளைந்த கான்பூர் ஷூ!

''அவர் என் அப்பா. பேர் ஜெகன்னாத பூபதி. நாங்க ஜமீன்பரம்பரை..!''

- நந்தகோபால் கையை கட்டிக்கொண்டு மிகப் பணிவாக அவளுக்கு எடுத்துக்கொடுத்தான்.

''அப்படியா... ரொம்ப சந்தோஷம். வீட்டை பார்க்கும் போதே அந்தக்கால எஞ்சினியரிங் நல்லா தெரியுது.''

''ஆமா... 1940-ல கட்ன பங்களா. ஆனா, சொன்னா நம்பமாட்டாங்க. இப்பக்கூட ஒரு கோடிக்கு எம்.பி. ஒருத்தர் கேட்டாரு...''

''கொடுக்க மனசு வரலையாக்கும்?''

''எப்படிங்க வரும். இன்னிக்கெல்லாம் எங்க தேடினாலும் கிடைக்காதே..''

''வாஸ்தவம்தான்!''

''எங்களுக்கு பூர்வீகம் சோழவந்தான் பக்கம். கொடைக் கானல்ல எஸ்டேட் இருக்கு.'' - அவன் மீனாட்சியை சகஜப்படுத்தி அலறல் பற்றி அவள் தொடர்ந்து யோசிக்க முடியாதபடி தன் பெருமைகளை பேசிக்கொண்டே போனான்.

''ஆமா, உங்களுக்கு கல்யாணம் ஆகலையா இன்னும்?'' - மீனாட்சியும் அவன் மகுடிக்கு மயங்கியவள்போலவே பேசினாள்.

''அது.. அது... ஆயிடுச்சு. ஆனா ஒஃய்ப்தான் ஊர்ல இல்லை.''

''அவங்களோட ஜமீன் வீட்டுக்கு போயிருக்காங்களா..?''

‘‘அ... இல்ல.. ஆமா. ஆமா..’’ - நந்தகோபாலுக்கு அவள் முன்னால் எதனாலோ விரைப்பாக பொய்பேச முடியவேயில்லை. ஏதோ ஒன்று தடுத்தது. காபியும் வந்தது.

மேனேஜர் துளசிதாசும் ‘‘மேடம் கார் ரெடி...’’ - என்றபடி உள்ளே வந்தான்.



‘‘ஒரு நிமிஷம்...’’ - என்றவள் காபியை எடுத்து குடித்தாள். நல்ல வேகம். குடித்து முடித்து எழுந்தவள் ‘‘டாக்டர் உங்களுக்கு ரொம்ப நன்றி... வெரி நைஸ் ஆஃப் யூ...’’ - என்றபடி புறப்பட்டாள்.

நந்தகோபால் அவளுடன் மெயின்கேட் வரை கூடவே சென்றான். கேட்டை கடக்கும் போது திரும்பிய மீனாட்சி அவன் அம்மாவை பார்த்து,

‘‘அம்மா நீங்க போய் அந்த சினிமாவை முழுசா பார்த்து முடியுங்க. நான் வந்து கெடுத்துட்டேன்’’ - என்று ஒரு பஞ்ச் வைத்தாள்.

அவளுக்கு முகமே மாறிப்போனது. காரும் சீறிக் கொண்டு கிளம்பியது. நந்தகோபால் ஏதோ ஒரு கண்டத்தில் இருந்து தப்பித்தவனாட்டம் திரும்பினான். வாட்ச்மேன் முகத்தில் இன்னமும் சலனம். ‘இப்போது வந்துவிட்டுப் போன மீனாட்சிதான் நேற்றும் வந்தவளா... இல்லை அவள் வேறா?’ என்று..

நந்தகோபால் போர்டிகோவை எட்ட அவள் பிடித்துக் கொண்டு உலுக்க ஆரம்பித்தாள்.

‘‘ஏண்டா... என்னடா இது காலங்கார்த்தால தெருவுல போற ஒருத்தியை வீட்டுக்குள்ற கூட்டுகிட்டு.. நம்மவீடு இப்ப இருக்கற நிலைல ஒரு ஈ காக்கா கூட நுழையக் கூடாதுன்னு சொன்ன நீயே இப்படி பண்ணா எப்படிடா..’’ என்று சடைத்தாள்.

‘‘பேசாம இரும்மா... ஸ்டார்ன உடனே நான் பானுப்ரியா, ஸ்ரீவித்யா, லட்சுமின்னு நினைச்சுட்டேன். ஆனா, இவங்க புதுசாம். சரி யாரா இருந்தா என்ன? அவங்களுக்கும் என்னை தெரிஞ்சிருக்கு. வாசல்லயே நின்னு பேசறதுக்கும் என்னவோ போல இருந்துச்சு. அதான் உள்ள வாங்கன்னேன். ஆமா இப்ப எதுக்கு அந்த கழுத்தை கத்துச்சு? டிவி, சினிமான்னு சொல்லி சமாளிக்கறதுக்குள்ள பெரும்பாடாயிடிச்சு...’’

‘‘மருந்தே சாப்பிடமாட்டேங்கறாடா. நீ அடிச்ச இடத்துல எல்லாம் புண்ணே ஆறலை. மாத்திரை சாப்டாதானே ஆறும். அதான் காபியோட மருந்து சாப்பிடுடின்னேன். அவளோ விஷம் அது இதுன்னு கத்து கத்துன்னு கத்திட்டா. இனி தப்பித் தவறிகூட அவளை ரூமுக்கு வெளிய கூட்டிகிட்டு வரக்கூடாது. அந்த நடிகை பார்த்துருந்தா என்னாவறது?’’

- அவள் சொல்லச் சொல்ல அவன் முகத்தில் கோபச் சிவப்பு மெல்ல ஏறிக்கொண்டே போனது.

‘‘இரு வரேன்...’’ - கோபமாக மாடிப்படிகளில் ஏறினான். அடுத்த சில நிமிடங்களிலேயே நிர்மலா வீறிடும் சத்தம் மீண்டும் கேட்டது.

மெயின் கேட்டில் வாட்ச்மேன் கூட காதுகளைப் பொத்திக்கொண்டான்!

ஓடும் காருக்குள் துளசிதாசிடம் செல்ஃபோனை வாங்கி அப்பாவை பிடித்திருந்தாள் மீனாட்சி.

''அப்பா நம்ம பிரார்த்தனை பலிச்சிடுச்சு.. நிர்மலா வீட் டுக்கு போனேன். அவ அங்க இருக்கற நிலையும் அப்பட்டமா தெரிஞ்சிடுச்சுப்பா..'' தொடர்ந்து மீனாட்சி நடந்த அவ்வளவையும் சொல்லி முடித்தாள். அப்பாவும் உற்சாகமாக பேசினார்.

''கடவுள் உங்களுக்கு ரொம்ப பக்கத்துல இருக்கார். அதான் உங்க பிரார்த்தனை இவ்வளவு வேகமா பலிச்சிருக்கு. நிச்சயம் நிர்மலா விஷயத்துல ஒரு பாதை தெரியும். நம்பிக்கையா இருங்க.''



''அதுக்கு நானே ஒரு வழியை பண்ணிட்டுதான் வந்துருக்கேன். நான் உக்காந்து காபி சாப்பிட்ட இடத்துக்கு பக்கத்துல ஒரு புக்ஷெல்ப். அதுல ஒரு மூலைல என் கை மோதிரத்தை கழட்டி வச்சுட்டு வந்துருக்கேன். அதைத் தேடி ஒரு தடவை போவேன். அப்ப நிர்மலாவை பார்க்காம அவகூட பேசாம வரமாட்டேன்.''

''ஒ... நடிக்க ஆரம்பிச்ச உடனே இந்த மாதிரி குயுக்தியெல்லாம் உங்களுக்கு வந்துடுத்தா.. பலே..''

''பாராட்றீங்களா, இல்ல பாராட்ற மாதிரி கண்டிக்கிறீங்களா?''

''இரண்டும்தான்... அதவிடுங்க. ஷூட்டிங்கை முதல்ல நல்லவிதமா முடிங்க. ராத்திரி ஆசிரமத்துக்கு வந்துடுவீங்கல்ல...?''

''நிச்சயமா...''

''அப்ப விவரமா பேசுவோம்...''

''சரிப்பா..''

- மீனாட்சி போனை முடக்கி உற்சாகமாக துளசிதாசிடம் நீட்டினாள். நல்லவேளை... அவன் பிரேக்டவுன் பேப்பரில் பார்வையில் இருந்தான். மீனாட்சி மேல் கவனம் இல்லை.

பார்க்க பட்டத்துக் குதிரை போல இருந்தாள் அந்தப் பெண். மூர்த்தியோடு வந்திருந்தாள். அவளுக்கு அதிகமான மேக்கப். குறிப்பாக முன்புறம் ரவிக்கை மிக இறங்கி யார் பார்த்தாலும் சலனப்படும் விதத்தில் இருந்தது.

உதட்டில் மேல்நாட்டு சாயம். வெயில்படும் போதெல்லாம் மெர்க்குரி விளக்காட்டம் மின்னியது. தலைமுடிக்கு வகிடெடுப்பதோ, வாரிக்கட்டு வதோ அவுட் ஆஃப் பேஷன் என்கிற மாதிரி அப்படியே விட்டிருந்தாள். அது முகத்தில் விழும்போதெல்லாம் ஒதுக்கிவிடுவதுதான் மேனரிஸமோ என்று நினைக்க வைத்தாள்.

''க்ரேஸி... இரு நான் போய் ராஜி கிட்ட பேசிட்டு வந்து உன்னை அறிமுகப்படுத்தி வைக்கறேன்'' - என்றபடியே மூர்த்தி அவளை ஹாலில் உட்கார வைத்துவிட்டு

ரங்கராஜனின் அறையை நோக்கி நடந்தான். எதிரிலேயே சாம்பிராணி தூபக்கரண்டியுடன் சாவித்ரி வந்தாள். அவளை பார்த்தவன் ஒரு சுழிச் சிரிப்பு சிரித்தபடி கடந்து போனான்.

சாவித்ரியும் அவளை பார்த்தாள்.

பார்த்த ஷணத்தில் அவளுக்கு தெரிந்து விட்டது. கோடம்பாக்கத்தை நம்பி கோட்டைக் கனவுகளோடு வந்திருக்கும் ஒருத்தியோ?

அவளும் சாவித்ரியை பார்த்தாள். சரியான குத்துப்பார்வை. பார்க்கும் போதே ரங்கராஜனும் மூர்த்தியும் அறையில் இருந்து வரும் அரவம்.

''ராஜா... க்ரேஸி பம்பாய்ல படிச்சு வளர்ந்த பொண்ணு. இங்கிலீஷ்லாம் பொளந்து கட்டுவா. உன்னைப்பத்தி நிறைய சொல்லித்தான் கூட்டிட்டு வந்துருக்கேன். இனிமே இவதான் உனக்கு பி.ஏ. நீ போன்னு சொன்னாதான் போவா.. உன்கூடவே இருந்து நம்ம தயாரிப்பு சம்பந்தமா எல்லா உதவியும் செய்யறதுதான் க்ரேஸியோட வேலை.''



- மூர்த்தி, சாவித்ரிக்கும் கேட்க வேண்டும் என்றே பேசிக்கொண்டு வந்தான். அந்தக் குதிரையும் எழுந்து நின்று தன் நீண்ட நகங்கள் கொண்ட கையை நீட்டியது. ரங்கராஜனும் அவளை விழுங்கியபடியே பதிலுக்கு கைநீட்டி குலுக்கினார். சாவித்ரி ஒதுங்கி நின்றுகொண்டு கவனித்தாள்.

''தமிழ் பேசுவாளா?''

''நல்லா... தமிழ், தெலுங்கு, கன்னடம் மலையாளம்னு எல்லாமே அத்துபடி. பல ஊரு தண்ணி குடிச்சவ. கடைசியா பம்பாய் வாடியாகிட்ட இருந்தா. நான்தான் உனக்காக பிடிச்சு இழுத்துகிட்டு வந்தேன். குறிப்பா உனக்கு டயத்துக்கு மருந்து தரணும்பாரு. அது எனக்கு பெருசா பட்டுச்சு...''

- மூர்த்தியின் விளக்கத்துக்கு அவள் உதடு புன்னகையால் அங்கீகாரம் தந்தது.

சாவித்ரிக்கு புரிந்துவிட்டது.

இந்த மோகினி மூர்த்தியின் உச்சபட்ச ஆயுதம்!

''ஆமா சேட் என்ன சொன்னான்... நாளைக்கு தந்தியில விளம்பரம் கொடுக்கணும்னு சொல்லியிருந்தேனே.. ரெடியா?''

''அதெல்லாம் ரெடி... பிரேக் டவுனும் போட்டாச்சு. முதல் ஷெட்யூலுக்கு ஐம்பது ரூபா இல்லாம முடியாது. கண்டினியுவஸா பத்துநாள் ஷூட்டிங் போட்ருக்கேன்.''

''சேட் என்னப்பா சொன்னான்?''

''ஒண்ணுமில்ல.. உன் மனைவி கிட்ட... அதாவது இந்த கீப்ப சொல்லல... நீ கல்யாணம் பண்ணிகிட்டயே மீனாட்சினு ஒருத்தி.. அவகிட்டயும் உன் பசங்ககிட்டயும் ஒரு

விடுதலைப் பத்திரம் மட்டும் எழுதி வாங்கிட்டா எவ்வளவு னாலும் பணம் ரிலீஸ் பண்றேங்கறான்.''

''என்ன மூர்த்தி... எதுக்கு அவனுக்கு இவ்வளவு சந்தேகம்?''

''என்ன ராஜா நீ... அதுதானேப்பா சம்பிரதாயம். இருந்தும் நான் அவன்கிட்ட முதல் ஷெட்யூலுக்கு ஐம்பதை வாங்கிட்டேன். நீ ஏன் கவலைப்பட்றே? உன் பொண்டாட்டியோ புள்ளைகளோ எந்த காலத்துலயும் திரும்பி வரப்போறதில்ல தானே?''

''நிச்சயமா... நான் முகம் பார்த்தே பதினேழு பதினெட்டு வருஷம் இருக்கும் மூர்த்தி.''

''கவலையவிடு. விடுதலை பத்திரத்துல கையெழுத்து வாங்கறது என் பொறுப்பு. எப்படி பேசணுமோ அப்படி பேசி நான் வாங்கிட்றேன். அவசியப்பட்டா சட்டப்படி விவாகரத்தும் பண்ண வழி இருக்கானு பாக்கறேன். அதெல்லாம் இனி என்னோட வேலை. நீ க்ரேஸியோட நம்ம ஆபீசுக்கு கிளம்பு...''

''ஆபீசுக்கா?''

''ஆமாம்ப்பா... வடபழனில ஒரு வீடு பாத்துருக்கேன். மாசம் இருபதாயிரம் வாடகை. ஷூட்டிங் பிராப்பர்டிகளை வைக்க லாக் ரூம். மேக்கப் டெஸ்ட் பண்ண மேக்கப் ரூம், டிஸ்கஸ் பண்ண டிஸ்கஷன் ரூம்னு எல்லா ஏற்பாடும் ரெடி. ஹோட்டல் ரூம் போட்டா செலவு அந்து போயிடும்னுதான் இந்த ஏற்பாடு. வெளிய ARR Films னு நம்ம பேனர் போர்டு! போய்ப்பாரு.. அசந்துடுவே.''

''அதுசரி. நீ இப்ப வரலையா?''

''இல்ல நீ கிளம்பு. எனக்கு ஒரு சின்ன வேலை இருக்கு..''

- மூர்த்தி ரங்க ராஜை க்ரேஸியோடு சேர்த்து காரில் அனுப் பிவிட்டு திரும்பி வந்தான். சாவித்ரி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன சாவித்ரி... க்ரேஸியை பார்த்த உடனே உன்னோட நாற்காலி ஆட ஆரம்பிச்சுடுச்சா..?''

சாவித்ரி பதிலுக்கு சிரித்தாள்.

''சிரிக்கறேனா ரொம்ப தெளிவாயிட்டேனு அர்த்தம். நானும் உன்னை கணக்கு பண்ணிகிட்டு தானே இருக்கேன். சரி அதைவிடு... இப்பல்லாம் அடிக்கடி நீ ராஜாவோட பசங்களை சந்திக்கறேங்கறது எனக்கு தெரியும்கறது உனக்கும் தெரியும். ஏன் உன்னை விட்டுவெச்சேன் தெரியுமா?''

- மூர்த்தி ஒரு இடைவெளி விட்டு அவளை கொத்துவது போலப் பார்த்தான். அவன் தொட்ட அந்த விஷயம் அவளை நடுங்கச் செய்தது.

''இப்ப கொஞ்சம் முந்தி சொன்னேனே... விடுதலைப்பத்திரம்... அதுதான் காரணம். உங்க ளுக்குள்ள உறவு கொஞ்சமாவது வளரட்டுமேன்னு விட்டுவெச்சேன். பாவம் நீ... அவங்கல்லாம் வந்து ஒண்ணாயிட்டா நல்லா இருக்கும்னு நினைச்சே. ஆனா உனக்கு உன் சக்களத்திய பத்தி தெரிஞ்சதை விட எனக்கு அதிகமாகவே தெரியும். இந்த இருபது

வருஷத்துல புருஷன் கொஞ்சமாவது மாறியிருப் பான்னு மீனாட்சி நினைச்சிருப்பா. அது தப்புன்னு சொல்ல ஒருத்தர் வேண்டாம்? அதான் உன்னை விட்டு வெச்சேன்! நீ போய் எதை எதைச் சொல்லி எப்படி எல்லாம் அழுதிருப்பேனு எனக்கு தெரியும். அதுதானே எனக்கும் வேணும்?

இப்ப நான் போய் அந்த மீனாட்சியையும் அவ பசங்களையும் பார்த்து ரிஜிட்டா ஒரு ட்ராமா போட்டா போதும்... என் காரியம் சுலபமா முடிஞ்சிடும். எப்படின்னுதானே பாக்கறே..?''

- மூர்த்தி கொஞ்சம் கொஞ்சமாக விசுவரூபம் எடுத்தான். சாவித்ரிக்குள் வெலவெலப்பும் கூடிக்கொண்டே போனது.

''ராஜாவுக்கு சாவித்ரிங்கற சின்ன வீடு மட்டுமில்ல, இப்ப க்ரேஸின்னு மூணாவதாவும் ஒருத்தி வந்துருக்கா. திருந்தவே திருந்தாத அவனோட சேர்ந்து வாழவா இருபது வருஷம் பிரிஞ்சிருந்தே? வேண்டாம்னுதானே... இத்தனை வருஷம் இல்லாம நல்லா பேரன் பேத்தின்னு எடுத்துட்ட நிலைல இப்ப போய் நீ திரும்ப வரலாமா... அதைவிட தற்கொலை பெட்டராச் சேனு சொல்வேன் அப்படியே.. ராஜா அங்க உன்னை காலடில விழ வெச்சுட்டதா காலரை தூக்கிவிட்டுகிட்டு இருக்கான். ஒரு வீட்டை கொடுத்து என் பையனை என்பக்கம் இழுத்துட்டேன்னும் சொல்லிகிட்டிருக்கான். காரணம் நீ இன்னும் அவன் கட்டுன தாலியோட இருக்கறதுதான். மானரோஷம் இருந்தா அதை கழட்டி எறி, குறைஞ்ச பட்சம் ஒரு விடுதலைப் பத்திரத்துல கையெழுத்தாவது போடுன்னு செக் வைப்பேன்.

மீனாட்சி மாதிரி பொம்பளைங்கள எங்க எப்படி தட்டணும்னு எனக்குத் தெரியும். உனக்கும் ஒரு செக் வெச்சுருக்கேன். கோயில்ல எடுத்த போட்டோவை சொல்றதா நினைச்சுடாதே. இது வேற. இதுல நீயும் விழுவே. அப்புறமா உன் வரைல நான் வைக்கறதுதான் சட்டம்! வரட்டுமா?''

- எகத்தாளம் கொப்ப ளிக்க பேசிவிட்டு கிளம்பினான் அவன். சாவித்ரி நெஞ்சைப் பிடித்துக்கொண்டாள். 'இவன் நினைக்கிற மாதிரியே எல்லாம் நடந்துவிடுமோ..? நான் எதிர்பார்க்கிற மாதிரி அரவிந்தனும் மீனாட்சியும் கேஸ் போட்டு உரிமை எடுத்துக்கொள்ளாமல் போய்விடுவார்களோ..?'

அவள் நடுங்கும்போது அங்கே சாமிநாதனின் தலை தெரிந்தது.

''அம்மா... அரவிந்தன் சார் வக்கீலை போய் பாத்துட்டாரு. நோட்டீஸ் ரெடியாகிகிட்டு இருக்கு...''

- என்றபடியே உள்ளே நுழைந்த அவன் அவள் வயிற்றில் பாலை வார்க்க சாவித்ரி துள்ளிக்கொண்டு எழுந்தாள்.

''நிஜமாவா?'' என்றாள் படுவேகமாக.

''அத ஏன் கேக்கறீங்க... ரஞ்சனிமன்னி படாத பாடுபட்டு அரவிந்தன் சாரை தயார் படுத்தியிருக்காங்க. கவலைப்படாதீங்க... அதிகபட்சம் நாலுநாள். உங்க வீட்டுக்காரரை சுத்திகிட்டிருக்கற காக்காய்கள் ஒண்ணுகூட அப்புறம் பறக்காது. ஆனா, இனிமே தான் நீங்க ரொம்ப கவனமா நடந்துக்கணும். ஏன்னா அந்த மூர்த்தி நீங்க தடுக்குல பாஞ்சா அவன் கோலத்துல பாயறவன் ஆச்சே..?''

- சாமிநாதனும் மூர்த்தி பற்றி சொல்லி கிலிமூட்டினான். ‘இறுதியாக உனக்கு ஒரு செக் வெச்சுருக்கேன் என்றானே... அது என்னவாக இருக்கும்?’ - சாவித்ரி குமையத் தொடங்கினாள்.



சாவித்ரியின் கலக்கமும் கிலேசமும் சாமிநாதனை ஆச்சரியப்படுத்தியது. அரவிந்தன் கேஸ் போடப்போவது தெரிந்து அப்பாடா என்று பெருமூச்சு விடுவாள் என்று நினைத்தால் அந்த சந்தோஷமே அவளிடத்தில் இல்லையே... எதனால்?

‘‘என்னங்க... என்ன இன்னும் சிந்தனை. ரொம்ப குழப்பமா இருக்கீங்கபோல இருக்கே?’’ – நிதானமாய் அவளிடம் கேட்டாள்.

‘‘ஒண்ணுமில்லப்பா... எல்லாம் என் தலையெழுத்து.’’

கண்ணோரம் துளிர்த்த இரண்டொரு நீர்ப்பொட்டோடு அவள் சொன்ன விதத்தில் தாராளமான சோகம்.

‘‘நிம்மதிப் பெருமூச்சு விடுவீங்கன்னு நினைச்சேன். ஆனா, தலையெழுத்துன்னு அலுத்துக்கறீங்களே... என்னம்மா சிக்கல்..?’’

‘‘சாண் ஏறினா முழம் சறுக்குது. நான் என்ன செய்வேன்?’’

‘‘இதோ பாருங்க... உங்க வரைல நான் ஒரு மூணாவது மனுஷன்தான். இருந்தாலும் அக்கறையோட கேக்கறேன். என்ன பிரச்னை? என்கிட்ட சொல்றதால உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்னா சொல்லுங்க..’’

‘‘அப்படி இல்ல சாமிநாதன்... எப்ப என் சிக்கலை தீர்த்துக்க நான் உன் மூலமா முயற்சி செய்தேனோ அப்பவே நீ எனக்கு நெருங்கின ஒருத்தனா ஆயிட்டே... உன்னை நான் மூணாவது மனுஷனா, ஒரு புரோக்கரா எல்லாம் பார்க்கலை. டிகிரி வாங்கிட்டு அப்ளிகேஷன் போட்டு வேலை தேடற ஒரு சராசரியா இல்லாம வேலை வாய்ப்புகளை

வாழ்க்கைக்குள்ள புகுந்து உருவாக்கிக்கற உன்னோட திறமை எனக்கு பிடிக்கும். உன்னை நீ அந்நியப் படுத்திக்காதே...''

''அப்ப விஷயத்தை சொல்லுங்க.. என்னால உங்களுக்கு உதவ முடியுமானு பாக்கறேன்..''

''முதல்ல இந்த கேள்விக்கு பதில் சொல்லு... மீனாட்சியம்மா இப்ப எங்க இருக்காங்க?''

''அவங்க எங்க இருக்காங்கன்னு உண்மைல யாருக்கும் தெரியலம்மா.''

''நிஜமாவா... இன்னுமா அரவந்தனால அவங்கள கண்டுபிடிக்க முடியலை?''

''ஆமாம்மா.. அதுதான் உண்மை. ரஞ்சனி மன்னிகூட ஏதோ ட்ரிக் பண்ணிதான் அரவிந்தன் சாரை சேஸ் போட தூண்டியிருக்காங்க...''

''இப்ப பிரச்னை அரவிந்தன் கையவிட்டு போயிடுச்சு. மீனாட்சியம்மா மனசு வச்சாதான் பிரச்னை தீரும்.''

''புரியும்படி சொல்லுங்க..''

சாவித்ரி சுற்றிலும் பார்த்துவிட்டு மூர்த்தியின் சவடாலையும், சவாலையும் அவனிடம் விவரிக்க ஆரம்பித்தாள்..

வக்கீல் வாதிராஜ் விஸ்தாரமாக விளக்கிக் கொண்டிருந்தார். அருகில் ரஞ்சனி.

''மிஸ்டர் அரவிந்தன்... இந்த கேஸை பொருத்தவரை சட்டப்படி நீங்க, உங்க மதர்னு ரெண்டு பேருமே அந்த பூர்வீக சொத்துக்கு உரிமை கொண்டாட முடியும். இதுல உங்க அக்காவுக்கு சட்டப்படி எந்த உரிமையும் இல்லை. தமிழ்நாடு கவர்ன்மென்ட் கொண்டுவந்த சட்ட திருத்தப்படி பெண்களுக்கும் சொத்துல உரிமை இருந்தாலும் அதுக்கான கட் ஆஃப் டேட்னு ஒண்ணு இருக்கு. அதன்படி பார்த்தா உங்க அக்கா உரிமைகோர தகுதி இல்லை. அந்த டேட்டுக்கு முன்னாடியே அவங்களுக்கு கல்யாணம் ஆகிட்டதால இதுல அவங்க வரமுடியாது. நீங்க பார்த்து அவங்களுக்கு பங்கு கொடுக்கலாம். அதுவேற விஷயம்.

கேஸ்ல உங்க அம்மாவோட பங்கு ரொம்ப முக்கியம்... ஆனா அவங்க இப்ப உங்ககூட இல்லை. இதுல எனக்கு ஒரு விஷயம் க்ளியரா தெரியணும்.

உங்கப்பா தன் சுய சம்பாத்யத்துல சம்பாதிச்ச எதையும் நீங்க பிளாக் பண்ண முடியாது. அதே சமயம் பூர்வீக சொத்துல அவருக் கும் ஒரு பங்கு உண்டு. அதை அவர் என்னவேணா செய்துக்கலாம்கறதையும் நீங்க ஞாபகத்துல வச்சுக்கணும்.''

வக்கீலுக்கு அரவிந்தன் பதில்சொல்ல தொடங்குமுன் ரஞ்சனி முந்தினாள்.

''அவர் எதையும் சம்பாதிக்கலை. அழிச்சதுதான் அதிகம். அநேகமா அவர் பங்கைவிட அழிச்சது கூட இருக்கும். அப்படி பார்த்தா இப்ப அவர் பிடியில இருக்கற அவ்வளவு சொத்தும் இவர் தாத்தாவோடதுதான். அது இவருக்கும் நீங்க சொன்னமாதிரி என் மாமியாருக்கும் மட்டுமேதான் சேரணும் அதுதான் நியாயம்..''

ரஞ்சனியின் ஆவேசம் வக்கீல் முகத்தில் புன்னகையை தோற்றுவித்தது.

‘‘என்ன சார் சிரிக்கிறீங்க..?’’

‘‘இது கேஸ் போடற எல்லாரும் சொல்ற பதில்மா. மிஸ்டர் ரங்கராஜன் ஒண்ணும் விரல் சூப்பற பாப்பா இல்லை. அவருக்கும் குடும்ப வக்கீல்னு ஒருத்தர் இருப்பார். அவர் எந்த இண்டு இடுக்குல புகுந்து அவரை காப் பாத்துவாரோ தெரியாது. எப்படியும் விசாரணை நடந்து கோர்ட்ல தீர்ப்பாகற வரை எதுவும் சொல்லமுடியாது.’’

‘‘அப்ப... கேஸ் எங்க பக்கம் ஜெயிக் காதுனு சொல்றீங்களா?’’

‘‘அப்படி சொல்லலை. அவரை பாப் பரா ஒரு பைசாக்கு கூட உரிமை இல்லாத வரா ஆக்கறதுங்கறது கஷ்டம். உங்கபங்கை நீங்க அடையலாம். அவருக்கு பங்கே இல்லைங்கறது விசார ணைக்கு பிறகுதான் முடிவாகும்.’’

‘‘தாராளமா அப்ப டியே நடக்கட்டும். ஆனா நடுவுல அவர் எங்க சொத்தை பயன்படுத்தி கடன் வாங்கவோ, வித்து சினிமா எடுக்கவோ கூடாது. அதுதான் இப்ப முக்கியம்.’’

‘‘பார்ப்போம். கேஸ் ஃபைல் ஆயிட்டாலே யாரும் கடன் தரமாட்டாங்க. அதேதான் அவர் விற்க முற்ப டும்போதும். யாரும் வாங்க மாட்டாங்க. ஒண்ணு நிச்சயம். இந்த நோட்டீஸ் அவரை கட்டிப்போடும்!’’

‘‘இப்ப எங்களுக்கு தேவையும் அதுதான்’’ – ரஞ்சனி அழுத்தமாக சொன்னாள்.

‘‘இத்தனை வருஷம் இல்லாம இப்ப அவரை நோக்கி இப்படி ஒரு பிரம்மாஸ்த்ரத்தை போடறீங்களே இது அவர்மேல உள்ள கோபத்தாலையா – இல்லை...’’

வக்கீல் முடிக்கவில்லை. அரவிந்தன் இந்த முறை வேகமாக வாயைத் திறந்தான்.

‘‘நிச்சயமா கோபத்தால இல்லை சார். அவரைக் காப்பாத்தத்தான் இப்படி செய்யறோம்..’’

‘‘அப்படின்னா..?’’

‘‘இதை செய்யத் தவறினா அப்பா எல்லாத்தையும் இழந்துடற ஒரு இக்கட்டான நிலைல இருக்கார்..’’

‘‘அப்படியா? சினிமா எடுத்தா அவர் எல்லாத்தையும் இழந்துடுவாரா... ஆச்சரியமா இருக்கே..’’

‘‘இதுக்கு முந்தி அவர் நிறைய சொத்தை இழந்ததை பாத்துட்டோமே... அவருக்கும் சினிமாவுக்கும் ராசியே கிடையாது’’ – ரஞ்சனி வரிந்து கட்டினாள்.

‘‘சரி, ஒரு யுத்தத்துக்கு தயார் ஆயிட்டீங்க. எல்லாத்துக்கும் தயாரா இருங்க.’’

வக்கீல் அந்த பதிலோடு ரங்கராஜனுக்கான நோட் டீஸை உரையில் போட்டு ஒட்டினார். அதை உயர்த்திக் காட்டி ‘‘முதல் அம்பு தயார்..’’ என்றபோது அரவிந்தனை அது என்னவோ செய்தது.

வக்கீல் அலுவலகத்தை விட்டு வெளியே வந்த பிறகும் இறுக்கமாகவே இருந்தான். ஆனால், ரஞ்சனி முகத்தில் மத்தாப்பு. அவன் ஸ்கூட்டரை உதைத்தான். அது வழக்கம்போல் சண்டித்தனம் செய்தது.

''கொஞ்ச நாள்தான்... அப்புறம் நீங்க இதை உதைச் சுகிட்டு அவஸ்தைப்பட வேண்டியிருக்காது.'' என்றவள் ''இப்பவே கார் டிரைவிங் கத்துக்கிடுங்க. டெய்லி காலைலயே வீட்டுக்கே வந்து சொல்லிக் கொடுத்துட்டு போறாங்களாம். அதிகபட்சம் ஒரு மாசம். லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கறதுல இருந்து எல்லாம் அவங்க பாடாம். ஜஸ்ட் த்ரீ தௌசன் ஃபைவ் ஹண்ட்ரட் ரூபீஸ்தானாம்..'' என்று அவள் பொங்கி வழியவும் அவளை ஒரு மாதிரி பார்த்தான்.

''என்ன பாக்கறீங்க.. கிளம்புங்க. இன்னிக்குதான் வாழ்க்கைல உருப்படியான காரியம் செஞ்சுருக்கீங்க''

அவள் பதில் தந்த எரிச்சலோடு ஒரே உதை. ஸ்கூட்டர் ஸ்டார்ட் ஆகிவிட்டது!



**வா**சலிலேயே நின்று கொண்டிருந்தாள் மாலதி. அரவிந்தனின் ஸ்கூட்டர் தெரியவும் பரபரப்பானாள். அவன் ஸ்கூட்டரை ஸ்டாண்டு போட்டு நிறுத்தும் முன் கட்டை விரலைக் காட்டியபடியே இறங்கி அவள் முன் வந்தாள் ரஞ்சனி.

''என்ன.. எல்லாம் முடிஞ்சுதா. நோட்டீஸ் அனுப்பி யாச்சா?''

''பின்ன... இந்த நிமிஷம் வக்கீல் ரிஜிஸ்டர் போஸ்ட்ல அதை அனுப்பியிருப்பார். நாளைக்கெல்லாம் பாருங்க. இந்த நிமிஷம்... இதுகூட அதிகம். இன்னும் முன்னாலேயே உங்கப் பாவோட கார் இந்த வீட்டு வாசல்ல வந்து நிக்கப் போறத..''

பதிலோடு உள்ளே நடந்தாள். பின்னாலேயே சோர்வுடன் வந்தான் அரவிந்தன்.

''அப்ப இனி ஒவ்வொரு நிமிஷமும் டென்ஷன்தான்னு சொல்லு..''

''டென்ஷன்தான். ஆனா நமக்கில்ல. உங்க அப்பாவுக்கு''

''கேஸ் நம்ம பக்கம்தானே ஸ்ட்ராங்கா இருக்கு?''

''என்னக்கா இது கேள்வி. என்ன நடக்கும்னு நான் அனுமானமா சொல்லவா?''

‘‘என்ன.. என்ன நடக்கும்?’’

‘‘வக்கீல் நோட்டீஸை பார்த்த மாத்திரத்துல உங்கப்பா அப்படியே ஸ்டன்னாயிடுவார். சுதாரிச்சு அவர் வக்கீலுக்கு போன் போடுவார். அவர் விபரத்தை கேட்டுட்டு ‘ஒண் ணும் பண்றதுக்கில்ல ரங்கராஜன். நீங்க இனிமே எதை செய்யணும்னாலும் உங்க மனைவி மகன் அனுமதி வேணும். போய் அவங்க கால்ல விழுங்க அதுதான் இப்ப உங்களுக்கு இருக்கற ஒரே வழி’ன்னு சொல்லுவாரு.

அவரும் இங்க நம்மளைப் பார்க்க வருவார். நமக்கும் அதுதானே வேணும்..? இனிமே நீங்க சினிமா, டிராமா ஆசையை எல்லாம் மூட்டைகட்டி வெச்சுட்டு உக்காருங்க. உங்க தர்பார் தண்ணி வண்டித் தனத்துக்கெல்லாம் இனி இடம் கிடையாதுன்னு நாம ஒரு போடு போடுவோம்.

‘அதெல்லாம் முடியாது நான் என் விருப்பப்படிதான் இருப்பேன்’னுல்லாம் ரப்ச்சர் பண்ண முடியாது. பண்ண என்ன இருக்கு? அதான் பல்லை பிடுங்கியாச்சே... சரின்னு நம்மை பேச்சை கேக்கறதுதான் அவருக்குள்ள ஒரே வழி..’’

ரஞ்சனி கற்பனையில் வெல்லம் இல்லாமல், முந்திரி இல்லாமல் வாயிலேயே பாயசம் காய்ச்சினாள்.

அரவிந்தன் உம்மென்று கேட்டபடி சோபாவில் விழுந்திருந்தான்.

‘‘ஆமாமா... நீ சொல்றபடிதான் நடக்கப்போகுது. ஆமா அந்த சாவித்ரியை என்ன பண்றது?’’

‘‘யாரா இருந்தா என்ன... நம்ம பேச்சை கேட்டாத்தான் புவ்வா. மாட்டேன்னு சொன்னா போய்ட்டே இருன்னு சொல்ல வேண்டியதுதான்.’’

அந்த பதில் மட்டும் அரவிந்தனை வேகமாக அவள் பக்கம் திரும்பியது.

‘‘போதும் ரஞ்சனி. ரொம்ப மனக்கோட்டை கட்டாதே. சாவித்ரியம்மா மட்டும் இல்லைன்னா நீயோ நானோ இப்படி கோர்ட்டு கேஸ்ன்னு யோசிச்சுகூட பாத்துருக்க மாட்டோம். ஞாபகம் வெச்சுக்கோ..’’ – சீறினான்.

‘‘நானும் ஒண்ணும் மறுக்கலையே. அதுக்காக அவங்களை தலைல தூக்கி வெச்சுகிட்டா ஆடச் சொல்றீங்க?’’

‘‘நீ முதல்ல வாயை மூடு. அப்பாகிட்ட இருந்து என்ன பதில் வருதுன்னு பார்ப்போம். நீ நினைக்கற மாதிரி ஓடிவந்து கால்ல விழற டைப் கிடையாது அவர். நீ தடுக்குல பாஞ்சா அவர் கோலத்துல பாய்வார். இதெல்லாம் தெரிஞ்சும் அம்மா எப்படிதான் கேஸ்போடச் சொன்னாங்களோ தெரியல...’’

அரவிந்தன் தன் பதிலில் மீனாட்சியை தொட்டு நிற்க வும் மாலதிக்கு குப்பென்று வியர்த்தது. மிரண்டுபோன கண்களோடு ரஞ்சனியை பார்த்தாள். ரஞ்சனி பதட்டமே படாமல் சைகையில் அவளை பயப்படாதே என்றாள்.

தொலைபேசி அடித்தது. நிதானமாக போய் எடுத்தாள்.

‘‘மன்னியா.. நான் சாமிநாதன் பேசறேன்.’’

‘‘சொல்லுங்க. வக்கீலை பார்த்து நோட்டீஸை தட்டி விட்டாச்சு.’’

‘‘சந்தோஷம். ஆனா இங்க இன்னொரு பிரச்னை..’’

‘‘என்ன?’’

‘‘மீனாட்சியம்மா எங்க இருக்காங்கன்னு உங்க யாருக்கும் நிஜமா தெரியாதா?’’

‘‘இப்ப அவங்க பேச்சு எதுக்கு?’’

‘‘இங்க ரங்கராஜ் சாரோட புரொடக்ஷன் மேனேஜர் மூர்த்திங்கறவன் அவங்களைப் பார்த்து விடுதலைப் பத்திரத்துல கையெழுத்து வாங்க கிளம்பிட்டான்.‘‘

‘‘என்னது... விடுதலைப் பத்திரமா?’’

‘‘ஆமா... அது இருந்தாதானே இங்க இவர் சொத்துக்களை விக்கவோ இல்ல அடமானம் வெக்கவோ முடியும். கடன் கொடுக்கறவங்க என்ன இளிச்ச வாயனுகளா?’’

‘‘இதென்ன கத்திபோய் வாலு வந்த கதையா?’’

‘‘அதேதான்... அந்த மூர்த்தி பயங்கரமான ஆள். மீனாட்சியம்மாவை பார்த்தா நிச்சயம் விடுதலைப் பத்திரத்துல கையெழுத்து வாங்கிடுவான். அப்புறம் நீங்க கேஸ் போட்டாலும் அது ஸ்ட்ராங்கா நிக்காது..’’

‘‘என்ன சாமிநாதன் புதுசு புதுசா என்னென்னவோ சொல்றீங்க. சரி அவனுக்கு என் மாமியார் இருக்கற இடம் தெரியுமா என்ன?’’

‘‘உங்களுக்கு வேணும்னா தெரியாம இருக்கலாம். ஆனா அவன் ஜித்தன். அவனுக்கு தெரியும்னுதான் தோணுது. சாவித்ரியம்மா உங்களை கேஸ்போட சொன்னது எல்லாமே அவனுக்கு தெரிஞ்சுருக்கு. மீனாட்சியம்மா வீட்டைவிட்டு போயிட்டதும் தெரியும். இருந்தும் ‘பத்திரத்துல கையெழுத்து வாங்கிட்டு அப்புறமா உன்னை கவனிச்சுக்கறேன்’னு சாவித்திரிம்மாகிட்ட சொல்லியிருக்கான்னா என்ன அர்த்தம்?’’

‘‘அவன் என்ன மந்திரவாதியா? எப்படி அவங்க இடம் தெரியும்?’’

‘‘இப்ப கேள்வி அது இல்ல... அவங்க கையெழுத்து போட்டுட்டா உங்க பிளான் என்னாகும்? யோசியுங்க. இப்ப பந்து அரவிந்தன் சார் கைலதான் இருக்கு. அவர்தான் மீனாட்சியம்மாவை தடுக்கறதோட கேஸ்போடறதுலயும் உறுதியா செயல்படணும். இல்லே..’’

சாமிநாதன் குரல் ஏனோ மிகத் தேய்ந்து ரஞ்சனி காதில் ஒலித்தது.

அவளுக்குள் மொத்த சக்தியும் ஆவியாகி விட்ட மாதிரி ஒரு பிரமை...



சாமிநாதன் சொன்ன செய்தி ரஞ்சனியை ஒரு கலக்கு கலக்கிவிட்டது. முகத்தில் அதன் எதிரொலிகள். அரவிந்தன் அதை பார்த்துவிட்டு சற்று குழம்பிப்போனான்.

''என்ன ரஞ்சா... எனி பேட் நியூஸ்?''

''இல்ல.. இல்ல... இல்ல ஆமா.. இது கொஞ்சம் பேட் நியூஸ்தான்.''

- சாதாரணமாக ரஞ்சனி தடுமாறவே மாட்டாள். பளிச்சென்று பிரச்னையின் மையப்புள்ளிக்கு சென்றுவிடும் சாதுர்யம் உள்ளவள். அவளே சாமிநாதன் பதிலால் தடுமாறித்தான் போனாள். காலம் படு சைலன்ட்டாக மூர்த்தி ரூபத்தில் ஒரு செக் பாயின்ட் வைத்துவிட்டதை அரவிந்தனிடம் எப்படிச் சொல்வது?

மவுனத் தவிப்போடு நெற்றிப் பொட்டில் வகிட்டிலிருந்து ஒரு நீர்ப் பாம்பு ஓடிவர அரவிந்தனை வெறித்தாள்.

''என்ன ரஞ்சா... எதுக்கு இத்தனை தடுமாற்றம்? ஆமாங்கறே.. இல்லேங்கறே... பேட் நியூசுங்கறே.. யார் போன்ல பேசினது. முதல்ல அதை சொல்லு..''

''ச.. சாமிநாதன்ங்க..''

''அவன் அப்படி என்ன சொன்னான்?''

''அது... அங்க அதான் உங்கப்பா வீட்ல ஒரே ரகளையாம். அவர் ஓவரா குடிச்சுட்டு சதா பொண்ணுங்களோட...''

- வாகாக அவன் சொன்னதை மறைத்து மூடப்பார்த்தாள்.

''அதான் தெரிஞ்ச விஷயமாச்சே. இந்த விவகாரம் சாமிநாதன்வரை போயிருக்கா..''

''சாமி.. சாமிநாதனுக்கும் எல்லா விஷயமும் தெரியும்ங்க. ஊருக்கே தெரியும்போது அவனுக்கு தெரியாதா?''

''அப்ப இதைத்தான் பேட் நியூஸ்னு சொன்னியா?''

''ஆமா. ஆமாம்..''

''இப்ப சொல்றேன் கேட்டுக்கோ. நாம அனுப்பியிருக்கற வக்கீல் நோட்டீஸ் போய்ச் சேர்ந்த பிறகு இதெல்லாம் சாதாரணம்கற மாதிரி பல நியூஸ் வரும்பார்..''

- வேட்டி முனையை உயர்த்திக் கட்டியபடியே பதிலோடு சற்று விலகிப் போனான். உடனேயே மாலதி வேகமாக நெருங்கி வந்தாள்.

''ரஞ்சா.. என்னடி என்ன விஷயம்?''

''அதான் சொன்னேனேக்கா..''

''அது.. அவனை சமாதானப்படுத்த சொன்ன சாதாரண விஷயம். உண்மையச் சொல். சாமிநாதன் வேற என்ன சொன்னான்?''

-மாலதி பாம்பின் காலறியும் பாம்பு ஜாதி நான் என்பதுபோல கொக்கியைப் போட ரஞ்சனிக்குள் எரிச்சல் பீறிட்டது. சற்றுமுற்றும் ஒரு பார்வை பார்த்தாள். அரவிந்தன் எதற்கோ மாடி ஏறிக் கொண்டிருந்தான். காயப்போட்டிருக்கும் லுங்கியை எடுத்து வருவதற்காக இருக்கலாம். அதை உணர்ந்தவள் ''அக்கா, கிணறு வெட்ட பூதம் புறப்பட்டாச்சு..'' என்றாள்.

''என்னடி சொல்றே... பூதம் பிசாசுங்கறே.. கொஞ்சம் விவரமா சொல்லு..''

''அந்த வில்லன் மூர்த்தி இல்ல...''

''யாரு.. எங்கப்பா வோட வலது கையா..?''

''அந்த சண்டாள னேதான். அவன் உங்கம்மாவை தேடி புறப்படுட்டானாம்.''

''எதுக்குடி..?''

''விடுதலைப் பத்திரம் எழுதி வாங்கத்தான்..''

''விடுதலைப் பத்திரமா?''

''ஆமாம்.. அப்பத் தானே சொத்து மேல வசதியா கடன் வாங்கலாம். இஷ்டத்துக்கு ஏமாத்தி உங்கப்பா நெத்தியிலயும் நாமம் போடலாம்.''

''அடக் கொடுமையே.. ஆமா அவனுக்கு அம்மா இருக்கற இடம் தெரியுமாமா?''

‘‘அவன் பெரிய ஜித்தனாம். அந்த சாவித்ரி நம்மகூட பேசினதுல இருந்து எல்லாமே அவனுக்குத் தெரியுமாம்.’’

‘‘என்னடி இது.. பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காட்டம்... அது எப்படி சாமிநாதனுக்கு தெரியுமாம்?’’

‘‘எல்லாம் அந்த சாவித்ரி தான் சொல்லியிருக்கா...’’

‘‘அப்ப அவனுக்கு அம்மா இருக்கற இடம் தெரியுமா?’’

‘‘தெரியும்னே வெச்சுப்போம். அவங்க விடுதலைப் பத்திரத்துல கையெழுத்து போடுவாங்களா?’’

‘‘போட்டுட்டா நாம கேஸ் போட்டது செல்லாதா? சொத்தெல்லாம் அவ்வளவுதானா?’’

‘‘இந்த கேள்விக்கெல்லாம் வக்கீல்தான் பதில் சொல்லணும். நான் இப்பவே அவரை பாக்க றேன். என்ன சொல்றார்னும் கேட்டுகிட்டு வரேன். நீங்க உங்க தம்பிகிட்ட எதையும் உளறிடாம இருங்க..’’

– ரஞ்சனி ஒரு முடிவுக்கு வந்தவளாக மளமள வென்று உடை மாற்றிக்கொள்ள ஆரம்பித்தாள். லுங்கியுடன் கீழே இறங்கி வந்த அரவிந்தன் அவளது புறப்பாட்டை பார்த்து ஆச்சரியப்பட்டவனாக.

‘‘எங்க கிளம்பிட்டே?’’

‘‘ஆபீஸ் வரைக்கும் போய்ட்டு வந்துட்றேன். பேசாம இந்த மாசம் பூரா லீவு போட்ற போறேன்.’’

‘‘எதுக்கு?’’

‘‘நீங்கதான் சொன்னீங்களே... நம்ம வக்கீல் நோட்டீஸோட எதிரொலிகளை சந்திக்கவேண்டாம்?’’

‘‘உனக்கு லீவு இருக்கா?’’

‘‘இருக்கு, இல்லை... நான் போடப்போறேன்.’’

‘‘பைத்தியம்.. இப்ப தான் நாம எப்பவும் போல இருக்கணும். போய் வேலையைப் பாரு.’’

‘‘இல்ல.. நீங்க சும்மா இருங்க.’’

- பதிலோடு மளமளவென்று செருப்பை மாட்டிக்கொண்டு வீதியில் இறங்கினாள் ரஞ்சனி!

ஷூட்டிங் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது. ஏதோ நடிப்பதற்காகவே பிறந்தவள் போல மீனாட்சி ஒரே டேக்கில் ஓகே செய்து கொண்டிருந்தாள்.



அசோஸியேட்டுகள் முகத்தில் ஒரே சந்தோஷம்.

காட்சி மாறும் சமயம் கிடைத்த இடைவெளியில் அவளி டம் போய் பேசினர். ''அம்மா அசத்தறீங்க.. ஷூட்டிங் ஆரம்பிச்சு நாலுமணி நேரம்கூட முடியலை. நார்மலா அஞ்சாறு நிமிஷத்துக்குதான் சீன்ஸ் ஓகே ஆகும். ஆனா இன்னிக்கு இப்பவே பதிமூணு நிமிஷத்துக்கு சீன்ஸ் ஓகே ஆயிருக்கு. நீங்க வெளுத்துக் கட்றத பார்த்துகோ - ஆர்ட்டிஸ்டுகளுக்கும் ஒரு வேகம் வந்துடுச்சு. இப்படியே போனா ஒரு நாளைக்கு 25 நிமிஷத்துக்கு ஓகே ஆயிடும். அதாவது ஒரு எபிஸோடுக்கு மேலேயே ஷாட்ஸ் இருக்கும்'' என்றார்கள். மீனாட்சி அதைக் கேட்டு மெலிதாக சிரித்தாள்.

இடையில் பூர்ணசந்தர் அவளை தனியே அழைத்தார்.

''மீனாட்சிம்மா... இவ்வளவு சரக்கோட நீங்க உங்க லைஃபையே வேஸ்ட் பண்ணிட்டீங்க. எனக்கு ரொம்ப பெருமையா இருக்கு'' என்றவர் சரேலென்று திரும்பி ''நம்ப ஆர்பிஜி சாரை வரச் சொல்லுங்க'' என்றார். சில நொடிகளில் கம்பீரமாய் ஒருவர் சஃபாரி சூட்டில் கைகூப்பியபடி வந்தார்.

''இவர்தான் ஆர்பிஜி. தமிழ் தெலுங்கு ஃபீல்டோட நம்பர் ஒன் புரொட்யூசர்கள்ள ஒருத்தர். கேள்விப்பட்டி ருப்பீங்க.''

- அறிமுகத்தோடு பீடிகை போட்டார்.

''என்ன விஷயம்.. சொல்லுங்க.''

''நல்ல விஷயம்தான். தாய்ப்பாசத்தையும் தியாகத்தையும் மெயினா வெச்சு மதர் இந்தியா மாதிரி ஒரு சப்ஜெக்ட் பண்ணப் போறார். மதர் ரோலுக்கு ஒரு அசலான தாய் வேணும்னு சொல்லியிருந்தார். உங்களைவிட ஒரு பெட்டரான ஆர்ட்டிஸ்ட் கிடைப்பாங்கன்னு தோணலை. என்ன சொல்றீங்க?''

– பூர்ணசந்தர் அவளை ஒரு முழுநேர நடிகையாக ஆக்காமல் விடப்போவதில்லை என்பதுபோல் பார்க்க மீனாட்சிக்கு கொஞ்சம் சுரீர் என்றானது. சட்டென்று சொல்ல முடியவில்லை. மலங்க மலங்க பார்த்தாள்.

''என்ன யோசனை. சரின்னு சொல்லுங்க. ஆர்பிஜி ஒரு சின்சிய ரான புரொட்யூசர். இவரோட பல படங்களுக்கு ஜனாதிபதி விருது கிடைச்சிருக்கு. அநே கமா உங்க ஜோடியா ரஜினி கமல் லெவல்ல யாராவது நடிக்கலாம். என்ன ஆர்பிஜி.?''

''ஷ்யூர்.. ஷ்யூர்..''

‘‘எல்லாம் சரி... ஆனா ஆசிரமத்துல ஒருநாள் கூட இருக்க முடியாத ஒரு சூழ்நிலையை காலம் ஏற்படுத்துதேன்னுதான்...’’ - மீனாட்சி இழுத்தாள்.

‘‘புரியுது. ஆனா பாருங்க. வாய்ப்பும் வரமும் ஒண்ணுன்னு சொல்வாங்க. எத்தனை ஆயிரம் பேர் ஒரு ஓரத்துல நின்னு முகம் காட்டற வாய்ப்பாவது கிடைச்சாதான்னு துடிச்சுகிட்டிருக்காங்க தெரியுமா?’’

‘‘அவங்கள்ள நல்ல நடிகைகள் யாரும் இல்லையா – என்ன?’’

‘‘நிச்சயமா இல்லேன்னுதான் சொல்வேன். உங்க முகஅமைப்பும் பாவனைகளும்தான் இங்க ரொம்ப முக்கியம். சரின்னு சொல்லுங்க. ஆசிரமத்துல ஓடியாடி வேலை செஞ்சுதான் சேவை செய்யணும் னு இல்ல. ஆயிரம் லட்சம்னு கொடுத்தும் சேவை பண்ணலாம். அதோட உங்களுக்கு புகழ் சேரச் சேர ஆசிரமமும் ஒரு நல்ல பார்வைக்கு உள்ளாகும். நிறைய டொனேஷன்ஸ் சுலபமா வசூலாகும்...’’

- பூர்ணசந்தர் நைச்சியமாக பேசி மீனாட்சியிடம் சம்மதத்தையும் வாங்கிவிட்டார். ஆர்பிஜி–யும் ஒரு ஐம்பதாயிரத்தை அங்கேயே டோக்கன் அட்வான்ஸாகக் கொடுத்துவிட்டுத்தான் கிளம்பினார்.

புத்தம்புது சலவை நோட்டுக்கட்டு...

கையில் கனத்த அது சட்டென்று அரவிந்தனை ஞாபகத்தில் பிடித்து இழுத்தது. ரஞ்சனியும் அவனை விலக்கிக்கொண்டு முகம் காட்டினாள். வீடு வீடு என்று பறந்தபடி இருக்கும் அவளிடம் இது போய்ச் சேர்ந்தால் அவளுக்கு எவ்வளவு பெரிய உதவியாக இருக்கும்?

நினைக்கும்போதே இதமாக இருந்தது. நடுவில் கத்திரித்தான் காஸ்ட்யூமர்.

‘‘மேடம், கொஞ்சம் கையை நீட்டுங்க..’’ என்றான். நீட்டினாள். ஒரு நீலக்கல் மோதிரத்தை போட்டுவிட்டான்.

‘‘உங்க கேரக்டர் பிராப்பர்ட்டி மேடம். இனி எப்ப இந்த கேரக்டர் பண்ணும் போதும் மறக்காம இதை போட்டுக்குவீங்களாம். அசிஸ்டென்ட் வசந்தன் சொன்னார்’’ என்றபடி விலகிச் சென்றான். அந்த மோதிரம் அடுத்த நொடி நிர்மலாவைத்தான் அவளுக்குள் ஞாபகமூட்டியது.

அவளைப் பார்க்க விரும்பி தனது விரல் மோதிரத்தை கழற்றி அங்கேயே விட்டுவிட்டு வந்தது எல்லாம் நினைவில் ஒரு முண்டு முண்டியது.

‘நிர்மலா... நீ இப்ப எப்படி இருக்கே?’ கவலையோடு கேள்வியும் எழும்பி அவளுக்குள் என்னென்னவோ செய்தது.

அப்போது மீண்டும் இடையிட்டார் பூர்ணசந்தர்.

‘‘மீனாட்சிம்மா... இரண்டு டைட் க்ளோஸ் – அப் எடுத்துகிட்டா இன்னிக்கு உங்க வேலை முடிஞ்சிடும். வரீங்களா?’’ – அழைத்தார். மீனாட்சியும் ஷணத்தில் மனதுக்குள் முகம் காட்டிய அரவிந்தன், ரஞ்சனி, நிர்மலாக்களை மறந்தவளாக அவள் நடிக்கும் பாத்திரமான பெரியநாயகியாக மாறி ஒரு சின்ன டச்சுப்புடன் கேமரா முன் போய் நின்றாள்.

''அம்மா உங்களுக் குள்ற இப்ப கலக்கம்! அதிர்ச்சியான சேதி ஒண்ணைக் கேட்டு கலங்கிப் போயிருக்கீங்க. அதாவது உங்க பேத்தியை யாரோ கடத்தி கிட்டு போய் பணம் கேக்கறதா ஒரு தகவல் வந்துருக்கு. அப்ப உங்க மனநிலை எப்படி இருக்கும்கறதை இப்ப எக்ஸ் போஸ் பண்ணி காட்றோம். ஓகே..?''

– பூர்ணசந்தர் பதமாய் காட்சி விளக்கம்தர மீனாட்சியும் அழகாய் உள்வாங்கிக் கொண்டு அந்த நொடியில் மாலதியின் மகள் கார்த்திகாவே காணாமல் போய்விட்டது போல நினைக்க அவளையும் மீறிக்கொண்டு கண்கள் கலங்க, கன்னக் கதுப்புகளும் விடுவிடு வென்று துடித்தன!

அதைப் பார்த்த பூர்ணசந்தரும் ''எக்ஸலன்ட்! ஒண்டர் ஃபுல்! நோ மானிடர். டைரக்டா ஷாட்டுக்கு போறோம்..'' என்ற படியே கேமராமேனை பார்க்க, அசிஸ்டென்டும் கிளாப் போர்டை மீனாட்சிமுன் நீட்டியபடி நிற்க...

''ரெடி.. ஸ்டார்ட்... ஆக்ஷன்!'' என்கிற குரல்கள் ஒலித்து கேமரா ஒரு ஜூமில் மீனாட்சியின் இல்லையில்லை பெரியநாயகியின் முகத்தை க்ளோஸ் அப்பில் அப்படியே லபக்கிக்கொள்ளத் தொடங்கியது.

முப்பது நொடி நீடித்த அந்த காட்சியின் முடிவில் 'கட்' என்கிற குரலும் 'அம்மா நீங்க கிளம்பலாம்' என்கிற பதிலும் ஒருசேர வந்தது.

மீனாட்சி அடுத்தநொடியே பார்க்க நினைத்தது நிர்மலா வைத்தான்!

பத்து நிமிடத்தில் புரொடக்ஷன் யூனிட்டின் காரில் ஏறிய வளை டிரைவரும் அழைத்துக்கொண்டு பறந்தான்.

அந்த பங்களாவின் மெயின் கேட்டை அவளது கார் கடந்து இடதுபக்கமாய் திரும்பிய நொடி, வலது பக்கத்தில் ஒரு சுமோ உள்ளே நுழைய ஆரம்பித்தது.

அதன் முன்சீட்டில் அமர்க்களமாய் புகையை கக்கியபடி மூர்த்தி!



ஷூட்டிங் ஸ்பாட்டில் எல்லோரும் பரபரப்பாக இருந்தார்கள். ஜெனரேட்டர் வேன் செருமலோடு ஓடிக்கொண்டிருக்க அங்கும் இங்குமாய் லைட்மேன்கள் இடம் மாறிக்கொண்டிருந்தனர்.

பங்களா முகப்பில் போர்ட்டிகோவை ஒட்டி நாற்காலிகள். அதில் ஒன்றில் பூர்ணசுந்தர் அமர்ந்து அடுத்த காட்சிக்கான வசனத்தை பார்த்துக் கொண்டிருந்தார்.

''வணக்கம் சார்!'' – என்ற குரல் கேட்டு நிமிர்ந்தார். எதிரில் ஒட்டவைத்துக் கொண்டது போன்ற ஒரு புன்னகையுடன் மூர்த்தி. பார்த்தமாத்திரத்தில் தெரிந்துவிட்டது. நெடுநாட்களாக ஃபீல்டில் இருப்பவர்களுக்கு அவன் எப்படிப்பட்டவன் என்பதும் தெரியும். பூர்ணசந்தருக்கும் தெரிந்திருந்ததால் 'இவன் எங்கே இங்கே?' என்கிற மாதிரி பார்த்தார்.

''என்ன சார் பாக்கறீங்க... நல்லாருக்கீங்களா?'' – கேட்டபடி படுசவுஜன்யமாக அருகில் கிடந்த நாற்காலியில் அமர்ந்தான் மூர்த்தி. பூர்ணசந்தர் நெற்றியில் வரிகள் விழ வெறித்தார்.

''என்ன சார் எதுவுமே பேசமாட்டேங்கறீங்க. என்னை தெரியலியா?''

''ஏன் தெரியாம... என்ன விஷயம்?''

''பாத்துட்டுப்போலாம்னு வந்தேன். அம்மா இருக்காங்கல்ல..?''

''எந்த அம்மா?''

''என்ன சார்... தெரியாத மாதிரி கேக்கறீங்களே?'' - மூர்த்தி சிரித்தபடியே மடக்கினான்.

''என்னப்பா நீ... நீபாட்டும் வந்து அம்மா இருக்காங்களான்னா என்ன அர்த்தம்? எங்கம்மா செத்துப்போய் பல வருஷம் ஆச்சு.. எனக்கே இப்ப அறுபது வயசுக்கு மேல... தெரியும்ல?''

– பூர்ணசந்தரும் பிடி கொடுக்கவில்லை. மூர்த்திக்குள் படுசன்னமாய் ஒரு குமைச்சல் இருந்தும் அடக்கிக்கொண்டான்.

''பரவால்ல சார்.. ஜாலியாவே பேசறீங்க. நான் அம்மான்னு சொன்னது உங்கம்மாவை இல்ல. அவங்களுக்கு நடிக்கத் தெரியாதே. நான் சொன்னது உங்க புதிய கண்டுபிடிப்பை! எப்படி சார் இந்த வயசுல அவங்கள பிடிச்சீங்க... அதுவும் சினிமா டிராமானாலே வேப்பங்காயா நினைச்சிகிட்டிருந்தவங்களை மடக்கி டி.வி., சினிமான்னு ஒரே தூக்கா தூக்கிட்டீங்களே. பெரிய ஆள் சார் நீங்க.. ஆர்.பி.ஜி. கூட அட்வான்ஸ் தந்துட்டார்னு கேள்விப்பட்டேன்..''

– மூர்த்தி மேல்சட்டை பட்டனை புழுக்கத்திற்காக திறந்துவிட்டபடியே ஒரு கரன்ட் நியூஸோடு எகத்தாளமாக பேசியது பூர்ணசந்தரை நெருடியது.

வசன பேப்பரின் மேல் கண்களை கொண்டு சென்றவர் அதை மூடியபடியே.

''இப்ப உனக்கு என்ன வேணும்?'' – என்றார் அழுத்தமாக. அதில் ஆத்திரமும் தொனித்தது.

''அம்மாவை பாக்கணும். ஆதி சார் அனுப்பி வந்துருக்கேன்...''

''இங்க இல்ல இப்ப அவங்க. அப்புறம்?''

''இங்கதான் ஷூட்டிங்ல இருக்கறதா தகவல் கிடைச்சு தானே வந்துருக்கேன்?''

''இல்லைன்னா சரின்னு கிளம்பணும். என் முன்னால என் அனுமதியில்லாம நீ உக்காந்ததே முதல்ல தப்பு... இதுல எகத்தாளமா கேள்வியெல்லாம் கேட்கறது அதைவிட பெரியதப்பு. நான் யார்னு தெரியும்தானே?''

– பூர்ணசந்தர் அழுத்தமாய் உசந்த முகபாவங்களுடன் ஏற்ற இறக்கமுடன் பேசவும் மூர்த்தி பதிலுக்கு அவரை வெறித்தான். பூர்ணசந்தர் அவனை சட்டை செய்யாமல் ''யாருப்பா அங்க?'' என்று நிமிர்ந்து ஒரு குரல் கொடுத்தார் அசிஸ்ட்டென்டுகள் ஓடிவந்தனர்.

''இவர் என்னவோ கேக்கறார் பார்.. பதில் சொல்லி முதல்ல அனுப்புங்க. நான் சீன் பேப்பர் படிக்கும்போது யாரும் தொந்தரவு பண்ணக்கூடாதுங்கறது தெரியும்தானே?'' – கத்தினார். அடுத்த நொடி அசிஸ்டென்டுகள் மூர்த்தியை பார்த்தனர். பார்வையில் கோபம்.

மூர்த்தி கோபத்தோடு எழுந்தான்.

அங்கிருந்து விலகப்பார்த்த பூர்ணசந்தரை 'ஒரு நிமிஷம் சார்..' என்று தடுத்தவன் ''சார் நானும் இப்ப ஒரு புரொட் யூசர். அதை தெரிஞ்சுக்குங்க. நாளைக்கு என் தயவெல்லாம் தேவைப்படும். அதை மறந்துடாதீங்க. காலம்பூரா அஞ்சு பத்து சம்பளம் வாங்கி நீங்க ஆட்டிவைக்கறபடியெல்லாம் ஆட்ற புரொடக்ஷன் மேனேஜர் மூர்த்தியாவே நான் இப்பவும் இருக்கறதா நினைச்சிருந்தா அதை மாத்திக்குங்க. வரேன்..''

– பொரிந்து தள்ளிவிட்டு வேகமாக புறப்பட்டான். பூர்ணசந்தருக்கு அதிர்ச்சி. அதே சமயம் மீனாட்சியை எதற்காக இவன் தேடி வந்தான் என்கிற குழப்பமும்...

அவனோ புயல்போல திரும்பிக் கொண்டிருந்தான்!



**அ**ந்த ஓவல் வடிவ எவர்சில்வர் தட்டில் சாப்பாடு காய்ந்துவிட்டிருந்தது. சில ஈக்கள் பறந்து கொண்டிருந்தன. ஒரு ஓரமாக குத்துக்காலிட்டு அந்த சாப்பாட்டை ஏறெடுத்தும் பார்க்காதவளாக அமர்ந்திருந்தாள் நிர்மலா. எட்டிப்பார்த்த மாமியாருக்கு பற்றிக்கொண்டு வந்தது.

ஆத்திரப்பெருமூச்சுடன் வந்து நின்றாள். நிர்மலா நிமிர்ந்தாள்.

''ஏண்டி உனக்கு எவ்வளவு அடிபட்டாலும் புத்தி வராதா.. இப்படி சாப்பிடாம உக்காந்துருக்கியே அவன்கிட்ட சொல்லவா?''

– பற்களை நறநறத்தபடி அவள் கேட்ட விதமே என்னவோ போல இருந்தது. நிர்மலா மிரட்சியோடு பார்த்தாள்.

''பாக்காதடி அப்படி... உன்னை கொன்னு புதைச்சாலும் கேக்க நாதி கிடையாது. தெரியும்ல உனக்கு?''

‘‘..........’’

‘‘இப்படியே அழுது அடம்பிடிச்செல்லாம் ரொம்பநாளைக்கு காலந்தள்ள முடியாது.. அவன் பேச்சக்கேட்டு ஒரு பிள்ளையை பெத்துக்குடுத் தேன்னா காலத்துக்கும் ராணிமாதிரி இருக்க லாங்கறது ஏண்டி உனக்கு புரியமாட்டேங்குது?’’

‘‘இல்ல... மாட்டேன்.. அப்படி ஒரு வாழ்க்கையே எனக்கு வேண்டாம். இப்பவும் சொல்றேன். என்னக் கொன்னுடுங்க. அதுக்கு நான் சம்மதிக்கறேன். ஆனா, உங்க ஈனத்தனமான திட்டத்துக்கு ஒரு நாளும் சம்மதிக்கமாட்டேன்.’’

‘‘எது ஈனத்தனமான எண்ணம்? இன்னிக்கு எத்தனபேர் என்பையன் சொல்ற மாதிரி பிள்ளை பெத்துகிட்டு இருக்காங்க தெரியுமா? காதுங்காதும் வச்சமாதிரி எவ்வளவோ நடக்குதுடி உலகத்துல...’’

‘‘பேசாதீங்க... தயவு செய்து வெளிய போங்க. உங்க வயித்துலகூடதான் ஒரு புழுபூச்சி உருவாகலை. என் மாமனார் அதுக்காக உங்களை தப்பாவா நடந்துக்கச் சொன்னார்?’’

‘‘அவரைப்பத்தி உனக்கு என்னடி தெரியும்? இரண்டாந்தாரமா அவருக்கு நான் வாக்கப்பட்டு சீரழிஞ்சது உனக்கு தெரியாதுடி. மனுஷன் இருந்துதான் கெடுத்தான்னா தன் விருப்பத்துக்கு ஒரு உயில் எழுதிவச்சுட்டு செத்தும் கெடுத்துட்டான். அதான் இன்னிக்கு உன்கிட்ட மாரடிக்கேன்..’’

‘‘என் மாமனார் புத்திசாலி. உங்களைப் பத்தி எல்லாம் அவருக்கு தெரிஞ்சிருக்கு. அதான் அப் படி எழுதி வச்சிருக்கார். இல்லேன்னா இந்த சொத்தை எல்லாம் எப்பவோ விழுங்கி ஏப்பம் விட்ருப்பீங்க. அவர் உங்க புருஷன். அவரைப் பத்தி என்கிட்டயே தப்பா பேசாதீங்க. கேக்கவே நாராசமா இருக்கு..’’

‘‘சரி.. இனி உன்கிட்ட பேசறதுல பிரயோஜனம் இல்ல. ஒண்ணு தெரிஞ்சுக்கோ. ஒரு ஆம்பளை எதை வேணா ஒத்துப்பான். ஆனா தனக்கு ஆண்மை இல்லேன்னு ஒரு பொண்ணு சொல்றதை எந்த நாளும் அனுமதிக் கமாட்டான். நந்தாவும் அப்படித்தான். நீ இங்க பட்டினி கிடந்தே சாகு. உன்னை கொல்ற வேலையாவது மிச்சமாகும். அப்பாடான்னு அள்ளி எறிஞ்சுட்டுப் போறோம். நீ இல்லேனா நாட்ல பொண்ணுங்களே கிடைச்சாமலா போயிடுவாங்க? காசுக் காக எதையும் செய்ற எவ்வளவோ பேர் இருக்காங்க. அவங்களை வச்சு வாழ்ந்துக்க நந்தாவுக்கு தெரியும். துளிகூட கவுரவ பங்கம் இல்லாம வாழ அவனுக்குத் தெரியும். ஞாபகம் வச்சுக்கோ’’

– பதிலோடு காய்ந்துவிட்ட அந்த சோற்றுத் தட்டோடு அவள் அங்கிருந்து விலக ஆரம்பித்தாள்.

நிர்மலாவுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. பல பெண்களுக்கு அந்த பிரம்மா விதியை மூர்க்கமாக இருக்கும்போது எழுதிவிடுகிறான் என்று தோன்றியது. அப்படியே அந்த துக்கம் ஒரு ஆத்திரமாக மாறி மீனாட்சியின்மேல் போய்நின்றது. மீனாட்சியை ஞாபகிப்பதுபோல அந்த அடப்பமான அறையிலும் ஒரு மீனாட்சி படம்!

இந்த வீட்டில் உனக்கெல்லாம் என்ன வேலை என்கிற மாதிரி பார்த்தவள் தடுமாறிக் கொண்டு எழுந்தாள். பக்கத்திலேயே அவளுக்கு தண்ணீர் ஊற்றி வைத்திருந்த செம்பு இருந்தது. அதை எடுத்தவள் ஆவேசமாக அந்த படத்தின் மேல் வீசி எறிந்தாள். படத்தின்

கண்ணாடியை சில்லு சில்லாக்கியது செம்பு. அந்த சில்லுகள் அவளுக்குள் ஒரு புதிய எண்ணத்தை உருவாக்கின!

**கா**ருக்குள் மவுனமாய் மீனாட்சி அமர்ந்திருக்க கார் விரைந்து கொண்டிருந்தது. மீனாட்சி கண்களை மூடி பிரார்த்தனையில் இருந்தாள். அப்பா சொன்னதுபோல ஆத்மார்த்தமான பிரார்த்தனைகள் அற்புதமாக வேலைசெய்கின்றன. அதை நிர்மலா விஷ யத்தில் ஒருமுறை அப்பட்டமாக உணர்ந்தாயிற்று.

'இந்த முறையும் அது கைகொடுக்க வேண்டும். அந்தப் பெண்ணுக்கு உண்மையில் ஏதாவது பிரச்னை என்றால் அது தெரியவந்து உதவிக்கு தயாராகிவிட வேண்டும். ஆசிரமத்தில் அவளை காட்டிக் கொடுத்த தவறு அப்போது தான் சரியாகும். கடவுளே இந்தமுறை அவளை எப்ப டியாவது கண்ணில் காட்டு. அவள் சவுக்யத்துக்கு வழி காட்டு. குற்ற உணர்ச்சியோடு என்னை வாழவைத் துவிடாதே..!'

– மீனாட்சிக்குள் எண்ணங்கள் நீரோட்டம் போல ஓடிக்கொண்டிருக்க, கையிரண்டும் கோர்த்துக் கொண்டு அவள் பிரார்த்தித்துக் கொண்டிருப்பதை சொல்லாமல் சொல்லிற்று. டிரைவர்கூட முன் கண்ணாடி வழியாக அதை ஆச்சரிய மாகப் பார்த்தான்.

கார் நந்தகோபாலின் பங்களா இருக்கும் சாலை நோக்கி ஓடியது.

''மேடம்...'' – அவன் அழைத்தான். மளுக்கென்று கண்களை திறந்தாள்.

''ஒரு முக்கியமான விசயம் மேடம்.''

''என்ன..?''

''நம்ம சீரியில்ல நடிக்கற ராம் குமார்ங்கற ஒரு மெயின் ஆர்ட்டிஸ்ட் வீடு போற வழியிலதான் இருக்கு. அவர் மேக்கப்போட ரெடி யா இருப்பார். உங்களை ட்ராப் பண்ணிட்டு அப்படியே அவரை பிக்அப் பண்ணிகிட்டு வரச்சொல்லி மேனேஜர் சொன்னாரு. வரும்போது ஒன்வே மேடம். சுத்திகிட்டுதான் வரணும். அதனால போகும்போதே பிக்அப் பண்ணிக்கட்டுங்களா?''

''தாராளமா.. இதுக்கு என்னை கேக்கணுமா நீ...''

''தேங்க்யூ மேடம். சில ஆர்ட் டிஸ்ட்டுங்க அதை விரும்பமாட்டாங்க. அதான் மேடம் கேட் டேன்..''

''இதுல என்ன இருக்கு... எது சவுகர்யமோ அதை செய்யறதுதானே புத்திசாலித்தனம்.''

''ரொம்ப பெரியமனசு மேடம் உங்களுக்கு. ஆனா, ஒரு சீன்ல தலைகாட்றதுக்கு முந்தி சிலர் படுத்தறபாடு இருக்குதே...''

– டிரைவர் ராகத்தோடு இழுக்க கார் ராம்குமாரின் வீடுநோக்கி திரும் பியது.

அவர் போலீஸ் டி.ஐ.ஜி. மேக் அப்பில் ரெடியாக இருந்தார். கார் வரவும் முன்பக்கமாக ஏறி அமர்ந்தார். பின்னால் திரும்பிப் பார்த்து மிகப்பணிவாக ''நமஸ் காரம்மா..'' என்றார்.

‘‘நமஸ்காரம்... வீட்லயே மேக்கப் போட்டுக்குவீங்களோ?’’

‘‘ஆமாம்மா. த்ருஅவுட் த சீரியில்ல டி.ஐ.ஜி-யா யூனிஃபார்மோடயே வரேன். இந்த வேஷம்னா இந்த ஃபீல்டுல என்னைத்தான் கூப்பிடுவாங்க. இதுக்காக ஒரு டிரஸ்ஸே தச்சு ரெடியா வச்சிருக்கேன். கம்பெனி காஸ்ட் யூம்னா பெரும்பாலும் வாடகைக்கு வாங்கறதா இருக்கும். எனக்கு அது பிடிக்காது. நான் இப்படி இருக்கறதால புரொடியூசர்களுக்கு என்னைக் கண்டா ரொம்ப பிடிக்கும். ஏன்னா அவங்க செலவை குறைக்கறேன் பாருங்க...’’

– மீனாட்சி அதை கேட்டு சிரித்தாள். கார் நந்தகோபால் பங்களா இருக்கும் சாலையில் பிரவேசித்திருந்தது.

‘‘உங்க பெர்ஃபாமன்ஸ் பத்தி கேள்விப்பட்டேன். டேக்கே வாங்காம தூள் கிளப்பறீங்களாம்மா. ரொம்ப சந்தோஷமா இருந்தது. ஒரு பெரிய ரவுண்ட் வருவீங்க நிச்சயமா. எனக்கு கொஞ்சம் சிபாரிசு பண்ணணும்மா. குறைஞ்சபட்சம் டி.ஐ.ஜி-ல இருந்து ஐ.ஜி-யாவாவது ப்ரமோஷன் கிடைக்கணும். கொல்றாங்க.’’

ராம்குமார் மிக நைச்சியமாக பேசி ரசனை ததும்ப சலித்தும் கொண்டார். மீனாட்சி அதை ரசித்தாள். அதே சமயம் காரும் நந்தகோபாலின் பங்களா முகப்பில் நின்றது. மீனாட்சியை சட்டென்று டென்ஷன் தொற்றிக்கொண்டது.

முன்சீட்டில் டி.ஐ.ஜி. மேக்கப்பில் இருக்கும் ராம்குமார்தான் வாட்ச் மேனுக்கு பளிச்சென்று தெரிந்தான்.

அலறி அடித்துக்கொண்டு திரும்பி பங்களா நோக்கி ஓடினான்.

‘‘மேடம் இதான் உங்க பங்களாவா... வாட்ச்மேன் ஏன் அப்படி ஓட்றான்?’’ – ராம்குமார் கேட்க மீனாட்சி புத்தி வேகமாக வேலை செய்தது.

‘‘இது இது... எனக்கு தெரிஞ்சவங்க பங்களா. வாங்களேன் ஒரு காபி சாப்ட்டுட்டு போகலாம்’’ – காரைவிட்டு இறங்கினாள்.

மிடுக்காக இருவரும் நடந்து மெயின் கேட் அருகே சென்றனர்.

‘‘அம்மா போலீஸ் வந்துடுச்சும்மா.. இனியும் என்னால இங்க வேலைல இருக்க முடியாதும்மா. பாப்பா எப்படியோ போன் பண்ணிடிச்சாட்டம் இருக்குது. பெரிய அதிகாரியே வந்துருக்காரு. நல்லா மாட்டிகிட்டோம்மா..’’

– வாட்ச்மேன் போர்டிகோ கதவருகே நின்று புலம்புவது காதில் விழுந்தது. மீனாட்சி பரபரப்பானாள். ராம்குமார் புரியாமல் மீனாட்சியைப் பார்க்க..

‘‘தம்பி, நீங்க டிஐஜியாவே நடிங்க. நடிகர்ங்கறது தெரியவேண்டாம். மத்த விஷயங்களை நான் உங்களுக்கு அப்புறமா சொல்றேன். ப்ளீஸ்..!’’

– கெஞ்சினாள் மீனாட்சி. ராம்குமார் விழிக்க வாட்ச்மேன் ஓடிப்போய் பின்பக்க சுவர் எட்டி குதித்தான். மீனாட்சி தாமதிக்காமல் நடந்தாள். பங்களா வாசலில் போய் நின்றபோது ஒரு கணம் மூச்சே நின்று விட்டது!

உள்ளே...



போர்டிகோவை கடந்து உள்ளே செல்லும் பங்களாவின் முகப்பு வாசல் அருகே ரத்த சகதியாக நிர்மலா விழுந்து கிடந்தாள். அருகிலேயே கைகளைப் பிசைந்தபடி அவளது மாமியார்.

ராம்குமாரையும் மீனாட்சியையும் பார்த்தவள் உதறலோடு பேச ஆரம்பித்தாள்.

''சார்.. இவ.. இவ தற்கொலை பண்ணிக்கப் பார்த்தா. அதான் இப்படி.. வாடி, டாக்டர்கிட்ட போகலாம்னு கூப்பிட்டும் வர மாட்டேன்னுட்டா. மத்தபடி நான்லாம் ஒண்ணும் செய்யலை. என்னை நம்புங்க சார்...''

ராம்குமார் தலையும் புரியாமல் காலும் புரியாமல் மீனாட்சியை பார்த்தார். மீனாட்சி தனது பிரார்த்தனையின் அடுத்தகட்ட பிரமிப்பில் இருந்தாள்.



அது ராம்குமார் வடிவில் உதவிக் கொண்டு இருப்பதாகவே தோன்றியது. இந்த உதவியை அழகாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும், விடக் கூடாது என்று உள்மனதில் ஒரு தீர்மானம்.

''சார், இந்தம்மாவை முதல்ல அரெஸ்ட் பண்ணுங்க. இவங்கதான் ஏதோ பண்ணியிருக்காங்க. அதுக்கு முந்தி இந்த பெண்ணை ஆஸ்பத்திரி யில சேர்த்தணும்.

டிரைவர்ர்ர்..'' – மீனாட்சியின் அலறலைத் தொடர்ந்து டிரைவர் ஓடிவர ஆரம்பித்தான்.

அந்த கிழவியோ நொறுங்கிப் போய்விட்டாள்.

''இல்ல.. இல்ல சார். நான் எதுவும் பண்ணலை., அவளேதான் படத்தை உடைச்சு கண்ணாடியை எடுத்து வயித்துல குத்தி தற்கொலை செய்துக்கப் பார்த்தா. என் பேர்ல எந்த தப்பும் இல்ல. என் மகன்கிட்ட தலை தலையா அடிச்சுக்கிட்டேன். வேண்டாண்டா பெண்பாவம் பொல்லாதுடான்னு எவ்வளவோ சொன்னேன். அவன் கேக்கல. அவனாலதான் இவ இப்படி பண்ணிக்கிட்டா. நான் இல்ல.. நான் இல்ல..''

– அவள் புலம்பப் புலம்ப ராம் குமார் அவளை இழுத்துச் சென்று காரில் ஏற்றினார். தானும் ஏறி அமர்ந்துகொண்டார்.

மீனாட்சி நிர்மலாவை மடியில் போட்டுக்கொண்டு பின்னால் அமர கார் படுவேகமாக சீறிக்கிளம்பியது!

**வ**க்கீல் வாதிராஜ் விஸ்தாரமாக விளக்கிக் கொண்டிருந்தார். எதிரில் ரஞ்சனி.

''விடுதலைப் பத்திரம்கறது சாதாரண விஷயம் இல்லை. பாண்ட் பேப்பர்ல ரொம்ப கவனமா வார்த்தைகளை போட்டு எழுதி சாட்சிக் கையெழுத்தோட கோர்ட்ல புரொட்யூஸ் பண்ணி ரெஜிஸ்டர் பண்ணவேண்டிய ஒரு விஷயம். ஒரு தடவை விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துட்டா அப்புறம் அதுக்குதான் எப்பவும் பவர். திரும்ப மனசு மாறி அதை திருப்பி வாங்கவோ, இல்ல அந்த பத்திர ஷரத்துக்களை மாற்றவோ முடியவே முடியாது.

அப்படி ஒரு விடுதலைப் பத்திரத் துல உங்க மாமியார் யைெழுத்துப் போட்டாலும் பாதகம் உங்களுக்கு கிடையாது. சொத்துல அவங்க பங்குதான் உங்க மாமனாருக்குப் போகும். ஆனா, உங்க கணவருக்கு உரிமையுள்ள சொத்து உங்க கணவருக்குத்தான் வந்து சேரும்!''

வக்கீலின் பதில் ரஞ்சனியை கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சுவிட வைத்தது.

''ஆமா, உங்க மாமியார் விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துட்டாங்களா.. உங்களுக்கு அப்படி எதுவும் தகவல் வந்ததா..?''

''அது.. அது.. ஒருவேளை அவங்க கொடுத்தா எங்களை அது பாதிக்கு மான்னுதான் கேட்டேன்..''

''உங்க நோக்கம் உங்க மாமனாரை காப்பாத்தறதுதானே?''

''நிச்சயமா.. நிச்சயமா?''

''அப்ப அது பாதிக்கப்படும். அதேசமயம் என் பொண்டாட்டியே எனக்கும் அவளுக்கும் சம்பந்தம் இல்லைன்னு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துட்டா.. அப்புறம் அவ பசங்களுக்கு மட்டும் ஏது ரைட்ஸ்னு அவர் வக்கீல் கொஞ்சம் மோதிப் பார்க்கலாம்..''

''ஐயோ.. இப்பதான் எங்களை பாதிக்காதுன்னு சொன்னீங்க..''

''பாதிக்காது. அதேசமயம் எல்லா சொத்தும் உடனே கைக்கு வராது. அவர் தரப்பு வக்கீல் கொஞ்சம் வாய்தா வாங்கி அலைய விடலாம். அதுக்குள்ளாற உங்க வீட்டுக்காரரும் மனசு மாறி அம்மாவே சொத்து வேண்டாம்னுட்டா.. எனக்கெதுக்குன்னு அவரும் ஒதுங்கிக்கலாம்..''

''ஐயோ அப்படில்லாம்கூட நடக்குமா?''

''வாய்ப்பு இருக்குன்னு சொன்னேன்..''

''சரி.. விடுதலைப் பத்திரம் என் மாமனார் கைல கிடைக்கறதுக்குள்ள நாம அனுப்பின நோட்டீஸ் முந்திகிட்டா..?''



''நிச்சயம் அதுதான் முந்தப் போகுது. ஒரு பக்கம் சொத்தை கேட்டு நோட்டீஸ், மறுபக்கம் எந்த சம்பந்த மும் இல்லைன்னு விடுதலைப்பத்திரம்னு நீங்க குட்டையைக் குழப்பினா நான் ஒண்ணும் பண்றதுக்கில்லை. தெளிவா ஒரு முடிவா செயல்படுங்க. அவ்வளவுதான் சொல்வேன்..''

– வக்கீல் சொல்லி முடிக்கவும் கசங்கிய முகத்தோடு எழுந்து வெளியில் வந்தாள். ஆப்பை அசைத்த குரங்கைப் போலவும் உணர்ந்தாள். 'மூர்த்தி மீனாட்சி இருக்கும் இடத்தை கண்டு பிடித்திருப்பானா..? மீனாட்சி விடுதலைப் பத்திரத்தில் கையெழுத்து போட்டிருப்பாளா?' மனது கேள்விப் பந்தடித்து குழம்பியது. பேசாமல் நவஜீவன் ஆஸ்ரமத்துக்கே போய் பார்த்தால் என்ன என்றும் தோன்றியது. ஊரிலேயே இல்லை என்று பொய்யை சொல்லிவிட்டு இப்போது எதிரில் போய் நின்றால் மீனாட்சி சிரிக்க மாட்டாளா?

அந்த சிரிப்பில் எங்கேயோ அல்லவா போய் விழ வேண்டியிருக்கும்.. எவ்வளவு கேவலம்?

மனது அலைபாய கால்கள் அதுபாட்டும் நடந்து கொண்டிருந்தது.

இறுதியில் அவள் சிரிப்பதைவிட சொத்துதான் பெரிது என்று தோன்றி, உலகையே ஜெயித்துவிடும் அது அவளையும் ஜெயித்தது.

எப்போதும் கடவுளே என்றோ முருகா என்றோ முணு முணுத்திராதவள் முதல்முறையாக கடவுளே என்றாள்.

அதற்கான சந்தோஷ எதிரொலியாய் ஒரு மணியோசை எங்கிருந்தோ கேட்டது.

ஆஸ்ரமம்.

நாராயண மரத்தடியில் கிழடுகளின் மாநாடுகளை கட்டியிருந்தது.

மழை வராதது பற்றி ஒரு பிரஸ்தாபம் ஆரம்பமாகி இருக்க.. ''கலி முடியப் போறது.. அதான் இந்தக் காச்சு காச்சறது'' என்றார் ஒரு பெரியவர்.

‘‘கொஞ்ச பாவமா பண்றோம். புண்யத்தைக்கூட பாவ பரிகாரமாத்தானே செய்யறோம். எங்க இருந்து மழை வரும்..?’’

‘‘அட சும்மா இருய்யா.. இதுக்குத்தான் லைப்ரரில தினசரி பேப்பர் படிக்கணும்கறது. மழை வராததுக்கு காரணம் வாகனப் புகை. அதை தெரிஞ்சுக்கும். உம்மோட பாவ புண்ணியக் கணக்கு கிடையாது!’’

‘‘அது எப்படி?’’

‘‘அப்படித்தான். நாமெல்லாம் சைக்கிள்ளதானே எங்கேயும் போவோம். இப்பதான் எல்.கே.ஜி. பையன் மொபட்ல ஸ்கூலுக்கு போறானே. அந்த அளவு வாகனம் பெருத்துப்போய் புகை உருவாகி வானத்துல பந்தல் போட்ருச்சாம். அதான் மழை மேகத்தை கலைச்சு பாடா படுத்திகிட்டு இருக்குது. எல்லாரும் நடந்தே எங்கேயும் போறதுன்னு தீர்மானம் பண்ணிட்டா மழை வந்துடும். புரிஞ்சுக்குங்க.’’

அவர்கள் தங்களுக்கு தெரிந்ததை தெரிந்த விதத்தில் பேசிக்கொண்டிருக்க, ஒரு ஆட்டோவில் இருந்து உதிர்ந்து உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள் ரஞ்சனி.

‘எங்கம்மா வந்தே..?’ உயிரோட இருக்கேனா... இல்ல செத்துப் போயிட்டேனான்னு பார்க்கவா... என்ன விஷயம்? எப்ப வரப்போறேன்னு கேக்கவந்தியா... இல்லை வரவே வராதீங்கன்னு சொல்ல வந்தியா..? பேசு... ஏதோ இப்பவாவது நான் இருக்கற இடம் தெரிஞ்சு என்னை வந்து பார்த்தியே... சந்தோஷம்..?’

மீனாட்சி அவளை எதிர்கொண்டால் என்னவெல்லாம் பேசுவாள் என்று ஒரு சின்னக் கற்பனை அவளுக்குள். அப்படியே பார்வை சுழன்று யாரிடம் விசாரிக்கலாம் என்று பார்க்கிறது.

அவள் அதிர்ஷ்டம், தூய வெண்ணிற பைஜாமா குர்தாவில் அப்பாவே எதிரில் வந்தபடி இருந்தார்.

‘‘வணக்கம்..’’

‘‘வணக்கம்... நீங்க?’’

‘‘நான்... நான் இங்க மீனாட்சின்னு ஒருத்தர் இருக்காங்க இல்லியா..?’’

‘‘ஆமா... அவங்கள பார்க்கணுமா?’’

‘‘ஆமா... நான் அவங்க சொந்தம்.’’

‘‘சொந்தம்னா..?’’

‘‘வந்து.. மருமகள்!’’

– அப்பாவுக்கு அள்ளையில் யாரோ கிள்ளியது போல் இருந்தது.

‘‘மருமகளா... ஓ! வாங்கம்மா..’’ – அடுத்த ஷணம் சுதாரிப்புக்கு வந்து அழைத்தபடி ஆபீஸ் அறை நோக்கிச் சென்றார். உள்ளே நுழைந்த வேகத்தில் ஃபேன் ஸ்விட்சை

தட்டிவிட்டவராக எதிரில் இருக்கையை காட்டி உட்காரச் சொன்னார். ரஞ்சனி தயங்கியபடியே அமர்ந்தாள்.

''ரொம்ப சந்தோஷம்... உன் பேர் என்னம்மா?''

''ரஞ்சனி... ஆமா, அவங்க இல்லையா?''

''இல்லையேம்மா... ஷூட்டிங்குக்குப் போயிருக்காங் களே..''

''ஷூட்டிங்குக்கா..?'' – அதிர்ந்தாள் ரஞ்சனி.

''ஆமா... உங்களுக்கெல்லாம் தெரியாதோ? அவங்க இப்ப ஒரு டீ.வி சீரியல்ல மதர் ரோல் பண்றாங்க. எதிர்பாராத சந்தர்ப்பம்.''

''அப்படியா?'' – ரஞ்சனி அந்த அப்படியாவில் 'ப்'பில் ஒரு அதிகபட்ச அழுத்தம் கொடுத்துக் கேட்டாள்.

''ஆமாம்மா... ஏதோ மெகா சீரியலாம். பெரிய ரோல்தான். போகட்டும் மீனாட்சியம்மா மருமகள்னு சொன்னீங்க அவங்களுக்கு எத்தனை பசங்க..?''

''ரெண்டு பேர் சார்... என் கணவர், அவரோட அக்கா – ஆமா, என் மாமியார் எங்க குடும்ப விஷயம் எதையும் சொன்னதில்லையா?''

''இல்லம்மா... நாங்களும் வற்புறுத்தல. ஆமா நீங்கள்லாம் எங்க இருக்கீங்க... ஏன் உங்க கணவர் வரலை?''

''அவர்... அவர் வருவார்... வருவார். நாங்க அயனாவரம்கிட்ட இருக்கோம்.''

''சந்தோஷம்... மீனாட்சியம்மா ஒரு அற்புதமான கேரக்டர்... அவங்க எதனால இங்க வந்து சேர்ந்தாங்க. என்ன நடந்ததுன்னுல்லாம் கேட்டு உங்களை எம்பாரஸ் பண்ண மாட்டேன். ஆனா பாருங்க. காரணம் இல்லாம இந்த உலகத்துல எதுவுமே நடக்கறதில்ல. அவங்க இங்க வந்து சேரவும் ஏதோ ஒரு காரணம் இருக்கணும். அந்த காரணத்துக்கு நான் நன்றிதான் சொல்லணும். இல்லேன்னா இந்த ஆஸ்ரமத்துக்கு ஒரு நல்ல ஊழியர் கிடைச்சிருக்க மாட்டாங்க, இல்லியா?''

– அப்பா மிக இதமாக பேசிய விதம் ரஞ்சனியை என்னவோ செய்தது. நடுநடுவே மூர்த்தி அவளை சந்தித்தானா இல்லையா என்கிற அந்த சந்தேகமும் அவளைக் குடைந்தபடியே இருந்தது.

''இந்த வயசுல அவங்க ஒரு ஸ்டாரா மாறுவாங்கன்னு நீங்க யாரும் நினைக்கவே இல்ல..?'' – அப்பா கேட்கவும், மூர்த்தி நினைப்பில் இருந்து விடுபட்டு ''ஆமா... ஆமா... பெரிய சர்ப்ரைஸ்'' என்றாள்.

''ஒரு சினிமாவுலகூட புக் ஆகியிருக்காங்க... ஐம்பதாயிரம் ரூபாய் அட்வான்ஸ் வாங்கின கையோட எனக்கு போன் பண்ணாங்க. 'அப்பா, இந்த பணத்தை நான் கொஞ்சம் என் சுயநலத்துக்கு பயன்படுத்திக்க வா?'ன்னு கேட்டாங்க. என்னத்த நான் சொல்றது? அவங்க உழைப்பு. அவங்க பணம். என்கிட்ட எதுக்கு அனுமதி கேட்கணும்? ஆனாலும் கேட்டாங்கன்னா அதுதான் மீனாட்சியம்மா..''

– அப்பா உணர்ச்சி மிகுதியோடு ஒவ்வொன்றாக சொல்லியபடி வர ரஞ்சனிக்கு தலை சுழலாத குறை.

‘‘அவங்க... அவங்களுக்கு சினிமா, டீ.வி–ன்னாலே பிடிக்காதே... எப்படி அவங்க அந்த துறைல..?’’ – கேட்டாள்.

‘‘அதுதான் விதி. என்னிக்கு நாம நினைச்ச மாதிரி எல்லாம் நடந்துருக்கு? எது பிடிக்கலையோ அதுதான் நிறைய கிடைக்கும்... எல்லாத்தையும் நேசிக்க கத்துக் கணும். நான்கூட தயங்கினேன். ஆனா பூரணசந்தர்தான் தைரியம் கொடுத்தார். அவர் ஒரு சின்சியர் மேன். நிஜமாலுமே ஒரு படைப்புலக பிரம்மா இல்லையா? அதனால என் அபிப்ராயத்தை மாத்திக்கிட்டேன்.’’

‘‘டைரக்டர் பூர்ணசந்தரா?’’

‘‘ஆமாம்... தெரியுமில்லியா?’’

‘‘தெரியுமாவா... எவ்வளவு பெரிய மனுஷன்? அவர்... அவரா அத்தைக்கு சான்ஸ் கொடுத்தது?’’

‘‘ஆமாம்மா..’’

– ரஞ்சனி ஸ்தம்பித்தே போனாள்.

‘‘சரிம்மா... எனக்கு கொஞ்சம் வேற வேலை இருக்கு. நீங்க அவங்கள பாக்கணும்னா காத்திருங்க. எப்ப வருவாங்கன்னு சொல்ல முடியாது. நான் கிளம்பறேன்.’’

– அப்பா எழுந்து விலகப் பார்த்தார்.

‘‘ஒரு நிமிஷம்...’’ – தடுத்தாள்.

‘‘என்னம்மா?’’

‘‘அவங்க... அவங்க இங்க இருக்கும்போது என்னைப் போல வேற யாராவது அவங்களைப் பார்க்க...’’

‘‘எனக்கு தெரிஞ்சு யாரும் வரலை. நீங்கதான் முதல்ல வந்திருக்கீங்க.’’

– அப்பாவின் பதில் அவளுக்குள் ஒருவித நிம்மதியை உருவாக்க நெஞ்சைத் தழைத்து சற்றே வாயைப் பிளந்தாள்.

அதேசமயம் தொலைபேசி சப்தித்து அவரை கூப்பிட்டது.

காதைக் கொடுத்தவர் முகத்தில் பலத்த அதிர்ச்சி!



அப்பா முகத்தில் ஏற்பட்ட அதிர்வை ரஞ்சனியும் கவனித்தாள்.

அப்பாவுக்கு சிவந்த முகம். ஸ்ரீசூரணம் மேவிய நெற்றி. அதில் வரிகள் விழுந்து அப்பாவும் தொலைபேசிக்குரலுக்கு ஏற்ப ரியாக்ட் செய்வதில் நிச்சயமாக விபரீதமாய் ஏதோ இருக்கிறது என்பது புரிந்து போயிற்று.

ஒருவழியாக அப்பா ரிசீவரை வைத்தார்.

பெருமூச்சும் விட்டார்.

''மன்னிக்கணும்... போன்ல யார்? என் மாமியரா?'' – ரஞ்சனி இடையிட்டாள்.

''ஆமாம்மா. அவங்கதான்!''

''எதாவது பிரச்னையா?''

''பிரச்னைதான். ஆனா உன் மாமியாருக்கு இல்ல. இது வேற ஒரு விஷயம்.''

''போன்ல பேசியிருக்காங்களே... நான் இங்க காத்திருக்கேனே... வருவாங்களா மாட்டாங்களா?''

''ஆமாம்ல... சாரிம்மா... அவங்க இருக்கற நிலைல அவங்க இங்க வர சான்ஸ் இல்லை. என்னை கிளம்பி வரச் சொல்லியிருக்காங்க...''

''எங்க..? அவங்களுக்கு அப்படி என்ன இங்க வரமுடியாத அளவு பிரச்னை?''

‘‘ஒண்ணுமில்லம்மா… நிர்மலானு இந்த ஆஸ்ரமத்துல ஒரு பொண்ணு தங்கியிருந்தா. அவ குடும்ப வாழ்க்கைல நிறைய குழப்பங்கள். அதை தீர்க்கற முயற்சியிலதான் மீனாட்சி ஈடுபட்ருக்காங்க. விவரமா உன்கூட பேச அவகாசம் இல்லம்மா…’’

– அப்பா பதிலோடு புறப்பட துடித்தார். ரஞ்சனிக்கு குழப்பம் அதிகரித்தது.

தான் வந்திருப்பது மீனாட்சியை அந்த மூர்த்தி வந்து பார்த்து பேசினானா என்பதை தெரிந்து கொள்ளத்தான். ஆனால், காதில் விழும் தகவல்கள் எல்லாமே அதற்கு தொடர்பு இல்லாமல் அதேசமயம் ஆச்சரியமூட்டும் விதத்தில் இருக்கிறது.

மீனாட்சி இந்த நொடி ஒரு நட்சத்திரம்!

யாராவது கற்பனை செய்துபார்க்க சொல்லியிருந்தால் சிரிப்புதான் முதலில் வந்திருக்கும்.

அப்படிப்பட்ட ஒரு விஷயம்!

ஆனால் அது உண்மை. அப்படியே நிர்மலா என்று ஒரு பெண் – அவள் வாழ்க்கையில் பிரச்னை - அதை தீர்த்துவைக்கும் முயற்சி என்றெல்லாம் மீனாட்சி கிளைவிடுவதை எல்லாம் எந்தக்கணக்கில் எடுத்துக் கொள்வது..?

ரஞ்சனி குழம்பிப்போய் அப்பாவையே பார்த்துக் கொண்டிருக்க, அவர் கிளம்பிச் செல்வதில் குறியாக இருந்தார். நடுவில் இன்டர்காமில் ஸ்ரீனிவாசனை அழைத்து ‘‘சீனு நான் அந்த நிர்மலா விவகாரமா ஜி.எச் வரை போறேன். எப்ப திரும்பி வருவேன்னு தெரியாது. பிரேயர் மீட்டிங்கை நீயே நடத்திடு. அப்படியே இவங்க எங்க போகணும்னு கேட்டு நம்ம ஆட்டோவுல கொண்டுபோய் விட்டுடு. நான் கிளம்பறேன்.’’

– ரஞ்சினி விரும்பினாலும் காத்திருக்க முடியாது என்பதுபோல அமைந்த அவரது பதிலைத் தொடர்ந்து ‘‘நான் போய்க்கறேன். எனக்காக நீங்க சிரமப்பட வேண்டாம்’’ என்றாள் ரஞ்சனி.

‘‘சரிம்மா.. நான் அப்ப கிளம்பறேன். சீனு வரட்டுமா?’’ – அப்பா கேள்வியோடு ஆஸ்ரமத்து வேனை நோக்கி நடக்க.. டிரைவர் பார்த்துவிட்டு அதைக் கிளப்ப ஓடினான்.

வேன் புறப்பட்டது. அது கண்ணை விட்டு மறையவும் ஸ்ரீனிவாசன் ரஞ்சனி பக்கம் திரும்பினார்.

‘‘நீங்கோ..’’

‘‘நான் மீனாட்சியம்மாவை பாக்கவந்தேன்.’’

‘‘ஓ..! அவங்க உங்களுக்கு என்ன வேணும்?’’

‘‘மா… மாமியார்!’’

– அவளின் தயங்கிய பதில் ஸ்ரீனிவாசன் முகத்தில் ஒரு குத்து விட்டது போல அமைந்தது.

‘‘அப்படின்னா உங்க கணவர்..?’’

''மீனாட்சியம்மாவோட ஒரே மகன்..''

''ஐ ஸீ! அவங்களுக்கு உங்க வீட்டுக்காரர் மட்டும்தானா. இல்ல..?''

''ஒரு பொண்ணும் இருக்காங்க. என் வீட்டுக்காரருக்கு அக்கா. மாலதினு பேர். புதுக்கோட்டைல இருக்காங்க..''

''நீங்கள்ளாம் இருக்கும்போது அவங்க எதனால இங்க..?''

– அப்பா நாகரிகமாக தவிர்த்த அந்தக் கேள்வியை ஸ்ரீனிவாசன் கேட்டே விட்டார்.

''அது.. ஒண்ணுமில்லை, ஒரு சின்ன வருத்தம். அவ்ளோதான்.'' – அவளும் புடவை முந்தியை இழுத்து கையில் பிடித்துக்கொண்டு கிளம்புகிறேனே என்கிற மாதிரி அகலக்கால் எடுத்தாள்.

ஸ்ரீனிவாசனுக்கும் புரிந்தது. இணக்கமான முகபாவத்துடன் 'சரி நீங்கள் புறப்படலாம்' என்கிற மாதிரி பார்க்க... அவளும் அந்த அறையைவிட்டு வெளியேற கால் எடுத்தபோது வெளியே வாசலில் ஒரு காரின் அசுரத் தேக்கம்.

உள்ளிருந்து பாய்ச்சலாய் மூர்த்திதான் இறங்கினான். கையில் கனன்ற சிகரட். திபுதிபுவென்று திமிராய் மாறாத அதே நடை.

அப்படியே ஸ்ரீனிவாசன் இருக்கும் அறைக்குள் நுழைய, அவனுக்கு வழிவிட்டவளாய் ரஞ்சனியும் ஒதுங்க...

''யார் நீங்க... உங்களுக்கு என்ன வேணும்?'' – ஸ்ரீனிவாசன் அவனை விசாரிக்க ஆரம்பித்தார்.

''என்பேர் மூர்த்தி. இங்க மீனாட்சியம்மான்னு ஒருத்தர் தங்கியிருக்காங்களே.. அவங்கள பார்க்க வந்துருக்கேன்...''

– அவன் பதில் சில அடிகள் வெளியே போய்விட்ட ரஞ்சனியை அப்படியே ஜடையைப் பிடித்து இழுக்கிறமாதிரி இழுத்தது. திரும்பினாள்.

''அவங்க இப்ப இங்க இல்லை. ப்ளீஸ் முதல்ல அந்த சிகரட்டை கொஞ்சம் வெளிய எறியறீங்களா?''

– ஸ்ரீனிவாசன் பதிலோடு மூர்த்தியை பார்த்து மெலிதாக கோபப்பட.. அவனும் சிகரட்டை ஸ்டைலாக சுழற்றி எறிந்தவனாக,

''இங்க இல்லேன்னா எங்க போயிருக்காங்க..?'' – என்ற அடுத்த கேள்விக்கு சென்றான்.

''எதுக்கு கேக்கறீங்க?'

''ரொம்ப பர்சனலான ஒரு விஷயம் பேசணும்.''

''நீங்க யார்னு சொல்லலையே''

''நான்.. அவங்க கணவரோட பி.ஏ.ன்னு வெச்சுக்குங்களேன்.''

''அப்படியா...''

''ஆமாம்.. அவங்க ஷூட்டிங் ஸ்பாட்லையும் இல்ல. இங்கேயும் இல்லேன்னா என்ன அர்த்தம்?''

''மன்னிக்கணும். இங்க இல்லேன்னா இல்லேன்னு தானே சொல்ல முடியும் எங்களால? என்ன விஷயம்னு சொல்லுங்க. அவங்க போன் பண்ணா நீங்க வந்துட்டு போனதா சொல்றேன்.''

''உங்க கிட்டல்லாம் சொல்ற அளவுக்கு சின்ன விஷயமில்ல. இது சொத்துப் பிரச்னை! ஓ.கே. நான் ராத்திரி போன் பண்றேன். வந்துட்டா நேர்ல வந்து பாக்கறேன்.''

– படபடவென்ற பதிலோடு திரும்பி காரில் ஏறி மறைந்தே போனான்.

ரஞ்சனி முகத்தில் இனம்புரியாத பரவசம்.

'நல்லவேளை... இந்த மூர்த்தி இன்னும் விடுதலைப் பத்திரம் பற்றி எல்லாம் இங்கே ஆரம்பிக்கவேயில்லை. இவனுக்கும் முன் நாம் முந்திக்கொள்ளலாம். இல்லாவிட்டால் அரவிந்தனின் நோட்டீஸ் முந்திக்கொள்ளும். அதற்கு பிறகு வருவதை அந்தந்த நொடிக்கு ஏற்ப தீர்மானித்துக்கொள்ளலாம். இப்போதைக்கு எந்த ஆபத்தும் இல்லை!'

– நினைப்போடு வேகமாக நடந்தாள்.

ஜி.எச்.!



இன்டென்சிவ்கேர் அறை முன் மீனாட்சியும், ராம்குமாரும் அமர்ந்திருந்தனர்.

அப்பா வரவும் மீனாட்சி எழுந்து நின்றாள்.

''என்னம்மா... என்ன பிரச்னை?''

–அவர் கேள்வியோடு பக்கத்தில் அமர்ந்தார்.

''நிர்மலாவுக்கு ஆபரேஷன் நடந்துகிட்டு இருக்குப்பா. தற்கொலைங்கற எல்லைக்கே போய்ட்டா. ஆனா, நீங்க சொன்னமாதிரி நம்ம பிரார்த்தனையோட பலம் கடைசி நொடில அவளை காப்பாத்திடுச்சு. கடவுள் இந்த ராம்குமார்ங்கற நடிகர் ரூபத்துல வந்து உதவி செய்துட்டார்..''

– ராம்குமாரை நோக்கி கைகள் நீண்டன.

''அப்படியா... விவரமா சொல்லுங்க...'' – அவர் கேட்க அவளும் ஆதி அந்தம் நடந்ததைச் சொல்லி முடித்தாள்.

‘‘ஓ... அப்ப நீங்க நிஜ டி.ஐ.ஜி. இல்லையா. நான் டி.ஐ.ஜின்னே நினைச்சுட்டேன்.’’

– பரவசத்தோடு அப்பா ராம்குமாரின் கைகளைப் பிடித்துக்கொண்டார். ராம்குமாரும் பதிலுக்கு சிரித்து கைகுலுக்கினார்.

‘‘ஆமா.. இப்ப நிர்மலா மாமியார், அவ புருஷன்லாம் எங்க?’’

‘‘மாமியார் போலீஸ் விசாரணைல இருக்காங்க. நந்தகோபால் ஆள் எங்கேன்னே தெரியல. அவனைப் பிடிக்க போலீஸும் நாலா பக்கமும் அலைறதா டி.எஸ்.பி. அகிலாண்டேஸ்வரி சொன்னாங்க.’’

‘‘அப்ப விவகாரத்தை நிஜமாலுமே போலீஸுக்கு கொண்டு போயிட்டீங்களா?’’

‘‘அப்பவே... இல்லேன்னா நிர்மலாவை இங்க அட்மிட் பண்ணி சிகிச்சை கொடுக்க முடியாதே?’’

‘‘எங்களோட சமயோஜிதத்தை போலீஸ்ல கண்டிப்பாங்களோனு ஒரு பயம் இருந்தது. ஆனா பாராட்டதான் செய்தாங்க... மகளிர் போலீஸ்னு ஒரு அமைப்பு இருக்கறதால இன்னிக்கு எவ்வளவு ஃபார்மாலிடீஸை வேகமா செய்ய முடிஞ்சது தெரியுமா?’’

‘‘நிர்மலா உயிருக்கு ஆபத்து ஒண்ணுமில்லையே...’’

‘‘இல்ல.. அபாய கட்டத்தை கடந்துட்டா. முதல்கட்ட வாக்கு மூலமும் கொடுத்துட்டா. அதை கேட்டா உங்க நெஞ்சே நடுங்கும்..’’

‘‘அப்படியா.. அவ்வளவு மோசமான விவகாரமா?’’

‘‘ஆமாம்... நிர்மலா புருஷன் நந்தகோபாலுக்கு சின்ன வயசி லிருந்தே மோசமான நடத்தை. காலேஜ் படிக்கும்போதே போதைக்கு அடிமையானவன். அதனால அவங்க அப்பாவுக்கு ரொம்ப கவலை. கல்யாணம்னு ஒண்ணு ஆகி குழந்தை குட்டின்னு அவன் பொறுப்பா வாழ்ந்தாதான் சொத்து அவனுக்கு பயன்படும்கற மாதிரி ஒரு ஏற்பாட்டை செய்துட்டார். அதாவது, தன் சொத்தை தனக்கு பிறகு தன் பேரனுக்கும் வம்சாவளிக்கும்னு எழுதிட்டார். அவ்வளவும் அவரோட சுயசம்பாத்யம்.

ஆனா, அவனோ ஆண்மை இல்லாமல்போய் கல்யாண வாழ்க்கைக்கே தகுதியில்லாதவனா ஆயிட்டான். தனக்கு ஆண்மை இல்லைங்கறத ரகசியமா வச்சிருந்தவன் நிர்மலாவைக்கூட திட்டம் போட்டுதான் கல்யாணம் பண்ணியிருக்கான். ஆரம்பத்துல அவன் பலவீனம் தெரியல. போகப்போக தெரியவும் மிரண்டு போயிருக்கா.

அவனோட திட்டம் என்னன்னா, தன் ஹாஸ்பிடல்ல இருக்கற செமன் பேங்க்ல இருந்து உயிரணுவை எடுத்து டெஸ்ட் ட்யூப் முறைல அதை நிர்மலாவோட கருவுடன் சேர்த்து அப்புறம் அவ வயித்துல வச்சு வளர்த்து, அப்படி வளர்ற குழந்தை தன் குழந்தைனு ஊரை நம்பவைக்கறதுதான்.

இதுக்கு அவங்க அம்மாங்கற சின்னம்மாவும் உடந்தை. ஆனா, சொத்துக்காக அவன் செய்ய நினைச்ச இந்த சதிக்கு நிர்மலா உடன்படலை. போராடியிருக்கா. அவன் தொடர்பே வேண்டாம்னுதான் வீட்டைவிட்டு வெளியவந்து நம்ம ஆஸ்ரமத்துல சேர்ந்துருக்கா. இது தெரியாமத்தான் அவளை நான் காட்டிக்கொடுத்தேன். ஆனா, இப்ப

அதுக்கு உரிய பரிகாரம் தேடியாச்சு. நடந்த அவ்வளவு கொடுமைகளையும் நிர்மலா வாக்குமூலத்துல சொல்லியிருக்கா. போலீஸும் அக்கறையா தேட ஆரம்பிச்சுட்டாங்க.'' – மீனாட்சி மூச்சுவிடாமல் சொல்லிமுடிக்க அப்பா ஆழ்ந்த பெருமூச்சு விட்டார்.

''கடவுள் ரொம்ப கருணையுள்ளவம்மா. பரவால்ல. நீங்களும் இவரும் சாதுர்யமா நடந்து அந்த பெண்ணோட பிரச்னைய நல்ல முடிவுக்கு கொண்டு வந்துட்டீங்க. இதெல்லாம் பெரிய விஞ்ஞானக் கொடுமை! பெண்களுக்கு வரப் பிரசாதமா மாறவேண்டிய ஒரு விஷயத்தை ஒரு டாக்டரே தவறான காரணத்துக்கு பயன்படுத்த நினைச்சது எவ்வளவு பெரிய கொடுமை?''

''இவ்வளவு மோசமான குணாம்சம் கொண்ட அந்த நந்தகோபால் ஒரு முழு டாக்டரான்னே கூட ஒரு சந்தேகமும் வந்துருக்கு. அவர் படிப்பு சம்பந்தமா தோண்ட ஆரம்பிச்சிருக்காங்க.''

''இருக்கும்... போதைக்கு அடிமையாயிட்ட மனுஷன் எப்படி ஒரு நல்ல டாக்டரா வரமுடியும். அதுலயும் எதாவது சிக்கல் இருக்கலாம். அதான் எல்லாவித பட்டத்துக்கும் ஒரு விலை இருக்கே இந்த நாட்டுல... போகட்டும் இன்னொரு முக்கியமான விஷயம்..''

''என்னப்பா..?''

''உங்க மருமகன்னு சொல்லிகிட்டு ஒரு பொண்ணு நம்ம ஆஸ்ரமத்துக்கு வந்தாங்க...''

''மருமகளா... யாரு ரஞ்சனியா?''

''அப்படித்தான் சொன்னாங்க. ஆனா, இந்த விவகாரம் குறுக்கிட்டதால கிளம்பிட்டாங்க. அநேகமா திரும்ப வரலாம். சும்மா சொல்லக் கூடாது. உங்க மருமக நல்ல லட்சணம்.'' – அப்பா தகவலோடு ரஞ்சனி பற்றி நைச்சியமாக சொன்னது மீனாட்சி காதில் விழவே இல்லை.

ரஞ்சனி எதற்காக இத்தனைநாள் இல்லாமல் இப்போது வந்தாள் என்ற கேள்விக்குள் அவள் மருகும்போது ப்ரொடக்ஷன் மேனேஜர் அங்கேயே அவளை தேடிக்கொண்டு வந்தான்.

''டைரக்டர் உங்ககூட அவசரமா பேசணும்னு சொன்னார்மா... லைன்போட்டு தரட்டுமா?'' என்ற கேள்வியோடு செல்ஃபோனை எடுத்து எண்களைத் தட்டி காதோரம் வைத்து பிறகு அதை மீனாட்சியிடம் நீட்டினான்.

''வணக்கம் மீனாட்சிம்மா..''

''சொல்லுங்க சார்..''

''ஆர்ட்டிஸ்ட் ராம்குமாரை வச்சு கிட்டு ஒரு நல்லகாரியம் பண்ணதா கேள்விப்பட்டேன். பாராட்டுக்கள்''

''தேங்க்யூ சார்..''

''அந்த பொண்ணு பொழைச்சுக்கிச்சா?''

‘‘அபாய கட்டத்த தாண்டிட்டா... ஒருமாசம் வரை ஆஸ்பத்திரியில இருக்க நேரலாம்..’’

‘‘நல்லது. சீக்கிரமா குணமாக கடவுளைப் பிரார்த்தனை பண்ணிக்கிறேன். அப்புறம் ஒரு முக்கிய விஷயம்.’’

‘‘சொல்லுங்க... நாளைக்கு கால்ஷீட்ல பிரச்னை எதுவும் இருக்காது. நான் வந்துடுவேன்.’’

‘‘கால்ஷீட் பிரச்னை இல்ல.. உங்க குடும்பம் சம்பந்தப்பட்டது..?’’

‘‘என்ன சொல்றீங்க?’’

‘‘உங்க கணவரோட உங்களுக்கு இப்ப தொடர்பு இல்லைதானே?’’

– அங்குதொட்டு இங்குதொட்டு பூர்ணசந்தர், ரங்கராஜன் பற்றி கேட்கவும் மீனாட்சி முகத்தில் ஆசிட் அப்பியதுபோல் ஒரு மாற்றம்.

‘‘என்ன சார் இது... இப்ப எதுக்கு இந்த கேள்வி?’’

‘‘இல்ல... அவரோட ரைட் ஹாண்ட் மூர்த்தி இன்னிக்கு இங்க உங்களை தேடிகிட்டு வந்தான். அவர் அனுப்பித்தான் வந்தானாம். ரொம்ப பர்சனலான விஷயம்னு சொன்னான்.’’

‘‘..............’’

‘‘என்னம்மா... அதிர்ச்சியா இருக்குதா? கவலைப் படாதீங்க. நல்லா டோஸ்விட்டு அனுப்பிட்டேன். அவனுக்கு நீங்க இங்க நடிக்கறது எல்லாம் தெரிஞ்சிருக்கு. ஆதிரங்கராஜ் அதுக்கு எதாவது முட்டுக்கட்டை போட நினைக்கறாரா என்ன ஏதுன்னு தெரியல. நீங்க எதுக்கும் எல்லா விஷயத்துலயும் எச்சரிக்கையா இருக்கணும்கறதுக் காகத்தான் தகவலை உடனே உங்களுக்கு சொல்றேன்...’’

‘‘நன்றி சார்... மற்ற விஷயங்களை நான் பாத்துக்கறேன். உங்க சீரியலுக்கு எந்த நிலையிலயும் என்னால எந்த குந்தகமும் வராது. இது மட்டும் நிச்சயம்!’’

‘‘நான் அதுக்காக மட்டும் பேசலை. மூர்த்தி ஒருமாதிரி ஆள். அவனும் அமினாவும் ஒண்ணு. எச்சரிக்கை செய்யத்தான் போன் பண்ணேன்.’’

‘‘ரொம்ப நன்றி. என்வரைல அந்த விஷயம் முடிஞ்சு போன ஒண்ணு. அதுக்கு யாராவது உயிர் கொடுக்க நினைச்சா அவங்க பாவம்கறதத் தவிர நான் சொல்றதுக்கு ஒண்ணுமில்லை.’’

– பதிலோடு செல்ஃபோனை அப்படியே ப்ரொடக்ஷன் மேனேஜரிடம் நீட்டினாள். அவன் அதை அணைத்து பாக்கெட்டில் வைத்துக்கொண்டு ‘‘அப்ப நான் கிளம்பறேம்மா’’ – என்று புறப்பட்டான்.

அப்பா கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

மீனாட்சி அங்கிருந்து நகர்ந்து பக்கத்து ஜன்னல் அருகே நின்றுகொண்டு வெளியே பார்க்க ஆரம்பித்தாள்.

‘நிர்மலா என்கிற மிகப்பெரிய புதிருக்கு ஒரு விடை கிடைத்துவிட்டது… ஆனால், கணவன் என்கிற புதிரும் ரஞ்சனி என்கிற புதிரும் திசைக்கொன்றாக புறப்பட்டு தன்னை நோக்கி வந்துகொண்டிருக்கிறதே… எதற்காக?’

**வீ**ட்டுவாசலில் ஆட்டோ தேங்கி நிற்கும் சத்தம்! முதலில் பார்த்தது குழந்தை ராகவிதான்… அதன்பின் ஷேவ் செய்த முகத்தோடு அரவிந்தனும் காய்நறுக்கும் கையோடு ரஞ்சனியும் அடுத்தடுத்து பார்க்க ஆட்டோவில் இருந்து மாலதியின் கணவர் வேலாயுதமும் மகள் கார்த்திகாவும் இறங்கிக் கொண்டிருந்தனர்.

ரஞ்சனிக்கு கொஞ்சம் பகீர் என்றுதான் இருந்தது.

பெரிய பெட்டியும் கையுமாக ஆட்டோக்காரனை அனுப்பிவிட்டு வந்தவரை வரவேற்றான் அரவிந்தன்.

‘‘வாங்க மாப்ளை… வாடா கார்த்தி. என்ன இது ஒரு ஃபோன் பண்ணிக்கூட தகவல்தராம இப்படி திடுதிப்னு வந்து நிக்கறீங்க…’’ என்றபடி பெட்டியை வாங்கினான்.

‘‘அப்ப நாங்க வரப்போறதே தெரியாதாக்கும். மாலதிதானே அவசரமா கிளம்பிவாங்கன்னு ஃபோன் போட்டா. என்னவோ ஏதோன்ல கிளம்பி வந்துருக்கேன்.’’

– அவர் சொல்லவும்தான் அரவிந்தனுக்கு விளங்கியது.

‘‘ஆமாம், எங்கே மாலதி?’’

பாத்ரூமில் இருந்தாள். ராகவி ஓடிப்போய் தகரக் கதவு முன்னால் நின்று ‘‘அத்த… மாமா கார்த்தில்லாம் வந்துருக்காங்க’’ – என்று சத்தமிட்டது. கதவு திறக்க மாலதி வாரிச்சுருட்டிக்கொண்டு வெளிப்பட்டாள்.

‘‘வாங்க.. வாங்க.’’ – என்று ஹாலில் பிரசன்னமானாள்.

‘‘ஏங்க்கா… நீதான் அவசரம்னு ஃபோன் பண்ணியா… மாப்ள செல்றாரு…’’

‘‘ஆமாண்டா அரவா. எப்படியும் நம்ம வக்கீல் நோட்டீஸ் இன்னிக்கு ஒரு பெரிய பிரளயத்தை உருவாக்கப் போறது நிச்சயம். அப்ப இவரும் பக்கத்துல இருந்தா சவுகர்யமா இருக்கும்னுதான்..’’

‘‘என்ன வக்கீல் நோட்டீஸ்… என்ன மாலதி சொல்றே – ஃபோன்ல அதப்பத்தில்லாம் ஒண்ணும் சொல்லலியே…’’

– வேலாயுதம் முகத்தை கர்ச்சீப்பால் துடைத்தபடியே மாலதியை வெறிக்க.. மாலதியிடம் வழிசல்.

‘‘சொல்றேன்.. அதான் வந்துட்டீங்களே. இப்பதான் எனக்கு தெம்பா இருக்குது’’ – என்று மாலதியும் ஒருமாதிரி பீடிகைபோட, ரஞ்சனி முகம் படுவேகமாக சிவந்தது.

மாலதி தனி ட்ராக்கில் தப்பித்து ஓட முயல்கிற மாதிரி ஒரு கற்பனை ஷணத்தில் தோன்றி நெஞ்சையடைத்தது.

‘ஒவ்வொரு சிறு விஷயத்தில்கூட தன் பேச்சை கேட்டு நடந்தவள் கணவரை கூப்பிட்ட விஷயத்தை மட்டும் அமுக்கமாக வைத்துவிட்டாளே..?’

– ரஞ்சனிக்குள் கோபமும் தாபமும் தனி ரயில் இன்ஜின் போல் செருமிக்கொண்டு ஓட, ‘அடுத்து என்ன ஆகப் போகிறதோ? மீனாட்சியும் ஆஸ்ரமத்திலிருந்து ஃபோன்கூட செய்து எதற்கு வந்தாய் என்று கேட்கவில்லை. எல்லாம் திட்டமிட்டபடிதான் நடக்கப்போகிறதா... இல்லை திகிடு தம்பாய் எதாவது நடந்து வசமாய் மாட்டிக்கொள்வேனா?’

ரஞ்சனிக்குள் குழப்பம் தட்டாமாலை சுற்றும்போது சாமிநாதன் அலறியடித்தபடி வீட்டுக்குள் நுழைந்தான்.

மூச்சுமுட்ட ‘‘மன்னி.. மன்னி..’’ – என்றான்.

‘‘என்னப்பா... என்ன – எனிதிங் ராங்?’’

‘‘ஆமா.. உங்க வக்கீல் நோட்டீஸ் ஆதிரங்கராஜ் சாரை பயங்கர மாரடைப்பில் பிடிச்சு தள்ளிடுச்சு. இப்ப ஆஸ்பத்திரியில அட்மிட் ஆகியிருக்கார். அதே நேரத்தில சாவித்ரியம்மா அந்த நோட்டீஸ் விவரங்கலை எல்லா பத்திரிகைகளுக்கும் ஃபேக்ஸ் பண்ணிட்டாங்க. அதை சொல்லத்தான் வந்தேன். உங்க அவ்வளவு பேரையும் ஆஸ்பத்திரிக்கு வரச் சொன்னாங்க. ஏன்னா இந்த நிமிஷம் ரங்கராஜ்சாருக்கு கடன் கொடுத்தவங்க, கொடுக்க இருந்த வங்க எல்லாரும் மூர்த்தியை நெருக்கி வளைச்சிருப்பாங்க. அவன் எப்படி திரும்புவான்னு தெரியாது. அதனால சாவித்ரியம்மா உங்களை உடனே கூட்டிட்டு வரச்சொன்னாங்க.’’

– சாமிநாதன் சாக்குப்பையை உதறின மாதிரி சர்வத்தையும் சொல்லி முடிக்க, மாலதி நடுங்க ஆரம்பித்தாள்.

அரவிந்தன் ரஞ்சனியை பார்த்தான்.

‘‘பாத்தா எப்படி... கிளம்புங்க’’ – அவளும் தூண்டி னாள்.

‘‘ம் சீக்கிரம்...’’ – சாமிநாதன் துரிதப்படுத்தினான். அப்படியே புதியவரான வேலாயுதத்தை ஒரு தினுசாக பார்த்தான். அவரோ குழப்பத்தின் உச்சியில்...

‘‘மாப்ள கிளம்புங்க. போற வழியில எல்லா விஷயத்தையும் சொல்றேன். கார்த்தி, ராகவி இரண்டு பேரும் வீட்லயே இருங்க. ரஞ்சா... இவங்க சாப்பிட்றதுக்கு மட்டும் ஏதாவது பண்ணி வெச்சுட்டு கிளம்பு’’ என்று அரவிந்தன் ரஞ்சனியிடம் சொல்ல அவள் ‘‘எல்லாம் எப்பவோ ரெடி... முதல்ல கிளம்புவோம்’’ என்றபடி செருப்பை மாட்டினாள்.

எல்லோருமாய் வாசலை தாண்டும்போது தொலைபேசி அலறியது.

யாராக இருக்கும்..?

மீனாட்சியா..?



புறப்பட்டுவிட்ட நிலையில் ஒலித்த அந்த தொலைபேசி மீனாட்சியுடையதாகத்தான் இருக்கும் என்கிற ரஞ்சனியின் அனுமானம் சரியாக இருந்தது. ரிசீவரை எடுத்தவள் காதில் மீனாட்சிதான் பேசினாள்.

''ரஞ்சனி, நான் மீனாட்சி பேசறேம்மா...''

– மீனாட்சியின் அந்தக் குரல் ரஞ்சனியை ஒரு க்ஷணம் உலுக்கி விட்டது. நல்லவேளை, வாசலுக்கு வெளியே சாலையில் நின்றுகொண்டிருந்தனர் அரவிந்தனும் மாலதியும். கூடவே குழப்பமான முகத்தோடு வேலாயுதம்.

''அத்தே... அத்தை எப்படியிருக்கீங்க?'' – மிகச் சன்னமான குரலுக்கு மாறி மீனாட்சியை எதிர்கொள்ள தயாரானாள் ரஞ்சனி.

அந்த நிலையிலும் ரங்கராஜனுக்கு நோட்டீஸ் அனுப்பியது தொடர்பாகவோ, அதனால் அவர் ஹார்ட் அட்டாக்குக்கு உள்ளானது தொடர் பாகவோ பேச அவளுக்கு நாக்கே வரவில்லை.

அவள் பெயரால் செய்த ஒரு சதிச்செயல்தானே அந்த வக்கீல் நோட்டீஸ்! ஒளியத் தெரியாதவன், தலையாரி வீட்டிலேயா ஒளிவான்?

''நான் நல்லாயிருக்கேம்மா... ஆசிரமத்துக்கு வந்திருந்தியாமே?'' – மீனாட்சி மறுமுனையில் பற்றி இழுத்தாள்.

''ஆ...ஆமா அத்தை. அன்னிக்கு... அன்னிக்கு அந்தச் சாவு வீட்ல உங்களைப் பார்த்தது... அதுக்குப் பிறகு அவரும் நானுமா வந்து பாக்கறதா இருந்தோம்!''

''நடுவுல ஏதோ வடக்கே க்ஷேத்ராடனம் போயிட்டதால்லாம் காதுல விழுந்ததே?''



''அது... அது... போற ஐடியா இருந்தது. திடீர்னு ஆபீஸ்ல இவரோட லீவை கேன்சல் பண்ணிட்டாங்க. அதனால போக முடியலை. அதான்!''

– அவள் மென்று துப்பினாள். மீனாட்சிக்கும் புரியாமல் இல்லை. பொய்சொல்லிவிட்டு சமாளிக்கிறாள் என்பது தடுமாறுவதில் தெரிந்தது.

''போகட்டும்... ஆசிரமத்துக்கே வந்திருக்கேன்னா, ஏதாவது முக்கிய விஷயமாத்தான் இருக்கணும். வீடு ஏதாவது முடியற நிலையில இருக்கா? நான் ஏதாவது உதவி செய்யணுமா?''

''இ... இல்ல அத்தை. அதெல்லாம் ஒண்ணுமில்லே. சும்மா உங்களை பார்க்கத்தான் வந்தேன்...'' – ரஞ்சனி தொடர்ந்து பேசவும் முடியாமல், கட் பண்ணவும் முடியாமல் தத்தளிக்க... அரவிந்தன் 'யாரது போன்ல?' என்கிற மாதிரி உள்ளே வந்தான்.

''அப்பா, பாட்டி பேசறாங்க...'' – ராகவி காத்திருந்த மாதிரி எடுத்துக் கொடுத்தது.

''அம்மாவா?!'' – அவன் நெற்றியில் விரிவு. பார்வையில் மிரட்சி... கைகள் 'கொடு அந்த ரிசீவரை' என்கிற மாதிரி ரஞ்சனி நோக்கி நீண்டன.

''இ...இருங்க...''

''யாரு அரவிந்தனா? கொடும்மா அவன்கிட்ட...'' – மறுபக்கத்தில் மீனாட்சியும் அரவிந்தனுடன் பேச ஆர்வம் காட்ட, சட்டென்று ரிசீவரின் வாயை மூடியவள், ''உங்கம்மாதான்... ஆனா, அவங்களுக்கு உங்கப்பா நிலை தெரியாது. தெரியவும் வேண்டாம். நல்லாயிருக்கீங்களானு கேட்டுட்டு வெச்சுடுங்க. இப்ப, நாம ஆஸ்பத்திரிக்கு போறதுதான் முக்கியம்...'' என்று அந்த நிலையிலும் அவன்வரையில் சர்வத்தையும் கட்டிப் போடவே முயன்றாள்.

‘‘எல்லாம் எனக்கு தெரியும்... நீ முதல்ல ரிசீவரை கொடு...’’ – ஆவேசமாக ரிசீவரைப் பிடுங்கியவன், ‘‘அம்மாாா...’’ என்றான் மிகமிகப் பரவசமாக.

‘‘அரவிந்தா!’’

‘‘அம்மா, எங்கேம்மா இருக்கே? எங்கருந்து பேசறே? முதல்ல அதைச் சொல்லு. அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக்கும்மா..’’

‘‘என்னது... ஹார்ட் அட்டாக்கா?!’’

‘‘ஆமாம்மா... உனக்கு தெரியாதா?’’

‘‘எனக்கு எப்படிப்பா தெரியும்? உனக்கு யார் சொன்னது?’’

‘‘அங்க இருந்துதான் போன் வந்தது. எல்லாம் அந்த வக்கீல் நோட்டீஸ் பண்ண வேலை. இப்படி விபரீதமா ஏதாவது ஆகும்னு நான் எதிர்பார்த்தேன்...’’

‘‘என்னடா சொல்றே? எந்த வக்கீல் நோட்டீஸ்... நீ சொல்றதே புரியலையே...’’

– அரவிந்தன் அதைக் கேட்டுக் குழம்ப, ரஞ்சனி அவன் பேசக்கூடாததை பேசியதற்காக அதிர்ந்து, அப்படியே பொட்டலமாக சுருண்டு ஓரமாகப் போய் அமர்ந்தாள்.

‘‘ஏம்மா, நீ லெட்டர் எழுதி, அப்பாவுக்கு நோட்டீஸ் அனுப்பு.. அப்பதான் அவரை திருத்தி வழிக்கு கொண்டு வர முடியும்னு சொல்லலை...’’

‘‘நானா... லெட்டரா?!’’ – மீனாட்சி கேட்ட விதமும் அந்த தொனியும் அரவிந்தனை ஊசியாக குத்தியது.

‘‘அப்படின்னா, உனக்கு எதுவுமே தெரியாதா?’’

‘‘நீ... ரஞ்சனிகிட்ட ரிசீவரைக் கொடு. நான் அவகிட்ட கேக்கறேன்...’’

‘‘நீ என் கேள்விக்குப் பதில் சொல்லு. ‘அப்பாமேல கேஸ் போடு’னு நீ எனக்கு லெட்டர் எழுதலை?’’

‘‘டேய்... ரஞ்சனிகிட்ட ரிசீவரை கொடுடா. உன் கேள்விக்கு நான் அப்புறமா பதில் சொல்றேன்...’’

‘‘இதோ பாரும்மா... நாம விலாவாரியா விவாதம் பண்ற ஒரு நிலையில இப்ப இல்லை. அங்கே அந்த சாவித்ரிம்மா பதறிகிட்ருக்காங்க. மூர்த்தினு அப்பாவை சுரண்டிக்கிட்டிருக்கிறவன், வேற என்ன பிரச்னை பண்ணுவான்னு தெரியலை. நீ என்னடான்னா, என் கேள்விக்கு பதில் சொல்லாம... ரஞ்சனிகிட்ட கொடுங்கறே! எதுக்கு.. அவளைக் காப்பாத்தவா?’’

‘‘அரவிந்தா, பதற்றப்படாதே... ஒரு நிமிஷம் ரிசீவரை அவகிட்ட கொடு...’’

‘‘கொடுக்கறேன். நீ லெட்டர் எழுதலைங்கறது, நீ இப்ப தடுமாறுறதுல இருந்து நல்லா தெரிஞ்சுபோச்சு. இவதான் ஏதோ சதிவேலை செஞ்சிருக்கா.. சரி, நீ இப்ப எங்கே இருக்கே? அதையாவது முதல்ல சொல்லு.’’

‘‘என்னடா கேள்வி? ரஞ்சனிக்குதான் நான் தங்கியி ருக்கிற அனாதை ஆசிரமம் பத்தி நல்லாத் தெரியுமே?’’

‘‘என்னது? அனாதை ஆசிரமமா! அங்கேயா தங்கியிருக்கே?’’

‘‘வீட்டைவிட்டு வந்ததுல இருந்தே அங்கேதான் தங்கியிருக்கேன். ரஞ்சனிக்கு இது நல்லாத் தெரியுமே!’’

‘‘மைகாட்! சரி, முதல்ல நான் அங்கே வந்து மிச்ச விஷயங்களை நேர்ல பேசிக்கிறேன். நீ காத்துட்டு இரு. இனி ஒரு நிமிஷம்கூட நீ எங்களைவிட்டு பிரிஞ்சிருக்கக் கூடாது. பிரிஞ்சிருக்கவும் நான் விடமாட்டேன்...’’

– ஆவேசத்தோடு ரிசீவரை வைத்தவன், அப்படியே கனல் பறக்க ரஞ்சனி பக்கம் திரும்பினான். அவள் குத்தீட்டி போல அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

‘‘கடைசில என்னையெல்லாம் நீ எவ்வளவு பெரிய கேணையனா ஆக்கியிருக்கேடி. அம்மா இருக்கிற இடம் தெரிஞ்சும் நீ மூச்சு விடலை. அதே சமயம், அவங்கதான் கேஸ் போடச் சொன்னதா சொல்லி, ஒரு லெட்டரையும் தயார்படுத்தியிருக்கே... எவ்வளவு பெரிய டிராமா? அதோட க்ளைமாக்ஸா என் அப்பா ஆஸ்பத்திரில... ஆமா, எதுக்காக இவ்வளவு பெரிய சதிவேலையை செஞ்சே? அந்த சொத்துக்காகவா? அதுக்காகத்தானே...’’

– மெள்ள அவளை சமீபித்து தரையில் அப்படியே மண்டியிட்டு அமர்ந்து, முகம்சிவக்க அவன் கேட்ட விதம் வேலாயுதத்தையும் மாலதியையும்கூட அருகில் இழுத்து வந்திருந்தது.

சாமிநாதன் கைகளைப் பிசைந்து கொண்டிருந்தான். சாவித்ரி அங்கே துடித்துக்கொண்டிருப்பாள். ஆனால், இங்கே தாழி உடைந்துவிட்டது!

‘‘அரவிந்தன் சார், போற வழியில எல்லா விஷயத்தையும் பேசிக்கலாம் சார். அங்கே உங்கப்பா உயிருக்கு போராடிக்கிட்டிருக்கார்...’’

– இடையிட்டு குரல் கொடுத்தான். அரவிந்தன் ஒரு க்ஷணம் அவனையும் வெறித்தான்.

‘‘எதை போற வழியில பேசிக்கலாம்கறே? இவ என்னை கிறுக்கனாக்கி இஷ்டத்துக்கு ஆட்டி வச்சதையா? இவளோட பித்தலாட்டத்துக்கு நீ எந்தளவு உடந்தை?’’

‘‘சார், என்ன... என்னென்னவோ பேசறீங்க? இது பேசற நேரமில்லே... அங்க உங்கப்பா துடிச்சுகிட்டு இருக்கார்...’’

‘‘யாருடா என் அப்பா? யாரு... என்வரையில அவர் செத்து இருபது வருஷமாச்சுடா... இப்ப, எங்கே இருந்துடா அவர் வந்தார்?’’ – மளேரென்று எழுந்தவன், எகிறி சட்டையைப் பிடிக்க விரும்பியவன் போல முன் செல்ல... சாமிநாதன் நொறுங்கிவிட்டான்.

‘‘அரவிந்தா... என்னப்பா பிரச்னை? எதுக்கு இவ்வளவு டென்ஷனாகறே?’’ – மாப்பிள்ளை வேலாயுதம் கோபப் பாய்ச்சலைத் தணிக்கப்பார்த்தார். மாலதி அப்படியே மழைப்புறா போல ஒடுங்கிவிட்டிருந்தாள்.

ராகவியும் கார்த்திகாவும் ஒரு ஓரமாக போய், ஒருவரை யொருவர் கட்டிக் கொண்டு நின்று விட...

‘‘மாப்ள... உங்களுக்குத் தெரியாது மாப்ள... இங்கே பல அநியாயம் நடந்திருக்கு. இந்த சண்டாளி என்னை பெரிய இளிச்சவாயனா ஆக்கியிருக்கா! ஊர் பூரா என் அம்மா எங்கே, எங்கேனு நான் தேடி அலைஞ்சிருக்கேன். இவளுக்கு அம்மா இருக்கிற இடம் தெரிஞ்சிருக்கு! ஆனா சொல்லலை. தெரியாத மாதிரியே நடிச்சிருக்கா! உண்மையா, இல்லையா? வாயைத் திறந்து சொல்லேண்டி...’’

– அரவிந்தன், வேலாயுதத்துக்கு பதில் சொன்னவனாக, அப்படியே சரேலென்று கேள்வியை ரஞ்சனியை நோக்கி யும் திருப்பினான். அப்படியொரு கோபத்தை அவன் காட்டியதே இல்லை. அவளும் பார்த்ததே இல்லை.

ஒரு தொலைபேசி சத்தம் அவள் வரையில் ஒரு பூகம்பத்துக்கே அஸ்திவாரம் போட்டுவிட்டது. நடுங்கிப் போன ரஞ்சனி, மாலதியைத்தான் பார்த்தாள்.

‘‘என்னடி... என்னப் பாக்கறே? அரவா, எனக்கு எதுவும் தெரியாது. இவதான் அம்மா மாதிரியே என் கையெழுத்து இருக்குனு என்னை எழுதச் சொன்னா. நானும் புத்தி கெட்டுப்போய் எழுதிட்டேன். இப்படி ஏதாவது விபரீதமா நடக்கும்னு எனக்குள்ளே ஒரு குரல் சொல்லிட்டே இருந்துச்சு. அதான், என் வீட்டுக்காரரையும் வரவழைச்சேன். என்னை நீ தப்பா புரிஞ்சுக்காதே!’’

– மாலதி, அரவிந்தனின் காலில் விழாத குறையாக புலம்ப, ரஞ்சனிக்கு இதயத்தின்மேல் யாரோ மண்ணெண்ணெய் ஊற்றி தீயிடுகிற மாதிரி இருந்தது.

‘சே... ஒரு பார்வை... ஒரு பார்வைக்குக்கூட தாங்க வில்லை! இவளையெல்லாம் நம்பி, பெரிய விஷயங்களில் இறங்கினால் என்னாவது?’ – அந்த நிலையிலும் அவளுக்குள் கேள்வி.

சாமிநாதனோ பொறுமையின் விளிம்பில் இருந்தான்.

‘‘அரவிந்தன் சார்... எதுவா இருந்தாலும் அப் புறமா பேசுங்க. அங்கே உங்க அப்பா நிலைமை ரொம்ப மோசம். அந்த மூர்த்தி, தன் ஃப்ராடுத்தனத் தோட உச்ச கட் டத்துல இருக்கான். மன்னி உங்களுக்கு தெரிஞ்சு தப்பு பண்ணியிருந்தாலும், தெரியாம பண்ணியிருந்தாலும் என்வரையில் அது ஒரு நல்ல காரியம்! ரங்கராஜன் சார் சொத்து, உங்க சொத்து! அதை யாரோ கொண்டு போகவிடலாமா? அதைக் காப்பாத்தி ஒரு அனாதை ஆசிரமத்துக்கு கூட கொடுங்க. ஆனா, இப்ப மீன மேஷம் பார்க்காம கிளம்பி வாங்க. உங்கம்மா போனே பண்ணலைனு நினைச்சுக்குங்க...’’ – சாமிநாதன் கெஞ்சினான்.

‘‘போய்யா... சொத்தாம் பெரிய சொத்து! யாருக்கு வேணும் அது? எங்கம்மா சொன்னாங்கற ஒரே காரணத் துக்காகத்தான் வக்கீல் நோட்டீஸே அனுப்பினேன். எப்ப அதுவே பொய்னு ஆயிப்போச்சோ, அப்பவே அந்த நோட்டீஸ் பொய். அதால ஏற்படற எல்லாமே என் வரையில் பொய்தான். எனக்கு இந்த நிமிஷம் எங்க அம்மாதான் பெரிசு. ஒரு அனாதை ஆசிரமத்துல அனாதை மாதிரி அவ இருந்துக்கிட்டிருக்காய்யா! அவளைப்

போய் கூட்டிட்டு வந்து கால்ல விழறதுதான் எனக்கு இப்ப பெரிசு. மூர்த்தியோ, கீர்த்தியோ... என்னவோ பண்ணிட்டு போகட்டும். ஏய், எந்த ஆசிரமத்துலடி அம்மா இருக்கா?''

– ஆவேசமான பதிலின் முடிவில் ரஞ்சனியை நோக்கித் திரும்பியவன்முன் நடுங்கிய குரலில் வாயைத் திறந்தாள்.

''நவஜீவன் முதியோர் ஆசிரமம்...''

''எங்கே இருக்குடி அது?''

''தா...தாம்பரம் தாண்டி, வண்டலூர்கிட்ட...''

''மாப்ள... கிளம்புங்க. ஒரு கால்டாக்சி பிடிக்கறோம். போய் எங்கம்மாவைக் கூட்டிட்டு வர்றோம்...''

''ஆமாங்க! அம்மா வரணுங்க. அதான் இப்ப முக்கியம்'' – மாலதியும் ராட்சஸ பல்டியடித்து, அரவிந்தன் பக்கம் நின்றாள்.

அந்த நிலையிலும் ரஞ்சனி ஒரு அனல் பார்வை பார்த்தாள். நிச்சயம் அதற்கு மட்டும் சக்தி இருந்தால், மாலதி ஒரு கலயத்துச் சாம்பலாகவே ஆகியிருப்பாள்.

நல்லவேளை... வேலாயுதம் வேறுமாதிரி சிந்தித்தார்.

''அரவிந்தன், தண்ணியடிச்சு தண்ணி விலகாது. விதி ரொம்ப வலிமையானதுப்பா. இல்லேன்னா, அது உன்னை ஒரு வக்கீல் நோட்டீஸ் அனுப்ப வச்சிருக்குமா? அதனால, உங்கப்பா ஹார்ட் அட்டாக்ல விழுந்திருப்பாரா? இப்ப அங்கே போய் அவரை பார்க்கறதுதான் தர்மம். இல்லேன்னா, சொத்துல பங்கு கேட்டவங்க, அவர் சுகத்தை பற்றி யோசிக்கவே இல்லைனு நாலு பேர் பேச இடம்கொடுத்த மாதிரி ஆயிடும். இது நீ உணர்ச்சிவசப் படவேண்டிய நேரம் இல்லை. புத்திவசப்பட வேண்டிய நேரம். நீ சொல்லாமலே இங்கே என்ன நடந்திருக்கும் கறதை என்னால புரிஞ்சுக்க முடியுது. உன் மனைவியும் என் மனைவியும் சொத்து பங்கு கேட்டிருக்காங்க. அது, அவர் சம்பாதிச்ச சொத்து கிடையாது. பூர்வீக சொத்து. 'பூர்வீக சொத்தை அவர் அனுபவிச்சு கரைக்கலாம், நமக்கு உரிமை இல்லையா?'னுல்லாம் யோசிச்சு இருக்காங்க.

மாச சம்பளம் வாங்கிக் குடும்பம் நடத்தற பல பெண்களும் பொருளாதார அழுத்தம் தாங்காம, டீ.வி. விளம்பரங்களால பாதிக்கப்பட்டு மென்ட்டலி இம்பேலன்ஸ் ஆகி, இப்படியெல்லாம் நடந்துக்கறது இப்ப ரொம்ப சகஜம். இது ஒருவித சாபக்கேடு. சாபக்கேடுகளை விட்டுக் கொடுத்தும் பெருந்தன்மையாவும்தான் சரிசெய்ய முடியும். மோதி உடைச்சு மாற்ற முடியாது. நான் சொல்றதைக் கேள். முதல்ல உன் அப்பாவைப் போய் பார்ப்போம். 'கேஸ் போட்டது சொத்து ஆசையால இல்லே. மீண்டும் உறவை புதுப்பிச்சுக்க'னு அவருக்கு புரியவைப்போம். மத்ததையெல்லாம் அப்புறமா பேசிக்கலாம்...''

– வேலாயுதத்தின் புத்திபூர்வம் சாமிநாதனுக்குள் 'அப்பாடா' என்று ஒரு பெருமூச்சை பற்றி இழுத்தது. அரவிந்தனும் எதிர்க்கவில்லை. கிளம்பினான். ரஞ்சனி, குழப்பத்தில் வெறிக்க... ''கிளம்பும்மா... எல்லாரும் தான் போகணும்'' என்று பற்றி இழுத்தார் வேலாயுதம்.

இரண்டு ஆட்டோ பிடித்து ஏறினார்கள். ஆட்டோக் கள் சீறிக்கிளம்புவதை கார்த்திகாவும் ராகவியும் பார்த்துக்கொண்டே இருந்தனர்.

**ஹா**ஸ்பிட்டல்...

பாணம் போட்டதுபோல் வந்து நின்ற ஆட்டோவில் இருந்து அத்தனை பேரும் உதிர்ந்தனர். சாமிநாதன் இன்டென்சிவ் கேர் நோக்கி ஓடினான். அனைவரும் பின்தொடர்ந்தனர். வார்டு முகப்பிலேயே ஒரு நாற்காலி யில் அமர்ந்திருந்த சாவித்ரி இவர்கள் வரவும் எழுந்து நின்றாள். சற்றுத்தள்ளி நின்றிருந்த வக்கீல் ஒருவரும் அவர்களைப் பார்த்துவிட்டு எழுந்து நின்றார்.

ரஞ்சனி, சாவித்ரியை வேகமாக நெருங்கி கைகளை பற்றிக்கொண்டாள்.

''இப்ப எப்படியிருக்கு?''

''அபாயகட்டத்தை தாண்டிட்டார்னு சொல்றாங்க. ஆனா...''

''என்ன ஆனா?'' – ரஞ்சனி வக்கீலைப் பார்க்கவும் அவர் செருமலுடன் வாய்திறந்தார்.

''இங்கே அரவிந்தன்கறது?''

''இவர்தான்... நீங்க?'' – வேலாயுதம் கேட்க, வக்கீல் அவர்களை தனியே அழைத்துப் பேசினார்.

''ஆமா... இப்படி ஒரு நோட்டீஸ் அனுப்பணும்னு உங்களுக்கு இப்பத்தான் தெரிஞ்சுதா?''

''ஏன் சார்... அதனாலென்ன?''

''என்னத்தை சொல்ல? சொத்து மதிப்புக்குமேல கடன் இருக்கு. அதுலயும் பாதிக்குமேல சீட்டிங்...''

''புரியற மாதிரி சொல்லுங்களேன்...''

''என்னத்த சொல்ல? இவ்வளவுநாள் எனக்கென்னனு ஒதுங்கியிருந்த நீங்க, இப்படியா வந்து மாட்டிக்கணும்?''

''மாட்டிக்கிட்டோமா?''

''பின்னே! மிஸ்டர் ஆதிரங்கராஜ் சொத்து மதிப்பு அஞ்சு கோடின்னா, கடன் மதிப்பு ஏழு கோடி இருக்கு! சொத்துல உங்களுக்கு பங்கு உண்டுன்னா, கடன்லயும்ல நீங்க பங்கு எடுத்துக்கணும்...''

''அதெப்படி? இந்த கேஸ் போட்டிருக்கிறதே, அவர் சொத்தை காப்பாற்றத்தானே! தனக்குச் சொந்தமில்லாத சொத்தை அவர் எப்படி அடகு வைக்கலாம்? வச்சாலும் பணம் கொடுக்கறவங்களுக்கு எங்கே போச்சு புத்தி?''

''நல்ல கேள்விதான்! ஆனா, அவ்வளவு சொத்து பத்திரங்களும் இப்ப கடன் கொடுத்தவங்ககிட்டதான் இருக்கு. அதே சமயம், பல பங்களா, தோட்டங்களை அந்த

மூர்த்தி தன்பேர்ல எழுதி வாங்கிட்டு இருக்கான்! ரொம்ப புத்திசாலித்தனமா இந்த சொத்துல ரங்கராஜனுக்கு பாகம் பிரிச்சா எவ்வளவு வருமோ, அவ்வளவை அவன் தன் பேர்ல மாத்தி எழுதி வாங்கியிருக்கான். இன்ஃபாக்ட் ஆதிரங்கராஜுக்கு ஹார்ட் அட்டாக் வந்ததுக்கு காரணம் உங்க வக்கீல் நோட்டீஸ் கிடையாது. நோட்டீஸால தெரியவந்த உண்மைகள்தான். குறிப்பா மூர்த்தியோட சதி!''

''ஏமாற்றி கையெழுத்து வாங்கினது செல்லுமா?''

''நடைமுறையை யோசிச்சு பேசணும். நீங்க தடுக்குல பாஞ்சா அவன் கோலத்துல பாயறவன். அவன் ஏமாத்தி னாங்கறதை நிரூபிக்க வழியே இல்லை. அதே சமயம், இப்ப ஒரு ஆபத்தான ஆயுதமும் அவன்கிட்ட இருக்கு!''

''என்ன வக்கீல் சார்?''

''இருபது வருஷத்துக்கு முந்தியே 'சொத்துல பங்கு வேண்டாம்... உங்க தொடர்பே வேண்டாம்'னு உங்கம்மா உங்கப்பாவுக்கு கடிதம் போட்டிருக்காங்க. அது இப்ப அவன் கையில! அதை கோர்ட்ல காட்டி, உங்களுக்கு உரிமை இல்லைனு அவன் சொல்லலாம். இதனாலதான் ரங்கராஜ் சொத்துக்கு கடன் கொடுத்தோம்னு அவங்க சொல்லலாம். கோர்ட் அதை நிச்சயமா பரிசீலிக்கும். அது விடுதலை பத்திரத்துக்கு சமம் ஆகாதுதான். இருந்தாலும் அதுக்கு உயிர் இல்லேனு சொல்லமுடியாது. எப்படி பார்த்தாலும் உங்களுக்கு சொத்து அவ்வளவு சுலபத்துல கிடைக்க வழி கிடையாது. சொத்து வேணும்னா, அப்பா வாங்கின கடனுக்கு பதில் சொல்லுங்கறதுதான் கடன் கொடுத்தவங்களோட இப்போதைய ஸ்டேட்மென்ட்! ஆனா, சொத்தைவிட கடன் அதிகம். என்ன செய்ய போறீங்க?'' – வக்கீலின் கேள்வியால் அரவிந்தனுக்கே ஹார்ட் அட்டாக் வரும்போல தோன்றியது. அப்படியே பார்வை ரஞ்சனி பக்கம்தான் திரும்பியது.

''பாவி... பாத்தியா? வேலியில போன ஓணானை எடுத்து மேலே விட்டுகிட்ட கதையா போச்சேடி.... இப்ப என்னடி பண்ணப்போறே?'' – அவன் கேள்வி, அவளை அப்படியே நொறுக்கி அமுக்கும்போது, சாவித்ரியை சுற்றி ஆவேசமாக நாலு பேர் பேசுவது கேட்டது. சாவித்ரி காதை பொத்திக் கொண்டிருந்தாள்.

''அவங்கள்லாம் ரங்கராஜுக்கு கடன் கொடுத்தவங்க. அவ சொல்லித்தான் நீங்க நோட்டீஸ் அனுப்பினதா மூர்த்தி கிளப்பிவிட்டிருக்கான். அதான், அவளை வந்து பிடிச்சுட்டாங்க. அடுத்து உங்ககிட்ட வருவாங்க...''

– வக்கீல் வாயை மூடுமுன் அவர்கள் அரவிந்தனையும் வேலாயுதத்தையும் நோக்கி வந்தனர். அரவிந்தன் நடுங்க, ரஞ்சனி மயங்கி விழாத குறையாக நிற்க... மாலதி ''வாங்க, இனியும் இங்கே இருக்க வேண்டாம். நாம போயிரலாம்...'' என்று வேலாயுதத்தை பிடித்து இழுக்க... அரவிந்தனுக்கு பிடரியில் தீக்கங்கு உரசின உணர்வு.

''அக்காாா....'' என்றான் ஓங்கிய குரலில். ஆஸ்பத்திரி யே நடுங்கியது. அந்த நொடியில் ஒரு அதிசயம்போல மீனாட்சி அங்கே வந்துகொண்டிருந்தாள்.

''அம்மா...'' – அரவிந்தனின் கோபக்குரல் அப்படியே மாறி, அவளை நோக்கித் திரும்பியது.



அரவிந்தனின் 'அம்மா..!' என்கிற குரல் ஆஸ்பத்திரியையே திரும்பிப் பார்க்க வைத்தது. அவளும் அவனை பார்த்துவிட்டு நேராக அவனிடம்தான் வந்தாள்.

வந்தவளை பாசத்தோடு கட்டிக்கொண்டான்.

மற்றவர்கள் அங்கங்கே திட்டுத்திட்டாக தேங்கி நின்று விட்டார்கள். குறிப்பாக மாலதி ஏதோ மொழிதெரியாத ஊரில் வழிதெரியாமல் நிற்கிற மாதிரி நின்றுகொண்டிருந்தாள். வேலாயுதம் மட்டும் எந்த நெருடலுமின்றி மீனாட்சியை நெருங்கினார்.

''அத்தே... நல்லாருக்கீங்களா?''

''எனக்கென்ன மாப்ள.. நீங்க எப்படி இருக்கீங்க?''

''எனக்கும் என்ன அத்தை. இங்கதான் ஏதேதோ நடந்து முடிஞ்சிடிச்சு...''

''கேள்விப்பட்டேன். வீட்டுக்கு போய்ட்டுதான் வரேன். கார்த்திகாவும் ராகவியுமே நிறைய விஷயம் சொல்லிட்டாங்க. அதான் ஓடிவந்தேன்...''

''இப்பவாவது வந்தியேம்மா... நான் ரொம்பவும் மோசம் போய்ட்டேம்மா. இந்த சண்டாளி என்னை ரொம்பதான் ஏமாத்தி விளையாடிட்டாம்மா..''

- அரவிந்தன் ரஞ்சனியை பார்த்தபடி சீறினான்.

''அரவிந்தா... ரஞ்சனியை மட்டும் குறை சொல்லாதே. என் தப்பும் இருக்கு...'' - இடையில் கத்தரித்தது சாவித்ரியின் குரல்.

மீனாட்சி அவளை ஏறிட்டாள். அவள் ‘‘அக்கா..’’ என்ற உடைந்த குரலோடு மீனாட்சியின் கரங்களை தேடிப் பிடித்தாள்.

‘‘நீதான் சாவித்ரியா?’’

‘‘ஆமாம்க்கா...’’

- அவள் சொல்ல வக்கீல் செருமலோடு தன்னை காட்டிக் கொண்டார்.

‘‘மிஸ்டர் அரவிந்தன்... இவங்கதான் உங்க அம்மாவா..?’’

‘‘ஆமாம் சார்..’’

‘‘நான் சொல்றேனேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. ஆதி ரங்கராஜ் சார் நிலை ரொம்ப மோசமா இருக்கு. எந்த நிமிஷமும் எதுவும் நடக்கலாம். அவர்கிட்ட ஒரு மகனா கொஞ்சம் பணிவா பாசமா பேசி உண்மைல யார்கிட்ட எவ்வளவு கடன் வாங்கியிருக் கார்னு தெரிஞ்சுக்க பாருங்க. இல்லேன்னா அவருக்கு எதாவது ஆனபிறகு நீங்க ரொம்ப கஷ்டப்பட வேண்டி வரலாம். கூடிய வரை அதை ஒரு வாக்குமூலமா ரெக்கார்ட் பண்ணிக்குங்க. அது பின்னால ரொம்ப பயன்படலாம்...’’

- வக்கீல் உணர்ச்சி மயமான அந்த சூழ்நிலையில் ஒரு நல்ல யோசனையைத்தான் சொன்னார். சொன்ன சூட்டோடு ஒரு மினி பாக்கெட் ரிக்கார்டரை எடுத்தும் தந்தார்.

அரவிந்தன் அதை வாங்காமல் மீனாட்சியை பார்த்தான்.

‘‘என்னப்பா... என்னை எதுக்குபாக்கறே?’’

‘‘எனக்கு இப்ப என்ன செய்யறதுன்னே புரியலம்மா.. சொத்துல பங்கு கேட்டு நோட்டீஸ் அனுப்பிட்டு இப்ப நல்லா மாட்டிகிட்டு முழிக்கிறேன். சொத்து மதிப்புக்கு மேல கடன் இருக்குதாம். சொத்துல பங்கு உண்டுன்னா கடன்லயும் பங்கு எடுத்துக்க சொல்வாங்களேம்மா..?’’

- அரவிந்தன் குரலில் நடுக்கம் பிறழியது.

‘‘அரவிந்தா... கடன் இருக்கறது உண்மைப்பா. ஆனா, சொத்து மதிப்புக்கு மேலங்கறதெல்லாம் பொய். அந்த மூர்த்தி உங்க அப்பாவை ஏமாத்தி நிறைய பத்திரங்கள்ல கையெழுத்து வாங்கிட்டான். அதை எல்லாம் கணக்குல வெச்சுதான் இப்ப வக்கீல் பேசறார்.’’

- சாவித்ரி தனக்கு தெரிந்ததை சொன்னாள்

‘‘இதோ பாருங்கம்மா... ஏமாத்தி கையெழுத்து வாங்கினார்னு எப்படி நிருபிப்பீங்க? அதுவும் மிஸ்டர் ஆதி ரங்கராஜ் உடம்பு இருக்கற நிலை யில அவருக்கு ஏதாவது ஒண்ணு ஆனா என்ன பண்ணுவீங்க? கோர்ட்ல பேப்பர்தான் நிக்கும். உங்க புலம்பல் எல்லாம் எடுபடாது.’’

‘‘போதும்... இந்த சொத்து சண்டையை அப்புறம் போட்டுக்கலாம். அவரை இப்ப காப்பாத்தணும். அதுக்கு என்ன பண்றது, யோசிங்க...’’

சாவித்ரி கச்சிதமாக கத்திரித்து மீனாட்சியை திரும்பவும் பார்த்தாள்.

அந்த பார்வையே அவரை வந்து பார்க்க மாட்டீங்களா என்று கேட்காமல் கேட்டது. கண்ணின் இமைகளிலும் கண்ணீர் திரண்டு தளும்பியது.

மீனாட்சி முகத்தில் அந்த நொடியில் சொல்ல முடியாத சலனம். எல்லோரும் அவளையே வெறித்தார்கள். ஏறத்தாழ 20 வருஷங்களுக்கு பிறகு வந்திருக்கிறாள். வைராக்யமாக இரண்டு குழந்தைகளோடு அவரை விட்டு விலகிச் சென்றவள். தனித்துப் போராடி அவர்களை ஆளாக்கியவள். நடுவில் எவ்வளவோ கஷ்டங்கள்! அப்போதெல்லாம் சொத்துரிமையை ஞாபகப்படுத்தியே கூட ஆதிரங்கராஜிடம் இருந்து எவ்வளவோ பெற்றுக் கொண்டிருக்கலாம்.

ஆனால், அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அவரை நினைத்துக்கூட பார்க்கவில்லை. ''பூவும் பொட்டுமா இருக்கியே.. உன் புருஷன் யாரும்மா?'' - என்று தெரியாத சிலர் எதார்த்தமாக கேட்ட பொழுதெல்லாம்கூட மவுனமாகவும் இறுக்கமாகவும் இருந்தே அவர்களை சமாளித்திருக்கிறாள்.

அத்தனை வைராக்யமாக இருந்தவள் இப்பொழுது என்ன செய்யப் போகிறாள்?

எல்லோரையும்விட சாவித்ரிதான் துடித்தபடி இருந்தாள்.

''அக்கா... நீங்க என்ன நினைக்கறீங்கன்னு தெரியுது. உறவே இல்லாதப்ப சொத்தோ கடனோ எதுக்கும் நாங்க பொறுப்பாளி இல்லேன்னு மட்டும் சொல்லிடாதீங்க. சத்யமா சொத்தை காப்பாத்த நான் ரஞ்சனி அரவிந்தனை தூண்டிவிடலை. அவரை காப்பாத்தத்தான் அப்படி செய்றேன். எனக்கு அவர் மாறி நல்லவிதமா இருந்தா போதும். ஒரு நயாபைசா வேண்டாம். என்னை நம்புங்க..''

- அவள் சொல்லி முடிக்க அரவிந்தன் ஆரம்பித்தான்.

''அம்மா இப்ப நீ என்ன சொன்னாலும் சரிம்மா. இவ்வளவு நாளா நீ இருந்ததுதாம்மா சரி. காப்பாத்தறதா நினைச்சு வந்து மாட்டிகிட்டதாத்தாம்மா நான் நினைக்கறேன். போதும்மா... நமக்கு இவங்க சாவகாசமே வேண்டாம்.'' - அலறினான்.

- அவன் சொல்லவும் மீனாட்சி அவனை சற்று கூர்மையாகவும் அதில் கணிசமான கோபத்துடனும் பார்த்தாள்.

''ஏம்மா அப்படி பாக்கறே..?''

''வேற எப்படி பார்க்கச் சொல்றே? எதைச் செய்தாலும் அதுல ஒரு தெளிவும் திடமும் இருக்கணும். தப்பே செய்தாலும் அதை தப்பில்லாம செய்யறதுதான் நல்ல ஆண்மை. எப்ப சொத்து வேணும்னு கேஸ் போட்டியோ அப்ப அதுலயே நில்லு. கடன் வந்தாலும் சரி, கண்ட கச்சடா வந்தாலும் சரி.. சந்தி.. சமாளி. அதை விட்டுட்டு சட்டி சுட்டா கையை விட்டுட்ற மாதிரி இது என்ன பேச்சு?''



- பளிச்சென்று அவள் சொன்னது சாவித்ரியின் கண்களில் புதிய ஒரு ஒளியைப் பரப்பியது.

''அப்ப.. நான் கேஸ் போட்டதுல உனக்கு வருத்தம் இல்லையாம்மா..?''

''இனி அதப்பத்தி பேசி என்னடா பிரயோஜனம்? 20 வருஷம் உன்னை சுயமரியாதையோட பாதுகாத்தேன். அதுக்கு மேல முடியல.. விதி என்னை ஆஸ்ரமத்துக்கும் உன்னை உன் அப்பாகிட்டயும் தள்ளி விட்டுடுச்சு... இனி நீ அந்த பாட்டைல போறதுதான் சரி...''

''என்னம்மா நீ? நான் வேற நீ வேறங்கற மாதிரி பிரிச்சு பேசறே?''

''நான் எங்கடா பிரிச்சேன்... பிரிச்சது காலம்டா...''

''காலம் இல்ல.. இந்த கழிசடை. இவளோட காசு ஆசை..''

- அரவிந்தன் திரும்பவும் சீறினான்.

''தப்பு... அவளை அப்படி பேசாதே. அவ வயசுக்கு அவ அப்படித்தான் நடந்துப்பா... சவுகர்யமா வாழணும்னு நினைக்கறது ஒண்ணும் பாவமான விஷயம் இல்லை. அதுக்கான வழிமுறைகள்ளதான் பாவ புண்ணியங்கள் உருவாகுது. அவ வரைல இந்த சொத்துல அவளுக்கு உரிமை இருக்கறதால ஆசைப்பட்டிருக்கா. இப்பவும் அவளுக்கு பக்க பலமா நீ நின்னா பிரச்னைகளை அவ சமாளிச்சு மேல வந்துடுவா...''

''ஐயோ... இவகூட சேர்ந்து நடக்கச் சொல்றியா?''

''அதை செஞ்சாத்தான் நீ என் பையன். திரும்பவும் சொல்றேன். தப்போ சரியோ... இறங்கின விஷயத்துல முழுசா போ. இரண்டுல ஒண்ணு பார். ஒரு வப்பாட்டியா வாழவந்தவ அவர் நல்லபடி இருந்தா போதும்னு நினைக்கறா. அதை எதிர்பார்த்துத்தான் இதை எல்லாம் செய்திருக்கான்னா நீ அவர் ரத்தம்... உன் கடமை எந்த அளவு பெரிசுன்னு - யோசிச்சுப்பார்..''

மீனாட்சி முடித்ததும் வக்கீல் கைதட்டினார். மற்றவர்கள் பார்ப் பதைப் பற்றி கவலையே படாமல் வாயைத் திறந்தார்.

''நல்லா சொன்னீங்கம்மா... உங்க தெளிவான பதிலை நான் ரொம்ப பாராட்றேன். மிஸ்டர் அரவிந்தன், அம்மா சொன்ன மாதிரி சொத்து கடன் இதையெல்லாம் பிறகு பார்த்துக்கலாம். முதல்ல உங்க அப்பாவை போய் பாருங்க. அவரை காப்பாத்தறது முக்கியம். அடுத்து அவர் நீங்க ஆசைப்பட்ட ஒழுக்கமான வாழ்க்கை வாழணும், அது இன்னும் முக்கியம். அப்பதான் நீங்க கேஸ் போட்டதுக்கே அர்த்தம்.''

- அவனை லகுவாகத் தள்ளிவிட்டார். அந்த நொடியில் மீனாட்சியும் வெடவெட வென்று நடுங்கியபடி ஒரு ஓரமாக நின்று தலையை தாழ்த்திக்கொண்டிருந்த ரஞ்சனியை நெருங்கினாள். அவள் கையைப் பிடித்து இழுத்து வந்து அரவிந்தன் அருகில் நிறுத்தினாள். அப்படியே சாவித்திரி மாலதி வேலாயுதம் என்று மற்றவர்களையும் அழைத்தாள். ஒருசேர நிறுத்தினாள். முக்கியமான ஒரு விஷயம் சொல்லப்போகும் தோரணையில் அவ்வளவு பேரையும் ஆழமாக ஒரு பார்வை பார்த்தாள்.

அவர்களும் அவள் என்ன சொல்லப் போகிறாளோ என்று படபடப்போடு பார்த்தனர்.

‘‘எல்லாருக்கும் ஒரு விஷயத்தை அழுத்தமா சொல்லிக்கறேன். அவர் வரைல அவரை திருத்த முயன்று தோற்றுப்போகல நான். தொடர்ந்து அவரோட இருந்தா உங்களை ஒழுக்கத்தோடயும் நல்லபடியாவும் வளர்த்த முடியாதுன்னுதான் நான் தனியே பிரிஞ்சேன். எப்படியோ போராடி உங்களை எல்லாம் ஆளாக்கினேன்.

இந்த நிமிஷம் அவர் திருந்துவார்னோ.. இல்ல, திருந்திட்டதாவோ நான் நினைக்கல. அதேசமயம் இனி உங்களை பத்தியும் எனக்கு கவலையில்லை. ஏன்னா இப்ப நல்லது கெட்டது உங்களுக்கு தெரியும். காலமும் எப்படியோ உங்களை திரும்ப அவர்கிட்ட கொண்டுவந்து நிறுத்திடிச்சு. நான் சொன்ன மாதிரி 20 வருஷ காலம்தான் உங்களை என்னால பிரிச்சு பாதுகாக்க முடிஞ்சது. இனி நான் நினைச்சாலும் முடியாதுங்கற அளவுக்கு இந்த விஷயம் போயாச்சு.

ஆகையால உங்ககிட்ட நான் எதிர்பார்க் கறது எல்லாம் ஒண்ணே ஒண்ணுதான். எதை எதிர்பார்த்து சொத்துல பங்கு கேட்டீங்களோ அதை அடையப்பாருங்க.

அந்த முயற்சியில தோத்தாகூட பரவாயில்ல. கடன் பிரச்னை தெரியாம கேஸ் போட்டுட்டோம்கற பச்சோந்தித்தனம் உங்களுக்கு வேண்டாம்.

என் பதிலை நான் தீர்மானமா சொல்லிட்டேன். என்னைப் பற்றின கவலையும் உங்களுக்கு வேண்டாம்.

எனக்குன்னு ஒரு புது வாழ்க்கையை கடவுள் ஆரம்பிச்சு வெச்சுருக்கார். நான் அதுல போய்க்கறேன். எவ்வளவு உதவி வேணும்னாலும் கேளுங்க. செய்யறேன். நான் எங்க இருந்தாலும் நீங்க என் குழந்தைகள்தான். அதுல மாற்றமில்லை’’

- ஒரு நீண்ட உரையை நிறைவு செய்தவள் ரஞ்சனியிடம் மட்டும் தனியாக ஒதுங்கிப் பேசினாள்.

‘‘ரஞ்சனி... மாலதியும் நீயும் சேர்ந்து நான் எழுதின மாதிரி லெட்டர் எழுதி அரவிந்தனை மாத்தின விஷயத்தையே நினைச்சு வருத்தப்படாதே.

அதனால நல்லது நடந்துட்டா அப்புறமா அந்த தப்பும் ஒரு நல்ல காரியமா மாறிடும். நீ உன் தப்பு சரியாகணும்கறதுக்காக வாவது உன் மாமனாரை காப்பாற்றி நல்லபடி மாற்றிக்காட்டு.

அந்த மூர்த்தியோட திருவிளையாடலை எப்படி சந்திக்கணுமோ அப்படி சந்தி. ‘பொய்யான உனக்கே இவ்வளவு சாமர்த்தியம் இருந்தா மெய்யான எனக்கு எவ்வளவு இருக்கும்’னு அவனுக்கு காட்டு. அசந்துடாதே... கேஸ் நடக்கட்டும்... உண்மையானவங்க எவ்வளவு வாய்தான்னாலும் தாங்குவாங்க. ஆனா பொய்யானவங்களால முடியாது. உன் போராட்டத்துக்கு இப்போதைய என் உதவியா இந்த ஐம்பதாயிரத்தைப் பிடி...’’

- மீனாட்சி ஐந்து நூறு ரூபாய் கட்டுகளை அவள் கையில் பேச்சோடு சரேலென்று திணிக்கவும் ரஞ்சனி திக்கு முக்காடிப் போனாள். அப்படியே சரிந்து காலில் விழுந்தாள். வேலாயுதம் மாலதியைப் பார்க்கவும் அவளும் வந்து காலில் விழுந்தாள்.

சாவித்ரி கைக ளைக் கூப்பினாள்.

ஐ.சி. வார்டில் இருந்து ஆதிரங்க ராஜை பார்க்க வரலாம் என்கிற சமிக்ஞை கிடைத்தது.

''போங்க... போய் ஆகவேண்டியத பாருங்க. உங்க வரைல ஒரு சவால் ஆரம்பிச்சாச்சு. இனிமே உணர்ச்சி வசப்படக்கூடாது. ஒவ்வொரு அங்குலத்துலயும் புத்திசாலித்தனம்தான் இருக்கணும். போங்க!''

- மீனாட்சி அவர்களை வார்டு நோக்கி தள்ளிவிட்டாள்.

''அம்மா நீ...'' - அரவிந்தன் திணறியபடி கேட்டான்.

''நீங்கல்லாம் முதல்ல போங்க..'' - அதுவரை துளிர்க்காத கண்ணீர்த் துளிர்ப்போடு அவர்களையே திரும்ப தள்ளி விட்டாள்.

''அக்கா வாங்கக்கா... எல்லாரும் ஒண்ணா இருந்து போராடுவோம். இவ்வளவு சொன்ன நீங்க வரலேன்னா எப்படி... வாங்கக்கா..''

- சாவித்ரி கெஞ்சினாள்.

''தயவு செய்து நீங்க முதல்ல போங்க... எனக்குத் தெரியும் எப்ப வந்து அவரைப் பார்க்கணும்னு..''

''ஐயோ அம்மா.. உயிருக்கு போராட்ற இப்ப பாக்காம வேற எப்பம்மா வந்து பாக்கப்போறே..'' அரவிந்தனும் கெஞ்சியபடி கைகளைப் பிடித்து இழுத்தான்.

''டேய்... நீங்க ஜெயிக்கணுமா வேண்டா மாடா..?'' - மீனாட்சி சற்று ஆவேசமானாள்.

''நிச்சயமாம்மா..''

''அப்ப நான் சொல்றத மட்டும் கேள். என்னை யாரும் எதுவும் சொல்லாதீங்க..''

- மீனாட்சி சற்றே ஆவேசமாகி பேச்சோடு கைகளையும் கூப்பினாள்.

அதற்குமேல் யாரும் வற்புறுத்தவில்லை.

ஐ.சி. வார்டில் நுழைந்தபோது மவுனமாகவும் ஒவ்வொருவராகவும் போகச்சொன்னாள் நர்ஸ் ஒருத்தி.

முதலில் சாவித்ரிதான் சென்றாள்.

சற்றே சாய்வான ஒரு படுக்கையில் ஆக்சிஜன் ட்யூபால் இதயம் இயங்கிக் கொண்டிருக்க நிலை குத்திய வழிகளோடு படுத்திருந்தார் ஆதிரங்கராஜ்.

சாவித்ரி வரவும் கண்ணாலேயே அருகில் அழைத்தார். அவளும் நெருங்கினாள்.

''நிறைய பேர் வந்துருக்கறதா நர்ஸ் சொன்னா... யாரெல்லாம் வந்துருக்காங்க..?'' ரங்கராஜ் ஈனசுரத்தில் கேட்க அவளும் அரவிந்தன், மாலதி ரஞ்சனி, வேலாயுதம் என்று பெயர்களை சொன்னாள்.

‘‘மீனாட்சி வரலையா?’’ - கேட்டு முடிப்பதற்குள் நாக்கு தழுதழுத்தது.

நர்ஸ் ஓடிவந்து ‘‘என்னங்க நீங்க... அவர் அறவே பேசக்கூடாதுங்க. தயவுசெய்து பேச்சு குடுக்காதீங்க’’ என்று சற்று கடுமையான குரலிலேயே கடிந்து கொண்டாள். சாவித்ரியும் தப்புசெய்துவிட்ட பாவனையோடு விலக அடுத்து அரவிந்தன் உள்ளே நுழைந்தான். அவன் வரையில் அவர் முகமே அவ்வளவாய் ஞாபகத்தில் இல்லை... இருபது வருட இடைவெளி...

அதைக் கடந்து ஒரு சந்திப்பு!

உலகத்தில் யாரும் யாரையும் இப்படி சந்தித்திருக்க மாட்டார்கள். உடம்பில் ஒருவித நடுக்கம் - மனதில் ஒரு படபடப்பு. ஆனால் அனைத்தையும் மீறிய ஒரு பாசம். அது அவரை அவன் பார்த்தநொடி மனதுக்குள் இனம்புரியாத எண்ணக்குவியலில் அவனை அமிழ்த்தியது.

கண்ணீர் திரண்டுவந்தது.

‘‘அப்ப.. அப்பா...’’ - தட்டுத் தடுமாறினான். ஆதிரங்கராஜும் வெறித்தபடியே இருந்தார்.

‘‘சத்யமா காசு பணத்துக்காக நோட்டீஸ் அனுப்பலப்பா..’’ - என்றான் வேகமாக. நர்ஸ் சரேலென்று திரும்பிப் பார்த்து ‘‘தயவு செய்து பார்த்துட்டு மட்டும் போங்க. அவர் பேசக்கூடாது. அவரை எமோஷனாக்காதீங்க..’’ - என்றவள் வெளியேவந்து ‘‘போதும்... இனி யாரும் போக வேண்டாம். பேஷண்ட் ரொம்ப உணர்ச்சிவசப்படறார்’’ என்றாள்.

அரவிந்தன் திரும்பிவந்து மீனாட்சி எங்கே என்றுதான் பார்த்தான். சாவித்ரியும் தேடிவிட்டு ‘‘அக்கா போய்ட்டாங்க போல..’’ என்றபடி திரும்பி வந்தாள். கண்ணீர் சிந்தினாள்.

அவன் பதில் சொல்லவில்லை. ஒரு ஓரமாக கிடந்த மரபெஞ்சில் போய் அமர்ந்தான். சாவித்ரி அவனை நெருங்கினாள்.

‘‘அரவிந்தா... அவருக்கு நம்ம யார் மேலயும் கோபம் இல்லை. நீங்க எல்லாரும் வந்துருக்கறத சொன்னேன். மீனாட்சி வரலியான்னு கேட்டார். அவர் உணர ஆரம்பிச்சுட்டார். எனக்கு நம்பிக்கை இருக்கு...’’ என்றாள். அப்படியே ரஞ்சனி எங்கே என்று பார்த்தாள். ரஞ்சனி வக்கீலிடம் காரசாரமாக பேசிக்கொண்டிருந்தாள்.

மீனாட்சி சொன்னது போல யுத்தத்தை அவள் தொடங்கிவிட்டாள் என்பது ஒரே பார்வையில் புரிந்து போயிற்று.

இதில் அவள் தன் பேராசைக்கும், தவறுக்கும் ஒரு பரிகாரம் காணக்கூடும். சாவித்ரி எதிர்பார்த்ததுபோல அது ஆதிரங்கராஜ் என்னும் ஒரு ஊதாரி பெண்பித்தரின் திருத்தமாக இருக்கலாம்.

எதுவாக இருந்தாலும் குறைந்தபட்சம் ஆறுமாதங்களாகலாம்... அதன் பிறகுதான் யார் எங்கு இருக்கிறார்கள், எப்படி இருக்கிறார்கள் என்பது தெளிவாகும்.

**ஆ**றுமாதங்களுக்குப் பிறகு...

நவஜீவன் ஆஸ்ரமத்தில் மீனாட்சிக்கென்று ஒரு பிரத்யேக அறையை ஒதுக்கிக் கொடுத்துவிட்டார் அப்பா. மீனாட்சியும் பூர்ணசந்தரின் டீ.வி. சீரியலில் மிகப் பிரபலமாகி விட்டாள். சினிமா ஒன்றும் வந்து சக்கைபோடு போட்டுக் கொண்டிருக்கிறது. மதர் தெரஸா பற்றி ஒரு படம் தயாரிக்கப் போகிறார்கள். பல மொழிகளிலும் தயாராகும் அதில் தெரசாவாக நடிக்கப்போவது மீனாட்சிதான்.. போப் ஆண்டவரே மீனாட்சியின் புகைப்படத்தை பார்த்த மாத்திரத்தில் ஓ.கே. செய்ததாகக்கூட பேச்சுக்கள் வலம் வருகின்றன.

டைம் பத்திரிகை அட்டையில் மீனாட்சியின் படம் இடம் பெற்று விட்டது. நிர்மலாதான் அவளுக்கு பி.ஏ-வாக இருக்கிறாள். அவளை பாடாய்ப்படுத்திய கணவன் நந்தகோபால் உண்மைகள் தெரிந்துவிட்ட நிலையில் கொஞ்சநாள் தலைமறைவாக இருந்தான். பிறகு ஒரு சுபயோக சுபதினத்தில் மன அழுத்தமும் குற்ற உணர்ச்சியும் தாளாமல் நெற்றிப் பொட்டில் சுட்டுக்கொண்டு இறந்து வழக்கு விசாரணை என்று இழுபாடுகள் இல்லாதபடி செய்துவிட்டான்.

அந்தப் பக்கத்தில் ஆதிரங்கராஜ் அபாய கட்டத்தை கடந்து சக்கர நாற்காலி மனிதர் ஆகிவிட்டார்.

நாளுக்கொரு பெண்ணை அவர் பார்த்தது போய் நாளுக்கொரு நர்ஸ் இப்பொழுது அவரைப் பார்க்க வேண்டிய கட்டாயம்!

போதாததற்கு சாவித்ரியும் ரஞ்சனியும் அருகே இருந்து கவனித்துக் கொள்கின்றனர்.

மூர்த்தியின் உபத்ரவத்தை ரஞ்சனி தனியாக நின்று சமாளித்துக் கொண்டிருக்கிறாள். வக்கீல் கோர்ட் என்று நிறைய அலைய வேண்டி இருப்பதால் வேலையை விட்டுவிட்டாள்.

நியாயமாய் நம்பிக்கையோடு கடன் கொடுத்தவர்களுக்கெல்லாம் சொத்தை விற்று செட்டில் செய்துவிட்டனர்.

அரவிந்தன் ஒரு எந்திரம் போல வேலைக்கு போய் வந்து கொண்டிருக்கிறான்.

வழியில் சுவரொட்டிகளில் மீனாட்சி அவனைப் பார்த்து சிரிப்பதையே அவளது தரிசனமாக நினைத்துக் கொள்கிறான்.

சமயங்களில் ராகவியின் பிடிவாதம் காரணமாக மீனாட்சி நடிக்கும் ஷூட்டிங்குக்கு அவளை அழைத்துச் செல்வான்.

மீனாட்சியும் இன்றைய எல்லா கதாநாயர்களுக்கும் அம்மாவாகி விட்டாள். எங்கே போனாலும் இதமான உற்சாக வரவேற்பு.

எங்கெங்கோ போகிறாள்... விடியவிடிய நடிக்கிறாள். ஆனால், வீட்டுக்கு போய் ஆதிரங்க ராஜை சந்திக்க மட்டும் கால் வரமாட்டேன் என்கிறது.

அப்பாகூட கேட்டார்.

‘‘ஏன் மீனாட்சிம்மா இப்படி இருக்கீங்க..? எதுக்கு இத்தனை பிடிவாதம்? அவர்தான் மாறிட்டாரே?’’

‘‘இல்லப்பா... அவர் மாறியிருக்கலாம். ஆனா, அவரோட பழைய நாட்களை என்னால மறக்க முடியலை. மறக்கவும் கூடாது. அவரோட தப்புதான் என்னை வெளிய தள்ளி தனிமனுஷியா போராட வெச்சது. படிக்கற கதைல இருந்து, பாக்கற சினிமா வரை, ‘ஒரு பொண்ணு தனியா சமுதாயத்துல போராடி ஜெயிக்கமுடியாது. அதுக்கு அவ நிறைய விலை கொடுக்கணும்’னே சொன்னப்ப நான் அதையெல்லாம் பொருட்படுத்தலை. தனிமனுஷியா போராடி ஜெயிச்சேன்.

வயசாயிட்டாலே மருமக கையால இடிசோறு, திண்ணைல ஒரு மூலைங்கறத கடவுள் என் மூலமா மாத்தியிருக்கார். நான் திரும்ப போய் அவரைப் பார்த்து மிஸஸ் ஆதிரங்கராஜா வாழறதால இந்த போராட்டத்துக்கு ஒரு முடிவு வர்றதை நான் விரும்பலை.

‘பைத்தியக்காரியா இருக்கியே.. வயசான காலத்துல எதுக்கு இத்தனை வீம்பு. இது ரொம்ப டூமச்!’னு கூட சிலர் சொல்லலாம். என் இடத்துல இருந்து பார்த்தாதான் இந்த வாழ்க்கையோட அனலும் கனலும் புரியும். இதை அணைச்சு தணிக்க நான் விரும்பலை. இது கொழுந்து விட்டு எரியணும்.

எல்லா முதியவர்களுக்கும் சொல்லிக்கிறேன்... உடம் புல தெம்பு இல்லேன்னாலும் மனசுல இருந்தா போதும். அது பேச்சுல வெளிப்படும். அந்த பேச்சால ஒவ்வொரு முதியவரும் சுத்தி இருக்கறவங்க மனசுல இருக்கற இருளையெல்லாம் உறிஞ்சுத் துப்பலாம். அழகா தூண்டி விடலாம். அதனால நம்ம மதிப்பை கூட்டிக்கலாம்.

என் பேரால தப்பு பண்ணின என் மருமககிட்ட நான் அப்படித்தான் நடந்துகிட்டேன். அவ செய்த தப்பையே சரியா மாத்த அவளை தூண்டிவிட்டேன். அவளும் ஓடிகிட்டிருக்கா. இப்படி இளமையை டைரக்ட் பண்ற தெளிவுதான் இன்றைய முதுமையோட தேவை. தெம்பும் திடமும் ஆரோக்யமும்கூட அப்புறம்தான்.

நடிகையாகி லட்ச லட்சமா சம்பாதிக்கற தெம்புல நான் இப்படி பேசலை. கைகால் இழுத்துகிட்டு படுக்கையில கிடந்தாலும் இதுதான் என் பதில்.

அப்பகூட புத்திசாலித்தனமா எதையாவது செய்து எல்லாத்தையும் சமாளிக்க முயற்சி செய்வேன். முடியாத போது அப்படியே மூச்சை அடக்கி வாழ்க்கையை முடிச்சுக்குவேன். ஆனா, எந்த நிலையிலும் பாரமா, பத்தோடு பதினொண்ணா வாழமாட்டேன். என்னால அது முடியவும் முடியாது.’’

- மீனாட்சி இத்தனை தெளிவாக பேசிவிட்ட பிறகு அப்பாவால்தான் என்ன செய்ய முடியும்? ரகசியமாக மனதுக்குள் கைதட்டி மகிழத்தான் முடிந்தது.

ஆனால், ‘அம்மா ஒருநாள் வந்துவிடுவாள்’ என்று அரவிந்தனும், தன் மனைவி தன்னை மன்னித்துவிடுவாள் என்று ஆதிரங்கராஜும் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களது வானத்தில் மீனாட்சி என்னும் நட்சத்திரம் ஒளிருமோ ஒளிராதோ.. ஆனால், சமூகவானத்தில் அவள் பகலிலும் ஒளிவிடும் ஒரு நட்சத்திரம் என்பதில் சந்தேகமில்லை!

(முற்றும்)